
கோஷாயி

அனுபோக வைத்திய
பிரம்ம ரகசியம்

பாகம்-1



தாமரை நூலகம், சென்னை - 600 026.

கோஷாயி

அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம்

முதல்பாகம்

பதிப்பாசிரியர்
எஸ். பி. ராமச்சந்திரன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி வடபழனி,
சென்னை - 600 026.
தொலைபேசி : 9940073194

தாமரை வெளியீடு எண் : 234

முதல் பதிப்பு : பிப்ரவரி 1999.
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2016
மூன்றாம் பதிப்பு : ஜனவரி : 2024

பதிப்புரிமை பெற்றது

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	கோஷாயி - அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம் முதல் பாகம்
பதிப்புபாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	ஜனவரி : 2024
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 X 8
தாளின் தன்மை	:	14.4 கி.கி வெள்ளைத்தாள்
எழுத்து அளவு	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	298 + XVIII
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	செக்ஷன்
நூலின் விலை	:	ரூ. 200.00
கணிப்பொறி	:	கார்த்தி கிராபிக்ஸ், சென்னை - 26.
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட், சென்னை - 34

பதிப்புரை

மகாராஷ்டிராவிலிருந்து மருவூற்றில் எழுந்தருளியிருக்கும் உலககிரிநாததரைப் பூசை செய் வதற்காக ஆதி இராமகிரி கோஷாயி சுவாமிகளை அழைத்து வந்து தமிழ் நாட்டில் குடியேற்றினார். மருவூற்றில் மன்னன் :

கோஷாயி பரம்பரையாக மருத்துவம் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர். சித்த மருத்துவம் அவருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று பல ஆண்டுகள் சித்த மருந்துகளைப் பயன் படுத்தி நோயாளிகளைக் குணமடையச் செய்தார்.

அவருடைய முறைகள் மிகவும் எளிமையானவை. நல்ல பலன் தரக் கூடியவை. அனுபவத்தில் தாம் கண்டறிந்த உண்மைகள் மனித சமுதாயத்திற்குப் பயன் படுவதற்காக நூலாக எழுதி வைத்தார்.

எட்டு பாகங்களில் தனித்தனி மருத்துவ முறைகள்! அவ்வளவும் காப்பாற்றி வைக்கப்பட வேண்டியவை! ஒவ்வொன்றும் தமிழ் மருத்துவர்களுக்கு சமய சஞ்சீவிபோல் கை கொடுத்தவை! ஆனால் இளைய தலை முறைக்கு அந்த நூல்கள் கிடைப்பது அருமையாக இருந்தது.

பகுதி பகுதியாக இந்த நூலைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். திரு ஏ. என் அனுமந்தன் அவர்களின் உதவியால் முக்கியமான பகுதிகள் கிடைத்தன. அவற்றை முழுமைப் படுத்தி இந்த அரிய மருத்துவக் களஞ்சியம் அழிந்து போகாமல் மீண்டும் கிடைக்கச் செய்வதில் பெருமை அடைகிறோம்.

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

தேவிசகாயம்

அவுஷதங்களின் அட்டவணை

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை

முதல்பாகம்
அவுஷதங்களின் அட்டவணை
முற்றுப்பெற்றது

உ

தேவிசகாயம்

இரண்டாபாகம்

அவுஷதங்களின் அட்டவணை

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

இரண்டாம் பாகம்
அவுஷதங்களின் அட்டவணை
முற்றுப்பெற்றது.

உ
தேவிசகாயம்

மூன்றாம் பாகம்

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

மூன்றாம்பாகம்
அவுஷதங்களின் அட்டவணை
முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்

நான்காம் பாகம்

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

நான்காம் பாகம்
அவுஷதங்களின் அட்டவணை
முற்றுப்பெற்றது

உ

தேவி சகாயம்

பண்டித பாலசிகைஷ
ஆயுள்வேத அரிச்சுவடி யென்னும்

அனுபோக வயித்திய

பிரம்ம ரகசியம்

விநாயகர் வணக்கம்

கலி விருத்தம்

முந்தியுதித்தனை முக்கணர்க்கோர்கணை
தந்திமுகத்தனை தார்புனைத்தோளனை
சிந்துநிரத்தனை சித்திசமேதனை
வந்தனைச்செய்து வழிபடுவாமரோ.

கடவுள் வணக்கம்

நால்வகையோனிபேத மெழுவகைப்பிரப்பாய் நீண்ட
கால்வகையுயிர்கள் யாவுங் காத்தளித்தழிக்கவல்ல
நூல்வகைநிரைந்த மெய்யை நுண்மணக்குரவர்க்கெல்லாம்
மேல்வகை கொடுக்கு மொன்றை மனதினில்நினை தல்செய்வாம்.

நூன்முகம் வியாசர் வாக்கு

நினைப்பதொன்று சொல்வதொன்று நிகழ்த்தலொன்று
நெஞ்சிரக்கமில்லாத சித்தர்செய்கை
வினைத்தொழிலை யொவ்வுமடா குருவில்லாட்டால்
விவரமதை சுட்டுரைக்க ஆசான்வேண்டும்
அனைத்துயிரும் தன்னைப்போல் கருதலன்றி
ஆந்திரியம் விண்டார்க ளாருமில்லை
மனக்களங்க மற்றல்லோ மார்க்கஞ்சொன்னேன்
மகத்தானவேதத்துக் காதியோனே. (1)

ஆதியாய்வேதங்கள் நான்குஞ்சொன்னேன்
ஆராகச்சாத்தி ரத்தைப் பிரித்துவைத்தேன்
நீதியாங்கலைகளறு பத்தினாலும்
நிலைகாட்டுந்தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
பேதியாதேயுலக வாதாரங்கள்
பேசின தாலிழையேனும் பிசகலுண்டோ
வாதிமுதல் வைதியர்கள் சீமானாக
வரைந்திட்டரகசியமாம் முரையைப்பாரே. (2)

முறைகளிதுவணு வேனும் பிசகிராது
மூர்த்தியொடு சத்தியிடப் பாகமப்பா
திரையொன்று மில்லாமல் விரித்துப்போட்டோம்
தெரியாதமானிடர்க்கு வேணுமென்றே
நிறைபோலே பேசுமனு போகவித்தை
நெஞ்சிரங்கிசொன்னமொழி செய்துபாறு
பரைசிவனும் வாதிட்டு சொன்னமார்க்கம்
பாரறிய வெளியிட்டோன் வியாசன்தானே. (3)

தானென்ற ஆன்மாவை யறியவேணும்
தங்குமிடம் பொங்குமிடங் காணவேணும்
நானென்ற ஐவர்களை யடக்கவேணும்
நல்லவர்க்கு வல்லுடம்பை யீயவேணும்
கோனென்ற மும்மலத்தை யொடுக்கவேணும்
கோடியுகமானாலும் யிருக்கவேணும்
வானென்ற வுலகாள யிதுவேவித்தை
வையகத்து வித்தையெல்லா மவத்தைதானே. (4)

அவத்தையிலே ஆவலிட்டு பணத்தைத்தேடி
அந்தகனுக்காளாகிப் பிரவியாழ்ந்து
தவத்தையெல்லாங்கைச் சோர்ந்து வீணாள்போக்கி
தாருடையான் திகிரியைப்போல் தலைகீழாகி
பவத்துக்கேமன மோர்ந்து சின்னாள் வாழ்வாம்
பாரிடத்தே புக்குவதில் பலந்தானென்னோ
சிவத்துக்கே ஆளாகும் பெரியவித்தை
செய்வித்தை மெய்வித்தை செய்துபாரே. (5)

பாரப்பாமானிடர்கள் பிணிகடீர்த்தால்
பராபரத்தின ருளுனக்கு பலிக்குமன்றோ
ஆரப்பாயிவ் விதமாய் போதித்தார்கள்
அனுபோகமான தொரு முறைகளெல்லாம்
கூரப்பாசித்தருட நூலுக்கானால்
குருஒருவ நில்லாட்டால் குப்பையாகும்
நேரப்பாயின் ,னூலுக் காசான் வேண்டாம்
நீயாகச் செய்து கொண்டு நெறியைக்காறே. (6)

காரணமேகத்தின் உதவிபோலே
கனசரக்கு பாஷாண தித்தியோடு
தீராது நோய்களுக்கு கைப்பாகந்தான்
திரட்டினோம் குளிகைசெந் தூரம்பற்பம்
பாரான தைலமெண்ணை கிருதங்கட்டு
பற்பலவாம் விஷநீக்கு பரணியோடு
பேரான சிறுமணவூர் முனிசாமிச்சொல்
பிரம்மனூல் ரகசியபா யிரமுமுற்றே. (7)

உ

தேவி சகாயம்

முதலாவது

சரக்குகளின் சுத்திவகை

பரணி

கன்மத்தால் வந்தபிணி நீக்க வேண்டி
    கருவறிந்தபண்டிதரே கழரக்கேளீர்
வன்மமென்ன சுரக்குவகை குணங்களாய்ந்து
    வளமான சுத்திசெய்து வழங்கினோர்க்கு
தன்மவினி வேருண்டோ தரணிமீது
    தாக்கான சொர்க்கபதி தான்கிட்டாதோ
உன்மதமாய் முறைப்பிசகி யுதவும்பேர்க்கு
    ஒருக்காலும் மோட்சமில்லை யூணிப்பாரே.

இன்னூலை விசுவாசிக்கும் புத்திமான்களுக்குக் கூறுவது யாதெனில் இதில் அடங்கிய அவிழ்த பாகங்களில் யாதொன்றையும் கையாள விரும்பும்போது அம்முறைக்கு வேண்டிய தினுசுகள் யாதோ அதை இங்ஙனம் வரைந்துள்ளபடி சுத்தி செய்து (அதாவது) துற்குணங்களை நீக்கி உபயோகித்தலே புத்திமான்களுக்கழகாம், மற்றபடி கடையினின்று வாங்கிய வண்ணம் புடங்கள், அரைத்தல், கூட்டல், கட்டல் முதலான மார்க்கங்களாக கையாடி பிரஜைகளுக்கு உபயோகித்தால் வினைக்கீடாகிய வியாதியானது ஒன்றைவிட்டொன்று அதிகரிப்பதுடன் ஜீவயிம்சையு மேற்படுமாதலால் முதலாவது சரக்குசுத்தி விபரம் கூறலாயிற்று இதுபோல் ஒவ்வொரு சரக்கையும் சுத்திசெய்துக் கொண்டு பிறகு அவிழ்தங்களுக்கு உபயோகப் படுத்தவும்.

லிங்க சுத்தி - லிங்கம் ஒரு கட்டியாக வாங்கி தேனில் ஒருநாள் ஊறி முலைப்பாலில் ஒருநாள் ஊறி மறுநாள்யெடுத்து எலுமிச்சம் பழரசம் குப்பைமேனி ரசம் முலைப்பாலும் சமமாய் கலந்துக்கொண்டு அடுப்பின்மேல் சட்டி

வைத்து அதில்மேல்படி லிங்கத்தைவைத்து புகையாமல் சுருக்குக் கொடுக்கவும் சுத்தியாம் இதற்கு லிங்கக்கட்டென்றும் பெயர்

வீரசுத்தி - வீரத்தை ஒருயிளநீரில் (1¼) விராகநிடைகற்பூரம் போட்டு கலக்கி சட்டியில் ஊத்தி அடுப்பிலேத்தி மேற்படி வீரத்தை தொலாந்திரமாகக் கட்டி யெரித்து யெடுத்துக் கொள்ளவும்

பூரசுத்தி - பூரத்தை வெற்றிலை மிளகு கியாழமிட்டு அதில் கிளிக்கட்டி மூன்றுநாள் ஊறவைத்து யெடுத்துக் கொள்ளவும்

முதார்சிங்கு சுத்தி - முதார்சிங்கியை வெள்ளாட்டு கோமியத்தில் ஒரு நாழிகை கொதிக்க வைத்து யெடுத்துக் கொள்ளவும்

கெவுரிசுத்தி - வெள்ளை கெவுரியைக் கொண்டு வந்து பசும்பால் அல்லது சாணிப்பால் சுண்ணாம்பு நீர் மிளகுகியாழம் இன்னான்கில் எதிலாவது தொலாந்திரமாகக்கட்டி யெரித்தெடுத்துக் கொள்ளவும் பிறகு பன்றிப்பாலில் கிளிக்கட்டி அவித்தெடுத்துக் கொள்ளவும் சுத்தியாச்சு

மனோசிலைசுத்தி - மனோசிலையை காடியில் கிளிக்கட்டி யெடுத்துக் கொள்ளவும் வெள்ளாட்டு மூத்திரத்தில் தொலாந்திரம் கட்டி யெரித்தெடுத்துக் கொள்ளவும்

ரசம்சுத்தி - சூதத்தை அருக்கன் பாலில் ஒருநாள்வூறி செங்கத்தான் கொட்டை சற்கரை யிதுகளில் அரைத்தெடுக்கவும்.

வங்கசுத்தி - வங்கத்தை யிலுப்பை யெண்ணெயிலாகிலும் தேங்கா யெண்ணெயி லாகிலும் நவாச்சாரத்தூள்தூவி அதில் ஏழுதிரம் உருக்கிசாய்க்கவும் அல்லது மோர்காடி கோமியம் பழரசம் இதுகளிலும் உருக்கிசாய்க்கலாம் இப்படியே நாகத்தையும் சுத்திசெய்துக் கொள்ளவும்.

கருவங்க சுத்தி - கருவங்கத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில் பிரண்டை வேர்அரைத்துப்போட்டு நல்லெண்ணை உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம்

நாகசுத்தி - நாகத்தை ஆட்டுநெய் கொண்டுவந்து உருக்கி சிறுநீர் பழரசம் கூட்டி சாரம் கல்சுன்னமிட்டு கலக்கிவைத்துக் கொண்டு அதில் நாகத்தைபத்து திரம் உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம்

கல்னார்சுத்தி - கல்னாரை கழுதை மூத்திரத்தில் மூன்று நாழிகை ஊறினபின் கழுவி யெடுத்துக் கொள்ளவும் சுத்தியாம்

சிலாசத்துசுத்தி - சிலாசத்தை பழரசத்தில் போட்டு கொதிப்பித்து யெடுத்து எருக்கன் பாலில் மூன்று நாழிகை ஊறியபின் கழுவி யெடுத்துக் கொள்ளவும் அல்லது அல்லிப்பூ ரசத்தில் ஊறியும் யெடுக்கலாம் ஆவின் பாலில் தொலாந்திரம்கட்டி எரித்தும்யெடுத்துக் கொள்ளவும்.

கெருடப்பச்சை சுத்தி - கெருடப் பச்சையை பயறுபோல் செய்து கிளிக் கட்டி குமரிச்சாற்றில் (30) நாழிகை ஊறியபின் யெடுத்துக் கொள்ளலாம்

சீனம் சுத்தி - பசும்பாலில் மூன்றுஜாமம் ஊறியபின் எடுத்துக் கொள்ளவும் சுத்தியாம்

படிகாரம்சுத்தி - எருமைசாணத்தில் கிளிக்கட்டிவைத்து எடுத்துக் கொள்ளவும் அல்லது சிறுநீரில் மூன்றுநாளூறவைத்து எடுத்துக்கொள்ளவும்

வெண்காரம் சுத்தி - வெண்காரம் பொரித்துக்கொள்ள வேணுமானால் காடியிலாவது அல்லது பழரசத்திலாவது அரைத்து பில்லைதட்டி உலர்த்தியெடுத்துக் கொள்ளவும்.

முடிதாரம்சுத்தி - கிளிகட்டி சிறுவர்கள் மூத்திரத்தில் ஏழுநாள் ஊறின பின் பசும்பாலில் இரண்டு ஜாமம் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும்

பால்துத்தம் - தயிரினாலரைத்து அடைதட்டி ஓடுகாய வைத்து அதில் பிரட்டி எடுத்துக் கொள்ளவும் அல்லது தயிரில் ஒரு ஜாமம் ஊறியெடுக்கவும்

மடல்துத்தம் சுத்தி - வெண்ணெய் அல்லது தயிர்கற்றாழை சாற்றில் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும்

பச்சைதுருசிசுத்தி - பசுங்கோமியத்தில் யெரித்துக்கழுவி உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்

பவழப்புத்துசுத்தி - பசும்மோரில் கிளிக்கட்டிவிட்டு நாலு நாழியெரித்து எடுத்துக்கொள்ளவும்

அஞ்சனக்கல்சுத்தி - புளியாரை ரசத்தில் ஒருநாள் ஊறி யெடுத்துக் கொள்ளவும்

கல்மதம் சுத்தி - கல்மதத்தை சிறுநீரில் கழுவியெடுத்துக் கொள்ளவும்.

நாபிசுத்தி - பருத்தியிலை ரசத்திலூறி முத்திலைக்குள் வைத்து சுத்தி கும்பியில் சொருகி ஒருநாழி பொருத்தெடுத்து சீந்தில் கியாழத்தில் தொலாந்திரங்கட்டி எரித்து பிறகு யெருக்கன்பாலில் சற்றுஊறி கோமியத்தில் கழுவி எடுத்துக்கொள்ளவும்.

நேர்வாளசுத்தி - எருமைசாணத்தில் நாடிவிட்டு கலந்து அதில் வாளத்தைப் போட்டு கொதிக்க வைத்தெடுத்து நஞ்சுநீக்கி அதாவது அந்த பருப்பைப் பிளந்து முளைநீக்கி காடிமோர் பழரசம் கலந்து அதில் கொதிக்கவைத்து எடுத்துக்கொள்ளவும்.

தாளக சுத்தி - தாளகத்தை சிறுதுண்டுகளாகச் செய்து சிறிய மொந்தைக் குடுவையில்யிட்டு மேலே மூடும் ஓட்டில் மூணுதுவாரஞ் செய்து கரிநெருப்பின் மீது வைத்து விசுருகையில் முதல்கருப்பு புகைவந்து பிறகு சிகப்பு புகைவருங் காலத்தில் யெடுத்துக் கொள்ளவும்.

தாளக சுத்தி - தாளகத்தை சுண்ணாம்புக்குள் வைத்து கழுதை மூத்திரம் விட்டு யேழுதிரம் தாளித்துயெடுத்து சுன்னநீர் கொள்ளுக் கியாழம் தயிர் * பூசினிக்காய் நீர்காடி அகத்திக்கீரைவிரை தயிலம் இவைகள் கூட்டி இரண்டு ஜாமம் சுருக்கு கொடுக்கவும் கரந்தை சாற்றில் இரண்டு ஜாமம் சுருக்கு

* பூசிணிப்பழத்தை மேலேகீறி 3 வராகனெடை இந்துப்பு போட்டு அடியில் எமுத்தாணியால் துவாரம் செய்து மேலே தூக்கி கட்டி அடியில் பீங்கான் வைத்து இறங்கும் போது நீர் எடுத்துக் கொள்ளவும்

கொடுத்து யெடுத்து சத்தி சாட்டரணைவேர் குக்கில் இதை முருங்கிலை ரசத்தாலரைத்து கவசம் செய்து லகுபுடமிட மிகுந்த சுத்தியாம் பிறகு சகல அவிழ்தத்திற்கும் உபயோகப்படுத்தலாம்.

பாஷாணசுத்தி - அறுபத்தினாலு பாஷாணங்களும் சுத்தி செய்ய வேண்டில் குப்பைமேனிரசம் கற்றாழம்பால் சிறுநீர் பழரசம் செம்பருத்தி வெத்திலைரசம் வகைக்கிப்படி-1, முலைப்பால்படி-¼, இவைகளை பாண்டத்திலிட்டு அதில் பாரையுப்பு வெடிகாரம் படிகாரம் நவாச்சாரம் வகைக்குப்பலம்-¼, தூள்செய்து கலந்து கிளிக்கட்டியிட்டு நிழலாக காற்றில்லாவிடத்தில் பதினைந்துநாள் வைத்தெடுத்து காடியில் ஊறவைத்து யெடுத்துக் கொள்ளவும்

64.பாஷாணமும் ஏககுத்தி - மேனிரசம் தக்காளிரசம் ஊமத்தன்ரசம் பழரசம் சிறுநீர் காடி சமனாகக்கலந்து இதில் உப்பு சுன்னம் வெடியுப்பு நவாச்சாரம் சீனம் வகைக்குப்பலம்-1, தூள்செய்து கலந்து சரக்குகளை கிளியாய்கட்டி மண்டலம்இட்டு எடுத்து உணர்த்திக்கொள்ள மிகுந்த சுத்தியாம்.

இரும்புசுத்தி - இரும்புப்பொடியை ஒருநாள் பழரசத்தில் ஊறவைத்து எடுத்து மறுநாள் எள்ளெண்ணெயில் ஊறவைத்தெடுத்து அயச்சட்டியில் போட்டு வறுத்து காடியில் கழுவி வேலம்பட்டை கியாழத்தில் கொதிப்பித்து திரும்பவும் காடியில் கழுவி யெடுத்துக்கொள்ளவும்

காந்தசுத்தி - காந்தத்தை பழரசத்திலும் கரடியிலும் மோரிலும் கொதிக்கவைத்தெடுத்து பிறகு சாணிநீரில் ஏழுதிரம் காய்ச்சி காய்ச்சி துவைக்கவும் சுத்தியாம்.

அயத்தொட்டிசுத்தி - பசும்பாலில் நான்குஜாமம் நெய் தேன் இவைகளில் எட்டுநாள் ஊறி யெடுத்துக் கொள்ளவும்.

தொட்டிசுத்தி - நாலும் முலைப்பால் வெள்ளாட்டுப் பாலிலும் தனித் தனி பத்துநாழிகை ஊறவைத்து யெடுத்துக்கொள்ளவும்.

தொட்டிபாஷாணம் - துண்டு துண்டாய் நறுக்கி கிளிக்கட்டி நெல்லில் அவித்து யெடுத்துக்கொள்ளவும்

பொன்னிமிளை - பொன்னிமிளையை மூன்றுநாள் காடியில் ஊறிய பின் கிருஷ்ணா அபிரேக்குதூள் ஒருபடி யெடுத்து மூணுபடி கோமியத்தில் வேகவைத்தெடுத்து உலர்த்தி நெல்லு சேர்த்து கிளிக்கட்டி காடியில்தோய்த்து யிறங்குந் தெளிவை நீக்கி உணர்த்திக்கொள்ளவும்.

சகஸ்திரபேதி சுத்தி - நாரத்தங்கா ரசத்தில் ஊறவைத்து யெடுத்துக் கொள்ளவும்.

செங்கொட்டைசுத்தி - ஜெலத்தில் ஊறவைத்து மறுநாள் மூக்கை வெட்டி நீக்கி யெடுத்துக்கொள்ளவும்.

சிவதைசுத்தி - பசும்பாலில் அவித்து யெடுத்து உணர்த்திவைத்துக் கொள்ளவும்.

அமுக்கிராசுத்தி - ஆவின்பாலிலவித்து எடுத்துக்கொள்ளவும்.

சுக்குசுத்தி - மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தி யெடுத்துக் கொள்ளவும்

மிளகுசுத்தி - புளித்தமோரில் மூன்றுநாள் ஊறி ஓட்டில் வறுத்தெடுத்துக் கொள்ளவும்.

திப்பிலிசுத்தி - திப்பிலியை பழரசத்தில் ஊறியெடுக்கவும்

ஓமம்சுத்தி - ஓமத்தை சுண்ணாம்பு தெளிவு நீரில் ஒருஜாமம் ஊற வைத்து உலர்த்தியெடுக்கவும்.

இருசீரகம்சுத்தி - சீரகம் கருஞ்சீரகம் இதுகளை சுண்ணாம்பு நீரில் ஏழுஜாமம்வூறி உலர்த்தியெடுக்கவும்.

ஊமத்தன்விரைசுத்தி - ஊமத்தன் விரையை ஒருஜாமம் ஜெலத்தில் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும்.

எட்டிக்கொட்டைசுத்தி - எட்டிக் கொட்டையை நெல்லில் அவித்து சிறுகீரை ரசத்தில் ஒரு ஜாமம் ஊறியபின் தேத்தாங் கொட்டை ரசத்தில் வேவித்து எடுத்துக் கொள்ளவும்.

கொம்பரக்குசுத்தி - நல்ல ஜெலத்தில்போட்டு அடுப்பில் வைத்து யெரித் தெடுக்கவும் இப்படி மூன்றுதபா எரித்தெடுத்துக் கொள்ளவும்.

மாசிக்காசுத்தி - பசும் நெய்யில் வறுத்து வெடித்த பிறகு எடுத்துக் கொள்ளவும்

எண்ணெய்சுத்தி - சகலவிதயெண்ணெய்களும் நல்ல ஜெலத்தில்விட்டு நாலுநாழிகை சென்று யெடுத்துக்கொள்ளவும்.

அமுக்குராவேர் சுத்தி - ஆவின் பாலில் கொஞ்சம் அவித்து எடுத்துக் கொள்ளவும்.

இன்னுமனேக முறைபாகங்களை இரண்டாங் காண்டத்தில் வெளியிட்டிருக்கின்றோம்.

உ
தேவிசகாயம்

இரண்டாவது

மாத்திரைவகை பரணி

பேதிக்கி பகீரி மாத்திரை

ரசம்	கால்	பலம்
நெல்லிக்கா கெந்தகம்	"	"
வங்காரம்	"	"
சுத்திசெய்த நேர்வாளம்	"	"

இந்த நான்கையும் இளநீர்விட்டு அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழ்லிலுலர்த்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும் (6) மாதத்து குழந்தைகட்கு ஒருமாத்திரை முலைப்பாலில் உரைத்துக் கொடுக்க நாலுதிரம் பேதியாகும். 1 ஒரு வயது குழந்தைகளுக்கு இரண்டு மாத்திரை கொடுக்கலாம் அல்லது (1½) மாத்திரையாம். பெரியவர்களுக்கு தேனில் மூன்று மாத்திரை கொடுக்கலாம் மிளகுநீர் சாதஞ் சாப்பிடவும்.

சுரத்திற்கு இஞ்சிசுரசத்தில் ஒரு மாத்திரை பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரை கொடுக்கவும், பத்தியம் அரையுப்பு புளியும் முருங்கை கத்திரிப்பிஞ்சு சேர்த்துக்கொள்ளவும்.

இராத்திரி பேதிக்கு

வாளம்	பலம்	¼
பூரம்	"	¼
ரசபஸ்பம்	"	¼

இரசபஸ்பம் செய்ய சாத்தியப் படாவிட்டால் மருந்துக் கடையில் (கால்மல்) யென்று கேட்டால் கொடுப்பார்கள் அதைவாங்கிவந்து மற்ற

மூன்று தினுசையும் ஒன்றாய்க் கல்வத்திலிட்டு ஒருபிடி சாதம்போட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இராத்திரியில் சாதஞ்சாப்பிட்டு படுக்கும்போது கொஞ்சம் சாதத்தில் முழுமாத்திரையாக திரேகத்திற்குத் தக்கினவாறுஒன்று அல்லது 2-மாத்திரை வைத்து முழுங்கிவிடவும் மூன்றாவது ஜாமமுதல் பேதியாகும். திரேகத்திற்கு அலுப்பிராது காலையில் சூப்புசாதம் சாப்பிடவும்.

பேதி மாத்திரை

சுக்கு	லிங்கம்
திப்பிலி	பூரம்
மிளகு	வாளம்

இந்த ஆறுதினுசுகளில் வாளத்தை மாத்திரம் -2½பலம் யெடுத்துக் கொள்ளவும், மற்ற ஐந்து தினுசுகளையும் சமமாய்க் கலந்து ஐந்தும் உட்பட (1¼) பலம் நிறுத்து ஆறுவகையும் ஒன்றுபட கல்வத்திலிட்டு (150) எலுமிச்சம் பழரசம்விட்டு அரைக்கவும் ரசம் கொள்ளாவிட்டால் அப்போதைக் கப்போது உலர்த்தி பிறகு சார்விட்டு அரைத்து இப்படியே மேற்படி ரசம் பூர்த்தியான பிறகு மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும் வெந்நீரில் இரண்டு மாத்திரை சாப்பிட பேதியாகும்.

(பத்தியம்) கத்திரி, முருங்கை, அவரை, இரைச்சி, சூப்பு ஆகும், அந்தியில் மிளகு, சுக்கு, கியாழம் பேதி யதிகமானால் மோர்சாதஞ் சாப்பிடவும்.

சுகபேதிமாத்திரை

நல்ல ஜெலத்தில் ஊறிய கோதிமிரவை	பலம்	1¼
சுத்திசெய்து முளைநீக்கியவாளம்	"	¼
பூரம்	"	¼
சுக்குத்தூள்	"	¼

இவைகளைக் கல்வத்திலிட்டு இரண்டுபலம் பன்னீர்விட்டு அரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொள்ளவும் (அனபானம்) குழந்தைகளுக்கு முலைப்பாலிலும், பெரியவர்களுக்கும் சோம்பு திராட்சி சுக்கு இந்தக்கியாழங்களில்

திரேகதிடந் தெரிந்து இரண்டு அல்லது மூன்றுமாத்திரை கொடுக்கவும் மனக்களிப்புடன் சுகுணமாய் பேதியாகும்.

குழந்தைகட்கு தித்திப்பு பேதி

திராட்சப்பழம்	பலம்	5
கற்கண்டு	"	5
கடுகுரோகணி	"	3
சுத்திசெய்தவாளம்	"	5
சுக்கு	விராகனிடை	1
ஓமம்	"	1
மிளகு	"	1

இவையெல்லாம் கல்வத்தில்போட்டு பசும்நெய் பலம்-2, புதுதேன் பலம்-7½, கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு (4) ஜாமம். அரைத்து கல்ஜாடியில், வைத்துக்கொள்ளவும், குழந்தைகளுக்கு ஒருகாசியளவு யெடுத்து அரிசி அடையில் தடவிக்கொடுக்கவும் பேதியாகும், பெரியவர்களுக்கு காலணாயிடை சாப்பிடவும் பேதி அதிகமானால் மோருசாதம் சாப்பிடவும், இச்சாபத்தியும், சாயரட்சை வசம்பு கியாழம் கொள்ளவும்.

குழந்தைகளுக்கு மாந்த மாத்திரை

சுக்கு	விராகனிடை	1
திப்பிலி	"	"
மிளகு	"	"
* ஆமையோடு	"	"
ஓமம்	"	"
கடுகுரோகணி	"	"
வரய்விளங்கம்	"	"
பெருங்காயம்	விராகனிடை	"
இந்துப்பு	"	"
நேர்வாளம்	"	"

இந்தபத்து வகையும் சேர்த்து கல்வத்திலிட்டு உத்தாமணி சார்விட்டு அரைத்து குண்டுமணிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொள்ளவும். (இதற்கனுபானம்) அகத்திக்கீரையை வதக்கி சார்பிழிந்து அதில் ஒரு மாத்திரை அல்லது (1½) மாத்திரையாக கொடுக்கலாம். கலியாண முருக்கயிலையை வதக்கி அதின் ரசத்திலும் கொடுக்கலாம்.

தீரும் வியாதிகள்

அள்ளுமாந்தம், முக்குமாந்தம், சுரம் இதுகள் தீரும். இரண்டொருதகுதி வரசுத்தியாகும், பத்தியம் புளிநீக்கவும்.

* மருந்து கூட்டும்போது ஆமையோட்டை மாத்திரம் உத்தாமணிச்சாற்றில் ஒருராத்திரி பகல் ஊறவைத்தெடுத்து சேர்த்துக் கொள்ளவும்.

வீரசஞ்சீவி மாத்திரை

வீரம் ½-பலம் வாங்கி வைத்துக் கொண்டு கெட்டி மிளகு பலம்-5, கொண்டுவந்து அரைபடி ஜலத்திலிட்டு அடுப்பிலேற்றி கியாழம்வைத்து கால்படியாக சுண்டவைத்திறக்கி அந்தக் கியாழத்தை ஒருபுட்டியில் வடிகட்டிக் கொண்டு அந்தமிளகை இரண்டு பங்காக்கி ஒருபங்கெடுத்து வீரத்துடன் கலந்து கல்வத்திலிட்டு மேற்படி கியாழத்தைவிட்டு பதினாறுஜாமம் அரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி புட்டியில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

(அனுபானம்) இஞ்சிசுரசம் தேன் யிதுகளில் கொடுக்கலாம்., ஜன்னியைச்சார்ந்த சுரங்களுக்கு முலைப்பாலில் கொடுக்கலாம், திரேகத்திற்கு தக்கினவாறு ஒன்று அல்லது இரண்டு மாத்திரை கொடுக்கவும் (64) காய்ச்சலுங் கேழ்க்கும் இச்சாபத்தியம்.

ஜன்னி பாதவைரவம்

லவுங்கப்பட்டை	விராகனிடை	2 ½
ஏலரிசி	"	2 ½
சுக்கு	"	5
பூரம்	"	2 ½
லிங்கம்	"	2 ½
சுத்திசெய்தவாளம்	"	2 ½

.இந்த ஆறுவகையுங் கல்வத்திலிட்டு வெந்நீர்விட்டரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி புட்டியிற் போட்டு வைத்துக் கொள்ளவும், (இதற்கு அனுபானம்) சுக்குகியாழம் முலைப்பால் தேன் இந்தமூன்றில் எதிலாகிலும் ஒருமாத்திரை அல்லது

இரண்டு மாத்திரை திரேகதிட்டமும் நோய்மார்க்கத்தையும் அறிந்து கொடுக்கவேண்டியது. இச்சாபத்தியம், சீதளபதூர்த்தம் தள்ளவும்.

ஏலாதி மாத்திரை

ஏலக்காய்	லவுங்கம்	கோரைக்கிழங்கு
அதிமதுரம்	வெட்டிவேர்	வெள்ளைக்கடுகு
சடாமாஞ்சி	சந்தனத்தூள்	தேவதாரி
சுக்கு	நன்னாரிவேர்	திராட்சப்பழம்
கோரோஜனம்	தாளிசப்பத்திரி	நிலப்பனங்கிழங்கு
இலுப்பைப்பூ	கடுகுரோகணி	அரிசிதிப்பிலி

இந்த தினுசுகள் வகைக்கு (1¼) விராகனிடையாக வாங்கி பொடி செய்து செவ்விளநீர்விட்டு அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும், (இதற்கனுபானம்) இஞ்சி சுரசம் அல்லது தேன் யிதுகளில் கொடுக்கவும், பத்தியம் புளி நல்லெண்ணெய் கடுகு ஆகாது.

மலஜெலகட்டுக்கு மாத்திரை

ரசகற்பூரம்	பலம்	3
பூநீக்கியலவுங்கம்	"	¾
வோமபொட்டு	"	¾

இந்தமூன்று வகையும் ஒன்றுபடக் கூட்டி தும்மட்டிக்காய் ரசத்தால் 12-ஜாமம் அரைத்து பட்டாணி பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும் (இதற்கு அனுபானம்) சோம்பு பலம்-1, திராட்சி பலம்-1, இவ்விரண்டுங் கியாழஞ்செய்து அதில்-1, அல்லது 1 ½-மாத்திரை உரைத்துக் கொடுக்க உடனே மலஜெலம் உதயமாகும்.

பயிரவ மாத்திரை

சுக்கு-மிளகு	திப்பிலி	லிங்கம்
நெல்லிக்காகெந்தகம்	வங்காரம்	வசநாபி

இந்ததினுசுகள் ஒன்றுக்கு விராகனிடை-1, ஆகவாங்கி முதலாவது லிங்கத்தை கம்மாறு வெற்றிலைச்சாற்றில் 3-நாள் ஊறவைத்தெடுத்து அதேசாற்றில் அஞ்சு நிமிஷம் கருக்குகொடுத்து எடுத்துக்கொள்ளவும். இரண்டாவது வசநாபியை பசுங்கோமியத்தில் ஒருநாளூறவைத்து நல்ல

ஜெலத்தில் கழுவி மேல்பரணி சீவிவிட்டு துண்டு துண்டாக நறுக்கி வெய்யலில் உலரவைத்து பிறகு எடுத்து எல்லா தினுசுகளுங் கலந்து கல்லூரலில் யிடித்து கல்வத்திலிட்டு (150) எலுமிச்சம்பழ ரசம்விட்டு அரைத்து சிறுபயறுமிளகு பிரமாணம் மாத்திரை செய்து புட்டியில் வைத்துக் கொள்ளவும் (இதற்கு அனுபானம்) ஜலுப்புக்கு ஒரு மாத்திரையும் இரண்டு மிளகையும் வெத்திலையில் வைத்து மடித்து சாப்பிடவும். கழுத்துநோய், தலைநோய், ஜன்னிக்கு இந்தமாத்திரையை வதக்கின வெத்திலைசார் அல்லது முலைப்பாலில் உரைத்து கலிக்கம்போடவும் பெரியவர் சிறியவர் குழந்தைகளுக்கும் பித்தகாய்ச்சல், வாதகாய்ச்சல், சீதளம், சுரம் இதுகட்கு முலைப்பால் துளசி விஷ்ணுகிரந்தி ஆடாதோடை கண்டங்கத்திரி இந்த ரசங்களில் ஒருமாத்திரை கொடுக்கலாம் புளிதள்ளவும்.

இராமபாணக் குளிகை

பெரும்பாவக்காயைப் பிளந்து அதினுள் வெள்ளைபாஷாணத்தைவைத்து நூல்சுற்றி பசுவின்பால் அரைபடி அளந்து பழகின மண்பாத்திரத்திலிட்டு அதில் மேற்படி பாவக்காயைப்போட்டு அடுப்பேற்றி பால்வற்றுமளவும் எரித்து பிறகு பாவக்காயையெடுத்து ஆறவைத்து பாஷாணத்தை யெடுத்துக்கொண்டு ஜாதிலிங்கத்தை பாஷாணத்திற்குக் கவசமாய் பூசி வைத்துக் கொண்டு வேறுபாவக்காய் கொண்டுவந்து யிடித்து சார்பிழிந்து அந்தச்சாற்றினால் கவசித்திருக்கும் மருந்தை ஒருஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும் (இதற்கு அனுபானம்) சீதசுரத்திற்கு வெந்நீரில் ஒருமாத்திரையிடவும், குளிர்சுரத்திற்கு இஞ்சிசுரசத்தில் ஒருமாத்திரையிடவும், ஜன்னி சுரத்திற்கு முலைப்பாலில் இரண்டு மாத்திரையிடவும் பத்தியும் உப்பு புளி தள்ளவும்.

ஜூரபரணி அல்லது முறைக்காய்ச்சலுக்கு

சங்கு பாஷாணம் அல்லது வெள்ளை பாஷாணத்தைக் கொண்டுவந்து-துண்டு துண்டாய்ப்பொடித்து பெரியபாவக்காயைக்கீறி விரைநீக்கிவிட்டு அதனுள் இந்தபாஷாணத்தை வைத்து நூல்சுற்றி சீலைமுடி செம்மண் கவசம்செய்து (5) வரட்டியில் புடம்போடவும் மேல்துணி சாம்பலானபிறகு மருந்தை யெடுத்து சாம்பலை தட்டிவிட்டு அந்த பாவக்காயுடன் கல்வத்திலிட்டரைக்கவும் இளகாவிட்டால் வேவித்த பாவக்காய் சாறுவிட்டு அரைத்து சிறுசுண்டக்காயளவாக

உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும் (இதற்கு அனுபானம்) ஒருமாத்திரை வாயில்போட்டுக் கொண்டு மிளகு கியாழஞ்சாப்பிடவும் இச்சாபத்தியம்.

காய்ச்சலுக்கு குங்குமப்பூ மாத்திரை

குங்குமப்பூ	ஜாதிக்காய்
சுக்கு	கிராம்பு
திப்பிலி	ஏலம்
மிளகு	சந்தனத்தூள்
கடுக்காய்	தேவதாரம்
தான்றிக்காய்	கடுகுரோகணி
நெல்லிக்காய்	கோரோசனை

இந்தப் பதினான்கு வகையில் முதலாவது குங்குமப்பூ பலம்-1, கடைசியிலுள்ள கோரோஜனை பலம்-¼, மற்றதினுசுகள் வகைக்கி அரைபலமாக வாங்கி சகலமும் ஒன்றுபடுத்தி எலுமிச்சம்பழரசத்தில் ஆறுஜாமம் அரைத்துப் பிறகு இஞ்சிரசத்தில் நாலுஜாமம் அரைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக்கொள்ளவும் காய்ச்சலுக்குத் தக்கவாறு தேன்முலைப்பால் இப்பேர்க்கொற்ற அனுபானங்களிலிட சீதளம் வறட்சி முதலானவை நீங்கும்.

சகல காய்ச்சலுக்கும் லிங்கமாத்திரை

லிங்கம் (1¼) விராகனிடை, திப்பிலி (2½) விராகனிடை பசும்பாலில் ஒருஜாமம் அரைத்து பயரளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் வேண்டியபோது உலர்ந்த இஞ்சிகியாழத்திலிட சகலகாய்ச்சலும் நீங்கும், பத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும்.

கோரோஜன மாத்திரை

கோரோஜனம்	ஜாபத்திரி
சூதம்	கருஞ்சீரகம்
கற்பூரம்	ஜாதிக்காய்
திப்பிலி	ஓமம்
லவுங்கம்	அதிமதுரம்
கோஷ்டம்	அக்கிரகாரம்
நன்னாரிவேர்	மிளகு

மேற்கண்ட தினுசில் கோரோஜனை பலம்-¼, மற்றதினுசுகள் வகைக்குப் பலம் அரைக்காலாக வாங்கி மணத்தக்காளி ரசத்தால் ஒருஜாமம் அரைத்து பயறு பிரமாணம் மாத்திரை செய்து தேனில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்க சுரம் சீதளம் கபங்கள் தீரும் இச்சாபத்தியம்.

ஜன்னி முதலானதற்கு ஆநந்த பயிரவமாத்திரை

நாவிக்கிழங்கு	கெந்தகம்
சூதம்	ஜாதிலிங்கம்
மனோசிலை	வெண்காரம்

இந்த தினுசுகள் வகைக்கி விராகனிடை-1, வாங்கி எலுமிச்சம்பழரசத்தில் இரண்டு ஜாமம் அரைத்து சிறுபயரளவு மாத்திரைசெய்து வைத்துக்கொள்ளவும், ஜன்னிக்கு முலைப்பாலிலும், குளிர்சுரத்திற்கு இஞ்சிச்சாற்றிலும் கொடுக்கத் தீரும்.

கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி	ஏலக்காய்
குங்குமப்பூ	கற்பூரம்
கோரோஜனை	ஜாதிக்காய்
பச்சைகற்பூரம்	ஜாபத்திரி
லவுங்கம்	மிளகு
வால்மிளகு	திப்பிலி

மேற்கண்ட தினுசுகளில் கஸ்தூரி [illegible]ிரை இரண்டு விராகனிடை மற்றதெல்லாம் வகைக்கி ஒருவிராகன[illegible]யாக வாங்கி லவுங்கம் கியாழத்தில் அரைத்து சிறுபயறு பிர்மாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும் தோஷம், நாவரட்சி, ஜலுப்பு, தலைபாரம், இவைகளுக்கு முலைப்பாலிலிடத்தீரும், இச்சாபத்தியம்.

கட்டு வாதி மாத்திரை

குரோசானி	ஓமம்	அதிவிடையம்
ஜாதிக்காய்	ஜாபத்திரி	கிராம்பு
திப்பிலி	அபினி	

இதுகளை சமனிடையாய் நிறுத்தெடுத்து குப்பைமேனி சாற்றிலரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து வைத்துக் கொண்டு பொன் முசுட்டைவேர் கியாழத்தில் ஒருமாத்திரையிடவும் இப்படி மூன்று வேளை கொடுக்கத்தீரும்.

கட்டுவாதி மாத்திரை

ஜாதிக்காய்	அதிமதுரம்
ஜாபத்திரி	அதிவிடையம்
மாசிக்காய்	இலவு
கிராம்பு	விளாம்பிசினி
கோஷ்டம்	

வகைக்கி சமனிடையாய் நிறுத்தெடுத்து அரைத்து மாதளங்காய்க்குள் வைத்து வெள்ளை சீலைசெய்து சாணி அப்பி(5) அல்லது (6) காட்டெருவில் புடம்போட்டு வெந்தபிறகு எடுத்து சீலைமுதலானதும் நீக்கி கல்வத்திலிட்டு அரைத்து சுண்டக்காய்ப்பிரமாணம் ஒருமாத்திரை தயிர்வடிகட்டி அதில் கொடுக்கவும், அதிசாரபேதிக்கு தேனில் கொடுக்கவும், இச்சாபத்தியம்.

பூபதி குளிகை

நாபி	சூதம்	தாரம்	கெந்தி
சுக்கு	திப்பிலி	மிளகு	காயம்

இவைகள் சமயிடையாய்ச்சேர்த்து சித்திரமூல கியாழத்தால் ஏழுநாள் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்து தேன் அல்லது இஞ்சி ரசத்திலிட ஜன்னி, சுரதோஷம், வாதம், வாய்வு, குன்மம், நாவரட்சி, க்ஷயகாசம், மேகம் இவைகள் தீரும்.

லவுங்காதி மாத்திரை

பூரம்	லிங்கம்	வங்காரம்
லவுங்கம்	வாளம்	

இதுகளில் லவுங்கம் விராகனிடை-6, வாளம் விராகனிடை-6, மற்ற மூன்றுதினுசுகளையும் ஒவ்வொரு விராகனிடை வாங்கி எலுமிச்சம்பழ ரசம்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு சுரத்திற்கு இஞ்சி

சுரசத்தில் கொடுக்கவும் ஜலுப்பு முதலானதற்கு தேன் அல்லது முலைப்பாலிலும் சம்பந்தப்படுத்தி சாப்பிடத்தீரும்.

சீவசஞ்சீவிக்குளிகை

சுக்கு	சித்திரமூலம் வேர்ப்பட்டை
திப்பிலி	சீந்திற்கிழங்கு
கடுக்காய்	சேராங்கொட்டை
தான்றிக்காய்	வாய்விளங்கம்
வசம்பு நாவி	

இவைகளை சமயிடையாய் தூக்கி கல்வத்திலிட்டு கோசலம் விட்டரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி புட்டியில்போட்டு வைத்துக்கொள்ளவும் (இதற்கு அனுபானம்) அஜீரணத்திற்கு ஒருமாத்திரை, வாந்திபேதிக்கு இரண்டு மாத்திரை பாம்பின் விஷத்திற்கு மூன்று மாத்திரை, ஜன்னிபாதத்திற்கு நான்கு மாத்திரையாக திரேகதிடமறிந்து இஞ்சிச்சாற்றிலிடவும்.

தாபஜுரத்திற்கு மாத்திரை

ரசம்	விராகனிடை	1
கெந்தி	"	2
அரிதாரம்	"	3
மனோசிலை	"	1
ஜாதிலிங்கம்	"	5
வெண்காரம்	"	6
கடுகுரோகணி	"	7
சுத்திசெய்தவாளம்	"	8
நாபி	"	1

இவைகளெல்லாம் எலுமிச்சம்பழச்சார்விட்டு அரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இஞ்சிச்சாற்றில் கொடுக்கவேண்டியது.

கிராணி கழிச்சலுக்கு

அபினி	இலவங்கம்
ஜாதிக்காய்	அதிவிடையம்
கிராம்பு	சுக்கு

வகைக்கு (1¼) விராகனிடையாக யெடுத்து மாதுளம்பிஞ்சி இரண்டு எண்ணெய்வார்த்து சுருக்கி மேற்படி தினுசுகளுங்கூட்டி தயிர்வார்த்து அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து தயிரில் மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

மகாபோகக் குளிகை

தங்கரேக்கு	விராகனிடை	1
கஸ்தூரி	"	1
கோரோஜனை	"	7 ½
பச்சைகற்பூரம்	"	5
குங்குமப்பூ	"	5
மயில்ரோஜனம்	"	1
படிகாரச்சுன்னம்	"	½

இவைகளை ஈசுரமூலிகை ரசத்தால் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இரவில் புளிநீக்கி போஜனஞ்செய்து பிற்பாடு ஒரு மாத்திரை சாப்பிட்டு உடனே (5) பலம் பசும்பால் சாப்பிடவும் போகத்திற்கு முயலுங்கால் அதிக உல்லாசமும் மனக்களிப்பும் உண்டாம் சகலசீதளசுர ஜன்னிகளும் நீங்கும்.

மகாகோடா சுழி மாத்திரை

தாளகம்	வீரம்	பாஷாணம்
கெவுரி	லிங்கம்	சூதம்
கெந்தி	துரிசி	வெண்காரம்
அன்னபேதி	பால்துத்தம்	மனோசிலை
செம்புதொட்டி	படிகாரம்	வாளம்

இவைகளை சத்திசெய்யும் முறைப்படி செய்து தினுசுக்கு (1¼) விராகனிடையாக யெடுத்து ஒரு யேனத்தில் வைத்துக் கொள்ளவும்.

திரிகடுகு	திரிபலாதி	வசுவாசி
தேவதாரம்	கிராம்பு	ஜாதிக்கா
ஜாபத்திரி	கோஷ்டம்	கடுகுரோகணி
சித்திரமூலம்	குரோசானி ஓமம்	கஞ்சாவேர்
மந்திஷ்டி	சிறுநாவல்பூ	வலம்புரிக்காய்

இவைகளை பொன்வறுவலாக வறுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து தினுசிற்கு (1¼) விராகனடையாக யெடுத்து ஒருயேனத்தில் வைத்துக்கொள்ளவும்.

மேற்படி தினுசுகளுடன் பச்சைகற்பூரம், இந்துப்பு, காயம், சந்தனத்தூள், பேரீச்சங்காய், திராட்சி, பூண்டு இதுகள் வகைக்கி (1¼) விராகனிடையாக யெடுத்து சகல தினுசுகளும் ஒன்றாய்க்கூட்டி கல்வத்திலிட்டு கரிச்சாலை ரசத்தினால் ஏழுநாளரைத்து பிறகு நொச்சிரசத்தினால் ஏழுநாளரைத்து பின்பு விஷ்ணுகிரந்தை ரசத்தினால் ஏழுநாள் அரைக்கவும், இப்படி 21 நாளும் அரைத்தானபிறகு பயறுபிரமாணம் மாத்திரைகள் செய்து புட்டியில்போட்டு வைத்துக்கொள்ளவும்.

(இதற்கு அனுபானம்) வெட்டைக்கி அருகன்வேர் கியாழத்திற் கொடுக்கவும், விஷத்திற்கு பழரசத்தில் அரைத்துப் பூசவும், தேளுக்குக் கடிவாயில் தடவி கலிக்கமிடவும், சுகஜன்னிக்கு இஞ்சிரசத்தில் கொடுக்கவும், தாகத்திற்கு சர்க்கரையில், உள்சுரத்திற்கு மோர், பித்தசிலேற்பனத்திற்கு இஞ்சி, முறைக்காய்ச்சலுக்கு முடக்கொத்தான் கியாழத்தில், விஷவாதம் காமாலை சோகை பித்தங்களுக்கு வேப்பிலை, தாணிக்கா, மிளகு, சுக்கு, பசுங்கோமியத்தில் கொடுக்கவும், அண்டவாதத்திற்கு பூலாச்செடிதூளும், அமுக்குராத்தூளுங் கூட்டிகொடுக்கவும், மாலைக்கண் குருடு காசத்திற்கு கையான்ரசத்திலும் எலுமிச்சம்பழரசத்திலும் கலிக்கமிடலாம், மூலகிராணிக்கு சர்க்கரையில், நஞ்சு தின்றவர்களுக்கு கருவூமத்தின் ரசத்தில் (84) வாதத்திற்கும் மாவிலிங்கம் ரசத்தில், அஷ்டகுன்மம் தசவாய்வு விப்புருதி காசம் சுவாசகாசம் பீலிகை நீராம்பல் கோவை அடிவயறு வீக்கம் மந்தாரகாசம் (96) சிலேற்பனத்திற்கும் தும்மட்டிக்காய்ரசத்தில், முசல்வலிக்கு ஊமத்தன் ரசத்தில் நசியமிடவும், கபாலகுஷ்டம் கிரந்திசூலை சிலவிஷம் கடிவிஷம் வாய்நீரொழுகலுக்கு திரிகடுகு தூளில், பாதசக்கரம் பாதபுத்திற்கு ஜாதிக்காதயிலத்தி லிழைத்துவிடவும்.

அண்டவாத மாத்திரை

ஒருபலம் பூரத்திற்கு பால்நண்டை யிடித்து ரசம்யெடுத்து நாலு ஜாமம் சுருக்கு கொடுத்து உத்தாமணி வேர்ப்பட்டை ரசத்தினால் மூன்று ஜாமம் சுருக்கு கொடுத்து மேற்படி ரசத்தால் அரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து முத்தெண்ணெயில் நனைத்து (20) நாள் சாப்பிடவும்.

இச்சாபத்தியம், இதற்கு முதல்நாள் பேதிக்கு சாப்பிடவேணு மாகையால் கழற்சிவேர் 3-பலம் யெடுத்து யிடித்து கியாழம் வடித்து மிளகு ரசஞ்செய்து முத்தெண்ணெய் பலம்-1, விட்டு சாப்பிட்டு விட்டு மறுநாள் முதல் மேற்படி மாத்திரை கொள்ளவும்.

சகல சுரத்திற்கும் சுராங்கிஷ மாத்திரை

இரசம்	நெல்விமுள்ளி
கெந்தகம்	கடுக்கா
அரிதாரம்	காந்தம்
வெங்காரம்	மிளகு
அக்கராகாரம்	திப்பிலி

இதுகள் வகைக்கி ஒருவிராகனிடையாக வாங்கி கல்வத்திலிட்டு வாளம் பத்துவிராகனிடை கூட்டி முசுமுசுக்கை ஆடாதோடை கண்டங்கத்திரி யெலுமிச்சம்பழரசம் இதுகளினால் ஒவ்வொருநாளைக்கி ஒருவகைரசம் விட்டு அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து இஞ்சிசுரசம் தேன் முலைப்பால் இதுகளில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்க சர்வசுரமுந்தீரும் (3) நாள் ஆறுவேளை கொடுக்கவும் புளியாகாது.

சுராங்கிஷ சுருக்கு மாத்திரை

கெந்தகம் ரசம் சமனிடையாயெடுத்து எலுமிச்சம் பழச்சார்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சி ஓமம் சீரகம் இந்தக் கியாழங்களில் ஒருமாத்திரை கொடுக்கவும். மேக அனல் ஊஷ்ணக்காய்ச்சல் மற்ற சுரமும் தீரும், புளியாகாது.

மத்தியான மாத்திரை

இரசம், உலர்ந்த லிங்கம், கெவுரிபாஷாணம், தொட்டிபாஷாணம், துத்தம், துரிசி வகைக்கு விராகனிடை-1, கெந்தகம் விராகனிடை-3, இவைகளைக் கையாந்தகரைச்சார்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து பயறுபிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி சகலசுரத்திற்கும் முலைப்பால் அல்லது சுக்கு கியாழத்தில் ஒருமாத்திரை கொடுக்கவும், மத்தியானத்தில் சுரம் விடும் புளிபுகைதள்ளவும், நல்லெண்ணெய் ஒருமாதம் வரையில் ஆகாது, தலைமுழுகவேணுமானால் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும், சரீரம் வீக்கம்கண்டால் சிறுகீரை

வேராவது பருத்திவேராவது வேவித்து தண்ணீர் கொடுக்கவும், வாய்வெந்தால் மிளகைவேகவைத்து அந்த தண்ணீர் யிருத்துக் கொடுக்கவும்.

ஊழிமாத்திரை

பூரம் லிங்கம் பொருந்து நற்கெந்தகம்
ஆரும்பத்திரி கிராம்பு வசம்பபின்
சாருங்கற்பூரம் சாம்பிராணி ஜாதிக்கா
நேரும்பூண்டு விடையநீள் சுக்கிடே. (1)

சுக்குதிப்பிலி சோம்புடனோமமும்
பக்குவங்கரி யோமமுங்கோரக்கர்
முக்கியமூலிவெண் காரஞ்சமன் கொடு
நக்கனார்பதம் நாடித்து தித்திடே. (2)

துதித்துக்கல்வத்தி லிட்டு சுரந்தவர்
மதித்தவஸ்துவால் வாகாயரைத்ததை
விதித்த கடலையின் வீதமுருண்டையாய்
பதித்தென்னம்மையின் பாதம் பணிந்திடே. (3)

எடுத்த ஊழியா லெய்திடும்பேதிக்கே
வடித்த சுத்தநீர் தன்னிலோர் மாத்திரை
கொடுத்து கோதுமை கஞ்சிகொடுத்திட
எடுத்த ஊழிக்கி ஈதூழியாகுமே. (4)

மாத்திரை வகை பரணி
முற்றுப்பெற்றது.

உ
தேவிசகாயம்

மூன்றாவது
கட்டுவகை பரணி

லிங்கக்கட்டு

சீனாலிங்கம் ஒருபலம்வாங்கி சேராங்கொட்டை (15) பலமெடுத்து துண்டு துண்டுகளாக வெட்டி ஒருசட்டியில் பாதிபோட்டு அதின்மேல் லிங்கக்கட்டியை வைத்து மற்றபாதி கொட்டையைப்போட்டு லிங்கந்தெரியாமல் மூடி அடுப்பிலேற்றி எரிக்கும்போது விளக்கைக்காட்டினால் திக்கென் றெறியும் அனல் அடங்கியபிறகு லிங்கக்கட்டியை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு தேனில் உரைத்துக் கொடுக்கலாம். பத்தியம் புளிகூடாது, இந்த லிங்கக்கட்டியில் பாதி உடைத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொள்ளவும், இதற்கு லிங்கசெந்தூரமென்று பெயராம், பலவிதசுரங்களுக்கு அரிசிபிரமாணம் தேனிற் கொடுக்கலாம்.

வேறு வகை லிங்கக் கட்டு

ஜாதிலிங்கம் (5) விராகனிடை கொண்டுவந்து முலைப்பாலில் ஒருஜாமஞ் சுருக்குக்கொடுத்து எலுமிச்சம் பழரசத்தில் ஒருஜாமஞ் சுருக்குக் கொடுத்து மணத்தக்காளி சாற்றில் ஒரு ஜாமஞ் சுருக்குக் கொடுத்து எடுத்துப்பார்க்க கட்டும், ஜன்னி சுரந் தலைவலி இதுகளுக்கு முலைப்பாலில் உரைத்துக் கொடுக்கலாம், சீதள ஜலுப்பு இதுகளுக்கு தேனில் உரைத்துக் கொடுக்கவும், பத்தியம் அரைபுளி இச்சாபத்தியம்.

வன்னி கெற்பமாகிய லிங்கக்கட்டு

ஒருபலம் லிங்கத்தை தேன் முலைப்பாலில் ரு ன்றுநாள் ஊறவைத்தெடுத்து ஒருபலம் நெல்லிக்கா கெந்தகத்தை ஆலம் பால்விட்டு நன்றாய் ரேகிக்க யிடித்து லிங்கத்திற்கு கவசஞ்செய்து

உலர்த்தி சிறுகுழியில் வைத்து அதன்மீது மணல் பரப்பி மறைத்து சூடுபடும்படியாக இரண்டு வரட்டியால் புடம்போடவும் ஆறினபிறகு எடுத்து மேல்கவசமிட்டு கெந்தகத்தை நீக்கிவேறேகெந்தகம் ஒருபலம் கொண்டுவந்து முன்மாதிரியாய் பாலிலிடித்து கவசித்து குழியில்வைத்து மணல்பரப்பி ஒருவரட்டி அதிகப்படுத்தி புடம்போடவும், இப்படியே ஒவ்வொருதடவையும் புதுகெந்தகம் கவசித்து ஒவ்வொருவாட்டி அதிகப்படுத்தி (9) தடவை புடம் போட்டெடுத்து முடிவில் முன்மாதிரியாக கெந்தகம் கவசஞ்செய்து நாலு சீலைமண் செய்து பூமியில் பத்து வரட்டியில் புடம் போட்டு யெடுத்து சகலவாய்விற்கும் சீதளசுரம் ஜன்னி இவைகளுக்குந் தேன் இஞ்சிரசத்தில் யிழைத்துக் கொடுக்கவும்.

வீரக்கட்டு

வேண்டியமட்டும் வீரத்தைக் கொண்டுவந்து சாம்பிராணி விராகனிடை-1, நெல்லிக்கா கெந்தகம் விராகனிடை-1, இரண்டுந் தூள்செய்து கரண்டியிலிட்டு அனலில் பிடிக்க உருகி வருஞ் சமயத்தில் வீரத்தைப்போட்டுப் புரட்டி எடுத்துக் கொள்ளவும் ஜன்னி வாய்வுகளைக் கேட்கும் இது போல் லிங்கத்தையுங் கூட்டிக் கொள்ளலாம்.

பூரக்கட்டு

சீனாபூரம் ஒருபலம் வாங்கி முலைப்பாலில் மூன்றுநாள் ஊற வைத்தெடுத்து உலர்த்தி ஒரு சட்டியில் துளசிரசம் பிழிந்து அதில் பூரத்தை வைத்து அடுப்பேற்றி சிறுதீயாக அந்த ரசஞ் சுண்டுகிற வரையிலும் யெரித்தெடுத்தால் அதுகட்டும்.

ரசகற்பூரக்கட்டு

நாலுவிராகனிடை ரசகற்பூரத்திற்கு முலைப்பால் நண்டையிடித்து சாறுபிழிந்து இரண்டுஜாமஞ் சுருக்குக் கொடுத்துப் பிறகு முசுமுசுக்கைச் சாறுபிழிந்து இரண்டு ஜாமஞ் சுருக்குக் கொடுக்கக் கட்டும்.

துருசு சுன்னத்தில் லிங்கக்கட்டு

நிலையாவாரையிலையை துவைத்து சிறுபிள்ளை சிறுநீர்விட்டு சாறுபிழிந்து ஒருகோப்பையில் பெரிய கட்டியாக துரிசி எடுத்து சீனகாரத்தை நீரிலரைத்து கவசித்து கோப்பையில் வைத்து துருசு முழுக

மேற்படி சாற்றைவிட்டு ஏழுநாள் வெய்யலில் வைக்க சாறுவற்றிப் போகும் பிறகு கருப்பு வெத்திலைச்சாறுவிட்டு ஏழுநாள் வெய்யலில் வைக்க நீர்சுண்டிவிடும் அந்த துரிசை யெடுத்து பசும்வெண்ணெயை தளமாய்பூசி கோப்பையைத்துடைத்து அதின் நடுவேகட்டியை வைத்து ஆறுநாள் வெய்யலில் வைக்க அந்ததுரிசி சுன்னமாகும். அதில் கொஞ்சமெடுத்து சப்பாத்திப்பூ நடுவிலிருக்கும் நரம்பைப் போக்கி அத்துடன் சுன்னத்தை வைத்துப் பிசைந்து ஒரு ஜாமம் வைத்து பிறகு யெடுத்து கம்பிளியிலாவது சீலையிலாவது வைத்துப் பிழிந்தால் தாராளமாய் சாறுயிறங்கும், சாறு வாராதயிலைகளிலே சுன்னத்தைவைத்துக் கொள்ளலாம். மேற்படி சாற்றை ஒருபலம் லிங்கத்திற்கு மூன்று ஜாமம் சுருக்குக் கொடுத்தால் லிங்கம் மணியாக்கட்டும். சர்வசுரம் ஜன்னி சீதளம் இதுகட்கு வைரியாம்.

வேறுவிதம் வீரக்கட்டு

துருசு விராகனிடை-1½, படிகாரம் விராகனிடை- 1½, இரண்டையுந் தூள் செய்து அடுப்பில் ஓடு காயவைத்து மேற்படி தூளை மூன்று பங்காக்கி ஒருபங்கை ஓட்டில் தூவி எரிகிற சமையத்தில் ஒருவிராகனிடை வீரத்தைப் போட்டு புரட்டி யெடுத்துக் கொள்ளவும், ஓட்டிலுள்ள சுண்டுகளை சுரண்டியெடுத்துவிட்டு மற்றயிரண்டு பங்குதூளையும் இப்படியே செய்தெடுத்து மறுபடியும் விராகனிடைக்கி சூடத்தைக் கொண்டு வந்து கவசித்து கொளுத்திவிட்டால் வீரம் உருகி மணியாகும். க்ஷயம் ஜன்னி இவைகளுக்காகும்.

கட்டுவகைபரணி
முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்

நான்காவது

பற்பவகை பரணி

லிங்கபற்பம்

லிங்கம் வேண்டியமட்டும் கொண்டுவந்து வைத்துக்கொண்டு வெள்ளெருக்கன்வேரில் கொஞ்சம் பொட்டிலுப்புப்போட்டு இடித்து சார்பிழிந்து அந்தரசத்தில் பாதியெடுத்து லிங்கத்திற்கு சுருக்குக்கொடுத்து மற்றசார்விட்டு மேற்படி உப்பை அரைத்து உலர்த்தி தூள் செய்து கழுத்துநீண்ட குடுவையில் அறைக்குடுவை அந்த உப்பைப்போட்டு அதின்பேரில் லிங்கத்தைவைத்து அந்த லிங்கத்தின்மேல் உப்பையும்போட்டு நிரப்பி பத்து எருவில் புடம்போட்டு உப்பு சிவந்தவுடன் எடுத்து ஆறவைத்து லிங்கத்தையெடுத்துக் கொள்ளவும் (இதற்கு அனுபானம்) தேன் நெய் வெண்ணெய் இதுகளில் பணவிடைகொடுக்க தீரும் வியாதிகள் மேகம், ரணம், கரிமேகம், தடிப்பு, வாய்வு இவையெல்லாந்தீரும். பத்தியம் இறைச்சி, பீர்க்கங்காய், பசும் பால்கொப்பளித்து முழுங்கவும், (3) நாள் அல்லது (5) நாள் சாப்பிடவேணும்.

வெள்வங்கபற்பம்

வெள்வங்கம் நாலுபலமெடுத்து அரசம்பட்டையை யிடித்து கோணிப்பட்டையில் வைத்து அதின் நடுவில் வங்கத்தை வைத்து சுருட்டி மண்ணினால் சீலை கவசஞ்செய்து (30) வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்திலரைத்து சீசாவில்வைத்துக் கொள்ளவும், இதை நெய்யில் கொடுக்க மேகம்-21-ம், நீங்கும். கடுகு நல்லெண்ணெய் மீன் பூசிணிக்காய் ஆகாது.

வேறுவித வெள்வங்கபற்பம்

சுத்திசெய்த வெள்வங்கத்தை தகடாகச்செய்து பொடியாகத்தரித்து நொச்சியிலையை உணர்த்தி யிடித்ததூளை ஒரு

கோணிப்பட்டையில் இரண்டு விரல்கனம் பரப்பி அதின்மேல் வங்கப்பொடியைத் தூவி அதின்மேல் மேற்படி மூலிகைத் தூளைத்தூவி தலையணைப்போல் சுருட்டிக்கட்டி (5) படி உமிமத்தியில் வைத்து நெருப்பிடவும் நன்றாய் வெந்தபிறகு எடுத்து வேகாதிருப்பவைகளை நீக்கி, பற்பமாய் நீற்றிருப்பதை யெடுத்துக் கொண்டு வெண்ணெயில் உபயோகப்படுத்தவும். மேகம் வெள்ளை இதுகள் தீரும்.

கரிவங்க பற்பம்

கரிவங்கம் நாலுபலங் கொண்டு வந்து அத்திப்பட்டை அல்லது மருதம்பட்டையை இடித்து மேற்கூறிய கவசஞ்செய்து நூறுகைவரட்டியில் கெஜபுடம்போட்டு யெடுத்து கல்வத்திலரைத்துக் கொள்ளவும், நெய்யில் கொடுக்க வெள்ளை முதலான மேகமுந்தீரும் பத்தியம் முன்மாதிரியிருக்கவும்.

செம்மேகத்திற்கு பேரண்ட பற்பம்

பால்போலிருக்கும் அண்டஓட்டை பூநீரில் கொதிக்கவைத்து கழுவியெடுத்து எருமைசாணியடைத்து மத்தியில் வைத்து அரைகெஜ புடமிட்டெடுத்து இது நான்கு பாகத்திற்கு பூரம் ஒருபாகஞ்சேர்த்து வாய்நீராலரைத்து பில்லைசெய் துலர்த்தி அரை கெஜபுடமிட்டு எடுத்துக்கொள்ளவும் (அனுபானம்) தேனில் பணவிடையாக அரைமண்டலங் கொடுக்க செம்மேகம் தீரும்.

சீமைகல்னார் பற்பம்

கல்னார் ஐந்து பலங்கொண்டுவந்து துண்டு துண்டாக யிடித்து புதுக்குடுவையில் போட்டு யெலுமிச்சம் பழச்சார்விட்டு நிழலில் ஊறவைத்து சுண்டினபிறகு இதேமாதிரியாய் (5) திரம் ஊறவைத்துதெடுத்து (30) வரட்டியில் புடம்போட்டு பிறகு கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவும், நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க பல்நோய் மார்நோய் இதுகள் தீரும். சூடு நிவர்த்தியாகும் இச்சாபத்தியம்

கற்பூரசிலாசத்து பற்பம்

கற்பூரசிலாசத்து பத்து களஞ்சிவாங்கி சுண்ணாம்பு தளமாய்ப்பூசி (8) வரட்டியில் புடம் வைத்தால் பஸ்பமாகும், அதின் மேலிருக்கும்

சுண்ணாம்பைத்தட்டிவிட்டு கல்வத்திலரைத்து யெடுத்துக்கொள்ளவும், இதை நெய்யில் கொடுத்தால் சகலமேகம் வாய்வு சூடுநீங்கும், இச்சாபத்தியம்.

வெள்ளைக்கு இருமலுக்கு படிகாரபற்பம்

சிறியமண்குடுவையில் ஒருபலம் பசும் வெண்ணெயைவிட்டு அதின்மத்தியில் ஒருபலம் படிகாரம் ஒரே கட்டியாக அதன் நடுவில் யிறங்க சொருகிவைத்து வாய்புரம் ஓடுமூடி சீலைமூன்று செய்து (5) வரட்டியில் புடம்போடவும் நீர்த்து பஸ்பமாயிருக்கும், அதை வெண்ணெயில் மிளகுயிடை குழைத்துக் கொடுக்க மூன்றுநாள் ஆறுவேளையில் வெள்ளை நீர்க்கடுப்பு இதுகள் நீங்கும், மூன்று குன்றியிடை பஸ்பத்தை முசுமுசுக்கையிலை மூன்றில் பத்தியாய் அடுக்கி மடித்து சாப்பிட இருமல் தீரும், (7) நாள் சாப்பிடவும் தினம் ஒருயிலை அதிகப்படுத்தவும்.

வீரபற்பம் பச்சைவெட்டு

வீரம் இரதம் பெரிகாரம் இந்த மூன்றும் சமயிடையா யெடுத்து அரைத்து பனவெல்லத்தில் ஒருபணவிடை பற்பம் வைத்து சாப்பிட புண், வெள்ளை, கிரந்தி, கட்டி, சூலை, சூதக வாய்வு, விஃக்கட்டி, மலக்கட்டு இதுகள் தீரும் (3) நாள் ஆறு வேளைசாப்பிடவும், வறுத்தவுப்பு கூட்டவும் புளி ஆகாது.

பலகாரை பற்பம்

பலகாரை (3) பலம்வாங்கி புதிய குடுவையில்போட்டு எலுமிச்சம் பழச்சார்விட்டு கவசம் செய்து (10) வரட்டியில் புடம் போட்டு எடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும் இதை நெய்யில் தேனில்கொடுக்க பக்கசூலை மார்நோய் வாய்வு நீங்கும், கடுகு நல்லெண்ணெய் மீன் ஆகாது.

மான் கொம்பு பற்பம்

மான்கொம்பு அரைவீசைவாங்கி துண்டு துண்டாய் நறுக்கி உடைத்து இதையும் அகத்திக்கீரையையும் பெரிய பானையில் போட்டு ஒருஜாமம் வேகவைத்துயெடுத்து பிறகு நீர்முள்ளியிலையை அரைத்து மேல்கவசஞ் செய்து சீலைமூடி (50) கைவரட்டியில் புடம்போட

பஸ்பமாகும். கல்வத்திலரைத்து யெடுத்துக்கொள்ளவும், நெய்யில்கொடுக்க மார்நோய், இடுப்பு நோய், நாவறட்சி, வெள்ளை, மேகம் இவைகள், தீரும், இச்சாபத்தியம்.

பவழபற்பம்

பவழம் (5) பலம்வாங்கி எலுமிச்சம் பழரசத்தில் ஒருநாள்வூறி கழுவியெடுத்து வாய் அகலமான குடுவையில் போட்டு முசல் ரத்தம்விட்டு சீலை கவசம்செய்து (50) கை வரட்டியில் புடம்வைத்தால் பஸ்பமாகும், கல்வத்திலரைத் தெடுக்கவும் இதை தேனில் அல்லது நெய்யிற் கொடுக்க இருமல் நீங்கும் இச்சாபத்தியம்.

கெட்டி முத்து பற்பம்

ஒரு விராகனிடை கெட்டிமுத்து வாங்கி சீமைகரசனாங்கண்ணி சார்பிழிந்து சிறிய குடுவையில் போட்டு சீலை கவசம்செய்து (5) கைவரட்டியில் புடம்போட்டு யெடுக்கவும் நெய்யில் கொடுக்க திரேககாந்தி வீரியவிர்த்தி யுண்டாகும். இச்சாபத்தியம்.

சங்கு பற்பம்

(5) பலம்சங்கு வாங்கி கல்வத்தில்வைத்து பிரண்டைசார் விட்டு அரைத்து (10) பில்லையாகச் செய்து உலரவைத்து (25) வரட்டியில் புடம்வைக்கவும், இப்படி ஏழுதடவை அரைத்து புடம்வைத்தபிறகு கல்வத்திலரைத்து யெடுத்துக்கொள்ளவும் இதை எலுமிச்சம்பழரசத்தில் சாப்பிடவும் வாதகுன்மம் நீர் சுருக்கும் விலகும், இச்சாபத்தியம்.

ஆமையோடுபற்பம்

ஆமையோட்டை நறுக்கி பச்சை கோரைக்கிழங்கை யரைத்து அதின்மேல் பூசி கவசம்செய்து உலர்த்தி (50) வரட்டியில் புடம்வைக்க பஸ்பமாகும், நெய்யில்கொடுக்க பசிதீபனம் உண்டாகும் அசீர்ணம் நீங்கும், இச்சாபத்தியம்.

கருவங்க பற்பம்

சுத்தி செய்த கருவங்கம் ஒருபலம் யெடுத்து தகடுதட்டி ஆவாரைசமூலம்யிடித்து ஒரு சட்டியில் பாதி அமுத்தி அதின்மேல் தகட்டை பரப்பிவைத்து மற்றபாதியைப் போட்டுத் தளமாய் அமுத்தி

மேல்சட்டி மூடி சீலைமண்செய்து கெஜபுடம் போட பற்பமாகும், இதை பசும்வெண்ணெயில் கற்கண்டு இதுகளில் கொடுக்க (21) மேகநோய்களையும் தீர்க்கும், கடும்பத்திய மிருக்கவும்.

கல்நார் பற்பம்

சுத்திசெய்த இரண்டு பலம் கல்நார் வாங்கி பசுங்கோமியத்தில் (15) நாள் ஊறவைத்தெடுத்து கழுவி யுணர்த்தி ஆவாரையிலையை அரைத்து கவசம்செய்து கெஜபுடத்தில் வைக்க பஸ்பமாகும் இந்தபற்பம் முன்சொன்ன அனுபானங்களில் கொடுக்க சகலமேகங்களும் தீரும்.

தங்கபற்பம்

(7) அல்லது (8) மாத்துள்ள பொன் வாங்கி மிக அச்சபில்லைகளாக தகடுதட்டி சிகப்பு முள்ளுக்கீரை வேரின் பட்டையை அரைத்து தகட்டின்மேல் மொத்தையாக மூடி சீலை கவசம் செய்து பத்து வரட்டியில் புடம்வைத்து ஆறியெடுத்து இங்கிலீஷ் வெள்ளைக்கல்வத்தில் அரைத்தெடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும், இதை நெய்யில் சாப்பிட்டால் வீக்கம் வாய்வு போம் மேற்படி மொத்தை ஒருவிராகனிடைதகட்டுக்கு ஒரு எலுமிச்சங்காயளவு யிருக்கவேணும்.

தாளக பற்பம்

பச்சைதாளகம் ஒருபலம் வாங்கி கல்சுண்ணாம்பை ஜெலத்தில்போட்டு தெளிந்தபிறகு ஜெலத்தையிருத்து அந்த ஜெலத்தினால் தாளகத்தை ஏழுநாளரைத்து பில்லைசெய்து உலரவைத்து ஒருகலசத்தில் சுண்ணாம்பு நீரு நிறைய அழுத்தமாய் வைத்து அதின்மேல் இந்த பில்லையை வைத்து வேறொரு கலசத்தில் சுண்ணாம்பு நீரை அழுத்தமாய் வைத்து மூடி ஏழு சீலை கவசம் செய்து சுமார் பத்து வரட்டியில் புடம்போட்டுயெடுக்க வெள்ளை பஸ்பமாகும் தேனில் கொடுக்கவும், புளி நல்லெண்ணெய் கடுகு ஆகாது.

ரச பற்பம்

ரசம் (2½) விராகனிடை யெடுத்து சிவகரந்தைச் சாறுவிட்டரைத்து பில்லைசெய்து ரவியிலுலர்த்தி ஓட்டில்வைத்து மேல் ஓடுமூடி மூன்று சீலைமண்செய்து கோழிப்புடம்போட நீரும், இதை பனைவெல்லத்தில் கொடுக்க கிரந்திமேகம் வெள்ளைதீரும் இச்சாபத்தியம்.

வெள்ளி பற்பம்

முக்கா வேளையைக் கொண்டு வந்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு உருட்டி அதனுள் வெள்ளித்தகட்டை அச்சமாகத்தட்டி சொருகி சீலைமண் கவசஞ்செய்து பத்து வரட்டியில் புடம்போட்டு யெடுத்துக் கொள்ளவும், தாது விர்த்திக்கி வெண்ணெயில் அரிசிப்பிரமாணம், மேகம் எலும்புருக்கி முதலானதற்கும் கொடுக்கலாம்.

நாக பற்பம்

சுத்திசெய்த நாகம் (1½) பலம், சூதம் (½) பலம், இரண்டையும் உருக்கி ஒன்றாகத் தொந்தித்து அஞ்சாங் காய்ச்சல் வெடியுப்பு ஒருபலம் சேர்த்து கல்வத்திலிட்டு உத்தாமணி ரசத்தால் நாலு ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடுமூடி சீலைசெய்து (12) வரட்டியில் புடம்போட்டெடுக்கவும் (இதற்கனுபானம்) பாலில் வேகவைத்து உலர்த்திய சுக்கு சூரணத்தில் பனைவெல்லம் சமமாய்ச் சேர்த்து பிசைந்த லேகியத்தில் கழற்சிக்காய்ப்பிரமாணம் எடுத்து அதின் நடுவில் மேற்படி பற்பத்தை குன்றியிடை வைத்து மூன்றுநாள் கொடுக்க மூலம் சீழ் மூலம் தீரும்.

தங்க பற்பம்

தங்கரேக்கு விராகனிடை-½, சுத்திசெய்த சித்தண்ட ஓடு விராகனிடை-1, இவ்விரண்டையும் அரைத்து உத்தாமணிபால் (5) துளிவிட்டு பிசரி மூசையிலிட்டு ஓடுமூடி சீலைசெய்து ஒரு குண்டு சட்டியில் உமிகொட்டி அதின் மத்தியில் வைத்து தீயிட பற்பமாகும், காசரோகத்திற்கும் அதிக கொழுமையினா லடைந்த தாதுசோர்வையும் தீரும்.

பற்ப வகை பரணி
முற்றுப்பெற்றது

இனிவரும் பற்பவகை பாகங்களில் கையாளத்தக்க உத்தமமுறைகள் இரண்டாங் காண்டத்தில் அச்சிட்டிருக்கின்றோம்.

உ
தேவிசகாயம்

ஐந்தாவது
செந்தூர வகை பரணி

திரிலோக செந்தூரம்

அயப்பொடி பலம்-1, கெந்தி பலம்-2, தங்கப்பொடி விராகனிடை-½, வெள்ளிப்பொடி விராகனிடை-1, இவைகளை கல்வத்திலிட்டு கல்சுண்ணாம்புசாரமும் சமனாகக் கூட்டி நல்ல ஜலத்தில் கரைத்து தெளிவுநீரை யெடுத்து அந்த நீரினால் மேற்படி சரக்கை நாலு ஜாமமரைத்து உணர்த்தி புதுஓட்டிலிட்டு அடுப்பேற்றி லேசாக வறுக்கும்போது சிவந்துவரும்பதத்தில் எடுத்துக்கொண்டு தேனில் பணவிடை கொடுத்துவரவும் சோகை, வெளிரு, ஊதல், நீரேற்றம், பசிமந்தம், வாய்வு இவைகள் தீர்ந்து ரத்த விர்த்தியாகும்.

அன்னபேதி செந்தூரம்

அன்னபேதி (10) விராகனிடை வாங்கி புளிச்சத் தண்ணியில் ஊறவைத்து கல்வத்திலிட்டு (5) எலுமிச்சம்பழரசம் விட்டரைத்து பில்லை செய்து உலரவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஒருசீலைமண்செய்து பத்து வரட்டியில் புடம்போட்டு எடுக்கவும், அதைதேனிலிட மேகவாய்வு, மார்புநோய் நீங்கும் பசியுண்டாகும்.

வேறு அன்ன பேதி செந்தூரம்

மான் செவிக்கள்ளியிலை ரசத்திலரைத்து பில்லைதட்டி (10) எருவில் புடமிட் டெடுக்கவும் தேள்கடி வாய்வு வீக்கந் தீரும்.

ராமபாண செந்தூரம்

வீரம், பூரம், ரசம், லிங்கம், ரசச்செந்தூரம், நெல்லி கெந்தகம், வகைக்கிக் களஞ்சிவீதம் யெடுத்து முலைப்பாலில் (4) ஜாமம் அரைத்து

வெய்யலில் வைத்தால் செந்தூரமாகும். எடுத்துக் கொண்டு பனவெல்லத்தில் அரிசியிடை கொடுக்கவும் இச்சாபத்தியம் வாய்வு, வீக்கம், சுரம், மேகம், ஜன்னி, நீரேத்தம் இவை நீங்கும்.

பாலசூர செந்தூரம்

சிறிய சூடுவையில் கால்பலம் நெல்லிக்கா கெந்தியை ஒருபலம் பாலைரசத்துக்கு கீழ்மேலுமிட்டு ஓடுமூடி சீலைசெய்து மூன்றெருவில் புடமிட்டு யெடுக்கவும், அரிசியிடை தேனிலிட வாய்வு சுரம் தீரும்.

கனமண்டூர செந்தூரம்

மண்டூரம் (2) பலம்யெடுத்து உலக்கிடத்தில் காய்ச்சி பசுவின் கோமியத்தில் தோய்க்கவும் இம்மாதிரி ஏழுதடவை காய்ச்சி காய்ச்சி துவைத்து உரலில் போட்டு கெட்டப்பாரையினால் யிடித்து வஸ்திர காயம் செய்து கல்வத்தில் போட்டு பசுங்கோமியத்தில் ஒருநாள் அரைக்கவும், வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒரு நாள் அரைக்கவும், எருமைக்கிடாமூத்திரத்தில் ஒருநாள் அரைக்கவும் பிறகு.

கரசனாங்கண்ணிச்சார்	உத்தாமணிச்சார்
பூந்துளசிச்சார்	கொட்டைகிரந்திச்சார்
பேரண்டைச்சார்	ஆடாதோடைச்சார்
குண்டுமணியிலைச்சார்	நெல்லிக்காயிடித்தச்சார்
பச்சைமஞ்சள்சார்	கத்தாழைச்சார்
சங்கம்பட்டைச்சார்	தேவதாரி கியாழம்
ஆனைநெரிஞ்சிச்சார்	சித்திர மூல சமூலகியாழம்
நீர்முள்ளிச்சார்	கருவேலம் பட்டைகியாழம்
சாம்பிராணியிலைச்சார்	நாகப்பட்டைகியாழம்
ஆலம்வேர் யிடித்தச்சார்	எலுமிச்சம்பழரசம்
புளியம்யிலையிடித்தச்சார்	புளிச்சத்தண்ணி
உலர்ந்த கடுக்காகியாழம்	கொடிநார்த்தைச்சார்
அரசம்பட்டைக்கியாழம்	சித்திரகொடி சமூலகியாழம்

இவ்வகைச்சாறு கியாழங்களில் நாளொன்றிற்கு ஒவ்வொருதினுசுகளினாலரைத்து முடிவில் பில்லைதட்டி (100) கைவரட்டி (10) கூடைஉமி (10) கூடைகரி கெஜபுடத்தில் வைத்து மூன்று நாள் பொருத்தெடுத்து கல்வத்திலரைத்து புட்டியில் வைத்துக்கொள்ளவும். இதை தேனில் அரிசியிடை கொடுக்க

சுவாசகாசம், உப்புசம், க்ஷயம், (15) கிராணி, அதிசாரம், உள்காய்ச்சல், சோகை, வீக்கம், எட்டுவிதபாண்டு இவையெல்லாந்தீரும் கடும்பத்தியம்.

தன்வந்திரியார் சண்டமாருத செந்தூரம்

சுத்திசெய்தரசகற்பூரம்	விராகனிடை	4
லிங்கம்	"	8
வீரம்	"	2
நெல்லிக்காகெந்தகம்	"	2
ரசசெந்தூரம்	"	1

இவைகளைக் கல்வத்திலிட்டு (2) ஜாமங் கைவிடாமலரைத்து எடுத்து பணவிடையாக பணவெல்லத்திலிட்டு உருட்டி முழுங்கச்செய்யவும் ஆறுவேளை கொடுக்க ஜன்னி (13) குட்டம், மகோதரம், பீலிகை, குன்மம், வாதம், (80) கிரந்தி கொருக்கு, காமாலை, பிளவைசுரம், (64) விரைவாதம், தனுர்வாதம், சூலைபவுத்திரம், கண்டமாலை, கருமேகம், வண்டுகடிகள் யோனிப்புத்து முதலான வியாதிகளுக்குத்தக்க அனுபானங்களிலிட தீரும்.

சண்டமார்த்தாண்ட செந்தூரம்

பூரம்	விராகனிடை	10
லிங்கம்	"	8
ரசசெந்தூரம்	"	2
நெல்லிக்காகெந்தகம்	"	1

இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு எட்டு ஜாமமரைத்து கோழிமுட்டை வெள்ளையம்பிலியால் எட்டுநாளரைத்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி நல்ல ஜெலம் ஒருபடி கொதிக்கக்காய்சி அதில் இந்த பில்லையைப்போட்டு சூடு ஆறின பிறகு எடுத்து உணர்த்தி கல்வத்தில் அரைக்கச் செந்தூரமாகும் அரிசிப்பிரமாணந் தேனிற்கொடுக்க பாரிசவாய்வு ஜன்னி தீரும், கடுகு நல்லெண்ணெய் தயிர் பால் ஆகாது.

யூநானி செந்தூரம்

பூங்காவி	பலம்	2
படிகாரம்	"	2

இவையிரண்டும் கல்வத்தில் அரைத்து வெண்ணெய் அல்லது நெய்யில் சாப்பிடவும் பெரும்பாடு, வெள்ளை, பசிமை, ரத்தகாசம், மேகவெட்டை, உள்காச்சல், ஊஷ்ண வாய்வு, நாக்கு வரட்சி இதுகள் தீரும், இச்சாபத்தியம் கடுகு நல்லெண்ணெய் நீக்கவும்.

தாம்பிர செந்தூரம்

பழய ஜல்லிகாசியைக் கொண்டுவந்து தட்டானிடத்தில் கொடுத்து காய்ச்சி யிலைபோல் தகடுகளாக தட்டினபிறகு நன்றாய் சிவக்கக் காய்ச்சி யெலுமிச்சம்பழரசத்தில் தோய்க்கவும் இப்படி பதினோருதடவை காய்ச்சி தோய்த்தபிறகு அவுத்திக்கீரையை அரைத்து ஒவ்வொரு தகட்டுக்கும் தளமாய்ப்பூசி அதாவது முத்தையின் நடுவில் தகட்டைச் சொருகி அனைத்தும் ஒரே முத்தையாய்த் திரட்டி சன்னகோணிப் பட்டையை சேற்றில் புரட்டி கீரைமொத்தைமேல் கவசஞ்செய்து இரண்டு முழ ஆழம் அகலநீளமுள்ள கெஜபுடத்தில் நூறுகைவரட்டியில் புடம் வைக்கவும் நாலுனாளான பிறகு அதையெடுத்து கல்வத்தில் வெள்ளெருக்கன்பால் விட்டரைத்து பில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலை கவசம்செய்து ஐம்பதுகை வரட்டியில் புடம் வைக்கவும் மறு நாள் எடுத்துப்பார்க்க ஊதா செந்தூரமாகியிருக்கும் அதைக் கல்வத்திலிட்டு அரைத்து புட்டியில் வைத்துக் கொள்ளவும் இதற்கனுபானம் கால்படி புளிச்சத்தண்ணீரில் (2 ½) பலம் மிளகுபோட்டு (3) நாள் ஊறவைத்து நாலானாள் யெடுத்து வெய்யலில் உலர்த்தி சூரணம்செய்து நெய்பழகிய சட்டியில் ஒரு ரூபாயிடை தேன், ஒரு ரூபாயிடை இஞ்சிரசம், ஒரு ரூபாயிடை பசும்நெய், மூன்றும்விட்டு மேற்படி சூரணம்போட்டு லேகியமாய் கிளரிவைத்துக்கொள்ளவும். புளியங்கொட்டைப் பிரமாணம் லேகியத்தில் அரிசியிடை செந்தூரம் வைத்து உருட்டிசாப்பிடவும் வாதசுரம், மேகவாய்வு, பாரிசவாய்வு, கண்டமாலை கிரந்தி இப்படிப்பட்ட வியாதிக ளெல்லாம் நிவர்த்தியாகும் தாதுவிர்த்தியுண்டாகும், கடுகு நல்லெண்ணெய் நீக்கவும், இச்சாபத்தியம்.

செந்தூர வகை பரணி
முற்றுப்பெற்றது.

இனிவரும் செந்தூரவகை பாகங்களில் கையாடத்தக்க உத்தமமுறைகள் இரண்டாங் காண்டத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

உ
தேவிசகாயம்

ஆறாவது

மெழுகு வகை பரணி

வெள்ளைப்பாஷாண மெழுகு

வெள்ளைப்பாஷாணம் இரண்டு பலங்கொண்டு வந்து மெல்லிய சீலையில் சுத்தி வண்ணான் வெள்ளாவியில் யேழுதிரம் வைத்துப் பிறகு வேரே துணிசுத்தி சேத்தின்கீழ் (40) நாள் புதைத்துவைத்தெடுத்து நாளட்டியாக (அதாவது) ஒரு நாளைக்கு 3-4-5-6-இவ்விதமாய் ஆயிரத்தி அறுநூறு யெலுமிச்சம்பழரசத்தினால் அரைத்து முடிவில் செம்புசட்டியில் (6) பலம் நல்லெண்ணெய் வார்த்து பதமாய்க்காய்ச்சி பொங்கி வருவதற்குமுன் மேற்படி பழச்சாற்றில் அரைத்தமருந்து பில்லையைப் போட்டால் நாகப்பழநிறமாகும் அப்போதிறக்கி எண்ணெயை சாக்கடை அல்லது குப்பைமோட்டில் ஊத்திப்போட்டு மருந்தை மாத்திரம் பத்திரப்படுத்திக்கொள்ளவும், தேன் அல்லது வெண்ணெயில் சிறுபயறு பிரமாணம் (10) அல்லது (15) இருபதுநாள் சாப்பிட மேகரிணம், படைவாய்வு, மூக்குரிணம், கண்டமாலை, செகப்பு, கரப்பு, படைகிரந்தி, முதலானதும் தீரும். (பத்தியம்) தேங்காய் நல்லவெல்லம் மீன் பூசிணிக்காய் ஆகாது.

கோரோஜன மெழுகு

லிங்கம்	விராகனிடை	2½
பூரம்	"	2½
சுத்திசெய்தவாளம்	"	2½
லவுங்கம்	"	2½
வீரம்	"	1
கோரோஜனம்	"	1
கரிமஞ்சள்	"	1

ஏலரிசி	விராகனிடை	1
சுக்கு	"	1

இந்த சரக்குகளில் சுத்திசெய்ய வேண்டியதை சுத்திசெய்து சூரணிப்பதை சூரணித்து யாவுங் கலந்து பௌடர் செய்துக்கொண்டு கல்வத்திலிட்டு பத்து பலம் பனவெல்லம் வட்டி அரைத்தெடுக்கவும் கருப்பங்கட்டியில் உளுந்துப் பிரமாணம் சாப்பிட இரைப்பு உப்பிசம் வீக்கம் சகலமான வாய்வுந்தீரும்

தோஷாமிர்த மெழுகு

வீரம்	விராகனிடை	½
லிங்கம்	"	2
இங்கிலீஷ் ரசபற்பம்	"	¾
பூரம்	"	½
அதிமதுரம்	பலம்	1
கோஷ்டம்	"	1
அக்கிராகாரம்	"	1
சன்றாஷ்டம்	"	1
சுக்கு	"	1
அரிசித்திப்பிலி	"	1

இதுகளை பவுடர்செய்து தேன்விட்டரைத்தால் மெழுகாகும் பயறுபிரமாணம் (1) மணிக்கொருதிரம் சாப்பிடவும்.

வாதமாருத மெழுகு

பரங்கிச்செக்கை	பலம்	4	வெப்பாலரிசி	பலம்	½
கடுக்காதோல்	"	4	ஜாதிக்காய்	"	¼
திரிகடுகு	"	2	ஜாபத்திரி	"	"
சித்துழாப்பட்டை	"	2	ஏலம்	"	"
சித்திரமூலப்பட்டை	"	2	லவுங்கம்	"	"
கசகசா	"	1	சித்தரத்தை	"	"
கார்போக அரிசி	"	½	வால்மிளகு	"	"
வழலரிசி	"	"	அதிமதுரம்	"	"

இவைகளை சூரணம் செய்து வைத்துக்கொண்டு,

கோரோஜனம்	பலம்	¼	லிங்கம்	பலம்	1
குங்குமப்பூ	"	"	பூரம்	"	¼

தாளகம்	பலம் 1	ரசசிந்தூரம்	பலம்	¼
வீரம்	" 1			

இவைகளை அரைத்து மேற்கூறிய சூரணத்துடன் கலந்து வைத்துக்கொண்டதின் பிறகு திரிபலாதிகியாழத்தினால் (4) ஜாமம் அரைத்து நிழலிலுலர்த்தி தேன்விட்டு (3) ஜாமம் அரைத்து வைத்துக்கொள்ளவும், இந்தமெழுகை மிளகுப் பிரமாணம் பனவெல்லத்தில் வைத்து இருவேளையும் சாப்பிடவும், புளிநீக்க வேண்டியது நெய்வெள்ளாட்டுவத்தல் சேர்த்துக்கொள்ளவும் தீரும்வியாதிகளாவன முடக்குவாதம், சூலை, மேகவாய்வு, பாண்டுவலி, குடல்வாய்வு, சூலைவாய்வு, மண்டைவாய்வு, சூதகவாய்வு, முசல்வாய்வு, மூர்ச்சைவாய்வு, பித்தவாய்வு, பாரிசவாய்வு, அர்ப்புதவாய்வு, திமிர்வாய்வு, இவையெல்லாந் தீரும்.

கஸ்தூரி மெழுகு

கஸ்தூரி	விராகனிடை	1
பச்சைகற்பரம்	"	2
கோரோஜனை	"	4
குங்குமப்பூ	"	4
புனுகு	"	¼
ஜவ்வாது	"	"
பூநீக்கியலவுங்கம்	"	4
வால்மிளகு	"	4
ஏலக்கா அரிசி	"	8
சிறுலவுங்கப்பட்டை	"	8

இதில் சூரணிப்பதை சூரணம்செய்து சகலமும் ஒன்றாய் கூட்டி கற்பூரவாசனை வெற்றிலை ரசத்தாலும் கற்பூரவள்ளிரசத்தாலும் தூதுவேளை ரசத்தாலும் மட்டிநீக்கிய இஞ்சி ரசத்தாலும் மிளகுகியாழத்தாலும் சித்திரமூலவேர் கியாழத்தாலும் மஞ்சள் கரிச்சாலை ரசத்தாலும் தனித்தனியாக வொவ்வொரு ஜாமமரைத்து நிழலில் உலர்த்தி சுயத்தேனினால் மெழுகுபதமாயரைத்து வைத்துக் கொள்ளவும் இந்தமெழுகில் பயருபிரமாணம் தேனில் சாப்பிட ஜன்னி, சீதளம், சுரம், கபரோகம், உப்பிசமாந்தம், முகவாத ஜன்னி, இருமல், மாரடைப்பு, வாதம் இவ்வகை வியாதிகளை நீக்கும்.

மெழுகுவகை பரணி

முற்றுப் பெற்றது.

உ
தேவிசகாயம்

ஏழாவது

லேகிய வகை பரணி

கட்டு வாதிலேகியம்

சீமை அதிவிடையம்	விராகனிடை	1
கடுக்காய்ப்பூ	"	1
மாசிக்காய்	"	1
மாதுளம்பழத்தோல்	"	1
ஜாதிக்காய்	"	1
லவுங்கப்பட்டை	"	1
போஸ்தக்காய்	"	1
கசகசா	"	1
மாங்கொட்டைபருப்பு	"	1
புளியங்கொட்டைபருப்பு	"	1
அபினி	"	½
கோரோஜனம்	"	"
நல்லவெல்லம்	பலம்	"
நெய்	"	1

நெய்யை அடுப்பிலேற்றி வெல்லத்தைப்போட்டு இவ்விரண்டும் கலந்து பாகு ஆகும்போது மேற்படி தினுசுகளைச் சூரணம் செய்து வைத்துக்கொண்டிருந்து பாலில் சிறுகசிறுக போட்டு கிளரி லேகியம்போல் யிறக்கவும் பெரியவர்கள் குழந்தைகளுக்கும் ஆகும் சுண்டக்காய் வீதம் காலையில் கொடுக்கவும் மூன்று வேளையில் சீதக்கழிச்சல், இரத்தமந்தம், அல்லது அஜீரணம் நீங்கும்.

கடுக்காய் லேகியம்

கடுக்காய் பலம் (25) இரண்டரைபடி ஜெலத்தில் எட்டுக்கு ஒருபங்காய் கியாழம் வடித்து சிவதை இஞ்சி மிளகு ஓமம் திப்பிலி

சுக்கு சக்கரை வகைக்கிப்பலம் (¼) சூரணஞ் செய்து மேற்படி கியாழத்தை அடுப்பில் வைத்து இந்த சூரணத்தைக்கொட்டி பசும்நெய் கால்படிவிட்டு லேகியமாய்க்கிளறி புன்னைக்காயளவு சாப்பிடவும். (தீரும்வியாதி) அக்கினிமந்தம், சூலை, மலஜெலவாய்வு ஆறுந்தீரும்.

நெல்லிக்காய் லேகியம்

நெல்லிக்கா பலம் 25, முன்போல கியாழம் வடித்து திப்பிலி மிளகு சுக்கு ஓமம் கிராம்பு ஏலம் குக்கில் வாய்விளங்கம் சீரகம் தனியா குகைநீரு மதுரம் வகைக்குப்பலம்-¼, சக்கரை பலம்-2½, நெய்படி-¼, லேகியங்கிளறி பாக்களவு சாப்பிட மேகம், அஸ்திசுரம், காய்ச்சல், கிராணி, வாய்வு, பொருமல், யிருமல், க்ஷயம், ஈளை, சிலேற்பனந்தீரும்.

சுக்கு லேகியம்

சுக்கு பலம் - 25, இரண்டரைபடி தண்ணியில் இட்டு எட்டுக்கு ஒருபங்காய் கியாழம்வடித்து பனவெல்லம் இரண்டரை பலம், ஓமம் கால்படி, கரிவேப்பிலை அரைபலம், நெல் அரிக்கால் படி, இவைகளை லேகியமாய்க்கிள்றி புன்னைக்காயளவு சாப்பிட கிராணி, மூலம், வாய்வு, அதிசாரம், கடுப்பு, ரத்தம், வீக்கம், பாரிசவாய்வு, மந்தம், புளித்தயேப்பந்தீரும்.

மிளகு லேகியம்

மிளகு பலம்-25, இரண்டரைபடி தண்ணியில் கியாழம் வைத்து எட்டுக்கு ஒருபங்காய் சுண்டயிறக்கி கற்கண்டு (2½) பலம், அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோஷ்டம், மதுரம், சிறுதேக்கு, வாய்விளங்கம், நறுக்குமூலம் வகைக்கிக் கால்பலமாகயெடுத்து சூரணித்து நெய் கால்ஆழாக்கு, தேன் அரிக்காலாழாக்கு மேற்படி லேகியத்திற் சூரணத்தைக் கொட்டி நெய் தேன் முதலானதும் விட்டு லேகியமாய்க் கிண்டி கெச்சக்காய் வீதஞ்சாப்பிட (66) சிலேற்பனமும் கபங்கள், நீர்தோஷம், சிலவிஷம், மூன்று சுரமும் வாதமுந்தீரும்.

இருமலுக்கு லேகியம்

மிளகு பலம் -1, பசும்வெண்ணெய் பலம்-1, சீனாகற்கண்டு பலம்-1, மிளகைசூரணித்து ஒருசட்டியை அடுப்பில் வைத்து நெய்யையூற்றி உருகினவுடன் மிளகு சூரணம்போட்டு கற்கண்டுபோட்டு சிவந்து வருமளவுங்கிளறி லேகியமாக்கி வைத்துக் கொண்டு கழற்சிக்காய்வீதஞ் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

திப்பிலி லேகியம்

திப்பிலி பலம்-25, வாங்கி யிடித்து இரண்டரைபடி ஜலத்தில் கியாழமிட்டு எட்டுக்கு ஒருபங்காயிறக்கி கற்கண்டு இரண்டரைபலம், சுக்கு கடுக்கா, அக்கிராகாரம், அரத்தை, ஓமம் சீரகம், தனியா, வெட்பாலரிசி, செண்பகப்பூ, கோஷ்டம்வகைக்கிப் பலம்-1, தேன் உரி-¼, நெய் ஆழாக்கு, மேல்படி கியாழத்தில் சகலமும் விட்டு லேகியமாய்க்கிண்டி கெச்சக்காய்ப் பிரமாணம் சாப்பிட சிலேற்பனம், வாதம், யிருமல், வாய்வு, உப்பிசம் தீரும்.

மதனகாமேசுர லேகியம்

சுக்கு	பெருஞ்சீரகம்	அதிமதுரம்
கிராம்பு	மிளகு	வால்மிளகு
திப்பிலி	சிறுநாகப்பூ	திரிபலாதி
ஏலம்	ஜாதிக்காய்	ஜாதிபத்திரி
லவுங்கப்பட்டை	லவுங்கப்பத்திரி	கோஷ்டம்
கொத்தமல்லி	தாளிசம்	கருஞ்சீரகம்
அசுவகெந்தி	செண்பகப்பூ	கஸ்தூரிமஞ்சள்
தக்கோலம்	கசகசா	நீர்முள்ளிவித்து
உளுந்து	முள்வேலம்பிசினி	நிலப்பனங்கிழங்கு
திராட்சி	அபினி	

இதில் வகைக்கி அரைபலமாக யெடுத்து வறுக்க வேண்டியதினுசுகளை வறுத்து தூள்செய்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு இதற்குச் சரியிடையாய் கெஞ்சாவை நிறுத்தெடுத்து நல்லஜெலத்தில் (7) திரம் கழுவியெடுத்து விரைகாம்பு முதலானதும் நீக்கி (2) படி நல்லஜெலத்தில் (½) படி பசும்நெய்விட்டு அதில் கஞ்சாவைப்போட்டு நன்றாய்க் காய்ச்சி கிட்டி கட்டி நெய்யை அயச்சட்டியில் பிழிந்துக் கொண்டு மற்றநெய்யையும் கையால் நன்றாய் வழித்துக்கொண்டு பசும் பால் உழக்கு, சக்கரை பலம் (30) ஒன்றாய்விட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில் சூரணங்களைக்கொட்டி நெய்யைவிட்டு வெந்தசமயத்தில் தேன்பலம் (8) விட்டு பதமாய்க்கிளறி-யிறக்கவும். இரவில் புசிக்கலாம். வீரியம் அதிகரிக்கும். தேகம் சிவந்துவரும் கண் குளிர்ந்து பிரகாசிக்கும். யீளை, யிருமல், மந்தம், சூலை, பழையசுரம், க்ஷயம், இவைகள் நீங்கும். தேக ஆரோக்கியமும் மனதிடமும் உண்டாகும்.

இந்திரிய வலிவிற்கு மாணிலேகியம்

வெள்ளாட்டின் பீஜம் (50) வாங்கி பொடியாக அரிந்து வெய்யலில் உணர்த்தி தூள்செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு அமுக்கனாங்கிழங்கு பலம்-1, கசகசா திரிகடுகு ஓமம் ஜாதிக்காய் ஜாபத்திரி கிராம்பு அதிமதுரம் கோஷ்டம் அக்கராகாரம் லவுங்கப்பட்டை லவுங்கபத்திரி நீர்முள்ளிவிரை பூனைக்காலிவிரை முருங்கைவிரை நத்தைச்சூரிவிரை ஆலன்வித்து அரசன்வித்து சாரைப்பருப்பு பாதம்பருப்பு வகைக்குப்பலம்-¼ இளம்வறுப்பாகவறுத்து சூரணம்செய்து வைத்துக்கொண்டு கெஞ்சா இரண்டு பலம் யெடுத்து நல்லஜெலத்தில் (7) திரம்கழுவி விரைகாம்பு முதலானதும்நீக்கி உலர்த்தி நெய்யில் வறுத்து சூரணம் செய்துக் கொள்ளவும் பசும்பால் (¾) படி அடுப்பின்மேல் வைத்து சக்கரை (20) பலம்போட்டு பாகுபதத்தில் சூரணங்களைக்கலந்து கொஞ்சங் கொஞ்சமாய் கிளறிக் கொடுத்து நெய் (20) பலம் தேன் (10) பலம் விட்டு லேகிய பாகமாய்க்கிண்டி யிறக்கிவைத்துக்கொண்டு கொட்டைப் பாக்குப்பிரமாணம் இரவில் புசித்தான பிறகு சாப்பிடவும்.

லேகியவகைபரணி - முற்றிற்று

உ
தேவி சகாயம்

எட்டாவது
எண்ணெய் வகை பரணி

கிரந்திக்கும் மேகவெட்டைக்கும் எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் சேர் (1)க்கு செங்கொட்டை சேர் (¼) சாம்பிராணி சேர் (¼) செவியம் சேர் (¼) சித்திரமூல பச்சைவேர்ப்பட்டை (¼) யெண்ணெயை அடுப்பில் வைத்து செங்கொட்டையை இரண்டு துண்டுகளாக வெட்டிப்போட்டு மற்ற மருந்துகளெல்லாம் இடித்துப்போட்டு முருக்கக்காய்ச்சியிருத்துக் கொள்ளவும் நித்தம் ஒருகரண்டிவீதம் (40) நாளைக்கி இரண்டு வேளையும் சாப்பிடவும் சர்வகிரந்தி மேகம் மேகவெட்டை ஊரல் இதுகள் தீரும், இச்சாபத்தியம்.

குளிர்ச்சி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	படி	1
பழச்சார்	"	1
இளநீர்	"	1
பசும்பால்	"	1

இவைகளை ஒன்றாய் ஊற்றிக்கலக்கி அடுப்பில் வைத்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடிக்கும் சமயத்தில் பரங்கிச் செக்கை தனியா சீரகம் வால்மிளகு லவுங்கப்பட்டை ஜாபத்திரி வகைக்குப் பலம்-3, இளம்வறுப்பாகவறுத்து மேற்படி எண்ணெயில் போட்டு சற்று பொருத்து உடனே யிறக்கிவைத்து கோரோஜனை விராகனிடை-2½, குங்குமப்பூ விராகனிடை-2½, கற்கண்டு பலம்-10, செவ்வாழைப்பழம்-8, இவைகளை யெண்ணெயில்போட்டு கலக்கிவைத்துக் கொள்ளவும். அரைபலவீதமாய் (5) நாள் அல்லது (7) நாளைக்கி சாப்பிடவும், இச்சாபத்தியம் சகலசூடும் தணியும் திரேகம் குளிர்ச்சியாகும்.

சுகபேதி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் படி-½, பசும்பால்படி-2, அதிமதுரம் கடுக்கா இந்துப்பு கடுகுரோகணி வாளம் வகைக்கிப் பலம்-¼, இந்தசரக்குகளையிடித்துக்கலக்கி காய்ச்சி வடித்துப் பெரியவர்களுக்கு அரைபலம் கொடுக்கவும் ஒரு நாழிசென்று வென்னீர் கொடுக்கவும் பேதி நிறுத்தவேண்டில் உப்பு கஞ்சி மோர் மாலையில் மிளகு சுக்கு கியாழம் இராத்திரிக்கும் மிளகு நீர்சாதம் சாப்பிடவும் துவரை துவையலாகும்.

வெள்ளை, மேகம், வாய்வு, புண்ணு கிரந்தி இதுகளுக்கு சேந்தமங்கலத்து எண்ணெய்

ஜாதிக்கா	பலம்	1	லவுங்கம்	பலம்	2½
லவுங்கப்பூ	"	2½	சிறுலவுங்கப்பட்டை	"	2½
வால்மிளகு	"	2½	ஜாபத்திரி	"	¾
கருஞ்சீரகம்	"	5	கடுகுரோகணி	"	2 ½
சோம்பு	"	1	கசகசா	"	1½
வாய்விளங்கம்	"	1¼	குரோசாணி ஓமம்	"	1
தாளிசப்பத்திரி	"	1	வெட்பாலையரிசி	"	1
பரங்கிசக்கை	"	5			
கடுக்கா	"	2	உரித்தபூண்டு	"	8

இந்த தினுசுகளையிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு விளக்கெண்ணெய் ஒருவீசை வாய் அகண்ட சட்டியில் ஊத்தி அடுப்பேற்றி எரிக்கும்போது அதில் போடவேண்டிய தினுசுகள் பூவரசன்பட்டை ஒருபிடி பஞ்சிபோல் நறுக்கிப் போடவும் சங்கம்வேர் கரிச்சாலையில் இரண்டும் ஒருகுத்து பஞ்சுபோல் யிடித்துப்போடவும் மேல் கூறியவகையில் பூண்டைமாத்திரம் உரித்து பல்லுபல்லாய் யெடுத்துப்போடவும் சிறுகயெரித்து சிலங்கைக்கொதி வருகையில் முன் வஸ்திரகாயம் செய்து வைத்திருக்கும் மருந்தைக்கொட்டி கலக்கியிறக்கும்பொது (2 ½) பலம் வாளத்தை சுத்திசெய்து பொடிப்பண்ணிப்போட்டுக் கலக்கி இறக்கவும் கற்கண்டு பலம் (5) திராட்சி பலம் (5) இதுகள் போட்டுக் கலந்து வைத்துக்கொண்டு காலையில் ஒரு சிறுகரண்டிவீதம் (7) நாள் சாப்பிடவும் பத்தியம் வறுத்தவுப்பு சுட்டபுளி, மறுபத்தியம் (7) நாளும் இப்படியேயிருக்கவும், தீரும் வியாதிகள் புண்ணு, நுணாக்காகிரந்தி, மேகம், வெள்ளை, சிலவாய்வுகள் இவைகளெல்லாம் தீரும்.

கெர்ப்பஸ்திரீகளுக்கு பழயது எண்ணெய்

விளக்கெண்ணெய் ஒருவீசை அடுப்பிலேற்றி தாளிவேர் ஒருபிடி கொண்டுவந்து யெண்ணெயில் போட்டு காய்ச்சவும் அந்தவேர் மளக்கென்று உடைந்தால் எண்ணெயை இறக்கிவைத்துக்கொண்டு சாப்பிடும்விவரம் காலையில் அரைபலம் யெண்ணெய் சாப்பிட்டு உடனே பழயது சாப்பிடவும் கெணச் சூடுதீரும். கெர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் யாதொரு வியாதியும் அணுகாது கெர்ப்பஸ்திரீயானவள் (5)வதுமாதமுதல் (9) மாதம்வரையில் அந்தந்தமாதம் முதலில் (3) நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் ஆரோக்கியமாயிருக்கும்.

திமிர், தடிப்பு, குஷ்டரிணம், படை, சட்டை, மேகம், குஷ்டம், சொரி, இவைகட்கு எண்ணெய்

பூவரசம்பட்டைரசம் அத்திப்பட்டை ரசம் வெள்ளருகுரசம் கோவைரசம் பீச்சங்கன்ரசம் வகைக்கிப்படி (¼) வேவித்த முத்துயெண்ணெய் படி (2) அமுக்கனாங்கிழங்கு பலம் (2½) பரங்கிச்செக்கை பலம் (3) லவுங்கப்பட்டை கார்போக அரிசி, கடுகுரோகணி, வாய்விளங்கம், திப்பிலி, வகைக்கு பலம்-1, மிளகு பலம்-½, பூரம்பலம்-¼, இதுகளை தூள்செய்து மேற்படிசாறுவகைகளை எண்ணெயில் ஊத்தி அடுப்பேற்றி சிலங்கைக்கொதிபக்குவத்தில் தூள்செய்து மருந்தைப் போட்டுக் கலக்கி வடித்துக்கொண்டு சாப்பிடும்விதம் வேளைக்கு அரைபலவீதம் (3) தடவை (7) நாள்விட்டு (7) நாள் சாப்பிடவும். பீர்க்கன்காய், முருங்கைக்காய், துவரம்பருப்பு, உப்பு, அரைக்கீரை ஆகும். புளிநீக்கவேண்டியது மேல்கண்ட வியாதியெல்லாம் தீரும்.

சர்வமேகசட்டை குட்டரிணங்களுக்கு நாரசிம்ம எண்ணெய்

வெள்ளைக்கலியாண முருக்கன்பட்டை பூவரசன் பட்டை இலவன்பட்டை தனித்தனி இளநீர்விட்டு யிடித்துப் பிழிந்த ரசம் வகைக்கிப்படி-¼ பிரம்மதண்டிரசம் படி-¼, துத்தியிலை ரசம் படி-¼, சிறுசின்னிரசம் படி-¼, கத்தாழைச்சாதம் தேங்காய்ப்பிரமாணம், வெந்தியம் பலம் (2½) தூள்செய்து (50) பலம் சித்தாமணியெண்ணெயை அடுப்பிலேற்றி வெந்தியத்தூளைப்போட்டு கத்தாழைசாதத்தையும் போட்டு மேல்படி பிழிந்து வைத்திருக்கும் ரசங்களையும் ஊத்தி காய்ச்சி

பதத்தில் வடித்துக்கொண்டு பூரம் அரைபலம் மேல்படி எண்ணெய்விட்டரைத்து அதில்கலந்து வைத்துக்கொண்டு காலையில் ஒருரூபாயெடை எண்ணெய்புசித்து வென்னீர்சாதம் சாப்பிடவும் (5) நாள் அல்லது (7) நாள் சாப்பிடவும், மறுபத்தியம் அரை உப்பு அரை புளி சேர்த்துக் கொள்ளவும் மேல்கண்ட வியாதிக ளெல்லாம் நீங்கும்.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் அட்சரம் மேகவெட்டை கெணம் இதுகட்கு குளித்தி எண்ணெய்.

மணத்தக்காளி, துளசி, துத்தி, பிரமி, வில்வம், வல்லாரை, கையான்பொடுதலை, நுணா, புங்கு 1)சங்கு, இந்த இலைகளின் ரசம் வகைக்கிப்படி-¼, முத்தெண்ணெய் படி-1, இவைகளை ஒன்றாய்கலந்து திப்பிலி அரத்தை ஓமம் வசம்பு கஸ்தூரிமஞ்சள் வகைக்கிப்பலம்-½, ஜாதிக்கா பலம் அரிக்கால் தூளாயிடித்து வஸ்திரகாயஞ்செய்து மேற்படி எண்ணெயில்போட்டு பதமாய்க்காய்ச்சி வடித்து குழந்தைகளுக்கு கரண்டிவீதமும் பெரியவர்களுக்குக் கால்பல வீதமும் (7) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கெணச்சூட்டிற்கு குளிர்ச்சி எண்ணெய்

சித்தாமணக்கு யெண்ணெய் படி-1, வல்லாரை ரசம் படி-½ வெந்தியம் பலம்-2, ஆவின்பாலிலரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சிவடித்து கொஞ்சம் சக்கரையிட்டு கொடுத்து வரவும் திரேகம் தணிந்து குளிர்ச்சியுண்டாகும்.

குழந்தைகட்கு மாந்த எண்ணெய்

உத்தாமணிரசம்	பலம்	7½
விளக்கெண்ணெய்	"	"

இர்ண்டுங்கலந்து அடுப்பேற்றி காய்ச்சி யிறக்கினவுடன் பூரம், ஏலரிசி, லவுங்கப்பட்டை, சுக்கு வகைக்கு விராகனிடை 2½, கடுகுரோகணி ஒண்ணே அரிக்கால் விராகனிடை, இவைகளை தூள்செய்து கல்வத்திலரைத்து எண்ணெயில் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு சிறுகரண்டிவீதங்கொடுக்கவும் உப்பில்லாதபத்தியம் தாயார் கூட பத்தியமிருக்க வேண்டியது.

குழந்தைகட்கு சகலமாந்த எண்ணெய்

(50) பலம் முத்தெண்ணெயில் துளசி, முசுமுசுக்கை, உத்தாமணி, சிலந்திநாயகம், தேள்கொடுக்கு, செருப்படை, கையாந்தகரை, நொச்சியிலை, வெள்ளருகு, பிரமியிலை, இவைகள் ரசம் வகைக்கி அரிக்கால்படி, கத்தாழை மடல்சாதம் கிச்சிலிக்காய்ப் பிரமாணம், வரகுவைக்கலில் வெதுப்பி யெடுத்த ஆறு ஆத்து தும்மட்டிக்காய் ரசம் இவைகளை மேற்படி எண்ணெயில் விட்டுக்காய்ச்சி சேறுபதமாயிருக்குஞ் சமயத்தில் கருஞ்சீரகம், வெந்தியம், கோஷ்டம் வகைக்கிப் பலம்-½, செண்பகமொக்கு விராகனிடை-1, பூண்டுபலம்-½, போட்டு பதமாய்க்காய்ச்சிவடித்து திரேகதிடத்தின்படி (¼) அல்லது ½ ¾) பலம்வீதமாய்க் கொடுத்து மாலையில் மிளகு சாம்பலாக்கி துத்தியிலை வெந்தியம் வெங்காயம் கியாழமிட்டுக் கொடுக்கவும் சகல மாந்தமுந் தீரும்.

குழந்தைகட்கு அள்ளுமாந்த எண்ணெய்

(9) பலம் சித்தாமணக் கெண்ணெயில் ஒண்ணரை பலம் வெப்பாலன் பால்விட்டு ஒண்ணரைபலம் வெங்காயரசம் விட்டு கருஞ்சீரகம் கடுகுரோகணி வகைக்கிப் பலம் அரிக்கால்பொடித்துப்போட்டு காய்ச்சி வடித்துக்கொள்ளவும் பால்குடிக்குங் குழந்தையாயிருந்தால் கால்பலம்வீதமாய் (5) நாள்கொடுத்து தாயாருக்கு புளியில்லாமல் பத்தியம் வைக்கவும்.

சுழிமாந்தத்திற்கு எண்ணெய்

இண்டையிலைச்சார், சங்கம்யிலைச்சார், தூதுவேளைச்சார், துளசிச்சார், நொச்சிச்சார், உத்தாமணிச்சார், நாய்துளசிச்சார், ஏரண்டத்தயிலம் வகைக்கிப்படி அரிக்கால், கடுகுரோகணி பலம்-½, இந்துப்பு பலம்-¼, வெண்காரம் பலம்-¼ சன்றாஷ்டகம் பலம்-¼, ஓமம் பலம்-¼, கருஞ்சீரகம் பலம்-¼, வசம்பு பலம்-¼, பூண்டு பலம்-¼, இதுகளை அரைத்து மேற்படி சாறுவகையுடன் எல்லாம் ஒன்றாய்க்கலந்து காலையில் ஒருகரண்டிவீதம் உள்ளுக்குக்கொடுக்கவும், இச்சாபத்தியம், சுழிமாந்தம் பொறைமாந்தம் வாதமாந்தம் இதுவெல்லாந் தீரும்.

எலவம்பேட்டு எண்ணெய்

புங்கம் பட்டை, பூவரசம் பட்டை, உழலத்திப் பட்டை, வெள்வாயிப்பட்டை, மணிப்புங்கன்பட்டை, வெள்வேலன்பட்டை,

இவைகள், தினுசுக்கு அரை வீசை வீதமாய் நிறுத்தெடுத்து பஞ்சுபோல்யிடித்து (8) படி தண்ணீரில்போட்டு ஒருபடி கியாழமாயிறக்கி சங்கங்குப்பியிலை பெருங்குமிழியிலை இரண்டுஞ் சிறுநீர்விட்டுயிடித்து பிழிந்தரசம் பத்துபலம் பிரமியிலைரசம் பத்துபலம் இவைகளை மேற்படி கியாழத்திலூற்றி விளக்கெண்ணெய் ஒருவீசை கூடவிட்டு கலக்கி அடுப்பேற்றி பதமாய்க்காய்ச்சி யிருத்து ஒரு கரண்டிவீதம் ஏழுநாளைக்கிச் சாப்பிடவும், கடும்பத்தியம் மறுபத்தியத்தில் புளிகால் கூட்டவும் மோர் நெய் யிறைச்சி கூட்டவும் (14) நாளும் போனபிறகு பதினைந்தாம்நாள் விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்யவும், மேகம் கிரந்தி சிலந்தி சிலதழும்புகள் படை இதுகள் தீரும்.

* வெள்வாயிப்பட்டை யென்பது குருவி ஆலமரம்போல் விழுதுவிட்டு அந்தயிலை போலிருக்கும் அதுதானென்றறியவும்.

அணக்காட்டாத்தூர் எண்ணெய்

கரசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, நிலக்கடம்பு, நுணாயிலை, பிரமியிலை, முடக்கத்தான், பொடுதலை, செருப்படை, வெள்ளருகு, முசுமுசுக்கை, புங்கம்வேர், வெங்காயம், எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு தினுசுக்கு அரிக்காற்படி, விளக்கெண்ணெய் (65) பலம் இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி பதமாய்க்காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும், காலையில் ஒருகரண்டி யெண்ணெயில் அரிக்காற பலம் சற்கரை ஒருபலம் நீராகாரங்கூட்டி சாப்பிடவும் உப்பு கூட்டலாம் மேகம் (21-ம்) ரெத்தப்பிரமியம், கண்டமாலை, மேகரிணம்; பவுத்திரம், மூலம், முடக்கு, பிடிப்பு, மேகவாய்வு, மேக ஊரல், மேகபடலம், புண்சிலந்தி, கிரந்தி, அண்டவாய்வு, இவைகள் தீரும்.

கெணத்துக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் படி (1) கையாந்தகரை பொன்னாங்கண்ணிசேர்த்து கத்தாழை வெள்ளை வெங்காயம் கோவை புளியாரை கற்பூரவல்லி இந்த தினுசுகளின் ரசம் வகைக்கி படி (¼) ஜாதிக்காய் ஜாபத்திரி மாசிக்கா கடுக்காப்பூ கோஷ்டம் அமுக்கனாங்கிழங்கு சீரகம் லவுங்கப்பத்திரி லவுங்கப்பட்டை பூண்டு வகைக்கிப் பலம் (அரிக்கால்) பசும்பால் படி (1) மேல்கூறிய கடைசரக்குகளை அரைத்து பாலில்கலக்கி சாறுவகை யெண்ணெய்

முதலானதும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து கோரோஜனை குங்குமப்பூ வகைக்கி அரிக்கால்பலம் தூள்செய்துப்போட்டு வைத்துக்கொண்டு களஞ்சிவீதம் காலை ஒருவேளையாக (5) நாள் அல்லது (7) நாள் கொடுக்கவும். கெணவெட்டை கெணசுரம் மாந்தம் உப்பிசம் ரெணங்கள் கெற்பவெட்டை இதுகள் தீரும்.

சகல கரப்பானுக்கும் எண்ணெய்

பூவரசன்பட்டை செங்கத்தாரிப்பூ தகரப்பட்டை கண்டங்காலி நிலாவரை வகைக்கிப் பலம் (10) யெடுத்து யிடித்து (5) படி தண்ணியில் கியாழம் வைத்து ஒருபடியாக சுண்டக் காய்ச்சி யிருத்து முத்தெண்ணெய் ஒருபடி வெள்ளாட்டுப் பால் ஒருபடி ஒன்றாய்கலந்து மிளகு கருஞ்சீரகம் கார்போகரிசி பூண்டு வசம்பு சதகுப்பை வலம்புரிக்காய் பரங்கிப்பட்டை இதுகள் வகைக்கிப்பலம் (¼) யெடுத்து யிளம்வறுப்பாய் வறுத்து யிடித்து வஸ்திரகாயம்செய்து மேல்கூட்டிய யெண்ணெயில்போட்டு காய்ச்சி வடித்து பிரதி காலையிலும் கரண்டிவீதம் கொடுக்க சகல கரப்பானும் தீரும். அடியில் நின்ற கடுகெடுத்து ரெணமீது தடவவும் தீரும். (5) நாள் அல்லது (7) நாள்கொடுக்க தாயார்கூட இச்சாபத்தியமிருக்கவும்.

குழந்தைகள் சகலகரப்பானுக்கும் யாழ்ப்பாணத் தெண்ணெய்

விளக்கெண்ணெய் படி (¼) நொச்சி கருநொச்சி செம்முள்ளி சிலந்திநாயகம் சங்கங்குப்பி சங்கிலை முருக்கெலை செந்தொட்டி பூவரசன் சிறுசெருப்படை கோழியாவாரை கத்தாழை இதுகளின் சாறு வகைக்கி ஒரு பலம் யெடுத்து மேற்படி எண்ணெயில்விட்டு அடுப்பேற்றி செங்கத்தாரிபட்டை கருஞ்சீரகம் கடுக்கா களிப்பாக்கு வெங்காயம் வகைக்கி (½) விராகனிடையாக யெடுத்து தூளாகயிடித்து வஸ்திரகாயம் செய்து எண்ணெயில்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி காலையில் ஒரு கரண்டிவீதம் (5) நாள் (7) நாள் அல்லது (10) நாள்கொடுக்க சகலகரப்பான் ரிணம் சொரிசிரங்கு முதலானதும் நீங்கிவிடும் தாயும் பிள்ளையும் பத்தியமிருக்க வேணும்.

பக்கசூலை கெற்பசூலைக்கி எண்ணெய்

மிளகரணையிலையை உரலிலிட்டு ஜெலம்வார்த்து யிடித்து (12) பலம் ரசம்பிழிந்துக்கொண்டு அதில் (12) பலம் முத்தெண்ணெய்விட்டு

உரித்தெடுத்தபூண்டுதிரி (4) பலங் கூட்டி காய்ச்சிவடித்து திரேகதிடப்படி (3) நாளைக்கி கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானால் நோய் நீங்கினதென்று தெரிந்துக்கொண்டு நிறுத்திவிடவும் இச்சாபத்தியம்.

விரைவாத சஞ்சீவி எண்ணெய்

கெச்சக்காய்பருப்பு	ஏலம்
வால்மிளகு	பரங்கிச் செக்கை
சன்னலவுங்கப்பட்டை	பூரம்
சுத்திசெய்தவாளப்பருப்பு	கடுகுரோகணி

வகைக்கி அரைபலமாகயெடுத்து யிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு கெச்சக்காயிலை வேறு முதலான சமூலம் கொண்டுவந்து (10) பலம்நிறுத்து பஞ்சுபோல் யிடித்து ஒருபடி தண்ணியில் கியாழம்வைத்து கால்படியாகக் காய்ச்சி வடிகட்டி அதற்குச்சரியாய் சித்தாமணக்கெண்ணெய்விட்டு மேற்படி தூளைப்போட்டுக் கலக்கி அடுப்பேற்றி கமலாக்கினியாக கொஞ்சம் சிறுகயெரித்து பக்குவமாய்க்காய்ச்சிவைத்துக் கொண்டு காலையில் ஒருகரண்டிவீதம் (7) நாளைக்கி சாப்பிடவும். இச்சாபத்தியமாக கடுகுநல்லெண்ணெய் அவுத்திக்கீரை புகைபோகம் நீக்கவேண்டியது. விரைவீக்கம் நரம்புநோய் முதலானதும் தீரும்.

மேகங்களுக்கு சித்திரமூல எண்ணெய்

நல்லெண்ணெய் படி (1) பசும்நெய் படி (1) சித்திரமூலயெண்ணெய் படி பால்வார்த்தரைத்து யெண்ணெயில் கலக்கி மெழுகு பதமாய் காய்ச்சிவடித்து கரண்டிவீதம் காலையில் சாப்பிடவும். தீரும்வியாதிகளாவன மேகம், குறிதுவாரயெரிப்பு, லிங்கப்புத்து, கிரந்தி வாய்நாற்றம், சூலை, வெடிரிணங்கள் தீரும் கடுகு நல்லெண்ணெய்நீக்கவும், வாய்வு பதார்த்தங்களும் ஆகாவாம்.

சகலவாய்வுக்கும் எண்ணெய்

தும்மட்டிக்கா	சாறுபடி	2
ஆமணக்கெண்ணெய்	"	2
பகங்கோமியம்	"	2
வெள்ளாட்டுக்கோமியம்	"	1
நொச்சிச்சாறு	"	½
பசுமஞ்சள்சாறு	"	½
இஞ்சிச்சாறு	"	½
குமரிச்சாறு	"	½

கடுக்காய் கடுகுரோகணி வாய்விளங்கம் திரிகடுகு ஏலம் இந்துப்பு கல்லுப்பு நவாச்சாரம் எவாச்சாரம் அப்பளாகாரம் வால்மிளகு ஆனைத்திப்பிலி வெள்ளுள்ளி வகைக்கிக் களஞ்சி (3) நிலாவரை கண்டங்கத்திரி வெள்ளைசார்வேளை சத்திச்சாரணைக்கிழங்கு வகைக்குப் பலம் (½) இவைகளை யிடித்து நன்றாயரைத்து மேற்படி சாறு வகை யாவும் ஒன்றாய்க்கூட்டி அரைத்த மருந்தை அதில் கரைத்து அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து காலையில் ஒருகரண்டிவீதம் (10) நாள்சாப்பிடவும். தீரும்வியாதிகளாவன வாய்வுகள், வாய்வுக்கட்டிகள், மகோதரம், குன்மம், கெற்பசூலை, யிசிவு, கைகால்சூலை, சூலைக்கட்டு இவைகள் தீரும். பத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்பு அரைபுளி அரைவுப்பு அரைகாரம் கூட்டவும். மறுபத்தியமும் இம்மாதிரி, உப்பு முழுபங்குசேர்க்கலாம்.

எண்ணெய் வகை பரணி
முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது

தைலவகை பரணி

பிரம்மராகாசித் தைலம்
ஜன்னிக்கு

இராகாசிமடல் வேண்டியது கொண்டுவந்து வரகுவைக்கலில் வதைக்கி சார்பிழிந்து அந்தசார் அளவுக்கு நல்லெண்ணெய் கலந்து அடுப்பேற்றி சிறுதீயாக யெறிக்கவும் சாறும் யெண்ணெயும் ஒன்றுபட்டபிறகு டிக்காமல்லி அரைபலம் சீமைகிச்சிலிக்கிழங்கு அரைபலம் இரண்டும் தூளாக்கி இறக்கும்போது போட்டு யிறக்கவும், படிதைலமிருக்கும் பட்சத்தில் மேற்கண்ட தினுசுகளை அரைபலம் போடலாம் (4) நாளைக்கொருதகுதி தலைமுழுகிவந்தால் புறங்கழுத்துநோய் தலைவலி பல்ஜிலுஜிலுப்பு வெகுசீக்கிரம் வாங்கும். கோழிகூப்பு, யிரைச்சி, ஆட்டிறைச்சி, கத்திரிப்பிஞ்சு, முருங்கை, துவரை, மிளகுநீர், இதுகளாகும். ஸ்நானஞ்செய்ததினம் பகல்நித்திரை, புகைபொடி, புத்தகங்கள் வாசிப்பு, அதிகநடை கூடாது.

ஜன்னிக்கு சாதாரணத் தைலம்

ஜடாமாஞ்சில் கோஷ்டம் பூலாக்கிழங்கு தேவதாரம் செம்புராப்பட்டை கருஞ்சீரகம் கார்போக அரிசி செண்பகமொக்கு சிறுநாகப்பூ செவியம் சிறுதேக்கு குருவேர் நன்னாரிவேர் பச்சிலை சந்தனத்தூள் கொம்பரக்கு சித்தாமுட்டி பளிங்கு சாம்பிறாணி கிச்சிலிக்கிழங்கு டிக்காமல்லி வகைக்கி விராகநிடை (1) நன்றாயிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு இரண்டரைபலம் நல்லெண்ணெய்க்கி (¼) பலம் தூள்போட்டு காய்ச்சி முழுகவும் மேல்கண்டவியாதிகள் தீரும். பத்தியமும் அப்படியே.

வில்வாதித் தைலம்

வில்வவேர் பத்துபலம் கொண்டுவந்து பஞ்சுபோல் யிடித்து (2) படி ஜெலத்திலிட்டு கால் படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி யெடுத்து அதற்குச் சரிபாகமாக நல்லெண்ணெய் வார்த்து அடுப்பேற்றி சந்தனம் ஒருபலம் அரைத்துப்போட்டு கலக்கி மெழுகுபதமாய்க்காய்ச்சி முழுகிவர பித்தம் கபாலவெட்டை மேகம் தீரும், கண்குளிர்ச்சியுண்டாகும். இச்சாபத்தியம்.

வெட்டி வேர்தைலம்

புதியவெட்டிவேர் (10) பலம் கொண்டுவந்து பஞ்சுபோல் யிடித்து இரண்டுபடி ஜெலத்தில்போட்டு கால்படிகியாழமாக யிடித்து இரண்டுபடி ஜெலத்தில்போட்டு கால்படிகியாழமாக யிறக்கிவடித்து கால்படி நல்லெண்ணெய்விட்டு ஒருபலம் அதிமதுரம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சிவடித்து தலைமுழுகிவர பீனிசம், மண்டைசூலை, கண்புகைச்சல், காதுமந்தம் இவைகள்தீரும் இச்சாபத்தியம்.

கீழாநெல்லித் தைலம்

கீழாநெல்லி சமூல்மாக பிடுங்கிவந்து யிடித்து (¼) படி சாறுபிழிந்து கால்படி நல்லெண்ணெய்விட்டு சந்தனம் அதிமதுரம் சித்தாமுட்டி வகைக்கி ஒருபலம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் கைகாலெரிவு வெள்ளோக்காளம் வாயூறல் கிருகிருப்பு நீர்சுருக்கு இதுகள் நீங்கும் இச்சாபத்தியம்.

மண்டைசூலைக்கு தைலம்

நெல்லிக்காய்ச்சாறு கரிச்சாலைச்சாறு பசும்பால் வகைக்கி ஆழாக்கு நல்லெண்ணெய் மூன்றாழாக்கு ஒன்றாய்க்கலந்து அதிமதுரம் ஒருபலம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி முழுகிவர மண்டைசூலை கண்ணோய் கண்ணெரிவு கண்ணீர் வடிதல் இவைநீங்கும்.

கபாலசூட்டுக்கு சீரகத்தைலம்

(2) பலம் சீரகத்தையிடித்து இரண்டுபடி ஆத்துஜெலத்தில் போட்டு கியாழம்வைத்து யெட்டில் ஒருபங்கா யிறக்கி அதில் ஒருபடி நல்லெண்ணெய்விட்டு கார்போகியரிசி ஒரு பலம் மேற்படி கியாழத்தால்

அரைத்து யாவும் கலந்து அடுப்பில் வைத்து மெழுகுபதமாய் காய்ச்சியிறக்கி (4) நாள் வட்டமாக முழுகிவரவும் தீரும்வியாதிகள் உள்ளனல், வாய்வு, மேகத்தழும்புகள், சோகை, கபாலச்சூடு, இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணி சமூலமாக பிடிங்கிவந்து யிடித்து உழக்குச்சாறு பிழிந்துக்கொண்டு அதில் உழக்கு நல்லெண்ணை விட்டு (1) பலம் கோஷ்டம் கொண்டுவந்து யிடித்து பசும் பால்விட்டு அரைத்து கலந்து மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து முழுகிவர தீரும்வியாதிகளாவன பித்தம் (48) கிருகிருப்பு மண்டையிடி ஊஷ்ணங்கள் உட்சுரங்கள் கைகாலெரிவு கண்ணெரிச்சல் இதுகள் தீரும். கண்கள் குளிர்ச்சி யுண்டாகும் இச்சாபத்தியம்.

ஒண்டிதலை நோவுக்குத் தைலம்

சித்திரமூலமும் கஸ்தூரிமஞ்சளும் சமயிடையாய் அரைத்து அடைதட்டி நல்லெண்ணெயை காயவைத்து அதில் போட்டு அந்த அடை சிவக்கிறவரையில் காய்ச்சவும் அடையை திருப்பிப்போட்டு காய்ச்சி அடைவெந்து சிவந்தபிறகு யிறக்கி அந்த யெண்ணெயை தலைநோய் வருவதற்கு (3) மணி நேரத்திற்கு முன்னுதாக தலைமுழுகவும் இப்படி நாள்விட்டு நாள் முழுகவும் பத்தியம் பருப்புதொவையல் ரசம் பகலில் நித்திரையாகாது.

சுகநாத தைலம்

சுத்தமான நல்லெண்ணெய் (½) படி அகத்திக்கீரை ரசம் (½) படி இவ்விரண்டும் கூட்டி வெய்யலில் வைத்து மறுநாள் ஒருபலம் கோஷ்டம் பசும்பாலில் அரைத்து அதிற்கலந்து காய்ச்சிவடித்து ஸ்நானம் செய்துவரவும் மேகம் உஷ்ணம் முதலான அனல்நீங்கி மிகவும் குளிர்ச்சிதரும்.

சாலேசுரத் தைலம்

(40) பலம் நல்லெண்ணெயில் நிலவிளாயிலை விளாங்காய்ப் பிரமாணம் வில்வப்பழம் (1) பசும்பாலில் அரைத்து சீரகம் (1) பலம் முலைப்பாலி லரைத்துக் கூட்டி காய்ச்சிவடித்து ஸ்நானம் செய்து வரவும் சாலேசுரம் தீரும்.

பித்தகோடரித் தைலம்

நல்லெண்ணெய் பசும்பால் யிளநீர் வகைக்கி ஒருபடி ஒன்றாய்க்கூட்டி இத்துடன் அதிமதுரம் குங்குமப்பூ கோஷ்டம் ஏலம் சந்தனம் லவுங்கம் விலாமிச்சு பூண்டு ரோகணி நன்னாரி பசும்பாசி நெய்தற்கிழங்கு சடாமாஞ்சி தண்ணீர்விட்டான் கீழங்கு செண்பகப்பூ ஜாதிக்கா கோரைக்கிழங்கு புனுகு பச்சைகற்பூரம் வகைக்கி (1¼) விராகநிடை எடுத்து அம்மியில் வைத்து இளநீர் விட்டரைத்து கலக்கி காய்ச்சி வடித்து உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் தேய்த்து 1மணி நேரம் முழுகவும். அப்படி (4-5) வாரம் முழுகிவர நேத்திரத்தைச்சார்ந்த சகலவியாதியும் தீர்ந்து குளிர்ச்சியுண்டாம் வாய்நீரூரல் வாந்தி மயக்கம் நெஞ்செரிப்பு திரேககாந்தல் கண்புகைச்சல் யாவுந் தீரும்.

பீனிசத் தைலம்

நெல்லிமுள்ளி-மிளகு கடுக்கா கஸ்தூரி மஞ்சள் வேப்பம் விரை இதுகள் வகைக்கி ஒருபலம் எடுத்து கையாந்தகரை சாற்றில் (4) ஜாமமரைத்து (10) பில்லையாகத் தட்டி வெய்யலில் காயவைத் தெடுத்துக்கொள்ளவும் ஒருபில்லையை பசும்பால்விட்டு அரைத்து தலையில் தடவி நன்றாய் தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்யவும் இப்படி நாலுநாளைக் கொருதடவை முழுகிவரப் பீனிசம் நீங்கிவிடும் இச்சாபத்தியம்.

திரேக நிதானத்தைலம்

வாததேகிகளுக்கு பசும்நெய் (1) யெள்ளெண்ணெய் (2) முத்தெண்ணெய் (3) இந்த யெடைகளாகக் கூட்டி காய்ச்சி முழுகவும். பித்ததேகிகளுக்கு யெள்ளெண்ணெய் (1) முத்தெண்ணெய் (2) நெய் (3) இந்த யெடைகளாகக் கூட்டி காய்ச்சி முழுகிவரவும். சேத்துமதேகிகளுக்கு முத்தெண்ணெய் (1) நெய் (2) யெள்ளெண்ணெய் (3) இந்த யெடைகளாகக் கூட்டிக்காய்ச்சி உரவு செய்து முழுகவும். அரப்பு சீரகம்.

ஐங்கூட்டுத் தைலம்

வேப்பம்யெண்ணெய் புங்கெண்ணெய் எள்ளெண்ணெய் முத்தெண்ணெய் புன்னையெண்ணெய் இவைகளை சமமாகக் கூட்டி காய்ச்சி முழுகிவர தனுர்வாதம் மகாவாதம் ஜன்னிபாதசுரம், தோஷங்கள் நிவர்த்தியாகும்.

அப்பியங்க ஸ்நானவிதி

கஸ்தூரி மஞ்சள் மினகு கடுக்காய்த்தோல் நெல்லிப் பருப்பு இவைகளை கிரமப்பிரகாரம் காராம்பசுவின் பால்விட்டரைத்து கொதிக்க வைத்து ஒப்பற்ற சிரசில் தேய்த்து ஸ்நானஞ் செய்தால் என்னாளும் பிணிகளுக்கு கிஞ்சிற்றேனும் இடமில்லை. இதுவே பஞ்சகற்ப விதி யென் றறியக் கடவது.

தைலஸ்நான காலவிதி

சித்திரை, வைகாசி, மாதங்களில் சூரியன் உதயமான ஐந்து நாழிகைக்குள்ளாகவும், ஆனி ஆடி மாதங்களில் எட்டு நாழிகைக்குள்ளாகவும் ஆவனி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நாலு நாழிகைக்குள்ளாகவும் மாசி, பங்குனி மாதங்களில் மூன்று நாழிகைக்குள்ளாகவும் எவ்வித தைல ஸ்நானங்களும் செய்யப்படுவது தைலவிலக்ஷண முள்ளதாயினும் தேக சுபலக்ஷணம் உண்டு பண்ணும், மற்றகாலங்களில் தைலத்திற்கு அகாலமென்றறியவும்.

தைல வகை பரணி
முற்றும் பெற்றது

உ
தேவிசகாயம்

பத்தாவது
வீரியவிர்த்தி வகை பரணி

இந்திரியக்கட்டுக்குச் சூரணம்

நறுவலியின் பிஞ்சு கருவேலன் பிஞ்சு காட்டுப்பெரண்டையிலை இவைகளைத் தனித்தனியாய் நிழலி லுணர்த்தி யிடித்து சூரணமாகச்செய்து அதற்குச் சரியிடையாய் சக்கரைக்கூட்டி இரவில் போஜனஞ்செய்தபிறகு திருகடிப்பிரமாணம் புசித்து ஆழாக்கு பால்சாப்பிடவும் இப்படி பதினைந்து நாட்புசிக்க நீத்திருந்த இந்திரியங்கட்டும்.

இந்திரியபுஷ்டிக்கி

ஒருகோழிமுட்டை வெள்ளைக்கருவும், தேன், இஞ்சிரசம், பசும்நெய், வெள்ளைவெங்காயம், இவ்வைந்தும் சம்யிடையாய் கூட்டி மத்தித்து சிறுலவுங்கப்பட்டை விராகனிடை அறைகூட்டி புசிக்கவும் இவ்விதம் ஏழுநாளைக்கு புசிக்கும்போது ஒருபலம் நல்லெண்ணெயில் கால்தோலா குங்குமப்பூகூட்டி யிழைத்து லிங்கத்திற்கு லேப்செய்துவரவும் அதாவது முலாம் பூசுவதுபோல் மேலே தடவிவரவும் இந்திரியம் அதிகரிக்கும் லிங்கம் வலிவுதரும்.

இந்திரியங்கட்ட

பச்சை நிலப்பனங்கிழங்கு சீனம் தண்ணீர்விட்டான் கிழங்கு ஆனைநெரிஞ்சிக்காய் வகைக்கி தோலா (1) இவைகளை மை போலரைத்து காற்படி பசும்பாலில் கலக்கிக் காய்ச்சி இரவில் புசித்தானபிறகு.சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் கொள்ள நீத்திருந்த இந்திரியங்கட்டும்.

இந்திரிய பந்தனம்

பிரண்டை முடிச்சிவிழுந்திருக்கிற வேரைப்பார்த்து ஞாயிற்றுக்கிழமையில் மஞ்சள் நூலால் காப்புக்கட்டி தேங்காய்ப்பலி கொடுத்து வேரைப்பிடிங்கி முடிச்சியைக் கத்தரித்து கருப்பு சிகப்பு வெள்ளை இந்த மூன்றுவகை நூலினால் குளிசமாடி அரையின் முன்பக்கமாய் கட்டிக்கொண்டு புணர்ந்தால் யிந்திரியம் விழாது மறுபடி பின்பக்கமாக தள்ளிப்புணர்ந்தால் கலிதமாகும்.

வீரியவிர்த்திக்கு

காலையிலெழுந்து பொன்னாங்கண்ணி யிலைகளைப் பிடிங்கி வாய்கொண்டமட்டும் மென்று தின்னவும் இப்படி (40) நாளைக்கி தின்றுவர வீரியவிர்த்தியாம்.

இந்திரியதம்பனம்
கலிவிருத்தம்

நீலக்காரி நிலப்பளை சர்க்கரை
ஆவின்பாலி லரைத்து விழுங்கிட
மானைப்போல்விழி மங்கையர் தங்களை
ஊணிப்போடி லுலக்கைய தாகுமே.

லேபனத்திற்கு

(15) சங்கம்பழத்தை மெல்லியசீலையில்போட்டு பிழிந்து வருகிற ரசத்தை பிங்கானில் பிடித்து வைத்துக்கொண்டு பச்சைகற்பூரம் ஒருபணவிடை உள்ளங்கையில் வைத்து அந்தரசம் கொஞ்சம்விட்டு யிழைத்து லிங்கநரம்புமீது தடவ லிங்கம் பருத்திருக்கும்.

விந்துகலித மாகாதிருக்க

தாழம்பூவின் உள்ளேயிருக்கும் விபூதியையெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலே யிழைத்து லிங்கநரம்புமீது பூசினால் விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது.

பீஜம் கெட்டிப்பட

எட்டிக்கொட்டை அமுக்கனாங்கிழங்கு வசம்பு சமஎடையாக யெடுத்து பசும்பால் விட்டஷரைத்து லிங்கநரம்புமீது ஒருவாரம் தேய்த்துவர கெட்டிப்படும் மிகுந்தவலிவு கொள்ளும்.

இதுவும் லேபன தைலம்

தித்தீப்பு மாதளம்பழத்தோல் (4) பலம் யெடுத்து கால்படி ஜெலத்தில் வேகவைத்து (4) பலம் கியாழமாக வடித்து எள்ளெண்ணை (2) பலம் லவுங்கப்பட்டை சிறுநாகப்பூ நாயுருவி பூர்க்கும் அலரி வேர்பட்டை சிகப்புபூவின் அலரிவேர்பட்டை வகைக்கி தோலா (½) யெடுத்திடித்து வஸ்திரகாயஞ்செய்து அரைத்து மேற்படி கியாழம் எண்ணெய் யாவும் ஒன்றாகக்கலந்து காய்ச்சி யிறக்கிவைத்துக்கொண்டு (15) நாளைக்கி தினம் லிங்கத்தின்மீது தடவிவர சோர்வைநீக்கி மிக்கவலிவுதரும்.

இதுவுமது

அக்கராகாரம் மருதோன்றிவிரை அபினி சமனிடையாக யெடுத்து தேனில் அரைத்து (15) நாள் லிங்கத்தின் மீது தடவிவர நீண்டு கெட்டிப்படும்.

வீரியவிர்த்திக்கி

ஜாதிக்கா அபினி காமப்பூ லவுங்கம் வகைக்கி (1¼) விராகனிடையாக எடுத்தரைத்து ஒரு ஊர்க்குருவியின் வயற்றைக்கீரி குடல் முதலான அசுத்தங்களை நீக்கி அதனுள் வைத்து நூலினால் தைத்து அதற்குப்போதுமான நெய்யில்போட்டு பொரித்துயெடுத்து யெலும்பு போக்கி மெழுகுபோலரைத்து கெச்சக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குபால் சாப்பிடவும் இப்படி (40) நாள் சாப்பிட வீரியவிர்த்தியும் திரேகவலிவுங் கொடுக்கும்.

இதுவுமது

தென்னம்பாளை இளசியாகக் கொண்டுவந்து அதனுள்ளிருக்குங் கொழுந்து அரிசிகளில் ஒரு பிடி யெடுத்து பசும்பால் விட்டரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் சாப்பிடவும் இப்படி காலை மாலை இரண்டுவேளையும் (40) நாள் சாப்பிட வீரிய விர்த்தியும் தாதுவலிவுபடும் இரவில் புசித்தவுடன் ஆழாக்கு பால்சாப்பிடவும் இதுவரையில் ஸ்திரீபோகங்கூடாது.

வீரியவிர்த்திலேகியம்

ஜாதிக்கா, சாரப்பருப்பு, பாதிமிபருப்பு, காமப்பூ, மாவு சுக்கு, தேத்தான் கொட்டை, முருங்கைப்பிசின், முருங்கைப்பூ, வகைக்கி 2½-விராகனிடையாக யெடுத்து ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவினால்

மெழுகுபோல் அரைத்து ஒருபலம்நெய்யில்போட்டு அரைபலம் சற்கரைகூட்டி அடுப்பேற்றி லேகியம்போற் கிண்டி கெச்சக்காய்பிரமாணம் இருவேளை சாப்பிடவும் இப்படி (20) நாள் அதுவரையிலும் ஸ்திரீசம்பந்தங்கூடாது.

இருதயவலிவிற்கு

சிறுலவுங்கப்பட்டை சிகப்புநிறமானகாவி சந்தனத்தூள் வகைக்கி விராகனிடை (1) தூள்செய்து வெள்ளை சற்கரை (6) விராகனிடையில் கூட்டி புசிக்கவும்.

இதுவுமது

(5) எலுமிச்சம்பழ ரசத்தில் குலாப்புத்தூள் சந்தனத்தூள் ஜாதிக்காதூள் வகைக்கி தோலா (1) காவிக்கல் விராகனிடை (1) கூட்டி வைத்துக்கொண்டு வேளைக்கி தோலாவீதம் புசிக்கவும்.

இதுவுமது

சந்தனத்தூள் புலம்-2, சுக்கு பலம்-2, காசினிவிரை பலம்-1, சீரகம் பலம்-1, இவைகளை கல்வத்தில் அரைத்து பில்லை பில்லையாக செய்துணர்த்தி வேளைக்கி ஒருதோலாவீதம் கொடுத்து உடனே பன்னீராகிலும் நல்ல ஜெலமாகிலும் ஒருரூபாயிடை சாப்பிடவும்.

இதுவுமது

இலவன்கோந்து, சுக்கு, ஏலரிசி, சோம்பு, அதிமதுரம், சந்தனம், வில்வசதை, ரோஜாப்பூ, வகைக்கி தோலா-1, தனியா பலம்-3, சீனாகற்கண்டு பலம்-2, இவைகளை சூரணஞ்செய்து முன்னதாக கற்கண்டை அடுப்பேற்றி ஜெலம் கொஞ்சம் விட்டு பாகுசெய்து அதில் சூரணங்களைக்கொட்டிப் பாகமாய்க்கிளரி வேளைக்கி தோலாவீதம் சாப்பிடவும்.

சாரீரம் நன்றாக

சுக்கு கடுக்கா திப்பிலி வாலுளுவையரிசி சமனாகசேர்த்து தேனிலரைத்து தூதுளங்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குபால் சாப்பிடவும்.

வீரியவிர்த்தி வகை பரணி
முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்

பதினோராவது

கண்டாவிழ்த பரணி

ஆரோக்கிய கலிக்கம்

தும்பைப்பூ-100, களாப்பூ-100, மிளகு பலம்-1, மிளகை மாத்திரம் ஒன்றிரண்டாய் தட்டி இந்தமூன்றுதினுசும் கால்படிநல்லெண்ணெயில் போட்டு ஒருபுட்டியிலூற்றி கார்க்கு அடைத்து பூமியில் (¾) கெஜ ஆழத்தில் குழிவெட்டி புதைத்து 40-நாள் பொறுத்தெடுத்துக் கொண்டு வெள்ளிக் கம்பியினால் தொட்டு கலிக்கம்போல காலையில் தீட்டிவந்தால்-சூடு, கண்ணெரிச்சல், காரிகம், நீங்கிவிடும், கண்குளிர்ச்சியாய் இருக்கும் வெகு ஆரோக்கியங் கொடுக்கும்.

நேத்திரபேதி

ஈணா யெருமைப் பாலில் சித்தாமணக்கு பருப்பையிழைத்துத் தீட்டினால் மறுநாள்வரையில் கண்களில் பீளை சாறும் நேத்திரங்கள் பரிசுத்தமாய் யிருக்கும்.

அந்திமாலைக்கி

கிருஷ்ண துளசியிலைரசம் இரண்டு துளியாக நேத்திரத்தில் விடவும் இப்படி மூன்று நாளைக்கி காலையில்விட குணப்படும்.

நேத்திர சுத்திகம்பி

காரீயத்தை திருப்பலாதி கியாழத்திலும் மழை நீராலும் கரிச்சாலை ரசத்தாலும் பசும் நெய்யிலும் தேனிலுந் தனித்தனியாக வுருக்கியூற்றி 4-அங்குல நீளத்தில் கம்பிபோல்நீட்டி வைத்துக் கொண்டு காலையில் எழுந்தவுடனே் கண்களில் தீட்டிவந்தால் நேத்திரரோகங்கள் வாராதிருக்கும்.

துர்மாமிச வளர்த்திக்கு

பத்து கெஞ்சாவிரையை ஊசியில் குத்தி தீபத்தில் காட்டி கருக்கி வெண்ணையில் குழைத்து கண்களில் தீட்டிவரவும்.

காதுசீழுக்கு

மனோசிலை, தாளகம், செங்கொட்டை, வகைக்கி விராகனிடை-1, வாங்கி தூளாக யிடித்து மூன்றுபலம் நல்லெண்ணெயில் போட்டு வெள்ளாட்டு நீர் ஆழாக்குவிட்டு பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு காதுக்கு மூன்றுவேளைவிடதீரும்.

இதுவுமது

வில்வப்பழஞ்சதையை எள்ளெண்ணெயில் போட்டுவேகவைத்து காதில்விட தீரும்.

காதுசீழ்குத்தலுக்கு

பருத்தியிளங்காயும் எருக்கன் யிளங்காயும் வெதுப்பிச் சார்பிழிந்து காதில்விடவும்.

காதுசீழ்வேதனைக்கி

இந்துப்பு சுக்கு எண்ணையில்விட்டு காய்ச்சி காதில் விடவும் தீரும். அல்லது,

பெருங்காயம் முள்ளிவேர் முருங்கைவேர் இலைகள்ளி இலை சமனாயெடுத்து அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி காதில்விடவும். அல்லது,

வெள்ளைப்பூண்டு முருக்கைவேர்பட்டை எருக்கம்பூ கள்ளிப்பால் வகைக்கி விராகனிடை-1, நண்டு-1, இவைகளைசிதைத்து ¼-படி வேப்பெண்ணையில்போட்டு காய்ச்சிவிடவும்.

காதிரைச்சலுக்கு

தைவேளைச்சாரு நல்லெண்ணையும் சமமாய் கூட்டி காய்ச்சி காதில்விடவும்.

காதில் சதைவளர்த்திசீழ்

(1) பலம் நல்லெண்ணெயில் ஒரு கரப்பான் பூச்சியைப் போட்டு காய்ச்சிவிடவும்.

காதுபொங்குதல்சீழ்

ஒரு பலகாரையை அடுப்பில் நன்றாய் சுட்டுயிடித்து தூளாக்கி ஒருசிட்டிக்கை காதில் போட்டு எலுமிச்சம்பழ ரசம் கொஞ்சம்பிழியவும்.

நீர்கருக்கிற்கு

முள்ளாங்கி கிழங்கையிடித்து சார்பிழிந்து வெள்ளை சக்கரைகலந்து சாப்பிடவும்.

இதுவுமது

காசினிவிரை வெள்ளரிவிரை துளசிவிரை அரசலிஊது விளாம்பிசினி வால் மிளகு வகைக்கி (½) பலம் யெடுத்து சூரணமாக்கி சமயிடை பனங்கற்கண்டு சேர்த்து ஆழாக்கு பசும்பாலில் கலந்து காலையில் சாப்பிட நீர்கருக்கு வெள்ளையும் நீங்கும்.

நீரடைப்பிற்கு

வால்மிளகு விராகனிடை (½) யிடித்து வஸ்திரகாயம் செய்து தண்ணீர்பலம் (10)ல் கரைத்து ஒரு நாளைக்கி (4) திரம் கொடுக்கவும்.

ஆசன கடுப்பிற்கு

கால்படி பசும்பாலில் (3) எலுமிச்சம்பழம் பிழிந்து சிறுகுச்சியினால் கடைவது போல் சிலுப்பி தெளியவைத்தால் மேலேதெளிவான ஜெலம் நிற்கும் அதை யிறுத்தக்குடித்தால் உடனே ஆசனக்கடுப்பு நிற்கும்.

வெள்ளைக்கு

லவுங்கப்பட்டை ஏலரிசி ஜாதிக்கா ஜாபத்திரி வெள்ளை மிளகு வகைக்கு விராகனிடை அரை, பூரம்விராகனிடை-1, விளக்கெண்ணை பத்து பலத்தில் அரைத்துப் போட்டு காய்ச்சி வேளைக்கு ஒரு கரண்டி வீதம் ஏழுநாள் சாப்பிடவும்.

தீராத வெள்ளைக்கு

வெள்ளைக் குங்கிலியம் பொடிசெய்து ஆத்து ஜெலத்தில் போட்டு கொதிக்கவைத்து யெடுத்து இப்படி ஏழுதகுதி கொதிக்கவைத் தெடுத்து அந்தயிடைக்கி இரண்டிடை சீனாகற்கண்டு தூள்சேர்த்து அந்திசந்தி திருகடிப்பிரமாணம் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

புதுவெள்ளைக்கு

பழம்பாசி யிலையையும் சீரகமும் அரைத்து எருமை தயிரிற்கலந்து (3) நாள்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இதுவும் வெள்ளைக்கு

பச்சை முளகாயிலை ஒருபிடியெடுத்து (6) மிளகு யெண்ணி வைத்து அரைத்து தயிரில் கலந்து காலையில் (3) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இதுவுமது

பீச்சங்கன் யிலை கீழாநெல்லியிலை பழம்பாசியிலை மூன்றும் சமயிடையாய்ச்சேர்த்து அரைத்து எலுமிச்சங்கா யளவு எடுத்து அத்துடன் பொங்கவைத்த படிகாரத்தூள் திருகடிபிரமாணம் சேர்த்து தயிரில் கலந்து காலையில் சாப்பிடவும் கடும்பத்தியம் இப்படி மூன்றுநாள் சாப்பிட்டு மறுபத்தியம் (5) நாள் ஆனபிறகு ஓமம்தேய்த்து தலைமுழுகவும்.

இரத்த வெள்ளைக்கு

கெச்சக்காயிலை ரசம் பலம் (½) தயிரிற் கலந்துக் கொடுக்கவும் ஒருபலம் சிறுலவுங்கப்பட்டையைக் கியாழம் வைத்து அந்தியில் கொடுக்கவும் கடும்பத்தியம் இப்படி (3) நாள்கொடுக்கவும்.

மேகந்தீர

சீந்திலுப்பு மூங்கிலுப்பு ஏலக்கா கற்கண்டுகூட்டி அரைத்து சுண்டக்காய்ப்பிரமாணம் கொடுக்கவும்.

கொருக்கிற்கு

லிங்கம், பூரம், முதார்சிங்கு, படிகாரம், படிகாரத்தை மாத்திரம் நெருப்பிலிட்டு பொங்கவைத்து நன்றாய்ப் பூர்த்தபின் யெடுத்து (4)

தினுசும் ஓரிடையாய் நிறுத்து மைபோல் தூளாக்கி கொஞ்சம் வெண்ணெய்யிட்டு மெழுகுபோல் குழைத்து டப்பியில் வைத்துக் கொண்டு லிங்கத்தின் மேல்வரும் மேகரிணத்திற்கு சுவர்லெட்டு நீரினால் கழுவி துடைத்துவிட்டு இந்த முலானைத்தடவ மூன்றுவேளையில் உலரும்.

ஆறாத ரிணங்களுக்கு
களிம்பு

துருசு	விராகனிடை	5
முதார்சிங்கு	"	1½
மொழுக்கு	"	12
வெள்ளைக்குங்கிலியம்	"	9
தலைமண்டையோடு	"	1
நல்லெண்ணை	பலம்	5

ஒரு பெருஞ்சட்டியில் எண்ணெயை வூற்றி மெழுகைப்போட்டு காச்சி உருகினவுடன் மற்றமருந்துகளைப் பொடித்து தூள்செய்து போட்டு காய்ச்சி ஒரு பெருஞ் சட்டியில் தண்ணீர்விட்டு அதில் காச்சிய மருந்தை சாய்த்து கையால் பிசைந்தால் வெண்ணைபோல் வரும் அதை எடுத்துக்கொண்டு சீலையில் தடவி கொருக்கு குழிப்புண் மேகரிணம் இதுகட்குப் போடமூன்று வேளையில் தீரும்.

மேகசூட்டுக்கு சாந்தி

துத்தியிலையை கியாழம் வைத்திருந்து பாலுஞ் சர்க்கரையுங் கலந்து சாப்பிட்டு வரவும் சாந்தமாயிருக்கும்.

நீர்கடுப்புக்கு

துத்திவேர் பலம் (3) திராட்சி பலம் (1½) நல்லஜெலத்தில் கியாழமிட்டு சாப்பிட்டுவரவும்.

மலச்சிக்கலுக்கு

துத்தியிலை சிறுபயறு வெங்காயம் சமமாய்ச் சேர்த்துச் சமைத்து சாப்பிட குணமாகும்.

மலம் உதைய

சரக்கொண்ணைபூ, புளி, சற்கரை, உப்பு, மிளகாய், கூட்டி துவையல்செய்து சாப்பிட மலம் உதயமாகும்.

வயறு கடுப்பிற்கு

ஆலம் விழுதை எருமைத்தயிரிலரைத்து எலுமிச்சம் பழரசம் ஒருபலங்கூட்டி பிசைந்து சாப்பிடவும்.

வாய்வேக்காட்டுக்கு

மருதாணி யிலையை கியாழம் வைத்திருந்துக் கொப்பளிக்க நீங்கும்.

இதுவுமது

அவுத்திக்கீரை கொழுந்தை பறித்து வாய்கொண்ட மட்டுங் காலைவேளையில் மென்று தின்ன மூன்றுநாளில் தீரும்.

இதுவுமது

மணத்தக்காளி யிலையை சிறுபயர்போட்டு சமைத்துச் சாப்பிட நீங்கும்.

இதுவுமது

விளாயிலை, செம்பருத்தி யிலை, வில்வயிலை, துத்தியிலை, கீழாநெல்லி யிலை, வெந்தியம், வெங்காயம் இதுகளை ஒவ்வொருபிடியெடுத்து உரலிலிடித்து அரைப்படி ஜெலத்தில் கியாழமிட்டு கால்படியாக யிறக்கி மூன்றுவேளை கொப்பளிக்கவும்.

கைகால் குடைச்சலுக்கு

பூமிசர்க்கரைக்கிழங்கை நல்லஜெலத்தில் அரைத்து பூசிவரவும்.

இதுவுமது

மருதாணி பூவை நல்லலெண்ணையில் காய்ச்சி பூசியும் வரலாம்.

இதுவுமது

நல்லெண்ணெய் எருக்கன்பால் புளியிலைரசம் நொச்சிரசம் வெள்ளாட்டுப்பால் வகைக்கி சேர் (½) அபினி தோலா (½) இவைகளை ஒன்றாக்கி காய்ச்சிவடித்து (3) நாள் தடவ தீரும்.

வெட்டு காயத்தின் உதிரப் பெருக்கு நிற்க

மாசிக்காய்களை சுட்டு அதின் சாம்பல்களை தளமாய் வைத்தழுத்த உதிரப்பெருக்கு நிற்கும்.

வெட்டு காயம் அடிகள் ரிணங்களுக்கு

பேன்கொட்டை (1) ரசகற்பூரம் பலம் (½) ஏலரிசி பலம் (¼) இவைகளை வாங்கி தேங்காயெண்ணெயி லரைத்துகலக்கி வெய்யலில் வைத்து யெடுத்து தடவி சீலைபோடவும் ஈ யெரும்பு முய்க்காது வாசனையாக யிருக்கும்.

சொறிசிரங்கிற்கு

சுத்திசெய்த கெந்தகம்பலம் வீசம் ரசம்வீசம் முத்து வீசம் பலம், இம்மூன்றும் ஊமத்தங் காயைக் கீறி உள்ளே வைத்து (6) வரட்டியில் புடம் வைத்தெடுத்து அந்த காயுடன் எருமைவெண்ணெய்வைத்தரைத்து காலையில் பழயது சாப்பிட்ட பிறகு திரேகத்தில் பூசிக்கொண்டு (2) மணிக்கு யிலுப்பை புண்ணாக்கு சுட்டு அரைத்து குளிக்கவும் ஒருநாளையில் தீரும்.

சகல படைகளுக்கும்

கோரோஜனம் பலம் (1½) குழாகெந்தகம் பலம் (½) வெண்காரம் பலம் (¾) சீனாகற்கண்டு பலம் அரிக்கால், இவைகளை வெள்ளாட்டுப்பாலி லரைத்து பில்லைத் தட்டி வைத்துக்கொள்ளவும் எவ்வித படைகளுக்கும் நல்லஜெலத்தில் இழைத்துத் தடவ உதிரும் பிறகு எண்ணெய் சாப்பிட்டால் தான் உள்வியாதிகள் அறும்.

இரைப்பு இருமலுக்கு

இஞ்சிச்சார் ஈர வெங்காயச்சார் யெலுமிச்சம் பழச்சார் இவை மூன்றும் சமனாகச் சேர்த்து மூன்றுநாட் கொடுக்கத் தீரும் இச்சாபத்தியம்.

கோழையிருமலுக்கு

கோழையிருமலுடன் கபங்கட்டியிருந்தால் (5) பலந்தேனை காய்ச்சி சுடுகையில் தானே மிளகுதூள் தோலா (1) பொரித்த வெண்காரம் தோலா (1) இதுகளைகலக்கி வேளைக்கி (1) தோலாவீதங் கொடுக்க தீரும்.

புகை இருமலுக்கு

சுக்கு திப்பிலி மிளகு மூன்றும் சமயிடையாயெடுத்து மைபோலரைத்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயஞ் செய்து அந்த யிடைக்கி வெள்ளை சற்கரையில் இரண்டாந் தரமாகிய பூறா சர்க்கரை சேர்த்து புட்டியில் வைத்துக் கொண்டு வேண்டியபோது திருகடிப்பிரமாண மெடுத்து பசும்நெய்யில் குழைத்து சாப்பிட மூன்று வேளையில் தீரும்.

இதுவுமது

திப்பிலியை அரைத்து வஸ்திரகாயஞ் செய்து தேனில் குழைத்துச் சாப்பிட புகையிருமல் தீரும்.

மார் கபத்திற்கு

நரிவெங்காயம் காலே வீசம் விராகனிடை சுக்குத்தூள் (1) விராகனிடை சப்பு (1) விராகனிடை கமனாயகம் அரையே அரிக்கால் விராகனிடை இதை கற்கண்டுபாகில் சேர்த்தரைத்து (2) குன்றியிடை மாத்திரை செய்து (5) மாத்திரை வரையில் கொடுக்கலாம்.

இருமலுக்கு வாயில் அடக்கமருந்து

அதிமதுரம், பொரித்த வெண்காரம், வெள்ளை மிளகு வகைக்கி தொலாம் (1) கல்வத்தில் இட்டு கத்தாழைச் சோர்விட்டரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுணர்த்தி வாயில் (2) மாத்திரை அடக்கி உமிழ்நீர் முழுங்கவும்.

இரைப்புவியாதிக்கி

ஊமத்தன்வேர் நிழலிலுலர்த்தி புகை பிடிக்க மார்பின்னுரையை யறுக்கும்

இரத்தங் கட்டிய வீக்கத்திற்கு

வேப்பிலையை யரைத்து சட்டியில் கிளரிக்கட்டவும்.

சிறுவர் வயிற்றுப்பூச்சிக்கு

பப்பாய்க்காய்ப்பால் விராகனிடை (1) முதல் (3) விராகனிடை வரையில் வென்னீர் அல்லது பசும்பாலில் கொடுத்து (3) மணிநேரம் பொறுத்து ஆமணக்கெண்ணெய் ஒரு கரண்டி கொடுக்கவும்.

குழந்தைகள் வயிற்றுப் பூச்சிவிழ

புரசம் விரையை அரைத்து பால், நெய், சாக்கரை சேர்த்து லேகியமாய்க் கிளறி களற்சிக்காய் வீதம் கொடுக்கலாம்.

பெரியவர்களுக்கு வயிற்றுப்பூச்சிவிழ

நெல்லில் வேகித் தெடுத்த தேங்காயுடன் ஏலக்கா அரிசி பலம்-1, தோல் நீக்கிய புரசம் விரை பலம்-1, இரண்டுங் கூட்டி அரைத்து கழற்சிக்காய்ப்பிரமாணம் யெடுத்து சற்கரையில்வைத்து சாப்பிட கிருமிகள்விழும்.

இதுவுமது வயிற்று கிருமிவிழ

வாளப் பருப்பு, சாரைப்பருப்பு, கஸ்தூரி மஞ்சள், பாதாம் பருப்பு வகைக்கி ஒருபலங் கூட்டி அரைத்து துணியில் முடிந்து ஜெலத்தின் மீது தொலாந்திரம் கட்டி யெரித்து அதில் வரும் எண்ணெயைப்பிழிந்து (1) துளி அல்லது (2) துளிகள் கொஞ்சம் சர்க்கரையில் விட்டுகொடுக்க பேதியுடன் நாக்கு பூச்சிகள் விழும்.

புண்களில் அல்லது ரிணங்களி லிருக்கும் கிருமிகள் வெளிப்பட

அசரை யென்னும் மீனை அரைத்துக் கட்டினால் கிருமிகள் விழும், அல்லது மூங்கில் குருத்தை யரைத்து கட்டினாலும் விழும், அல்லது கற்பூரத்தை யெருக்கன்பாலால் அரைத்து தடவி குதிரை லத்தையை புகைகாட்டினால் கிருமிகள் விழும் அல்லது நண்டு வளைகளிலுள்ள களிமண்ணை பூசிவைத்தாலும் கிருமிகள் ரிணத்தை விட்டு வெளியாய் விழும் பிறகு வேப்பம்பட்டை கியாழத்தால் கழுவவும்.

காக்கை வலிக்கும் விக்கலுக்கும்

கற்பூரம் குன்றி (1) பெருங்காயம் குன்றி (2) சாராயம் துளி (6) வேலன் கோந்து யிளகில் அரைத்து (30) மாத்திரைசெய்து நாளைக் கொருதிரம் (3) மாத்திரை கொடுக்கவும்.

வாய்வு யிடுப்பு வலிக்கு கற்பூரத்தை சாராயத்தில் அரைத்து தேய்க்கவும்.

கீல்வாய்விற்கு

கற்பூரம் விராகனிடை (4) சாராயம் துளி (15) எள்ளெண்ணெய் பலம் (2½) இதில் அரைத்து தடவவும்.

தாகமடங்க

சுட்ட ரொட்டி ஜெலத்தில் இட்டு அடுப்புக்கரியின் தூள் கொஞ்சம்போட்டு காச்சி கொடுக்கவும்.

புதிய மூலநோய்க்கு

கஞ்சாயிலை ஒருபிடி மஞ்சள்தூள் விராகனிடை (2) எள்ளெண்ணெய் விராகனிடை (2) இவைகளைக் கூட்டி யரைத்து தடவவும்.

சாதம் ஏற்கவும் தேக வலிவிற்கும்

நிலவேம்பு விராகனிடை (4) கிச்சிலிதோல் விராகனிடை (1) தனியாவிராகனிடை (½) சாராயம் விராகனிடை (32) (12) பலம் வெந்நீர்கூட்டி இரண்டு நாழிசென்று வடிக்கட்டி வேளைக்கி (8) விராக்னிடை யாக இரண்டுவேளை சாப்பிடவும்.

பேதிக்கி

சந்திரமல்லி வேர்யென்னும் பேதிக் கிழங்கு (1) விராகனிடை திராட்சி உப்பு (2) விராகனிடை கூட்டி (1) விராகனிடை கொடுக்கவும்.

இதுவுமது

அதிமதுரம் விராகனிடை (32) திராட்சி உப்பு விராகனிடை (8) கியாழம் வைத்து கொடுக்க பேதியாம் தாக மடங்கும்.

இதுவுமது

நிலாவிரை விர்ராகனிடை (4) தனியா விராகனிடை (1) கியாழம் வடித்து திராட்சி உப்பு விராகனிடை (½) கூட்டி கொடுக்கவும்.

விரைவீக்கத்திற்கு கணுநோய்களுக்கு

நொச்சியிலையை வேகவைத்துக் கட்ட குணப்படும்.

காதுநோய் அல்லது மந்தத்திற்கு

வெள்ளைப் பூண்டை பஞ்சுபோல் யிடித்து சீலையில் கட்டிதீபத்தில்காட்டி அந்த தயிலத்தை 3-4-துளிகள் பிழியவும்.

கிராணிக்கு

எலுமிச்சம் பழத்தை நாலுபிளவாய்ப்பிளந்து அரைவிராகனிடை அபினியை வைத்து நூலால் கட்டி சாணி குகையில் வைத்து புடம்போடவும் வெந்த பிறகெடுத்து (4) நாளைக்கி நாலுபிளவு சாப்பிடவும்.

இரத்தகிராணிக்கு

முள்ளிலவம் பிசினியை தயிரில் அரைத்து (3) நாள் காலையில் சாப்பிட்டுவர நிவர்த்தியாம்.

பசிதீபனமுண்டாக

ஓமம் பலம் (1) குரோசானி ஓமம் பலம் (1) நாய்கடுகு பலம் (1) தூள்செய்து 1½-பலம் பனவெல்லத்திற் பிசைந்து புங்கங்கொட்டைப் பிரமாணம் பொசிக்கவும்.

பல்லில்ரத்தம் விழுதலுக்கு

கடுக்காய் சுக்கு காசிக் கட்டி இந்துப்பு இதுகளை சமனாய் பொடிபண்ணி பல்லில் தேய்க்க ரத்தம் நிற்கும்.

இதுவுமது

பல்நோய் பல்லசைவு இதற்கு ஒரு கலசத்தில் உப்பிட்டு அதுநிறைய யெருக்கம் பால் தளும்பவிட்டு மேல் கவசம் மூடிமண்சீலைசெய்து யெட்டு வரட்டியில் புடம் வைத்தெடுத்து பொடித்து வலியெடுக்கும் பல்லில் தேய்க்க மூன்றுவேளையில் நிற்கும்.

பல்வலிவிற்கு சாதாரண பொடி

பொன்னாங் கொட்டை உப்பு சமனாய் துக்கி பொன் வறுவலாய் வறுத்து பொடித்து வைத்துக்கொண்டு நிதம் பல்துலக்கிவர பல் ஆடாது பல்நோய்வராது பல்லில் யீரு கட்டாது புழுசோது ஆயுசு மட்டும் பல் விழாது.

பல்நோயிக்கு கொப்பளிக்க கியாழம்

வேப்பம் பட்டை வேலம் பட்டை ஆவாரம்பட்டை கடுக்காய் காசுக்கட்டி களிப்பாக்கு இதுகள் வகைக்கி கால் பலம் கொண்டுவந்து யிடித்து (1½) படி தண்ணியில் கலக்கி உழக்கு கியாழமாக யிறக்கி வாயில் வார்த்து கொப்பளிக்க தந்தநோய்தீரும்.

பல்நோய்க்கு தேய்க்க மருந்து

சுக்கு கடுக்காய் நாயுருவி வேர்ப்பட்டை இதுகள் சமன் கூட்டிவறுத்து பொடி செய்து பல்தேய்த்துவர பல்நோய் பல் அசைவுதீரும் பல்லுறுதியுண்டாகும்.

இதுவுமது

இந்துப்பு சுக்கு இவை ரெண்டும் பொடிசெய்து பல்தேய்த்துவர பல்நோய்தீரும்.

மாதவிடாயுண்டாக

மாவிலிங்கம்பட்டை உள்ளி மிளகு இவை சமனாக அரைத்தவிழுது கொட்டைப் பாக்களவு மூன்றுநாள் கொடுக்க மாதவிடாய்வரும்.

இதுவுமது

ரசகற்பூரம் விராகனிடை 1, யேழுநாள் முலைப்பாலில் ஊறவைத்து எடுத்து ஒருபிடி வேப்பங் கொழுந்து வைத்து அரைத்து 18- உண்டையாய் செய்து இரண்டுவேளையும் (6) நாள் சாப்பிட மாதவிடாய் வரும் கோழிக்கரி ஆட்டுக்கரி உப்புக்கண்டம் ஆகும், புளிதள்ளவும் வென்னீர் பரிமாறவும்.

தெரளாதபெண்களுக்கு

கொட்டிக்கிழங்கு மேலேயிருக்கும் மயிரெல்லாம் போக்கி நெகிழ அரைத்து சுண்ணாம்பு கூட மத்தித்து சாயங்காலம் தொப்புளில் தடவவும்.

முதற்காண்டம்
முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்

உட்கொண்ட ஆகாரங்கள்

சீரணகால நாழிகை

பால்கூடிய அன்னம்-தேன்-பச்சரிசி-நல்ல
வெல்லம் மா-பொரியுண்டை-மிளகோ
தனம்-பால்கலந்தாவது இடை யிடை
அடுத்தாவது புசிக்கில், 20-நாழிகை

நீர் அன்னம் 18-நாழிகை
தயிர் அன்னம் வெண்ணெய் கூடிய அன்னம்
சூரணம் தைலம் லேகியம் கிருதம் 12-நாழிகை
கத்தரிக்காய் முதலிய காய்கறிகள் 8-நாழிகை
அருந்தும்பதமாய் ஆறியஜெலம் 9-நாழிகை
முக்கால்கூறு சுண்டியஜெலம் கியாழம் 7½-நாழிகை

விருட்சம் செடி கொடி இவற்றிலுண்டாகும்
பூ தளிர்-இதுகூடிய துவயல், உயர்ந்த
பழவர்க்கங்கள் கருணை மிளகருணை
சேனைக்கருணை முதலிய கிழங்குதினுசுகள்
வித்துக்கள் கனிகள் பருப்புவகை 7½-நாழிகை

அருசுவை பதார்த்தங்களெல்லாம் 7-நாழிகை
கனிகளால் பிழியப்பட்டரசம் கஞ்சிவகை
சற்கரை-பாணகம்-வறுத்தமாவைகரைத்தருந்தல் 7-நாழிகை
அரைத்தமருந்துகள் ஜெயநீர் காய்ந்தநீர் 6-நாழிகை
கழுநீர் காடிநீர் குளுநீர் யிளநீர் சாராயம் 5-நாழிகை
தயிரன்னம்-மோரன்னம் புசித்து தண்ணீர் குடித்த 4-நாழிகை
பஸ்பங்கள் 3-¾-நாழிகை

அகஸ்தியமுனிவர் கூறிய
ஆயுள்வேதவா ரென்றறிக

உ
தேவிசகாயம்

அளவை அல்லது
இடைகளின் விவரம் கூறியது

3¾-	குன்றியிடைகொண்டது	1-பணவிடை
9	பணவிடை கொண்டது	1 விராகனிடை
1¼	விராகனிடை கொண்டது	1-களஞ்சி
10	விராகனிடை கொண்டது	1-பலம்
1	ரூபாயிடை கொண்டது	1-தோலா
8	பலம் கொண்டது	1-சேர்
13	பலம் கொண்டது 1-பவுன், அல்லது	1-ராத்தல்
24	பலம்கொண்டது	1-பக்காசேர்
40	குண்டுமணிகொண்டது	1-களஞ்சி
கிரையின் யென்பது		½-குன்றி
ஸ்குரூபல் யென்பது		10-குன்றி
டிராம் யென்பது		32-குன்றி
அவுன்சு யென்பது		8விராகனிடை
திருகடி யென்பது		3விராகனிடை
பயிண்டு யென்பது		160விராகனிடை
காலன் யென்பது		128-பலம்.

உ

வேலுமயிலுந்துணை

ஆயுள்வேத அரிச்சுவடி
என்னும்

அனுபோக வயித்திய
பிரம்மரகசியம்
இரண்டாம் பாகம்

வணக்கச் செய்யுள்

அத்தியை முத்திக்காண அருட்பெருஞ் சோதிதன்னை
சித்தியை யாகங்கொண்ட சிவகிரி மூலாதாரப்
பத்தியை பரமஞானம் பாலிக்கு மெங்கோன்றாளை
நத்தியே யிரண்டாம்பாகம் நவிலுவேன் படியுளோர்க்கே.

இதுவுமது

காலமொரு மூன்றினையுங் கடந்தஞானக்
கடவுளர்தன் னடிபணிந்து கருத்துளோற்கு
ஞாலமதில் அனுபோக வயித்தியத்தை
நாடுமிரண் டாம்பாகம் நவிலுதற்குப்
பாலமுர்த மீந்தருளும் சத்திவாலைப்
பராபரியா ளிருகமலம் பணிந்துவாழ்த்திச்
சீலமுள முனிவர்நவ நாதர்சித்தர்
செய்யதிருச் சீர்பாதஞ் சென்னிசேர்ப்பாம்.

பாயிரம்

சென்னிமிசை நாதாக்கள் பாதம்சேர்த்து
செப்புமிரண் டாங்காண்ட செய்திதன்னில்
உன்னிதமாங் குளிகைவகை பரணியோடு
உயிர்கொடுக்கும் சஞ்சீவிக் குழம்பின் மார்க்கம்

தன்னியஞ்சேர் சிந்தூர மெழுகுபற்பம்
 தாதுவிர்த்தி யாம்பரணி தன்னோடொக்க
பின்னமிலா சூரணங்கள் பெருமைதன்னை
 பேசவினி நாவுண்டோ பூமியோர்க்கே. (1)

பூமிமிசை பிரவிதரித் திரன்தனக்கு
 புதைநிதியங் கிடைத்தாற்போற் பொதுவதாக
நேமித்த வனுபோக மிருகாண்டத்தை
 நேரறிந்து செய்தவரே நிதியோராவர்
காமியொடு தலைவணங்காச் சாமியானார்
 கற்றகவிச் சொல்லிநர குற்றுமாய்வர்
வாமிசிவ காமியருள் வேண்டும்பேர்கள்
 வையமிசை யெத்தொழிலும் வழிகாண்பாரே. (2)

வழிபட்டுப் பெரியோரை வணங்கல்வேண்டும்
 வருள்சுரந்த நாதாக்கட் கிணங்கல்வேண்டும்
தொழிற்பட்டு யெவ்வழியும் துடரல்வேண்டும்
 தொல்லுலகில் சிறியோர்போற் சுருங்கல்வேண்டும்
செழித்தவளஞ் சிறுமணலூர் முனிசாமிச்சொல்
 செந்தமிழி னனுபோக வயித்தியந்தான்
கழித்தமுரை யானாலும் அறிவின்மிக்கோர்
 கைக்கொள்வார் ஆனந்த மெய்க்கொள்வாரே. (3)

உ
தேவிசகாயம்

முதலாவது

மாத்திரை வகை பரணி

அல்லது குளிகையெனக்கொள்க

தசாவதாரபேதி

இவை பச்சையாகக் கூட்டவும்			இவைவறுத்துக்கூட்டவும்		
தாளகம்	விராகனிடை	1	பெருங்காயம்	விராகனிடை	1
மனோசிலை	"	1	கடுகுருணி	"	1
இரசம்	"	1	திப்பிலி	"	1
வெண்காரம்	"	1	கருஞ்சீரகம்	"	1
இந்துப்பு	"	1	வாளம்	"	9

இவை 10-தினுசில் (9)ம் வகைக்கி விராகனிடையாக நிறுத்தெடுத்துக்கொண்டு முதற்கலத்தில் காட்டிய நெம்பரைப் போல் முதலாவது தாளகத்தை கல்வத்திலிட்டரைத்து பிறகு மனோசிலை, ரசம், வெண்காரம், இந்துப்பு, இப்படி ஐந்துங் கலக்கவரைத்துக்கொண்டு இரண்டாங்காலத்திலரைத்த கற்க வகை (4) தினுசை இளம்வறுப்பாக வறுத்து சேர்த்தரைத்து வாளத்தைக்குற்றமின்றி சுத்திசெய்து (9) விராகனிடை நிருத்தெடுத்து மற்ற சரக்குடன் ஒக்கப்போட்டு இரண்டு ஜாமம் அரைக்க வேண்டியது மோரும் சாதமும் திருப்தியாகச் சாப்பிட்டு அரைக்கவும் ஜாமகணக்கு சரியாய் முடிந்தவுடன் மாட்டுக்கொம்புச் சிமிளியில் வைத்துக்கொள்ளவும் குன்றிப்பிரமாணம் யெடுத்து பனைவெல்லம் அல்லது சற்கரையில்வைத்து சாப்பிடலாம் பேதியதிகமானால் வசம்பு சுட்டு கியாழம்கொள்ளவும் இரைச்சி சூப்பு கத்திரி முருங்கை அவரை இதுகளின் பிஞ்சு மிளகுநீர் கூட்டலாம் மாலையில் மிளகு யிளம்வறுப்பிட்டு சுக்குதட்டிப்போட்டு கியாழம்சாப்பிடவும்.

மலஜெலங்கட்டினால் நவாச்சாரபேதி

நவாச்சாரம் பலம் (1) கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிப்பால்விட்டு விளக்கெண்ணெய் (3) அல்லது (5) துளிவிட்டு ஒரு ஜாமம் அரைத்து

மாட்டுக்கொம்பு சிமிளியில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) குண்டுமணிப்பிரமாணம்யெடுத்து பழய வெல்லம் அல்லது கூழு இதுகளில் வைத்து சாப்பிடவும் பேதியதிகமானால் எலுமிச்சம்பழச்சார் அல்லது புளித்த மோர் சாதம் சாப்பிடவும் (தீரும் வியாதியாவன) மலக்கட்டு, ஜெலக்கட்டு, பெறுவயர், வாய்வுகட்டி, மகோதரம், நீராம்பல், இவைதீரும் இச்சாபத்தியம்.

பேதிக்கு காசுக்கட்டி மாத்திரை

காசுக்கட்டி விராகனிடை-12, சுத்திசெய்தவாளம் விராகனிடை-6, தேன்விட்டு ஒரு ஜாமம் அரைத்துக் குண்டுமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) ஒருமாத்திரையைப் பொடித்து வாயில்போட்டு கொஞ்சம் ஜெலம் குடிக்கவும் பேதியாம் வயிற்றுவலி வாந்தி கடினமான பேதிகண்டால் எலுமிச்சம்பழச்சார் குடிக்கவும் நிற்கும் அல்லது குளிர்ந்த ஜெலத்தில் குளித்துவிட்டு மோர் சாதம் சாப்பிட நிற்கும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும்.

பேதிக்கு ஜலமாத்திரை

ஜாதிலிங்கம்	விராகனிடை	1	மிளகு	விராகனிடை	1
இரசபற்பம்	"	1	வெண்காரம்	"	1
சுக்கு	"	1	சிற்றாமணக்கு பருப்பு	"	1
திப்பிலி	"	1	சுத்திசெய்தவாளம்	"	7

இவைகளைக் கல்வத்திலிட்டு குளிர்ந்த ஜெலம்விட்டு ஒரு ஜாமம் அரைத்து குண்டுமணிப்பிரமாணம் மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) ஒருமாத்திரை யெடுத்து கொஞ்சம் வாழைப்பழத்திற்குள் வைத்து சாப்பிட்டு உடனே கொஞ்சம் குளிர்ந்த ஜெலம் குடிக்க பேதியாகும் பேதியதிகமானால் சுடுதண்ணீர் குடிக்க பேதிகட்டும் வென்னீரில் குளித்து மோர் சாதம் சாப்பிடவும் மாலையில் மிளகு கியாழம் சாப்பிடவும்.

கிருமிகள் விழ
சவுக்கியபேதி

சித்தாமணக்கெண்ணெயும் பசும்பாலும் சமயிடையாய் சேர்த்து நன்றாய்க்கலந்து ஒரு சிட்டிக்கை கற்கண்டு பொடி போட்டு சாப்பிட

சவுக்கியமாகும் இளைப்பு ஆயாசமில்லாமல் பேதியாகும் நாக்குப்பூச்சி யென்னும் கிருமிகள் கட்டுகட்டா்· வெளிப்படும் இறைச்சி சூப்பு மிளகுநீர் இவையாகும் கத்திரி அவரை முருங்கை இதுகளின் பிஞ்சு சேர்த்துக்கொள்ளலாம் மாலையில் சுக்கு மிளகு கியாழம் சாப்பிடவும்.

குழந்தைகள் ஊதுமாந்தத்திற்கு பேதி மாத்திரை

நெல்லிகெந்தகம் விராகனிடை-¼, இரசம் விராகனிடை-¼, வெண்காரம் விராகனிடை-¼, சுக்கு விராகனிடை-¼, சுத்திசெய்தவாளம் விராகனிடை-¼, குளிர்ந்த தண்ணீர்விட்டரைத்து பாசிப்பயர்பிரமாணம் மாத்திரைசெய்து ஒரு மாத்திரை தண்ணீரி லுறைத்துக்கொடுக்கவும் ஊதுமாந்தம் தீரும் பேதியாம் பெருமல் வாதம் யிவையெல்லாம் தீரும்.

வாலைபேதிக் குளிகை

மிளகு விராகனிடை-5, வாளம் விராகனிடை-5, சுக்கு ஓமம், ரோகணி, ஆமையோடு, கோஷ்டம் வகைக்கி விராகனிடை-1, பழச்சார்விட்டரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து வைத்துக்கொள்ளவும் ஒரு மாத்திரையை முலைப்பாலில் யிழைத்து குழந்தைகளுக்குக் கொடுக்க பேதியாகும் சன்னிசுரம் சீதசுரம் தீரும் பேதி யதிகமானால் வென்னீர்சாதம் கொடுக்கவும்.

சுரங்களுக்கு பூரக் குளிகை

ரசகற்பூரம், ரசச்செந்தூரம், லவுங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கி வராகனிடை-1, இஞ்சிச்சார்விட்டரைத்து ஏலரிசியளவுமாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் இஞ்சிசுரசம், தேன், முலைப்பால், இதுகளில் ஒரு மாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் எந்தசுரமும் தீரும் சிறுபிள்ளைகளுக்கும் ஆகும். கடும்சுரம் அல்லது அசாத்திய சுரத்திற்கு கடும்பத்தியம். மெதுவான சுரங்களுக்கு இச்சாபத்தியம்.

கோரோஜனக் குளிகை

கோரோஜனம்	அப்ரேகம்
குங்குமப்பூ	ஏலம்
கற்பூரம்	கோஷ்டம்

ரசசெந்தூரம்	கிராம்பு
பச்சைகற்பூரம்	அக்கிராகாரம்

இவை (10) தினுசுகளும் வகைக்கி விராகனிடை-1, வீதம் நிறுத்தெடுத்து சந்தனத்தூள் கியாழம்விட்டு (4) ஜாம மரைத்து லவுங்கப்பூ கியாழம்விட்டு (2) ஜாமம் அரைத்து செண்பகப்பூ கியாழம்விட்டு (2) ஜாமம் அரைத்து குண்டுமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி செப்பு டப்பியில் வைத்துக்கொண்டு முலைப்பாலில் ஒருமாத்திரை உரைத்து கொடுக்கவும் தொண்டைகட்டு, சிலேட்டுமம், ஜன்னி, நீர்தோஷம், சிலேட்டுமசுரம், வாதசுரம் இவைதீரும் பத்தியம் நோயின் திடமறிந்து வைக்கவும்.

சுரங்கள் ஜன்னிக்கு
வைரவானந்தக்குளிகை

சுக்கு	இரசம்
திப்பிலி	நாவி
மிளகு	நெல்லிகெந்தகம்
வெண்காரம்	ஜாதிலிங்கம்

இவைகளை கிரமப்படி சுத்திசெய்து வகைக்கி ஒறுவிராகனிடையாக நிறுத்து எலுமிச்சம்பழச்சார்விட்டரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) இஞ்சிசரசம், தேன், முலைப்பால், பஞ்சமூலகியாழம் இவைகளி லெதிலேனும் ஒருமாத்திரையிழைத்துக் கொடுக்கவும் நோய்க்குத் தக்கவாறுயோசித்து இரண்டுவேளை கொடுத்தாலும் கொடுக்கலாம் ஜன்னி, சுரம், சிலேற்பனம் தீரும் கைப்பு புளிப்பு மாங்கிஷம் நீக்கவும்.

வைரவ சஞ்சீவிக்குளிகை

வாளம் விராகனிடை-8, சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம், நாபி, ரசம், கெந்தி வகைக்கி ஒருவிராகனிடையாக நிறுத்தெடுத்து கரிச்சாலைச்சார்விட்டு எட்டுஜாமம் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் அடக்கம்செய்யவும் (அனுபானம்) இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கலாம் அல்லது திரிகடுகு லவுங்கம் தாளிசம் இவைகளை வறுத்துப்பொடித்து திருகடிபொடியில் ஒருமாத்திரை பொடித்துவைத்துக் கொடுக்கலாம்

பித்தசுரங்களும் ஐன்னியும் போம் வாதசுரத்திற்கு முலைப்பாலில் ஒருமாத்திரை யிழைத்து துளிதேன்விட்டுக் கொடுக்கவும் சீதளத்திற்கு சன்றாஷ்டக்கியாழத்திற் கொடுக்கவும்.

அஜீரணம் மந்தத்திற்கு ஓமம் பாலில் கொடுக்கலாம் மாசிப்பத்திரி கியாழத்தில் கொடுக்க மாரல்சுரம் தீரும். இச்சாபத்தியம்.

சுகாநந்த ச( )சீவி மாத்திரை

இரசம், அரிதாரம், கெந்தகம், நாபி, துத்தம், மனோசிலை, வெண்க்ாரம், கோஷ்டம், வகைக்கி விராகனிடை (1) நிறுத்தெடுத்து கிரமப்படி சுத்திசெய்து பழச்சார்விட்டு (7) நாளரைத்து மிளகளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திசீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) தேன், இஞ்சி, முலைப்பால், பன்னீர், குளிர்ந்தநீர், துளசிச்சார், லவுங்கக் கியாழம். இதுகளில் யெதிலேனும் கொடுக்கலாம் சர்வசுரத்திற்குமாகும் பத்தியம் அறிந்து வைக்கவும்.

ஆனந்த சஞ்சீவிக்குளிகை

இரசம்	அரிதாரம்	கெந்தகம்
நாபி	வெண்காரம்	தாணிக்காய்
சுக்கு	வறுத்தமிளகு	திப்பிலி

இவைகள் வகைக்கி ஒருவிராகனிடையாக நிறுத்துசுத்தி செய்தவாளம் விராகனிடை-5, இவையாவும் கல்வத்திலிட்டு ஒருநாளைக்கி ஒருஜாமமாக ஏழுநாளரைத்து பயரளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) மூலவாய்வுக்கு ஜாதிக்காய் கியாழம் சிறுநீரில் கொடுக்கவும், சூலைக்கி முருங்கப்பட்டைசாற்றில் கொடுக்கவும் வலிகுன்மத்திற்கு நொச்சிச்சாற்றில் கொடுக்கவும், குளிருக்கு தாணிக்காய்ச்சாற்றில் கொடுக்கவும், மலக்கட்டுக்கு விளக்கெண்ணெயில் கொடுக்கவும், பாம்புகடிக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கவும், பத்தியம் நோய்க்குத் தக்கவாறு பார்த்து வைக்கவும்.

64-சுரத்திற்கும்
அஞ்சனக்குளிகை

இரசம்	நாபி	அரிதாரம்	வெண்காரம்
கெந்தி	திரிகடுகு	திரிபலை	வெள்ளுள்ளி

இவைகள் வகைக்கி விராகனிடை-1, இவைகட்கு சரியிடை வாளம் யாவும் கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கரும்புச்சார்விட்டு ஒருநாளைக்கி இரண்டு ஜாமம் விழுக்காடு மூன்று நாளைக்கி அரைத்துக் குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து சீசாவில்வைக்கவும் (அனுபானம்) நெய், தேன், திரிகடுகுகியாழம் இதுகளில் ஒருமாத்திரை கொடுக்கவும் பத்தியம் தேகதிடமும் சுரங்களின் உதட்டியும் பார்த்துவைக்கவும்.

சுரங்கட்கு அபினிகுளிகை

அபினி விராகனிடை-6 சுக்கு விராகனிடை (7) திப்பிலி விராகனிடை (8) சீரகம் விராகனிடை (9) மிளக விராகனிடை (10) இவைகளை விஷ்ணுகரந்திசார்விட்டு (4) ஜாமம் அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) விஷ்ணுகரந்தி, சீரகம், வெத்திலைக்காம்பு கியாழம்வைத்து அதில் ஒருமாத்திரையிழைத்துக் கொடுக்கவும் இப்படி காலை மாலை இருவேளையும் (3) நாள்கொடுக்க கழிச்சல், தாபசுரம் தீரும். சிறுவர்களுக்கும் ஆகும் புளிதள்ள வேண்டியது (3) நாட்சென்றால் மிளகு தூள்போட்டுக்காய்ச்சி மாலையில் ஒருவேளையாக (3) நாள் சாப்பிடவும் (7) வது நாள் சுட்டபுளி கூட்டவும்.

திசைமுகக்குளிகை

பச்சைக்கற்பூரம், லவுங்கப்பட்டை, ஜாதிக்காய் வகைக்கி விராகனிடை (2) இதற்குச் சரியிடை வாளம் குமரிச்சார்விட்டு அரைக்கவும் உளுந்துப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைக்கவும் (அனுபானம்) சக்கரையில் (1) மாத்திரை கொடுக்க பேதியாய் சுரம் நிற்கும் இச்சாபத்தியம்.

வாலைசஞ்சீவிக்குளிகை

திரிகடுகு, லிங்கம், வெண்காரம், ஓமம், கிராம்பு, சமயிடை பழச்சாற்றாலாட்டி, உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் ஜன்னி சுரத்திற்கு துளசி நாய்துளசி சாற்றிலிடவும், முலைப்பாலிலுங் கொடுக்கலாம், தோஷசுரத்திற்கு வெத்திலையில் ஒரு மாத்திரை வைத்து மென்று தின்னவும். பத்தியம் சுரத்திற்கு தக்கினபடி வைக்க

குழந்தைகள் விடாக்கழிச்சலுக்கு கட்டுவாதி மாத்திரை

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, அதிவிடையம், அபினி, வகைக்கி விராகனிடை (2½) யாக நிறுத்தெடுத்து நல்லெண்ணெயில் தோய்த்து (2) ஜாமம் அரைத்து பணவிடை யுருண்டை செய்து முலைப்பாலில் கொடுக்கவும் ஒருநாளைக்கி காலை மாலை உச்சி மூன்று தடவையும் கொடுக்க பேதிநிற்கும்.

மாந்தக்கழிச்சலுக்கு மாத்திரை

ஜாதிலிங்கம் விராகனிடை (4) திப்பிலி விராகனிடை (1) ஆவின்பால்விட்டு ஒருஜாமம் அரைத்து பயரளவு மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) கரசனாங்கண்ணி, மிளகு, நாயுருவிவேர், பிரண்டைவேர், வசம்பு (5) தினுசும் சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு கொஞ்சியிலையை சிவக்கவறுத்து உழக்கு ஜெலம்விட்டு சுக்கு தட்டிப்போட்டு ஆழாக்கு கியாழமாகக் காய்ச்சியிறக்கி ஒரு பாலடை கியாழத்திற்கு ஒரு மாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் மாந்தக்கழிச்சல் தீரும் இச்சாபத்தியம்.

சுரஹரமாத்திரை

கோரோஜனம்	கோரைக்கிழங்கு
பச்சைகற்பூரம்	சித்திரமூலம்
அதிமதுரம்	நன்னாரிவேர்
ஏலம்	அகிற்கட்டை
லவுங்கம்	தேவதாரம்
செண்பகப்பூ	தாளிசப்பத்திரி
கோஷ்டம்	கிச்சிலிக்கிழங்கு
விலாமிச்சு	கடுக்காய்
கருடப்பச்சை	நெல்லிக்காய்
கல்நார்	தான்றிக்காய்

இந்த (20) தினுகளும் வகைக்கி விராகனிடை (1) நிறுத்து யெடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து கல்வத்திலிட்டு செவ்விளநீர்விட்டு (4) ஜாமம் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) சீரகக்கியாழத்தில் காலை ஒருமாத்திரை மாலை ஒருமாத்திரையாக இருவேளையும் மூன்றுநாள் கொள்ள வாதசுரந்தீரும் இஞ்சிசுரசத்தில் கொள்ள சேத்துமசுரந்தீரும்

*பஞ்ச தீபாக்கினி சூரணத்திற்கொள்ள தொந்த சுரங்கள் தீரும் இச்சாபத்தியம்.

*பஞ்சதீபாக்கினி சூரணம் பின்வரும் சூரணவகைபரணியில் பார்த்துக்கொள்ளவும்

சுரகேசரிகுளிகை

செஞ்சந்தனம்	விராகனிடை	5	நன்னாரி	விராகனிடை	1
கோரோஜனம்	"	2½	தாளிசப்பத்திரி	"	1
ஏலரிசி	"	1	தேவதாரம்	"	1
லவுங்கம்	"	1	மாசிக்காய்	"	1
அதிமதுரம்	"	1	ருத்திராட்சம்	"	1
பேரீச்சு	"	1	முந்திரிக்கை	"	1
இலுப்பை	"	1	ரோகணி	"	1

இவைகளில் இடிக்க வேண்டியதுகளை இடித்து சீலையில் வடிக்கட்டி மெல்லிய தூளாய்ச்செய்து யாவும் கல்வத்திலிட்டு பன்னீரினால் (1) ஜாமமரைத்து குங்குமப்பூ (1) விராகனிடை சேர்த்து இளநீர்விட்டு (2) ஜாமமரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் கருந்துளசிகியாழம் தேன் இதுகளில் காலை (1) மாலை (1) இருவேளையும் கொடுக்க தாபசுரம், உஷ்ணசுரம், அதிசாரசுரம், வரட்சிசுரம், பழைய காச்சல் தீரும், அதாவது முறைக்காச்சலும் தீரும். முலைப்பாலில் இருவேளையும் (2) மாத்திரைகொடுக்க தோஷசுரந்தீரும். நீராகாரத்தில் கொடுக்க உஷ்ணகாந்தல் சுரம் தீரும். பத்தியம் புளியாகாது அரைவுப்பு கூட்டவும்.

ஊழிமணி

பளிங்கு சாம்பிராணி	விராகனிடை	9
பெருங்காயம்	"	8
வெள்ளெருக்கன் நரம்பு	"	3½
மிளகு	"	3½
கரியுப்பு	"	3½
விரைகாம்பு போக்கியகஞ்சா	"	2½
பூரம்	"	1
லிங்கம்	"	1

இவை கல்வத்திலிட்டு எட்டிக்கியாழத்தினால் (2) ஜாமம் அரைத்து முழுக்கடலை பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) வென்னீரில் அல்லது சாராயத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் ஒருஜாமத்திற்கு ஒருமாத்திரையாகக் கொடுத்துவரவும் இடையில் ஆகாரம்வேண்டில் பச்சரிசிகஞ்சி மிதமாய்க் கொடுக்கவும்.

இராஜ பூபதிமாத்திரை

உலர்ந்தலிங்கம்	மனோசிலை
நெல்லிகெந்தகம்	சுக்கு
வெண்காரம்	திப்பிலி
வாலைரசம்	மிளகு
நாபி	ஏலரிசி

இவைகள் வகைக்கி விராகனிடை-1, வீதமாய் இஞ்சிச்சாற்றில் (2) ஜாமம் அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து வைக்கவும் (அனுபானம்) முலைப்பால் தேன் திரிகடுகுசூரணம் இஞ்சிசுரசம் இதுகளில் ஒரு மாத்திரை கொடுக்க சகலசுரமும் தோஷமும் தீரும் கடும்பத்தியமிருக்கவும்.

இராஜ சவுக்கிய மாத்திரை

ஜாதிக்காய்	விராகனிடை	1	வால்மிளகு	விராகனிடை	1
ஜாபத்திரி	"	1	கிராம்பு	"	3
கிச்சிலிக்கிழங்கு	"	1	குங்குமப்பூ	"	½
ஏலம்	"	1	பச்சைகற்பூரம்	"	½
கோஷ்டம்	"	1	கஸ்தூரி	"	½
சந்தனம்	"	1			

இவைகளை இளநீர்விட்டு ஒருஜாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து நித்தியம் இருவேளையும் வெத்திலையில் ஒருமாத்திரை வைத்துதின்றுவரவும் சன்னிசீதளம் அணுகவொட்டாது கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் யாதொன்றும்வராது கண்கள் பிரகாசம் கொடுக்கும் சகலவாய்வும் கண்டிக்கும் பத்தியம் கிடையாது போஜனம் செய்தபிறகு இம்மாத்திரையை சாப்பிட வேண்டியது.

பிள்ளைகட்கு ஜாதிலிங்க மாத்திரை

லிங்கம் (½) பலம் முலைப்பால்விட்டு மூணுஜாமம் அரைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி சீசாவில் அடக்கம்செய்யவும் (அனுபானம்) ஒருமாத்திரையை முலைப்பாலில் யிழைத்துக்கொடுக்க ஜன்னி சீதளசுரம் தீரும்.

ஆடாதோடைசாற்றிலிட மந்தசுரம்தீரம்
நொச்சிச்சாற்றிலிட வாதசுரம்தீரும்
சேத்துமசுரத்திற்கு குப்பைமேனி சிறுநீரிலிடவும்
மலஜெலம் அடைத்தால் கடுக்காய்கியாழத்திலிடவும்
பத்தியம் உப்பு புளி கூடாது.

பாலசஞ்சீவி மாத்திரை

இரசம்	விராகனிடை	1
கெந்தி	"	1
வாளம்	விராகனிடை	1
அரிசிதிப்பிலி	"	1

இவை சுத்தஜெலம்விட்டு ஒருஜாமமரைத்து சிறுபயறு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலி லுலர்த்தி சீசாவி லடக்கம் செய்யவும் (அனுபானம்) முலைப்பால், நொச்சி, துளசி, இஞ்சி சுரசம் இதுகளி லெதிலேனும் ஒருமாத்திரையிட உப்புமாந்தம் முதலாக எண்வகைமாந்தமும் தீரும். சுட்டபுளியும் வறுத்த வுப்பும் கூட்டவேண்டியது.

இதுவும் பிள்ளைகட்கு சுராங்கிஷ பச்சைகற்பூர மாத்திரை

பச்சைகற்பூரம்	விராகனிடை	2
லவுங்கப்பட்டை	"	2
ஜாதிக்காய்	"	2
வாளம்	"	6

கற்றாழையினுள்ளிருக்கும் சோற்றை (7) திரம் அலம்பிவிட்டு பிறகு சீலைமுடித்துப்பிழிந்து அச்சாற்றினால் மேற்படி மருந்தை ஒருஜாமம் அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து சீசாவிலடக்கவும் திரிகடி சற்கரையில் ஒரு மாத்திரை பொடித்து வைத்து குழந்தைகட்குக்

கொடுக்க (3¾) நாழிகையில் நாலைந்துவிசை பேதியாய் சுரம் விட்டுவிடும் இச்சாபத்திய மிருக்கவும்.

நவமூலக்குளிகை

பூரம்	விராகனிடை	1
தாளகம்	"	1
மனோசிலை	"	1
பொரிகாரம்	"	1
கல்நார்	"	1

இவைகளை கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிப்பால்விட்டு (2) ஜாமம் அரைக்கவும் அப்படி அரைக்கையில் முதலாவது தாளகத்தை நெகழ வரைத்து அதன் மேல் கல்னார்போட்டரைத்து அதன்மேல் மனோசிலை பொரிகாரம் பூரம்போட்டு ஒருஜாமம் குறையாமல் அரைத்து குகையில்வைத்து மேலோடு மூடி சிலைமண் ஒன்றுசெய்து குக்கிடபுடம்போட்டெடுத்து திரும்பவும் கல்வத்திலிட்டு ஆவின்பால் துளி துளியாய்விட்டு ஒருஜாமம் அரைத்து பழச்சாற்றில் ஒரு ஜாமம் அரைத்து குமரிச்சாற்றில் ஒருஜாம மாட்டி துராயிலைச்சாற்றி லொருஜாமமாட்டி தூதுளங்காயளவு மாத்திரை செய்யவும் காலையில் ஒரு மாத்திரையாக நாற்பதுநாள் கொள்ள நவமூலமும் தீரும் இந்தமாத்திரையை (5) வயது பிள்ளைகள் முதல் (100) வயதுமட்டிலும் சாப்பிடலாம் வியாதியைத் தடையின்றிகேழ்க்கும் இச்சாபத்தியம்.

இதுவும் பிள்ளைகட்கு அற்புதகற்பூர மாத்திரை

பச்சைகற்பூரம்	விராகனிடை	2½
கெந்தி	"	1
இந்துப்பு	"	1
ஜாதிக்காய்	"	1½
ஜாபத்திரி	"	1

இவைகளை எலுமிச்சம்பழச்சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்து உளுந்தளவு குளிகைசெய்து சீசாவில் வைக்கவும் இஞ்சியை அரைத்து கெச்சக்காயளவு உருண்டையில் ஒரு மாத்திரைவைத்துக் கொடுக்கவும், அல்லது சர்க்கரையில் ஒருமாத்திரை கொடுக்கவும் எந்த சுரமுந்தீரும் இச்சாபத்தியம்.

மாந்தக்குளிகை

பூரம்	பலம்	½
லவுங்கம்	"	¼
ஏலம்	"	"
வசம்பு	"	"
சீரகம்	"	"
மாசிக்காய்	"	"
அதிவிடையம்	"	"

பூரத்துக்கிசைந்த சுத்திசெய்து மற்றதை யிடித்து வஸ்திர காயஞ்செய்து யாவும் ஒன்றுபட கல்வத்திலிட்டு விஷ்ணு கரந்திச்சார் விட்டரைத்து கொத்தமல்லிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைக்கவும் (அனுபானம்) வேளைவேர், சுக்கு, வசம்பு, வெந்தயம், பாளை, ஓமம், இதுகள் சமன்கொண்டு இடித்து கியாழமிட்டு ஒருபாலடை கியாழத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க சகலமாந்தமும் தோஷமும் தீரும் இச்சாபத்தியம்.

மகாவாத
மூசாம்பரக்குளிகை

மஞ்சள் நிறமுள்ள மூசாம்பரம்	ரூபாயி	8	மிளகு	ரூபாயி	¼
லவுங்கம்	"	¼	ஜடமாஞ்சி	"	"
பெருலவுங்கப்பட்டை	"	"	அசாருன்	"	"
கஸ்தூரி	விராகனிடை	"	ரூமஸ்தகி	"	"
தேன்	பலம்	6	குங்குமப்பூ	"	"

முதலாவது தேனை அடுப்பேற்றி காய்ச்சி அழுக்கு நீங்கச்செய்து மேற்படி மருந்துகளை தனித்தனியிடித்து வஸ்திரகாயம் செய்து தேனிலிட்டு யிறக்க ஒன்றுபட ஊக்கமாக ரேகித்து குன்றியளவு உருண்டைசெய்து பத்திரப் படுத்தவும், 3-4-குன்றி உள்ளுக்குக் கொடுத்துவர வலி, காக்கைவலி, வாய்கோணல், பின்னிழுப்பு, பாரிசவாய்வு, முறுக்கல், சூதகவாய்வு, சீதளம், ஜன்னி, இவைதீரும் வாதம் ஜன்னிகளுக்கிசைந்த பத்தியம் வைக்கவும்.

கபாட மாத்திரை

ஜாதிக்காய், ஜாபத்திரி, காயம், சீரகம், அதிவிடையம், கிராம்பு, அபினி, கெஞ்சா, களச்சிவித்து, வெந்தியம், குராசானி ஓமம், இவை

வகைக்கி (2½) விராகனிடை யெடுத்து கெஞ்சாவின் சாற்றாலாட்டி இலந்தம்விரைப் பிரமாணம் மாத்திரை செய்து எருமைத்தயிரில் ஒரு மாத்திரையாக இருவேளையும் கொடுக்க (2) நாள் (3) நாள் கொடுக்கவும், வாழைப்பூச்சாத்திலும் கொடுக்கலாம் ஜெலக்கிராணி, வாய்வுகிராணி, மூலக்கிராணி, அதிசாரம் இதுகள் தீரும். காரம்நீக்கி சாதம்கொடுக்கவும் புளிகூட்டலாம்.

வெள்ளைமாத்திரை

ரசகற்பூரம்	விராகனிடை	5
ரசச்செந்தூரம்	"	5
கெந்தகம்	"	1

இம்மூன்றும் கல்வத்திலிட்டு சங்கங்குப்பிச் சாற்றினால் ஒருஜாமம் அரைத்து பணவிடைப்பிரமாணம் குளிகைசெய்து சுக்குத்தூள் ஒருசிட்டிக்கையில் ஒருமாத்திரை வைத்து காலையில் கொடுக்கவும் (3) நாள்கொடுக்க தீராதவெள்ளை மேகப்பிடிப்பு தீரும் இச்சாபத்தியம்

மேகவாய்வுக்கு மாத்திரை

கருநாபியை (3) நாள் பசுங்கோமியத்தில் ஊறவைத் தெடுத்து மேல்தோல்நீக்கி உலர்த்தி தூள்செய்து விராகனிடை (2) யெடுத்துக்கொண்டு அத்துடன்,

கோரோஜனை	விராகனிடை	1	கெந்தகம்	விராகனிடை	¾
சூதம்	"	¼	தும்பராஷ்டகம்	"	ஆழாக்கு
பூரம்	"	¼	அக்ராகாரம்	"	
ரசம்செந்தூரம்	"	"	வெண்காரம்	"	வீசம்
வெள்ளைகாக்கணாம்வேர்	"	"	லவுங்கம்	"	வீசம்
லிங்கம்	"	"	திப்பிலி		அரிக்கால்
ஈயசெந்தூரம்	அரிக்கால்		திப்பிலிமூலம்		அரிக்கால்
சுக்கு	அரிக்கால்	"			

இவைகளைக் கருப்பு வெத்திலைச்சார் விட்டரைத்து பயறுபிரமாணம் மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் வாய்வு, வாய்க்கிட்டல், இடுப்புவலி, இவைகட்கு வெத்திலை ரசத்தில் ஒரு மாத்திரையாக இருவேளையும் தரலாம் திமிர் வீக்கம் இவைகளுக்கு இஞ்சிரசத்திலிடவும், ஆள்தேக திடப்படி (3) நாள் (6) வேளை

கொடுக்கவும் ஏழாவதுநாள் முத்தெண்ணையுடன் மஞ்சள் ஓமம் வெத்திலைக்காம்பு அன்னநீரில் பழகிய காடிஜெலமும் கொஞ்சம் விட்டுக்காய்ச்சி ஸ்நானம் செய்து வைக்கவும்.

மாத்திரைவகைபரணி முற்றுப்பெற்றது

இனிமூன்றாம் பாகத்தில் கியாழவகைசொல்லப்படும்.

இன்னம் அனேகமாயுள்ள மாத்திரை வகைகளையும் பாஷாணம் முதலாயுள்ள சரக்குவகை சுத்திகளையும் முதற்பாகத்தில் அச்சிட்டு விற்பனைசெய்து வருவதால் இந்த இரண்டாம்பாகத்தில் அவுழ்தங்களின் சரக்கு சுத்திகள் யாவும் முதற்பாகத்தில் விளங்கும்.

உ
வேலுமயிலுந்துணை

இரண்டாவது

குழம்பு வகை பரணி

கௌசிகர் குழம்பு

மனோசிலை	விராகனிடை	1
தாளகம்	"	1
நாபி	"	1
இந்துப்பு	"	1
வெண்காரம்	"	1
ரசம்	"	1
கடுக்காய்	"	1
காயம்	"	1
திப்பிலி	"	1
கடுகுருணி	"	1
சீரகம்	"	1

இவைகளை மேற்படி விராகனிடையாக யெடுத்து இதற்குச்சரியிடை வாளம்சேர்த்து இவை யாவும்கொண்ட யிடைக்குச் சரியடை சேலத்து பழைய பனவெல்லம் சேர்த்து தேங்காயோடு சுட்டகரி விராகனிடை-3, பொரித்த வெண்காரம் விராகனிடை-3, இவை யாவும் கல்வத்திலிட்டு பழச்சார் விட்டு (4) ஜாமம் அரைத்து தேங்காய் பால் விட்டு (1) ஜாமம் அரைத்து மாட்டுக்கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும் பட்டாணிப் பிரமாணம் எடுத்து பனவெல்லம் வாழைப்பழம் சக்கரை யிதுகளில் கொடுக்குவும் பேதியதிகமானால் மோர்சாதம் சாப்பிடவும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும் தலைவலி நீரேற்றம் கழுத்துவலி ஜன்னி இதுகட்குத் தகுந்த அனுபானங்களில் கையாடவும்.

அகஸ்தியர்
லிங்கக்குழம்பு

லிங்கம்	விராகனிடை	4
பூரம்	"	2

வெண்காரம்	விராகனிடை	6
வாளம்	"	12
சித்தாமணக்குப்பருப்பு	"	4

இவைகளை கிராமப்படி சுத்திசெய்தபின் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு (4) ஜாமம் அரைக்க மெழுகாகும் அதையெடுத்து மாட்டுக்கொம்பு சிமிளில் வைத்துக்கொள்ளவும்.

வயிற்றுவலிக்கு-பிரண்டையை கொண்டுவந்திடித்து ஒருபிடி யெடுத்து (அரைக்காற்படி) ஜெலத்திலிட்டு சிவக்கக்காய்ச்சி யிறக்கிவடித்த கியாழத்தில் ஒரு பணவிடை குழம்புகூட்டி உள்ளுக்குக் கொடுக்க நீங்கும் இச்சாபத்தியம்.

அண்டவாத சூலைக்கு - கற்கடகம், சிங்கி, கழற்சிக்கொடிக்காய், வெள்ளுள்ளி, சுக்கு, முருங்கைத்துளிர், சக்கரை இவை சமநிடை யெடுத்தரைத்து கெச்சக்காய்ப்பிரமாணம் உருட்டி அதிநடுவில் மேற்படி குழம்பு பணவிடைவைத்துக் கொடுக்கவும் நீங்கும், சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும்.

சூலைமுடக்குக்கு - சித்திரமூலவேரின் பட்டை ஒருபிடி யெடுத்து பஞ்சுபோல் நறுக்கி கியாழமிட்டு காலை ஒரு வேளையாக பணவிடை குழம்பு சேர்த்துக்கொடுக்கவும் தீரும் கடும்பத்தியம் (3-5-7) நாள் வியாதியின் திடமறிந்து யீயவும்.

வாதசுரத்திற்கு நொச்சிலைச்சார் - ஒரு கரண்டியளவுக்கு பணவிடை குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கிரந்திநோய் (10)க்கும் - நத்தைச்சூரி கொடிவேலி குப்பைமேனி இதுகளின்சாறு சமயிடை ஒன்றாய்க் கலந்து அதற்குச்சரியிடை முத்தெண்ணை சேர்த்து மெழுகுபதமாய்க்காய்ச்சி இறக்கி காலை ஒருவேளையாக உச்சிக்கரண்டி யெண்ணையில் பணவிடைக்குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் இப்படி (3) அல்லது (5) நாள் சாப்பிடவும் கடும்பத்தியமிருந்தாலே நலமாம். இவை ஒவ்வொன்றிற்கும் மருந்து கொண்ட அளவுபோல் மறுபத்தியங்கார்க்கவும்.

சுரத்திற்கு - ஏலம் அதிமதுரம் கொத்தமல்லி அரத்தை கோஷ்டம் சமயிடை யெடுத்திடித்து கியாழம்வைத்திருத்து அந்தக்

கியாழத்தில் பணவிடை குழம்பு இழைத்துக் கொடுக்கவும் தீரும். இச்சாபத்தியம். கடும்சுரமாகில் தகுந்த பத்திய பதார்த்தம் சேர்க்கவும் (3) நாள் கொடுக்கவும்.

வலிகுன்மத்திற்கு - நிலவாகை ஒருபிடி கால்படி ஜெலத்திலிட்டு (வீசம்படியாக) சுருங்கக் காய்ச்சி பணவிடை குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் (3) நாள் இச்சாபத்தியம்

திமிர்வாதப்பிடிப்புக்கு - உத்தாமணியின் சாற்றில் பணவிடை குழம்பு சேர்த்துக்கொடுக்கவும் (3-5) நாள் கொடுக்கவும். கடும்பத்திய மிருக்கவும்.

காமாலைக்கு - செங்கடுக்காய் பூவரசம்பட்டை சமயிடை தூக்கி யிடித்து கியாழமிட்டு பணவிடை குழம்பு சேர்த்துக்கொடுக்கவும் கடும்பத்தியம் (3-5-7) நாள் கொடுக்கவும்.

கடிவிஷங்களுக்கு - சிறுசின்னியிலைச்சார் துட்டிடையெடுத்து இதில் பணவிடை குழம்பு கலந்து கொடுக்கவும் படர்தாமரையும் தீரும் சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும் (3) நாள்.

பிள்ளையுண்டாக - பெண்கள் இரகசிய ஸ்நானம் செய்கிற மூன்றுநாளும் விஷ்ணுகரந்திச்சார் துட்டிடை யெடுத்து அதில் (½) பணவிடை யிழைத்துக்கொடுக்கவும். கருக்குழியின் சதையடைப்பு கிருமிமுதலிய அறுவகைக் குற்றமும் நீங்கி கருதரிக்கும்.

பேதிக்கு - பனைவெல்லம் கழற்சிக்காயளவு அதினடுவில் பணவிடை குழம்புவைத்து மூடி கொடுக்கவும் குளிர்ந்த ஜெலம் குடித்தால் பேதி யதிகமாகும் வென்னீர் குடித்தால் பேதிகட்டும் அப்படியும் மிஞ்சினால் ஆவின்மோர் கூட்டி போஜனஞ் செய்யக் கட்டும் அப்படியும் அதிகமானால் வசம்புசுட்டுக் கியாழமிட்டு சாப்பிட பேதினின்றுவிடும் மாலையில் மிளகுகியாழம்.

எலிகடிக்கு - எருக்கிலையை அரைத்து கழற்சிக்காய்ப் பிரமாணமெடுத்து பணவிடை குழம்புவைத்துருட்டிக் கொடுக்க (18) யெலிவிஷமும் நீக்கும் கடும் பத்தியம் மறுபத்தியம் சுட்டபுளி வறுத்தவுப்பு

அலர்ஜன்னி - அலர்ஜன்னி ஆனந்தஜன்னி முதலான துஷ்ட விஷங்கட்கு வேப்பெண்ணையில் குன்றிப்பிரமாணம் யிழைத்து கலிக்கமிடவும்.

அகஸ்தியர் பெருங்குழம்பு

பெருங்காயம்	கருஞ்சீரகம்
கடுகு	ஓமம்
திப்பிலி	கடுக்காய்
கோஷ்டம்	கடுகுருணி
சுக்கு	கார்போகரிசி
மிளகு	நெல்லி
தாணிக்காய்	திராட்சி
அக்கிராகாரம்	ஏலம்

இவைதினுசுகள் (16-ம்) வகைக்கி (1) விராகனிடையாக நிறுத்தெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து வைத்துக் கொண்டு,

பெருநாவி	மனோசிலை
நிருவிஷம்	நெல்லிக்காகெந்தி
லிங்கம்	இந்துப்பு
தகட்டரிதாரம்	வெண்காரம்
இரசம்	

இவைகள் தினுசு (9-ம்) வகைக்கி 1, விராகனிடை எடுத்து பச்சையாகவே முன் சூரணத்துடன் சேர்த்து நிறுத்து அவ்விடைக்கு சரியிடை சுத்திசெய்தவாளம் சேர்த்துக்கொள்ளவும் தேங்காய் ஓட்டை சுட்டகரி விராகனிடை (8) பனைவெல்லம் விராகநிடை (8) இவையாவும் கல்வத்திலிட்டு தேங்காய்ப்பால்விட்டு (1) நாள் முழுமையும் அரைக்கவும் உத்தாமணிச்சார்விட்டு ஒருநாள் முழுமையும் அரைக்கவும் மெழுகுபதத்தில் வழித்து மாட்டுக்கொம்பு சிமிளில் வைத்துக்கொள்ள வேண்டியது இதை அரைக்கும்போது விளக்கெண்ணெய் நெய்பசும்வெண்ணை மூன்றும் குழைத்து முகத்திற்குப் பூசிக்கொண்டு வேரகுமாவின் கூழும் மோரும் கரைத்து திருப்தியாக சாப்பிட்டு அரைக்கவும்.

(இதற்கனுபானம்)

சுரத்திற்கு - கடுக்காய் சாற்றில் அல்லது கடுக்காய் கியாழத்தில் ஒரு காசுயிடை மேற்படி குழம்பு யிழைத்துக் கொடுக்கத்தீரும்.

குளிர்சுரத்திற்கு - சுக்குநீரில் ஒருகாசுயிடை குழம்பையிழைத்துக் கொடுக்கவும்.

ரெத்தமூலத்திற்கு - வெள்ளாட்டுப்பாலில் ஒருகாசுயிடை குழம்பு கலந்து கொடுக்கவும்.

நீரொழுக்கிற்கு - பாண்டுமகோதரம் நீராம்பல் பெருவயர் இதுகட்கு மிளகுத்தூளல்லது வெங்காயத்தில் ஒரு காசுயிடை குழம்புவைத்துக் கொடுக்கவும்.

ஜன்னிகளுக்கு - இஞ்சிதேன் முலைப்பாலில் வென்னீரில் இவையெதிலேனும் ஒருகாசுயிடை குழம்பு மத்தித்துக் கொடுக்கவும் தீரும்.

பெரும்பிளவை - துடைவாழை அரையாப்பு புண்ணு பெருஞ்சிலந்தி இவைகட்கு உமிழ்நீரில் ஒரு காசுயிடையிழைத்துக் கொடுக்கவும் அன்னீரா லிழைத்தே சிலந்திமுதலியரிணத்தின்மீது தடவலாம்.

முலைக்குத்துக்கு - நொச்சிச் சாற்றில் ஒரு காசுயிடை யிழைத்துக் கொடுக்கவும் அந்த சாற்றினா லிழைத்தே மேலுக்கும் பூசவும்.

வாதசூலை இளங்குட்டத்திற்கு - நொச்சியிலை வதக்கிப் பிழிந்த சாற்றில் காசுயிடை கொடுக்கவும்.

வாய்வுகளுக்கு - இஞ்சி அல்லது கொழுஞ்சிப்பட்டை கியாழத்தில் ஒரு காசுயிடை கொடுக்கவும்.

ஜன்னி (13) க்கும் - வெங்காயச்சார் முசுமுசுக்கைச்சார் நொச்சிச்சார் இதுகளில் கொடுக்கவும்.

தலைபாரம் - கழுத்திழுப்பு இதுகட்கு யெருக்கிலை அல்லது வேப்பஞ்சார் வேப்பம்யெண்ணையில் யிழைத்து கண்ணில் கலிக்கம்போடவும்.

சந்தானமில்லாதவர்க்கு - அரசன்கொழுந்து ஆவின்பால்விட்டரைத்து கெச்சக்காய்ப் பிரமாணம் யெடுத்து அதில்காசுயிடை வைத்துக்கொடுக்கவும்.

உதிரவாய்வுக்கு - கருத்த ஆட்டின்பாலில் வில்வப்பட்டையை நறுக்கிப்போட்டுக் காய்ச்சி, காசுயிடை மருந்து கலந்து கொடுக்கவும்.

உப்பிசத்திற்கு - கொண்ணைக்கொழுந்து கடுக்கா யெண்ணை முலைப் பால் இதுகளில் காசுயிடை கொடுக்கவும்

இருமலுக்கு - இஞ்சி கொழுஞ்சிப்பட்டை இதுகளில் காசுயிடை கொடுக்கவும்.

ஐயாயிரம் விஷக்கடிகளுக்கும் - கருப்பு வெத்திலைச்சார் வேப் பெண்ணெய் வென்னீர் இதுகளில் பயரளவு வைத்து கொடுக்கவும் அன்றியும் கடிவாயிலும் தடவவும் மற்றுமுள்ள அனுபான்ங்களறிந்து கொடுக்கவும் அந்த வியாதிக்குத்தக்க பதார்த்தம் பத்தியமிடவும்.

அகஸ்தியர் மகாகுழம்பு
விருத்தம்

பருவதம் தன்னில்வாழும் பரமனாரருளினாலே
பெருமையா யுலகில்வாழும் புண்ணிய ஜெனங்களுக்கு
உருபல வியாதிவந்தால் உண்மையாய் தீரவென்று
பிரபல முனிவர்தானும் பேசியமருந்துகேளே. (1)

பேசிய மருந்துகேளாய் பெருங்காயம்கடுகிந்துப்பு
வீசியரசம் பொற்காரம் விஷமனோசிலையுங்கூட்டி
ஆசிலாத்திப்பிலியும் அதட்டிய தாரத்தோடு
மாசிலாக்கருஞ்சீரகம் வகைக்கு கழஞ்சு வாங்கே. (2)

வாங்கிய மருந்துக்கொக்க வாளமும் வறுத்துப்பாதி
தாங்கியபச்சைப்பாதி சமன்முளைத்தோடு போக்கி
தீங்கிலாமருந்து பத்தும் சேரவேயரைக்கக்காந்தும்
ஓங்கியமோரும் சாதம் உண்டுபின்னரைத்துக்கூட்டே. (3)
கூட்டியமருந்தின்பேரு அகஸ்தியர் குழம்பதாகும்
யீட்டியசுரமேசுக்காம் இரும்பலேகடுக்காய்சாறு
வாட்டியகுளிர்சுரங்கள் வகைக்கு மிளகுதூளாம்
பாட்டிய ரெத்தமூலம் நெய்யினில் மேதைபாலே. (4)

பாலிஷிலொழியும்பாண்டு மகோதரம் பெருவயறு
மேலும் நீராமை கூகை மிளகுதூள் வெள்வெங்காயம்
சாலவேசன்னிக்கெல்லாம் தேனிஞ்சிசாற்றிலாகும்
ஏலவேசுகஜன்னிக்கு வேப்பெண்ணெயிலிடு கண்ணுக்கே. (5)

இடுகண்ணில்கடுகிற்பாதி யிருந்து கற்றாழஞ்சோறு
வடிதயிர்சந்தனங்கள் வைத்து நீகட்டமாறும்
படுபருபிளவைவாழை பற்கரையாப்புபுண்கள்
வடுபெருஞ்சிலந்தியாகில் உமிழ்நீரில் குழைத்துப்பூசே. (6)

பூசிடுமுலைக்குத்துக்கும் புண்ணிற்குமிதுவேயாகும்
சூசிகவலிகுன்மங்கள் தோன்றிடில் நொச்சிச்சாற்றில்
காசங்கள் திரிகடுகு தேனிலின் கலந்துதின்ன
நாசமாம் வாதசூலை நருசுக்கு நொச்சிபாரே. (7)

பாராய் கபாலவலி முதலாம் பசாசுபரக்கும் திரி புகையால்
நேரியெடுக்கும் நீர்சொரிப்பு நீர்சல அடைப்பு தாழைவிழுதில்
தீரும் தீராக்கபாலகிரந்தி தீருங்குப்பிச்சாற்றிலிட
தீராய்கொடுக்கபல விஷமும் தீருந்தீரும் திரிபிடியே. (8)

பிடிக்குந்திரிக்குமுன்னரைக்கில் பிடிட்டிசீலையுலரவைத்து
யிடிக்கும்வலிக்கும் தனுர்வாதம் யிளைத்தேசாடும் புகைகாட்ட
குடிக்கும் கியாழம் கழற்சியிலை கொடிய நொச்சிமாவிலிங்கம்
யிடிக்கும் ஜன்னிபதினெட்டும் அனுபானஞ்செய்நூல்விதியே. (9)

விதியால்வந்த மருந்தெல்லாம் வேறேதேடவேண்டாங்காண்
பதியாம் வியாதிநாலாயிரம் பகருநற்சதநாற்பத்தெட்டும்
துதியாயிணங்கும் குறிப்பறிந்து தூயவகையனுபானஞ்செயில்
துடியாய் தீருமென வென்று சொன்னார் முனிவர் துகையாக. (10)

சொன்னார்மடவார் தங்கட்கு சுதனாம் கெற்பம் வரும்படிகேள்
முன்னே அரசங்கொழுந்ததனை மிகஆவின்பால்விட்டரைத்து
முன்னார்குளம்பில் பணவிடைதான் மூட்டிமூன்று நாட்கொடுக்க
பொன்னாம்புதல் வருண்டாகும் புலியோர் குறுதிகண்டீரே. (11)

கண்டீர் நாவில்பட்டைதனை கருத்தவாட்டுப்பால்தனிலே
கொண்டசீரகம் பொடிகூட்டி குளம்பில் பணவிடைதானுண்டால்
பண்டேசூதகத்தில்வரும் உயர்ந்தவாய்வு உடன்தீரும்
வண்டார்குழல் சேர்மடமானே மலைசேர் முனிவன் வகுத்ததுவே.(12)

வகுத்தபிரமன் விதியாலே வருஞ்சூசிகமாம் வாயுவுடன்
திறட்சிமிகுந்த வலிதீரும் தின்னே சொன்னார்விரகுடனே
பருத்தநொச்சிச்சாறுதனில் பாங்காம் சாரணைமிளகு சுக்கு
தொகுத்தகுளம்பில் பணவிடைதான் சொன்னோம்
கேட்டுகொள்வீரே. (13)

கொள்ளும் பிரிவிச்சுதனுக்கு கொடுக்கமருந்து தனைக்கேளு
உள்ளிமுருங்கைபட்டையுடன் வுயர்ந்த புங்குயெருக்கிலைவேர்
விள்ளவரிதாம் திருகுகள்ளி விரைசேரிஞ்சிரசமதிலே
கொள்ளும் குளம்பில் பணவிடைதான் சேர்த்துக்கொடுக்க
வல்லீரே. (14)

வல்லீர் நெஞ்சுவலிகளுக்கு வகையாம் மருந்து தான்கேளீர்
வெல்லும்லவுங்கப்பத்திரியும் விரைசேர்கிராம்பு அதிமதுரம்
சொல்லும் தாளிசப்பத்திரியும் சிறந்த ஆவின் வெண்ணையுடன்
அல்லேகுளம்பில் பணவிடைதான் அருந்தத்தீரும் கண்டீரே. (15)

அருந்தும் தாளியிலையவரி ஆவின் வெண்ணையதுவுடனே
பொருந்துங்குளம்பு ரெண்டுபணம் போலசேர்த்துக் கொடுப்பீரால்
பொருந்தவினையாம் விரியன் விஷம் பேயுந்தீரும் பெரியோர்காள்
வருந்தாதிதனை நீருண்ண வலிபோம் சொன்னோம்மறவீரே. (16)

மறவீர்நாவல்கொழுந்துடனே வாய்த்தமிளகு விராகன்ரெண்டு
முறையாயருந்த வெற்றிலையில் முன்னங்குளம்பு பணவிடைதான்
பறையாயிதெல்லாமொன்றாக பரிந்து கொடுக்கவல்லீரேல்
பிரவார்நாகங்கடிவிஷமும் பிணியுந்தீரும் பெரியோரே. (17)

தீருந்தேளின் விஷந்தனக்கும் செய்யான்குத்து துளசிலையில்
சேருங்குளம்புபணவிடைதான் திரமாய்சேர்த்துக் கொடுத்துவிடு
பேருங்கடிவாய்யுமிழ்நீரில் வூட்டிப்பூசவிஷம்போங்காண்
மாருங்குயிலேமடமானே வாலைகடிக்கனுபானங்கேள். (18)

கேளாய் வெல்லம்புகையூரல் கிளியேமிளகுபேய்பீர்க்கில்
நாளைசெய்யும் விரைமூன்று நன்றாய்குப்பை மேனியின்பால்
ஆளவார்த்துவதனுள்ளே அன்பாய்குளம்புபணவிடையும்
வேளைகொடுக்க வல்லீராய் விடுமேவாளை விஷந்தானே. (19)

தானேநஞ்சுவலிதனக்கு சாற்றமருந்து தனைக்கேளாய்
மானே பழைய புளிவெல்லம் வகையாய்சித்திர மூலியுடன்
தேனே குழம்புமேனியின்பால் திரமாய் விட்டுசேர்த்தரைத்து
வானோர் குழம்பில் பணவிடைதான் வகையாய் கொடுக்க
வலிபோமே. (20)

வலியே செய்யும்நீர்கட்டு மாறமருந்து நீகேளாய்
நலியாமிளகு வெண்காரம் நன்றாய் பொரித்துகற்கண்டுடனே
மெலியாய் ரெண்டுவிராகன்பொடி மெய்யாவின்பால் நெய்யதனில்
புலியநன்குழம்பு பணவிடைதான் புகழ்ந்தே கொடுக்க
பிணிபோமே. (21)

பிணியாம்விஷபாகத்தோடு பின்னும்வீக்கம்தான் தீர,
துணியாம் நொச்சிசாறுடனே சொல்லுந்திரிகடு தான்கூட்டி,
மணியாங்குழம்பு பணவிடைதான் வகையாய்சேர்த்து கொள்வீரே
கெணியாயெழுந்தவீக்க மெல்லாம் கெடுமே சொன்னோங்
கேளாயே. (22)

கேளாயிந்த வகையெல்லாம் கிளியேபேதிமிகவுண்டாம்
பாராய் மயங்கவசம்புசுட்டு பாங்காய்கியாழம் வைத்ததனில்
சூடாய் வெண்ணை பாக்களவு சுருக்காய்போட்டு கொடுப்பீராய்
மீளாய்பேதியுள்ள தெல்லாம் மின்னேதீரும் மெய்யிதுவே. (23)

மெய்யாய் வசம்புதானரைத்து மிதமாய் கலக்கி தண்ணீரில்
கையாலெடுத்து தானருந்த கறையாய் நிற்குந்தான் பேதி
வையாமோரும் பழச்சாறும் வகையாய் கூட்டி தான்கொடுக்க
பையாபேதிதான்தீரும் பதமாய்ச் சேர்த்து கொடுப்பீரே. (24)

கொடுக்கவசம்பு தான் முருங்கை கூறுமயிலிரகுதிராக்ஷத்தில்
தடுக்காயேந்தி கொடுப்பீராம் தானே நிற்குமலக்கழிச்சல்
அடுக்காய் வாந்திமிகக்கண்டால் அரனார் சீரககியாழத்தில்
கடுக்காய் சக்கரைகூட்டியிட நலமாய் வாந்திகண்டீரே. (25)

மேற்படி செய்யுளுக்கு விபரம்

மனோசிலை	விராகனிடை	1	பெருங்காயம்	விராகனிடை	1
ரசம்	"	1	கடுகுரோகணி	"	1
தாளகம்	"	1	திப்பிலி	"	1
பொரிகாரம்	"	1	கருஞ்சீரகம்	"	1
நாவி	"	1	வாளம்	"	9

மேற்கண்ட மனோசிலை முதலாய் நாபிவரையிலுமுள்ள (5) வகைமருந்துகளையும் பச்சையாகவே கூட்டவேண்டும் அதாவது சுத்திசெய்யவேண்டுவதில்லை மோரும் சாதமும் திருப்தியாகச் சாப்பிட்டு

அரைக்கத் துடங்கவேண்டும், முதலாவது தாளகத்தைக் கல்வத்திலிட்டரைத்து அதன்மேல் மனோசிலையைப்போட்டரைத்து பிறகு மற்ற மூன்றுமிட்டரைக்கவும் பெருங்காயம் முதலாம் வாளமட்டிலுள்ள தினுசுகள் 5-ல் நான்கை யிளம்வறுப்பாகவறுத்து கல்லூரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்துக் கூட்டியரைக்கவும், வாளத்தை சாணிப்பாலில் கொதிப்பித்து மேலோடுதட்டி முளைநீக்கி விளக்கெண்ணை (3) துளிவிட்டு வதக்கிச்சேர்த்து அரைக்க குழம்பாகும் மாட்டுக்கொம்புசிமிளில் வைத்துக்கொண்டு மேற்படி அனுபானப்படி பிரயோகிக்கவும்.

சண்டமாருதக்குழம்பு

காயம்	விராகனிடை	1	சாரம்	விராகனிடை	1
ஓமம்	"	1	சித்திரமூலம்	"	1
சுக்கு	"	1	பனைவெல்லம்	"	1
பூநீர்	"	1	கஸ்தூரிமஞ்சள்	"	1
காரம்	"	1			

இவைகளைக் கல்வத்திலிட்டரைத்து சுண்டக்காய் வீதம் உருண்டைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) பத்தாய் அல்லது பிராந்தியில் ஒருமாத்திரை கரைத்துக் கொடுக்க வாந்திபேதி யிவைநிற்கும் ஒருசமயம் தாகம் மீறினாலும் மருந்து வாந்தியானாலும் பனிக்கட்டியென்னும் அயிஸ்கட்டியை பிராந்தியில் கரைத்துக்கொடுக்கவும் தீரும்.

கடுகாட்டுமீட்டான் குழம்பு

கெந்தி	துருசு
ரசம்	இந்துப்பு
லிங்கம்	மகிழம்விரை
தாரம்	சுக்கு
மனோசிலை	திப்பிலி
வெண்காரம்	மிளகு
நாபி	காயம்

இவைகளை சமனிடைகொண்டு பொடித்து கல்வத்திலிட்டு அரைக்கவும் அரைக்கையில் பூவந்திப்பழத்தின் சதைகூட்டி அரைத்து செப்புசிமிளில் வைத்துக்கொள்ளவும் அனுபானம் விஷந்தீண்டி வந்தவர்களுக்கு குன்றியளவெடுத்து வெத்திலையில் தடவிக்கொடுக்க விரியன் முதலிய சர்வ விஷங்களும் தீரும் உடனே தவளையைப்பிளந்து கடிவாயில் வைத்துக்கட்டவும் விஷம் மலத்தால்கழியும் பச்சரிசியும் பயரும் கஞ்சிகாய்ச்சிக்கொடுக்கவும் அல்லது முருங்கையீர்க்குசார் காய்ச்சிக் கொடுக்கவும்.

வீரக்குழம்பு

வீரம்	விராகனிடை	1
பூரம்	"	1
லிங்கம்	"	1
வெண்காரம்	"	1
சாரம்	"	5
ஏலம்	"	8
வாளம்	"	10

இவைகளைக் கல்வத்திலிட்டு வாளத்தைச் சுத்தித்தபிறகு விளக்கெண்ணெயில் புரட்டி சற்றுவெதுப்பி யெடுத்து சேர்த்தரைக்கவும் வாதம் (84) க்கும் விரோசனத்திற்கும் சன்னிகளுக்கும் குன்றியிடை வெத்திலையில் அல்லது சக்கரையில் கொடுக்கவும் இச்சாபத்தியம்

குழம்புவகைபரணி
முற்றிற்று

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பகிரங்கப் படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையெனக் கவலைப்படவேண்டாம் இதற்கு முதற்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலமும் அதிற்றெரிந்துக் கொள்ளலாம்.

இனிமூன்றாம்பாகத்தில்
கியாழவகை சொல்லப்படும்.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 5-ம்பாகம், 6-ம்பாகம், 7-ம் பாகங்களில் அநேக அற்புதமுறைகள் சொல்லபட்டிருக்கிறது கடைசி 8-ம் பாக முழுமையும் சுத்தி வகைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

உ

தேவிசகாயம்

மூன்றாவது

செந்தூரவகை பரணி

காளமேக செந்தூரம்

இரசம்	விராகனிடை	1
தாளகம்	"	6
கெந்தி	"	1
லிங்கம்	"	1

இவை நான்கும் கல்வத்திலிட்டு குமரிச்சார்விட்டு ஒருஜாமம், பழச்சார்விட்டு ஒருஜாமம் அரைத்து பில்லை தட்டிக் காயவைத்து அகலில்வைத்து மேலாடுமூடி சீலைமண் (3) செய்து (5) எருவில் புடம்போட செந்தூரமாம் (அனுபானம்) நெய் தேன்வெண்ணெய் இதுகளில் பணவிடை கொடுக்க தந்திமேகம் மதுமேகம் சுக்கிலமேகம் கண்டமாலை இதுகள் தீரும், வயிற்றுநோயிற்கு சக்கரையில் கொடுக்கவும், இச்சாபத்தியம் புளிதள்ளவேண்டியது. நோய்திடமறிந்து (3) நாள் அல்லது (5) நாள் கொடுக்கவும்.

அன்னபேதி செந்தூரம்

அன்னபேதி (1) பலம்வாங்கி பெரும்பட்டை சார்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு ஒடுமூடி சீலைமண்செய்து (4) எருவில் புடம்போட செந்தூரமாம் வாந்திக்கு தேனில் பணவிடைகொடுக்க நீங்கும் பத்தியம் பச்சரிசி கஞ்சி கொடுக்கவும்.

இதுவுமது
அன்னபேதி செந்தூரம்

அன்னபேதி (2) பலம் வாங்கி சிறுநீராவது பழச்சாராவது விட்டு பிட்டுபோல் கிளறி அகலில்வைத்து மேலோடுமூடி சீலைமண்செய்து (10) எருவில்புடம்போட செந்தூரமாம் அனுபானம் தேன் நெய் பசும்பால்

இவைகளில் பணவிடை கொடுக்க பாண்டு காமாலை மகோதிரம் பெருவயர் வீக்கம் இதுகள் தீரும் இருவேளையும் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சண்டமாருத செந்தூரம்

பூரம்	விராகனிடை	10
லிங்கம்	"	8
வீரம்	"	2
கெந்தி	"	1
ரசச்செந்தூரம்	"	2

இவைகளைக் கல்வத்திலிட்டு (9) ஜாமம் அரைத்து சீசாவில்வைத்துக்கொள்ளவும் பனவெல்லத்தில் பணவிடை செந்தூரம்வைத்து சாப்பிடவும் (5-7) நாள் கொள்ளவும் இச்சாபத்தியம் 13-ஜன்னிவகையும் பீலி பவுத்திரம் வாதம் (80) வகையும் தனுர்வாதம் விரைவாதம் முக்கல் கடுக்கல் புண் கிரந்தி, வெடிசூலை, கண்டமாலை, பெரும்பாடு, எவ்வித சுரமும் அரையாப்பு சிலந்தி யாவும் தீரும்.

பஞ்சபாண செந்தூரம்

சூரத்து கற்பூரம்	கெந்தகம்
ஜாதிலிங்கம்	ரசம்
மனோசிலை	சங்குபாஷாணம்
தாளகம்	

இவைகள் வகைக்கி ஒருபலம் வாங்கி கல்வத்திலிட்டு மேனிச்சாற்றினால் (3) ஜாமம் அரைத்து அப்படியே நிழலி லாறவைத்து மறுநாள் கருப்பு வெற்றிலைச்சாற்றால் (4) ஜாமம் மறுநாள் செம்பருத்திச்சாற்றால் (4) ஜாமம் வெள்ளருகுச்சாற்றில் துளசிச்சாற்றில் வேலிப்பருத்திச்சாற்றில் பொடுதலைச் சாற்றில் நாளொன்றுக்கு (4) ஜாமம் குறையாமல் அரைத்து ஒரு சட்டியில் கருப்பு வெத்திலைபரப்பி அரைத்து மருந்தை பில்லைதட்டி அதன் மேல் வைத்து மேல்சட்டிமூடி சீலைமண் (7) செய்து அடுப்பிலேற்றி ஒரேஜாதிவிறகால் (4) ஜாமம் எரிக்கவும். அடிசட்டி சிவக்கக் கண்டால் தீயை வாங்கி கமலம் போல் எரிக்கவும் இப்படி ஒருநாழிகை யெரித்தபின் யிறக்கி ஆறினபிறகு யெடுக்க செந்தூரமாம் சீசாவில்

வைத்துக்கொண்டு இஞ்சி, தேன் இ[illegible]களில் (2) அரிசியிடை கொடுக்கவும்.

சுரம்-64, ஜன்னி-13, குட்டம்18 கிரந்தி, தலைசாய்ந்தவாய்வு-26, வாதம்-80, மேகம்-21, குன்மம்-8, கிராணி-6. முடக்குசூலை, வெடிசூலை, கன்னப்புத்து, யோனிப்புத்து, அண்டப்புத்து, கபாலகுட்டம், கண்டமாலை, குலைநோய், அரிகரப்பான், தேமல், குழிவாழை, தொடைவாழை, அழுகண்ணி, அரையாப்பு, கபாலகுத்தல், கண்ணோய், பவுத்திரம், பிளவை, ரிணம், மூலம், காசிரோகம், இடுப்புசூலை, இவையெல்லாந்தீரும் இச்சாபத்தியம் நோயின் திடமறிந்து (5-7) நாள் கொடுக்கவும் மறுபத்தியம் அப்படியே கார்க்கவும் பிறகு ஸ்நானம் செய்விக்கவும் குருகடாக்ஷம்.

லிங்க செந்தூரம்

முதல்தரமான லிங்கம் ஒருபலம் நிறுத்தெடுத்து சித்திர மூலவேரின் பட்டையைக் கொண்டுவந்து அரைத்து மேற்படி லிங்கத்திற்கு கவசங்கட்டி சீலைமண்செய்து பத்து எருவில் புடம் போட்டு ஆறியபின்யெடுக்க செந்தூரமாம் தேனிலாவது இஞ்சிரசத்திலாவது அரிசியிடை கொடுக்கவும் சகலவாய்வுகளையும் கண்டிக்கும் இச்சாபத்தியம்.

செந்தூரவகை பரணி
முற்றிற்று.

உ

தேவிசகாயம்

நான்காவது

மெழுகு வகை பரணி

சூதகவாய்விற்கு
அண்டமெழுகு

(4) கோழிமுட்டையை வுடைத்து ஓடு நீங்கலாக சமூலமும் ஒரு கலையத்திலூற்றி (15) எலுமிச்சம் பழச்சார்விட்டு வீரம் பலம்-¼, பூரம் பலம்-¼, சாரம் பலம்-¼, படிகாரம் பலம்-¼, இவைகளைப் பொடியாகக் கல்வத்திலிட்டரைத்து மேற்படி கலயத்தில்போட்டு (5) நாள் சூரியபுடம்வைத்து சுண்டினபிறகு யெடுத்து அரைத்து வைத்துக்கொள்ளவும் அனுபானம் ஒருவேளைக்கு மிளகு பிரமாணமாக (3) நாள் இருவேளையும் கொள்ளவும் இச்சாபத்தியம்.

குங்குமப்பூமெழுகு

குங்குமப்பூ	விராகனிடை	½	அக்கிராகாரம்	விராகனிடை	1
கோரோஜனை	"	½	பளிங்குசாம்பிராணி	"	1
ரூமஸ்தகி	"	5	சிறுநாகப்பூ	"	1
ஜாதிக்கா	"	2	பழயவெல்லம்	"	1
கருஞ்சீரகம்	"	2			

இவை யாவும் கல்வத்திலிட்டு தேன் நிதான்மாய் விட்டு மெழுகுபதமாய் அரைத்து கிளாசு அல்லது டப்பியில் வைத்துக்கொள்ளவும் மாலை (6) மணிக்கு எலந்தங்காய்ப் பிரமாணம் சாப்பிடவும் பசும்பால் உபயோகப்படுத்திவந்தால் மிக நன்று (10-15) நாள் முறையாக சாப்பிட்டுவரவும் சாப்பிடுகிற வரையில் அரைபுளி கூட்டுவது நலமாகும் ஸ்ரீபோகத்திலும் மிகுந்த சுகத்தைக்கொடுக்கும் நாதம் கெட்டிப்படும்.

வொற்றை விரைவாத மெழுகு

மிளகு	பலம்	1
பூரம்	களஞ்சி	1
லிங்கம்	விராகனிடை	1

இவையாவுந் தேன்விட்டு ஒருஜாமம் அரைத்து மெழுகு பதத்தில் யெடுத்து வைத்துக்கொள்ளவும் தூதளங்காய்ப் பிரமாணம் காலைமாலை யிருவேளையுங் கொடுக்கவும் வாய்வு பதார்த்தங்கள் தள்ளுவதுடன் இச்சாபத்திய மிருக்கவும்.

தோஷாமிர்த மெழுகு

லிங்கம்	விராகனிடை	2½
பூரம்	"	2½
ஓமம்	பலம்	1

இம்மூன்றும் கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு (3) ஜாமம் அரைத்து பிறகு தேன் அரைபலம் கொண்டுவந்து துளி துளியாய்விட்டு ஒருஜாமமரைத்து கோப்பையில் வைத்துக் கொள்ளவும் குண்டுமணிப்பிரமாணம் யெடுத்து தேனிலாவது இஞ்சி ரசத்திலாவது கொடுக்கவும் ஜன்னி சுரதோஷம் தீரும் இச்சாபத்தியம் மாலையில் மிளகு சுக்கு கியாழம்கொடுக்கவும்.

வீரமெழுகு

வீரம் ஒருபலம் கொண்டுவந்து மெல்லிய சீலையில் முடிந்து யேடுபத்தாதயிளநீர் (4) கொண்டுவந்து உடைத்து பழங்கலையத்தில் வூத்தி அடுப்பேற்றி அதில் மேற்படி வீரத்தைவிட்டு தொலாந்திரமாகக்கட்டி யெரிக்கவும் இரண்டுநாழிகை எரிந்தானபிறகு கலையத்தை யெடுத்துவிட்டு தொலாந்திரம் கட்டியிருக்கும் வீரமுட்டையை அடுப்புக்குநேராய் தொங்கவிட்டு அடுப்பின் நெருப்பை நன்றாய்க்கிளறி கனகனப்புக் காட்டவும் அந்தநெருப்பு குளிர்ந்தவுடனே முடியையவிழ்த்து மருந்தை பதனம்பண்ணி வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) மிளகு பிரமாணம் யெடுத்து தேன் முலைப்பால் அல்லது இஞ்சிரசத்திலாவது கொடுக்கவும் ஜன்னி சுரதோஷம் யாவுந்தீரும், இச்சாபத்தியம் மாலையில் மிளகுகியாழங் கொடுக்கவும்.

வேறு வித வீரமெழுகு

வீரம், பூரம், லிங்கம், சுத்திசெய்தவாளம், சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கி ஒரு விராகனிடை யெடுத்துக் கல்வத்திலிட்டு தேன்விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) பேதிக்கு பட்டாணிப்பிரமாணம் சக்கரையில் அல்லது வாழைப்பழத்தில் கொடுக்கவும். பேதியதிகமானால் மோர்சாதங் கொடுக்கவும். தேனில் இஞ்சிரசத்தில் மிளகு பிரமாணம் கொடுக்க சகலவாய்வுந்தீரும் வாதத்தைக்கேழ்க்கப்பட்ட கியாழங்களிலும் கொடுக்கலாம், அந்தியில் சுக்கு மிளகு கியாழங் கொடுக்க வேண்டியது.

மெழுகு வகைபரணி
முற்றுப்பெற்றது.

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பகிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையெனக் கவலைப்பட வேண்டாம் இதற்கு முதற்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலமும் அதிற்றெரிந்துக்கொள்ளலாம்.

உ

தேவிசகாயம்

ஐந்தாவது

பற்பவகை பரணி

கற்பூர சிலாசத்துபற்பம்

சிலாசத்து பலம்-1, பொட்டிலுப்பு பலம்-1, பொரிகாரம் பலம்-2, இவைகளை சுண்ணாம்பு தெளிவுநீரில் அரைத்து (4) பில்லைசெய்து அடுப்புத்தட்டில் காயவைத்து (4) நாளானபிறகுயெடுத்து நாலுபில்லைக்கும் வெவ்வேறாக சீலைமண்செய்து உலர்த்தி (60) வரட்டியில் நாலு பில்லையும் வைத்து புடம்போட பற்பமாம் அதையெடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் வெண்ணெயிலாவது சீரகக் கியாழத்திலாவது கொடுக்க நீர் உடையும் குளுத்தியான பதார்த்தம்சேர்க்கவும் இச்சாபத்தியம்.

இன்னொருவித சிலாசத்து பற்பம்

சிலாசத்து பலம்-1, பொரிகாரம் பலம்-1, இவைகளைப் பொரித்துக்கொண்டு பழச்சாற்றாலாட்டி பில்லைதட்டி காயவைத்து பத்து வரட்டியில் புடமிட்டெடுக்கவும் நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க்கடுப்பு, நீர்யெரிப்பு, பிரமோகம், வெட்டை இவைதீரும், வெண்ணெயில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இன்னொருவித
சிலாசத்து பற்பம்

சிலாசத்து பலம் (1)க்கு நாயுருவிக்கொழுந் தரைத்துக் கவசம்செய்து சுண்ணாம்பு சீலைசெய்து (20) வரட்டியில் புடம்போட பற்பமாகும் சூடுதணியும் யித்துடன் கல்னார்பற்பமும் கலந்துக்கொடுக்கவும்.

கல்னார்பற்பம்

கல்னார் பலம்-1, மேனிச்சார்விட்டரைத்து பில்லைதட்டிக் காயவைத்து மூணு சீலைசெய்து அகலில்வைத்து மேல் அகல்மூடி சீலைசெய்து (54) வரட்டியில் புடமிட பற்பமாகும்.

சிங்கிபற்பம்

சிங்கியென்னும் கலைமான் கொம்பைக் கீத்துகீத்தா யுடைத்து வாழைமரத்தடியின் பெருங்கட்டையில் சொருகிவைத்து (6) நாள் சென்றெடுத்து துத்தியிலையை யிடித்து கனக்கக் கவசமிட்டு (5) சீலைசெய்து (5) வரட்டியில் புடம்போட பற்பமாகும்.

சீனகார பற்பம்

சீனகாரமென்னும் படிகாரம் பலம் (1) வசலை யிலையில் ஐந்துயிலை யெண்ணிவைத்து அரைத்து பில்லைதட்டிக்காயவைத்து (5) சீலைசெய்து (30) வரட்டியில் புடமிட பற்பமாம்.

இங்ஙனங்கூறிய (4) வித
பற்ப உபயோக விதி

கல்னார், சிலாசத்து, சிங்கு, படிகாரம், நாலுவிதபற்பமும் சரியிடையாய்க்கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு வெண்ணையில். ஒரு விராகனிடை வைத்து சாப்பிடவும் இப்படி (5-7-10) நாள்கொள்ள மேகம் உஷ்ணம் காங்கை தீரும் வெள்ளைக்கு கற்கண்டுப்பொடி (3) சிட்டிக்கையில் (2) விராகனிடைவைத்து சாப்பிடவும் புளி புகை போகம்தள்ளவும். இச்சாபத்தியம்.

தாளக பற்பம்

ஒருபலம் தாளகத்தைப் பொடியாயிடித்து ஒரு கலையத்திலிட்டு எருக்கன்பால் தளரவிட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்தெடுத்து மேலோடுமூடி சீலைமண் செய்து (20) வரட்டியில் புடம்போடவும் பற்பமாகும் தேனில் அரிசியிடை கொடுக்க காச்சல் யிருமல்தீரும், அயப்பொடியும் யிப்படியே செய்துக்கொள்ளவும்.

பவள பற்பம்

கெட்டிப்பவழம் ஒரு பலம் வாங்கி மூசையில்போட்டு அதன்மேல் வெள்ளை பாஷாணம் அரைபலம் பொடித்து பவழத்தின்மேல் போட்டு செப்புத்தகடுதட்டி மேல்வாய்மூடி சீலைமண் (3) செய்து (15) வரட்டியில் புடம்போடவும் ஆறினபிறகெடுத்து வெள்ளெருக்கன் பால்விட்டரைத்து பில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலைமண்செய்து (10) வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்தில்

பொடித்து வைத்துக்கொண்டு ஸ்ரீகள் பிரசவித்தபோது காணுகிற அசாத்தியமான ஜன்னிக்கு அரிசியிடை தேனில் கொடுக்கவும் நீங்கும் இது சர்வஜன்னிக்குமாகும் இச்சாபத்தியம்.

சிங்கி பற்பம்

கலைமான் கொம்பைப்பிளந்து மேனியிலையை யரைத்து மேலுக்குத் தளமாய் அப்பி முழுப்புடத்திலிட்டு வாங்கி பிறகு ஆவின்பால்விட்டரைத்து பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி திரும்பவும் முழுப்புடம்போட்டு வாங்க பவளம்போல வெண்மையாயிருக்கும் ஆவின்நெய்யில் யிரண்டு பணவிடைகொள்ள மேகம் உஷ்ணம் காந்தல் நீர்சொரிப்பு நீங்கும் இச்சாபத்தியம்.

லிங்கபற்பம்

லிங்கம் (1) பலமெடுத்து கடலுப்பு ஆழாக்குகொண்டுவந்து கருந்துளசிச் சார்விட்டரைத்து மேற்படி லிங்கத்திற்கு கவசம் செய்து சீலைசுத்தி காயவைத்து (10) வரட்டியில் புடம்போட்டெடுக்கவும் பற்பமாம் ஜன்னிதோஷங்களுக்கும் குளிர் சரங்களுக்கும் கொடுக்கவும் (அனுபானம்) இஞ்சிகரசம் தேன் சற்சரை யிதுகளாகும்.

வெள்ளீய பற்பம்

வெள்ளீயம் ஒரு பலங் கொண்டுவந்து இலைபோல் தகடுதட்டி நூலைப்போல் சன்னப்பொடிகளாகக் கத்தரித்து வைத்துக்கொண்டு புதிய சடைக்கஞ்சா ஒருபலங் கொண்டுவந்து நெகிழ அரைத்து ஒருவட்டமான ஓட்டுபில்லையில் பாதிவைத்து அதன்மேல் கத்தரித்தபொடிகளைப் பரப்பி மேலே அரைத்த பில்லையை வைத்து மேலோடுமூடி சீலைமண் (3) செய்து (30) வரட்டியில் புடமிட்டெடுக்கவும் பற்பமாகும் மேகங்களுக்கு வெண்ணெய் நெய்யில் பிரயோகப் படுத்தலாம் இச்சாபத்தியம்.

பற்பவகை பரணி

முற்றிற்று

இன்னும் அனேகமாயுள்ள மாத்திரை வகைகளையும் பாஷாணம் முதலாயுள்ள சரக்குவகை சுத்திகளையும் முதற்பாகத்தில் அச்சிட்டு விற்பனைசெய்து வருவதால் இந்த இரண்டாம்பாகத்தின் அவுழ்தங்களின் சரக்கு சுத்திகள் யாவும் முதற்பாகத்தில் விளங்கும்.

ஆறாவது

சூரணவகை பரணி

கழிச்சலுக்கு
கபாட சூரணம்

தயிரில் வூறப்போட்டு உலர்த்திய சுண்டக்காய் வற்றல் கருவேப்பிலை ஓமம் பழகிய மாங்காய்பருப்பு அடைதட்டி யுலர்ந்த நெல்லிக்காயூருகாய் மாதளம்பழத்தோல் வெந்தியம் இவைவகைக்கி கால்பலம், ஜாதிக்காய் ஒன்று, எட்டுதினுசுகளும் கல்லுரலிலிட்டு யிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு வடிகட்டி நீர்போக்கிய எருமைத்தயிர் அரையாழாக்கில் மேற்படி சூரணம் கால்பலம்போட்டு சாப்பிடவும் இப்படி யிருவேளையும் மூன்றுநாள்சாப்பிட வயிரிரைச்சல் அதிசாரம் மூலக்கிராணிகழிச்சல் பவனவாயெரிச்சல் இவைதீரும் காரம் மட்டாகக் கூட்டி போஜனஞ்செய்யவும் கழிச்சலுக்குத்தகுந்த பிரயோக மென்றறிக.

குன்மம் (6)க்கும்
உப்பு சூரணம்

உப்பு படி-1, யெருமைமோர் படி-1, வரிக்குமட்டிச்சார் படி-1, இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, வகைக்குப் பலம் அரிக்கால் இவையாவும் ஒன்றாகப்போட்டு அடுப்பிலேற்றி யெரித்துக்கொண்டிருப்பதுடன் பூவரசங்குச்சியினால் கிளரவும் சற்கரைப்போலாகும் சமயத்தில் யிறக்கி வைத்துக் கொள்ளவும் ஒரு விராகனிடை உப்பு வாயில் போட்டுக் கொண்டு நீராகாரம் சாப்பிடவும் வாய்வு, சோகை, காமாலை, எரிவு கவிசை கிரிச்சினம்கெண்டை இவைதீரும் இச்சாபத்தியம் குன்மமாருக்கும் ஓர்வித தகுந்த பிரயோக மிதுவாகும்.

இஞ்சி சூரணம்

மேல்பரணிசீவிய இஞ்சி பத்துபலம் நிறுத்தெடுத்து பில்லைபில்லையா யறுத்தெடுத்து நெய்யில் வறுத்து பொடிசெய்து

வைத்துக்கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், கிராம்பு, ஓமம், சீரகம், வாலுழுவை, ஜாதிக்கா, திப்பிலிமூலம், அதிமதுரம், குராசானிஓமம், அமுக்குரா, கசகசா, லவுங்கப்பத்திரி, கொத்தமல்லி, பேரீச்சு, முந்திரிகை, வகைக்குக் கால்பலம் இளம் வறுப்பாக வறுத்து சூரணம்செய்து சீனிபலம் பத்து - பொடித்து யாவும் ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கி கால்பம் வீதமாக காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர உஷ்ணம் பித்தவாய்வுதீரும் பசிதீபனம் உண்டாம் அன்றாட மலம் பரிசுத்தமாய்கழியும்.

கருங்கோழி சூரணம்

முத்தின கருப்புச்சாவல் கொண்டுவந்து மயிர்களைப்போக்கி கால்தலை அறுத்தெரிந்துவிட்டு முதுகைக்கீரி வயற்றிலுள்ள குடல்முதலான அசுத்தங்களை நீக்கி வைத்துக்கொண்டு,

இந்துப்பு	கருஞ்சீரகம்
கல்லுப்பு	வெள்ளுள்ளி
வளையலுப்பு	சீரகம்
சவுட்டுப்பு	வாய்விளங்கம்
கரியுப்பு	ஜாதிக்காய்
கிராம்பு	லவுங்கப்பத்திரி
சிறுநாகப்பூ	ஏலம்
பெருங்காயம்	தாளிசப்பத்திரி
சுக்கு	ஓமம்
மிளகு	நவாச்சாரம்
திப்பிலி	சத்திசாரம்

இவைகள் வகைக்கி (1¼) விராகனிடை வாங்கி இடித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு பிரண்டைச்சார், சித்திரைமூலச்சார், வேலிப்பருத்திச்சார், பேய்த்தும்மட்டிச்சார், நால்வகைச்சாற்றினாலும் (4) நாழிகை அரைத்து குக்குடத்தில் வயற்றிலடைத்து நூலினால் தைத்துவிடவும் பெருஞ்சட்டியாக இரண்டு கொண்டுவந்து இரண்டிற்கும் உட்புறத்தில் மேற்படி சாற்றை தளமாய்ப்பூசி ஒருசட்டியில் குக்குடத்தை வைத்து கரிச்சாலைச்சாறு (4) படி, மேனிச்சாறு (4) படி, பசுங்கோமியம் (4) படி, ஆக (12) படியும் ஊத்தி மேல்சட்டி மூடி வாய் தெரியாமல் மண்சீலைசெய்து ஒருஜாதி விறகால் யெரிக்கவும் சாரெல்லாம் வற்றுமளவும் எரித்து இறக்கிக் கொண்டு எலும்பெல்லாம் போக்கி மற்றயாவற்றும் சூரணமாக வரைத்து

சீசாவில்வைத்துக் கொள்ளவும் வேளை வொன்றுக்கு திருகடிப்பிரமாணம் யிருவேளையும் சாப்பிடவும் வியாதிக்கிசைந்தவாறு (10-20-40) நாள் சாப்பிடவும் அஷ்டகுன்மம், சோகை, மகோதரம், பாண்டு, நீர்க்கோவை, வெப்பு, காச்சலினால்வரும் கெண்டைக்கட்டி, வாய்வு, வாதம் இவைகள் தீரும், மீன் மரக்கறிகள் ஆகாது தயிர், மோர், நெய், வெள்ளாட்டுக்கறி வத்தல், இதுகள் ஆகும்.

வெள்ளாட்டு ஒதப்பைசூரணம்

வெள்ளாட்டு ஒதப்பையென்பது ஆட்டினது தீனிக்குடல் யென்பர் அதைக்கொண்டுவந்து ஜெலத்தினால் அலம்பி சுத்தி செய்துபிழிந்து காயவைத்து யிடித்து சூரணமாக்கி (2) பலம் நிறுத்தெடுத்துக்கொண்டு,

* குங்குமப்பூ	சித்தரத்தை
* கோரோஜனம்	கருஞ்சீரகம்
* கற்கண்டு	கோஷ்டம்
* மனோசிலை	நெற்பொரி
சீரகம்	ஆடாதோடைவேர்
கிராம்பு	திப்பிலிமூலம்

இவைகள் வகைக்கி (1¼) விராகனிடையாக வாங்கி *இந்த அடையாளம் வைத்த நாலு தினுசும் நீங்க மற்றதை இளம்வறுப்பாகவறுத்து யாவும் ஒன்றிட்டு யிடித்து சூரணம் செய்து முன்செய்த சூரணத்துடன் கலந்து வெள்ளாட்டுப்பாலில்பிசரி உலர்த்திவைத்துக்கொள்ளவும், பசும்நெய்யில் திரிகடிப்பிரமாணம் வைத்து சாப்பிடவும் இப்படி இருவேளை அரைமண்டலம் கொள்ளவும்.

சேத்துமம் தொண்ணூற்றியாறு, காசம் எண்பது, யீளை இருமல், வாதம், பித்தம், பித்தவாய்வு, வரட்சி, உப்பிசம், வாந்தி, யிறைப்பு, சகலமுந்தீரும் வெள்ளாட்டுக்கறிவத்தல் நெய்பால் ஆகும் தயிர், மோர், புளிப்பு, கைப்பு, புகை, போகம், லாகிரி, ஆகாது.

ஸ்ரீ தந்தசூரணம்

அன்னபேதி	விராகனிடை	3
அண்டவாளப்பொடி	"	௨

படிகாரம்	விராகானிடை	3
மாசிக்காய்	"	3
துருசு	"	3
வெள்ளைக்காசுகட்டி	"	3
குராசானிஓமம்	"	3
வசம்பு	"	3
கொட்டைப்பாக்கு	"	4
ரசபற்பம்	"	3
வேப்பம்வேர்பட்டை	"	4
அமுக்குராவேர்	"	3

இவைகளைக் கல்லுரலிலிட்டு யிடித்து தூள்செய்து வஸ்திரகாயமிட்டு டப்பியில் வைத்துக்கொள்ளவும் இரவில் போஜனம்செய்வதற்கு முன்னர் இந்த சூரணத்தில் ஒரு சிட்டிகை யெடுத்து சுத்திசெய்துக்கொண்டபிறகு அன்னம் பொசித் துறங்கவும் இப்படி சதாகாலம் இரவில் துலக்கிவருவதினால் பெண்களுக்கு பற்களிருகுவதுமன்றி மாதவிடாயென்னும் ரகசியஸ்தானம் குறுகலாகும் அதனால் தேககாந்தியும் முகவசீகரமும் பெண்களுக்கு வலிவுமுண்டாகும் இப்படி புருஷருக்கன்று

நாபிரெணத்திற்கு
குங்கிலியச்சூரணம்

வெள்ளைகுங்கிலியம் ஒருபலம் கொண்டுவந்து (5) யிளநீர் உடைத்து சட்டியில் ஊற்றி குங்கிலியக் கட்டியை அதில்போட்டு அடுப்பேற்றி நீர் சுண்டுகிறவரையில் எரித்து பிறகு குங்கிலியத்தை கல்வத்திலிட்டுப்பொடித்து சூரணமாக்கி புட்டியில் வைத்துக்கொள்ளவும் இரண்டு அரிசியிடை சூரணத்தை வெண்ணெய் அல்லது நெய்யில் குழைத்துக் கொடுக்கவும் நாபிரெணம் உலர்ந்து சூடுதணியும்.

திரிகடுகு சூரணம்

சுக்கு, திப்பிலி, மிளகு, சரியிடை தூக்கி உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து சீசாவில் வைத்துக்கொண்டு வேண்டிய போது காலணாயிடை சூரணத்தை பனைவெல்லம்கூட்டி பிசைந்து சாப்பிடவும் (8,10,15) நாள் கொள்ள வாய்வுகள் மாந்தக்கழிச்சல் முதலிய வியாதிகள் தீரும் மற்ற மேகாதி பற்பங்களுக்கும் இது அனுபானமென்றறிக.

சூரணவகை பரணி
முற்றிற்று

இவ்வளவு வெள்ளிய நடையாய் அச்சிட்டு பகிரங்கப் படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையெனக் கவலைப்படவேண்டாம் இதற்கு முதற்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலமும் அதிற்றெரிந்து கொள்ளலாம்.

உ

தேவிசகாயம்

ஏழாவது
எண்ணெய் வகை பரணி

பிள்ளைகள் கணத்திற்கும் பெரியவர்கள் மேகத்திற்கும் எண்ணெய்

அவுரிச்சார்	படி	¼
குப்பைமேனிச்சார்	படி	"
சித்தாமணக்கெண்ணெய்	படி	"

இம்மூன்றும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கருப்புவெத்திலைச்சார் (2) ரூபாயிடைவிட்டு ஒருநாழிகை யெரித்து வசம்பு யிடித்து வஸ்திரகாயம் செய்து சித்தாமணக் கெண்ணைவிட்டரைத்து விழுது (½) ரூபாயிடை அத்துடன் போட்டு கலக்கி மெழுகுபதமாகுமட்டும் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு நாள்ஒன்றுக்கு கரண்டிவீதம் (5) அல்லது (7) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம் வயற்றிலுள்ள கசடெல்லாம் போகும்.

ஸ்ரீபோக மேகத்தால் வந்த வெள்ளைக்கு எண்ணெய்

பரங்கிச்செக்கை	பலம்	3
பீச்செங்கன்வேர்	"	2
பூமிசக்கரைக்கிழங்கு	"	1
நரிமிரட்டிவேர்	"	1
மிளகரணைவேர்	"	1
சுக்கு	பலம்	1
தானிக்காய்	"	1
கருஞ்சீரகம்	"	1
முதல்தரசந்தனம்	"	1
ஆடுதின்னாப்பாளை	"	½
மாவிலிங்கம்பட்டை	"	½

இவைகளை யுலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்து (10) பலம் சித்தாமணக்கெண்ணையில் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்க் காய்ச்சி யிறக்கும்போது பூரம் (2½) விராகனிடை யெடுத்து மேற்படி எண்ணைவிட்டரைத்து கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்கி கரண்டிவீதம் (3) அல்லது (5-7) நாள் சாப்பிடவும், கொள்ளு, எள்ளு, பூசினி, அவுத்தி, மீன், கருவாடு, லாகிரி, புகை போகம் இவையாகாது மறுபத்தியமும் இவ்வாறிருந்து ஓமம்தேய்த்துத் தலைமுழுகவும்.

கொறுக்குவெள்ளைக்கு எண்ணெய்

பூரம்	விராகனிடை	1
ஓமம்	"	1
ஏலம்	"	1
லவுங்கம்	"	8

இவை நான்கும் செம்பருத்திச்சார்விட்டு (4) ஜாமமரைத்து (5) பலம் விளக்கெண்ணையில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து மறுநாள் முதல் காலையில் கரண்டிவீதம் (5) அல்லது (7) நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் மறுபத்தியம் அவ்வாறே யிருக்கவும் தீரும்.

பொக்குமேகத்திற்கு எண்ணெய்

அகத்திச்சார், வெங்காயச்சார், மணத்தக்காளிச் சார், வகைக்கிபலம்-½, உத்தாமணிச்சார் உழக்கு, விளக்கெண்ணெய் படி (½) இவை யாவும் ஒன்றாய்க் கலந்து பூரம் (2½) விராகனிடையெடுத்து மேற்படி யெண்ணெய்விட்டு அரைத்து அத்துடன் கலக்கி சூரியபுடம் மூன்றுநாள் வைத்தெடுத்து காலையில் கரண்டி வீதம் (5-7) நாள் சாப்பிடவும் கடும்பத்தியமிருக்கவும் மாலையில் திரிகடுகுகியாழம் கொடுக்கவும்.

கைகால்பிடிப்புக்கு யெண்ணெய்

விளக்கெண்ணெய்	பலம்	10
சுத்திசெய்தவாளம்	விராகனிடை	4
ஏலம்	"	2
சுக்கு	"	2
பூரம்	"	2
புங்கம்பால்	பலம்	1

இம்மருந்துகள் நாலுவகையும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய்விட்டரைத்து மேற்படி யெண்ணெயில் கலக்கி மூன்றுநாள் சூரியபுடம்வைத்தெடுத்து காலையில் கரண்டிவீதம் (5-7) நாள் சாப்பிடவும் சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும்.

விரைவாத யெண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	படி	½
குப்பைமேனிச்சார்	"	அரிக்கால்
முடக்கொத்தான்சார்	"	அரிக்கால்
வெள்ளைக்காக்கட்டான்சார்	"	அரிக்கால்
கெச்சக்காய்வேர்	பலம்	½
வெள்ளைப்பூண்டு	பலம்	¼
கருஞ்சீரகம்	"	"
வசம்பு	"	"

கடைசரக்கு யாவும்யிடித்து யெண்ணெய்விட்டரைத்து மேற்படி யெண்ணெயுடன் கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காய்ச்சிவடித்து (5) அல்லது (7) நாள் சாப்பிடவும் வாய்வு பண்டங்கள் ஆகாது இச்சாபத்தியமிருக்கவும்.

குளித்தியெண்ணெய்

மணத்தக்காளிரசம் படி-¼, கத்தாழைமடல் சோறு பலம்-5, பறங்கிச்செக்கை பலம் மூனுவீசம், கண்ணால முருக்கன் பட்டைரசம்-ஆழாக்கு, வெள்ளை வெங்காயரசம் பலம்-2½, சித்தாமணக் கெண்ணெய்படி-¼ பேயன் வாழைப்பழம்-2, வெந்தியம் விராகனிடை-1, பனவெட்டு விராகனிடை 2½, கற்கண்டு விராகனிடை-2½, இவையாவும் ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றி யிளம்பதமாய்க்காய்ச்சி யிறக்கி காலையில் கரண்டிவீதம் ஏழுநாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்

சகலரெணத்திற்கும் யெண்ணெய்

கொடிக்கள்ளிச்சார்	படி	அரிக்கால்
சித்திரமூலவேர்	பலம்	1
எருக்கன்வேர்	"	1
கொடிக்கள்ளிவேர்	"	1
அமுக்கனாங்கிழங்கு	"	1
ரசம்	களஞ்சி	1
ரசச்செந்தூரம்	"	1
கெந்தகம்	"	1

வேர்வகையாவும் யிடித்து சூரணித்து மற்ற சரக்குயாவும் கல்வத்தில் இடித்து விளக்கெண்ணெய் வார்த்து (2) ஜாமம் அரைத்து ஒருபடி விளக்கெண்ணெயில் போட்டுக் கலக்கி மேற்படி கள்ளிச்சாறும்விட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து காலையில் உச்சிக்கரண்டிவீதம் (5) அல்லது (7) நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் அரைபுளி அரைகாரம் சேர்க்கவும் சுட்டபுளி வறுத்த உப்பு சேர்ப்பதே உத்தமம்.

வெள்ளெண்ணெய்

சுக்கு	விராகனிடை	2½	வாளம்	விராகனிடை	2
ஏலரிசி	"	2½	பூரம்	"	2

இவைகளை கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து (10) பலம் விளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்தெடுத்துக்கொள்ளவும் குழந்தைகள் கால்சிரங்கு தலைச்சிரங்கு மாந்தம் கணம் பொருமல் வாய்வுகள் யாவும் தீரும் காலையில் கரண்டிவீதம் (3) நாள் (7) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

ஒட்டுப்புண் கண்டமாலை மேகவாய்வு
பக்கசூலை இதுகட்கு

இரசகற்பூர யெண்ணெய்

பூரம்	விராகனிடை	1¼
லவுங்கம்	"	1
மிளகு	"	1
பரங்கிச்செக்கை	"	1

இவைகளை உலர்த்தி யிடித்து கல்வத்திலிட்டு பரித்தியிலைச்சார்விட்டு ஒருஜாமம் அரைத்து (10) பலம் விளக்கெண்ணெயில் கலக்கி அத்துடன் பரித்தியிலைச்சாறும் அரையாழாக்கு விட்டு நன்றாய்க்கலைக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து யெடுத்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டிவீதம் (5) நாள் அல்லது (7) நாள் சாப்பிடவும் கடும்பத்தியமிருக்கவும்.

மாந்த யெண்ணெய்

சுக்கு	கோஷ்டம்
திப்பிலி	ஜாதிக்காய்

மிளகு	லவுங்கம்
ஓமம்	ஜாபத்திரி
சீரகம்	அரத்தை
கருஞ்சீரகம்	சித்தரத்தை
அக்கிராகாரம்	சம்பங்கிமொக்கு
குராசனியோமம்	சுருள்பட்டை
அதிமதுரம்	காட்டுசீரகம்

இவைகள் வகைக்கி விராகனிடை-4, கடுகுரோகணி பலம்-½, மயிர் மாணிக்கம் வேரின் பட்டை பலம்-½, இவைகள்யாவும் வெய்யலில் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து முக்காற்படி விளக்கெண்ணெயில்போட்டுக் கலக்கி வைத்துக்கொண்டு பூரம் விராகனிடை-5, விளக்கெண்ணெய்விட்டு ஒருஜாமம் அரைத்து மேற்படி எண்ணெயில் நன்றாய்க் கலக்கி சூரியபுடம் ஒருநாள் வைத்தெடுத்து காலையில் உச்சிக்கரண்டி வீதம் (5-7-10) நாள் சாப்பிடவும் மாந்தம், உட்காச்சல், கணம், மேகத்தால்வந்த வியாதிகள், வாய்ரிணம், அட்சரம், அஜீர்ணம், இவைகள் தீரும், மீன், கருவாடு, மாமிசம், யிறைச்சியாகாது இச்சாபத்தியம்

அச்சரத்திற்கு யெண்ணெய்

வசம்பு	புளிக்கருணைக்கிழங்கு
வெங்காயம்	வெள்ளருகு
கருஞ்சீரகம்	நஞ்சறுப்பான்வேர்
பெருங்கிழங்கு	கடுகுரோகணி
நிலைப்பனங்கிழங்கு	தும்பராஷ்டம்
காட்டுக்கருணைக்கிழங்கு	

இவைகள் வகைக்கி பலம்-1, ஆத்து தும்மட்டிக்காய்-2, சவுரிக்கிழங்கு பலம்-1, இந்த தினுசுகள் யாவும் பஞ்சுபோலிடித்து ஒருபடி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டி யளவு வார்க்கவும் (4-5) விசைபேதியாகும் அதிகமாய்பேதியானால் ஓமம் கொண்டுவந்து வென்னீரில் அரைத்து அந்தபால் பிழிந்து 1-அல்லது-2, பாலடைவார்க்கவும் எண்ணெய் (3) நாள்கொடுக்கவும் சுட்டபுளி வறுத்தவுப்பு கூட்டவும் சிறுபிள்ளையானால் தாய் பத்தியம் இருக்கவேண்டியது.

கரப்பானுக்கு யெண்ணெய்

வசம்பு	மிளகருணை
கருஞ்சீரகம்	சங்கங்குப்பியிலை
கார்போகரிசி	செங்கத்தாரியிலை
நீரடிமுத்து	கடுகுரோகணி
வெங்காயம்	செம்புறாப்பட்டை
சங்கம்பட்டை	

இவை வகைக்கி பலம் (1) எண்ணெய்படி (1) இந்தமருந்தெல்லாம் பஞ்சுபோல் யிடித்து எண்ணெயில்போட்டு கடுகுதிரளக்காய்ச்சி வடித்து சிறுகரண்டிவீதம் (3-5) நாள் கொடுக்கவும் அடியிலுள்ள கடுகையெடுத்து கெந்தகம் சேர்த்தரைத்து கரப்பான் ரிணத்தின்பேரில் பூசவும்.

எண்ணெய்வகைபரணி
முற்றுப்பெற்றது.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 1,2,3,4,5,6,7,8, பாகங்கள் வரையில் உண்டு, ஒவ்வொருபாகங்களில் அநேக அற்புதமுறைகளும், கடைசி 8-ம் பாக முழுமையும் ஒவ்வொரு மருந்துகள் சுத்திசெய்யும் பாகமும் இன்னயின்னநோயைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிக்கிறது.

உ
தேவிசகாயம்

எட்டாவது
தைலவகை பரணி

அண்டத்தைலம்

கோழிமுட்டை (10) கொண்டுவந்து அவித்து மஞ்சள் கருவையெடுத்து எண்ணெய் பழகிய சட்டியில்போட்டு அடுப்பில் வைத்து யெரித்தால் தைலமிறங்கும் யெரிக்கும்போது கிளரிக்கொண்டிருக்க வேண்டியது அத்தைலத்தை ஒரு கோப்பையில் யிருத்துக்கொண்டு பிறகு இரண்டுபலம் பூண்டு கொண்டுவந்து மேற்றோல் உரித்து கல்வத்தில்போட்டு அரைத்து கொஞ்சம் உமிபோட்டுப் பிசறி பிழிந்தால் தைலம்யிறங்கும் கஸ்தூரிவிராகனிடை (¼) குங்குமப்பூ விராகனிடை (½) கோரோஜனை விராகனிடை (½) இம்மூன்றும் பூண்டு தைலத்தில் குழைத்து மேற்படி அண்டத்தைலம் ஒன்றாய்க்கலந்து குலுக்கி சீசாவில் வைத்துக்கொண்டு பெரிய துட்டிடை நாக்கில் தடவவும் சகலதோஷமும் தீரும் நாவறட்சி வாய்வு முதலானதும் தீரும் இப்படி (3-5) அல்லது (7) நாள் கொடுக்கவும் கடும்பத்தியம்.

தலைவலிக்கு தைலம்

இஞ்சிச்சாறு	படி	அரிக்கால்
கருஞ்செம்பைச்சாறு	"	"
கஸ்தூரி மஞ்சள்	பலம்	1
மிளகு	"	10

இரண்டுவகையும் யிடித்து சூரணித்து (1/8) படி நல்லெண்ணெயில்போட்டு இருவகைச்சாறும் ஊத்தி அடுப்பேற்றி கடுகுபதத்தில் காய்ச்சி யிறக்கி (4) நாள் வட்டமாக (4) ஸ்நானம்செய்யவும் தீரும்.

கண்சாலேசுரத்திற்கு சந்தனாதித் தைலம்

சந்தன அத்தர்	பலம்	¼
கஸ்தூரி	"	அரிக்கால்
ஓமப்பூ	"	"
வலாரிவேர்	"	"
அவுரிவேர்	"	"
மாவிலிங்கம்வேர்	"	"
பொன்னாங்கண்ணிவேர்	"	"
ஓரெலைத்தாமரைவேர்	"	"
செப்பு நெரிஞ்சிவேர்	"	"
அமுக்கனாங்கிழங்கு	"	"
கஸ்தூரி மஞ்சள்	"	"

இவைகளில் கஸ்தூரியும் அத்தரும் தவிர மற்றதினுசுகளை வெய்யலில் உலர்த்தி யிடித்து சூரணம்செய்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டு கடுகுபதமாய்க் காய்ச்சி வடித்து (4) நாள் வட்டமாக நாலுஸ்நானம் செய்யவும் கண்சாலேசுரம் உடனே நீங்கிப்போகும்.

கழுத்திசுவுக்குத் தைலம்

ஒரு பேய்த்துமட்டிக்காயை சிறுபில்லைகளாக அறுத்து 5-பலம் நல்லெண்ணெயில் போட்டு துட்டிடை கிச்சிலிக் கிழங்கு துட்டிடை கஸ்தூரி மஞ்சள் ஒரு விராகனிடை கஸ்தூரி இவைகளைப் பொடித்து எண்ணெயில்போட்டு காய்சி தலைமுழுகிவரவும் கழுத்திசுப்பு நீங்கும்.

சர்வ ரிணத்திற்கும் சிங்கித் தைலம்

முதார்சிங்கி	படிகாரம்
கெந்தகம்	நீலம்
சூதகம்	பறங்கிச்செகை
நாவி	துத்தம்
வசம்பு	கடுக்கா

இவைகளை வகைக்கி பலம் (¼) யெடுத்து யிடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு புங்கம்பால் ஒதியம்பால் வகைக்கி ஆழாக்கு

தேங்காயைத்திரிகி உழக்குபால்பிழிந்து அந்தப்பாலைக்காய்ச்சி நெய்யெடுத்து அந்தநெய்யில் சரக்குத்தூளைசேர்த்து மேற்படி இருவகைப்பாலும் விட்டு வெங்காயச்சார் ஆழாக்கு விட்டு கடுகு திரளக்காய்ச்சி இறக்கி வைத்துக்கொண்டு அரையாப்பு ரிணம் ஆறாதபுண், புரைரிணம், குழிப்புண், இரத்தக்கசிவு, ரிணம், ஆறியாறி சினக்கும் ஆனைரிணம், சிங்கிரிணம், இதுகளுக்கெல்லாம் பூசவும் ஆறிவிடும்.

தைலவகைபரணி
முற்றுப்பெற்றது.

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பகிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையெனக் கவலைப்பட வேண்டாம் இதற்கு முதற்பாகம் வேறேயிருக் கின்றமையால் சகலமும் அதிற் றெரிந்துகொள்ளலாம்.

உ
தேவிசகாயம்

ஒன்பதாவது
லேகியவகை பரணி

பித்த யெரிவிற்கு லேகியம்

சுக்கு	சக்கரை
திப்பிலி	பறங்கிச்செக்கை
மிளகு	அமுக்கனாங்கிழங்கு
லவுங்கம்	நிலப்பனங்கிழங்கு
ஏலம்	தண்ணிவிட்டான்கிழங்கு
ஜாதிக்கா	விழலரிசி
ஜாபத்திரி	எலிமிச்சம்விரை
தாளிசப்பத்திரி	நெல்லிக்காய்
லவுங்கப்பட்டை	கடுக்காய்
சீமை அத்திப்பழம்	தாணிக்காய்
பேதானாம்	விளாம்பழம்
சாலாம்பிசினி	திராட்சைப்பழம்
சீரகம்	முந்திரிப்பழம்
கொத்தமல்லி	பேரீச்சம்பழம்
சோம்பு	

இவைகள் தினுசுக்குபலம் (1) இஞ்சிரசம்பலம் (10) பழரசம் பலம் (10) புளிப்புமாதளம் ரசம் பலம் (10) இளநீர் பலம் (10) நாட்டுச்சர்க்கரை (¾) வீசை தேன் பலம் (10) நெய்பலம் (10) பசும்பால் ஒருபடி மேற்கூறிய தினுசுகளில் பழவர்க்கம் தவிர மற்றவை யாவும் இளம்வறுப்பாகவறுத்துயிடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்துக் கொண்டு பழம், பால், நெய், ரசங்களின்வகை யாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி சர்க்கரையைக் கொட்டி பாகுபதமாய் வரப்பார்த்து முன்வஸ்திரகாயம் செய்ததூளைக் கொஞ்சங் கொஞ்சமாய் போட்டுக் கிளறிக்கொண்டு வருக மேற்படி முழுமையும் பூர்த்தியானபிறகு கைவிடாமல் சற்றுநேரம்கிண்டி அடிபிடிக்காமுன்னம் ஜாக்கிரதையாகப்பார்த்து இறக்கி வைத்துக்கொண்டு தேன்விட்டு கிளறி

கோப்பையில் வழித்து வைத்துக்கொண்டு வேளைக்கி கெச்சக்காய்ப்பிரமாணம் காலைமாலை யிருவேளையும் ஒருமண்டலம் சாப்பிடவும் இச்சாபத்தியம். புகை, சுருட்டு, கள்ளு, சாராயம், பெண்போகம், அன்னியபதார்த்ம், நல்லெண்ணெய், கடுகு, இதுகளாகாது, பித்தயெரிவு, குலையெரிவு, பித்தவாய்வு, மேகவாய்வு, மேககாரிகம் இவை தீரும்.

உஷ்ணத்திற்கு லேகியம்

சுக்குபலம்-½, அரிசித்திப்பிலி பலம்-1, திப்பிலியை ஒரு குடுவையில் போட்டு கொஞ்சம் உமியைப்போட்டு அது முழுகும்படி ஜெலம்விட்டு வேகவைத்து யிறக்கி திப்பிலியை எடுத்துக்கொண்டு சுக்கும் கூடச்சேர்த்து கல்வத்தில் இட்டு நெகிழ அரைத்து பில்லைதட்டி எண்ணெய் ஊறியசட்டி அடுப்பில்வைத்து (2½) பலம்நெய்விட்டு அதில் பில்லையைவைத்து (½) நாழிகையெரிக்கவும், பிறகுபெடுத்து கல்வத்தில் வைத்து அரைத்து பில்லைதட்டி மறுபடியும் நெய்யில் வேகவைக்கவும், இப்படி ஐந்துவிசை அரைத்து வேகவைத்தெடுக்க யிளகியிருக்கும் லேகியமாகப் பிசைந்து வைத்துக்கொண்டு சுண்டக்காய்ப்பிரமாணம் அந்திசந்தி சாப்பிடவும் இச்சாபத்தியம், கடுகுநல்லெண்ணெய் கூடாது உஷ்ணந்தீரும் தேகம் சிறக்கும்.

கரிச்சாலை லேகியம்

சீமை கரசலாங்கண்ணிச்சார்படி (2) நெரிஞ்சிச்சார் படி (2) சிறுகீரைச்சார் படி (1) கீழாநெல்லிச்சார் படி (1) இந்த சாறுகள் யாவும் பழைய பாண்டத்திலூத்தி வைத்துக்கொண்டு நாகப்பட்டை, கருங்காளிப்பட்டை, அத்திப்பட்டை, தென்னம்பாளை யுள்ளிருக்கும் அரிசி, மஞ்சள், இவைகள் வகைக்கு பலம் (2½) யெடுத்து யிடித்து யெட்டுபடி ஜெலத்தில் போட்டு அரைப்படி கியாழமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு முன்சாறுவகை யிருக்கும் பாண்டத்தில் ஊற்றிக்கலந்து வைத்துக்கொண்டு மிளகு, மிளகருணை, சித்தாமுட்டிவேர், பேறாமுட்டிவேர், எலுமிச்சம்வேர், ஆகவகைக்கி பலம் (3) இவைகளை கல்லுரலில் இட்டு பஞ்சுபோல் இடித்து எட்டுபடி ஜலத்தில் போட்டு அரைப்படி கியாழமாக இறக்கிவடித்து முன்பாண்டத்திலிருக்கும் மருந்துடன் ஊத்தி அடுப்பிலேத்தி கொதிக்கவைக்கவும் உடனே பனவெல்லம் பலம் (8) நெல்லவெல்லம் (8) பசும்பால் படி (4) இந்தபாலில் இரண்டுவகை வெல்லமும்போட்டு

கரைத்து முன் அடுப்பின்பேரில் இருக்கும் பாண்டத்தில் ஊத்தி கமலாக்கினியாக எரித்து கொதிக்கச்செய்யவும் எலுமிச்சங் கட்டையால் கிளறவேண்டியது அப்படி கிளறிக்கொண்டிருக்கையில் தானே,

சீரகம்	கடுக்காப்பூ
சுக்கு	கோஷ்டம்
ஏலம்	அக்கிராகாரம்
கிராம்பு	அதிமதுரம்
ஜாதிக்காய்	தாளிசப்பத்திரி
ஜாபத்திரி	மிளகு
ஓமம்	திப்பிலி
குரோசானியோமம்	திருபலாதி
சிறுநாகப்பூ	

ஆக வகைக்கி பலம் (1) இவைகளை கல்லுரலிலிட்டு யிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து பசும்நெய்வீசை (½) தேன்வீசை (½) மேற்படி சூரணத்துடன் * மண்டூர செந்தூரம் ஒரு பலம் சேர்த்துக் கொண்டு நெய்யை முன்பாக மருந்தில் ஊற்றி கிளறிக் கொண்டிருக்கும் போதே சூரணத்தை சிறுகத் தூவிக் கொண்டுவரவும் அப்படி சூரணம் பூர்த்தியான பிறகு (¼) மணிநேரம் கைவிடாமல் கிளறி யிறக்கி வைத்துக்கொண்டு உடனே தேன்விட்டு விரைநீக்கிய திராட்சப்பழம் (5) பலம் போட்டுக் கிண்டி கோப்பையில் வழித்து வைத்துக்கொள்ளவும் காலைமாலையுமாக வேளைக்கி புன்னைக்காயளவு ஒரு மண்டலம் சாப்பிடவும்.

இந்த கரிசாலை லேகியத்தால் தீரும் வியாதிகட்கு உறுதிமொழி விருத்தம்

ஆச்சப்பா பாண்டுவகை யெல்லாம்போகும்
அப்பனே பித்தவெட்டை கைகாலோச்சல்
காச்சப்பா காந்தலுடன் எரிவுபோகும்
கனமான வாந்தியொடு மயக்கம்தூக்கம்

---

* இந்த அனுபோக வயித்தியம் முதற்காண்டம் (39)வது பக்கத்தில் சொல்லியிருக்கும் கனமண்டூர செந்தூரம் சேர்த்துக் கொள்ளவும்.

ஓச்சப்பா வீக்கமொடு நீர்சுரப்பு
உத்தமனே கிராணியெல்லா மொழிந்துபோகும்
நீச்சப்பா வறோசயங்க ளெல்லாம்போகும்
நிசமாகத் தாயாணை நிகழ்த்துவாயே.

மேகம் 21-க்கும் லேகியம்

செகப்புநாயுருவிவேர்	உப்பிலாங்கொடிவேர்
செகப்புநெருஞ்சிவேர்	அவுரிவேர்
கையாந்தகரைவேர்	முடக்கொத்தான்வேர்
மாவிலிங்கம்வேர்	புங்கன்வேர்
மிளகருணைவேர்	கருவூமத்தன்வேர்
சிவன்வேம்புவேர்	வெட்டிவேர்
காட்டுக்கருணைவேர்	ஆடுதின்னாப்பாளைவேர்
நீர்முள்ளிவேர்	சிறுகட்டுக்கொடிவேர்
வில்வவேர்	ஆவாரம்பட்டை
துத்திவேர்	வலாரிவேர்
வெள்ளெருக்கம்வேர்	பூமிசக்கரைக்கிழங்கு
சீதேவிசெங்கழனிவேர்	மருதம்பட்டை
நிலைமந்தம்வேர்	பூவரசம்பட்டை
வெள்ளைவிஷ்ணுகரந்திவேர்	செங்கத்தாரிப்பட்டை
ஆனைநெருஞ்சிவேர்	பாவட்டையிலை
பொன்னாங்கண்ணிவேர்	புளிக்கருணைக்கிழங்கு

இவைகள் யாவும் வகைக்கி (½) பலம் கொண்டுவந்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து அரைவீசை நெய்யை அடுப்பிலேற்றி உருகினவுடன் சர்க்கரை (10) பலம் போட்டு பாகுபதமாய் தூவிக் கொண்டே கிளறவேண்டியது நெய்போதாவிட்டால் முன்பாகக்காய்ச்சி யேடுகட்டிய பசும்பால் போதுமான மட்டும் நிதானமாய் விட்டுக்கொண்டு கிளரவும் இறக்கும்போது மலைத்தேன் (5) பலம் விரையில்லாத பழையதிராட்சப்பழம் பலம் (5) பொடியாகக் கத்தரித்த பாதம் பருப்பு பலம் (5) போட்டுக்கிண்டி வைத்துக்கொள்ளவும் கைப்புதோன்றாமல் தின்பதற்கு இனிப்பாகவும் வியாதியை கண்டிக்கும் தன்மையுள்ள நல்ல லேகியமென்றறியவும் காலை மாலையாக இருவேளையும் புன்னைக்காய்வீதம் (20) நாள் சாப்பிடவும் மீன், கருவாடு, இறைச்சி, லாகிரி, ஸ்திரீபோகம், புகை சுருட்டு, இவை கூடாது. மேகம் 21-ம் தீரும் கருமேகத்தையும் கண்டிக்கும் இச்சாபத்தியம்.

கைகால் பிடிப்புக்கு லேகியம்

மாவிலிங்கம்பட்டை	செப்புநெருஞ்சிவேர்
சிறுகாஞ்சொரி	முடக்கத்தான்வேர்
அமுக்கனாக்கிழங்கு	தாழம் இதழ்சாறு
கண்டங்கத்திரி	பேரண்டைவேர்
பரங்கிப்பட்டை	பூனைவணங்கிவேர்
நீரடிமுத்து	மிளகரணைவேர்
ஓரிலைத்தாமரைவேர்	

வகைக்கி பலம் (1) கோரோஜனம் விராகனிடை அரிக்கால் கஸ்தூரி விராகனிடை அரிக்கால் ஓமப்பூ விராகனிடை அரிக்கால் இவைகளைச் சூரணித்து சமயிடை சர்க்கரை கலந்து அந்திசந்தி திருகடி பிரமாணம் தின்னலாம் அல்லது (1) வீசை விளக்கெண்ணெயில் போட்டுக்காய்ச்சியும் சாப்பிடலாம் அல்லது (15) பலம் நெய் அடுப்பிலிட்டு சூரணத்தைக் கொட்டி கிண்டிவருகையில் நெய் போதாவிட்டால் தேன் போதுமான மட்டும்விட்டு கிளறியிறக்கிவைத்துக்கொண்டு கெச்சக்காய்ப்பிரமாணம் இருபதுநாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

லேகிய வகை பரணி
முற்றிற்று

உ
தேவிசகாயம்

பத்தாவது

கியாழவகை பரணி

வட்டத்திருப்பி, ஆமையோடு, மிளகு நிலவேம்பு, காவட்டம் புல்லு, காடிகாரம், கரசலாங்கண்ணி, இவைகளை சாம்பலாக வறுத்துக்கொண்டு, சூரியகாந்தி, விஷ்ணுகிரந்தி, நிலத்துளசி இம்மூன்றும் பொன்வறுப்பாய் வறுத்து மேற்படி சாம்பலுடன் போட்டுக்கொண்டு, கருஞ்சீரகம், ஓமம், வெடிக்கவிட்டு சுக்கு, சன்றாஷ்டகம், சீந்தில்தண்டு, கடுக்காய்த்தோல் களிப்பாக்கு, கடுகுரோகணி, கத்தாழைசருகு, இவைகளை நறுக்கிப்போட்டு படி ஜலம்விட்டு கால்படியாக இறக்கி அந்தியிலும் காலையிலும் வேளைக்கி ஆழாக்குவீதம் இரண்டுநாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

பித்த வாய்விற்கு கியாழம்

வட்டத்திருப்பி, நிலவேம்பு, மிளகு, மயிலிறகு, பட்டுத்துணி, வசம்பு, இவைகளை சாம்பல் அல்லது பஸ்பமாக வறுத்துக்கொண்டு கருஞ்சீரகத்தை வெடிக்கவிட்டு சுக்கு மஞ்சள் கொஞ்சம் போட்டு மூக்கால்படி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாகயிறக்கி இருவேளை சாப்பிடவும் தீரும்.

பித்த வாய்விற்கு வேறுவித கியாழம்

கோஷ்டம், கொத்தமல்லி, பறங்கிச்செக்கை, வில்வவேர், சுக்கு, சீரகம், நெல்லுப்பொரி இவை யேழும் சமயிடை போட்டு அரைபடி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாக இறக்கி இருவேளையும் பாகித்து சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் கொள்ளத் தீரும்.

இதுவுமது

நன்னாரிவேர், அதிமதுரம், சீந்தில்தண்டு, சந்தனத்தூள், சோம்பு, இதுகளை யிடித்து கியாழம்வைத்து இருவேளையும் மூன்றுநாள் சாப்பிட சகல சுரமும் கால்பிடிப்பும் தீரும்.

சாதாரண பித்தத்திற்கு கியாழம்

வசம்பு	பலம்	¼
லவுங்கப்பட்டை	"	"
வெள்ளைப்பூண்டு	"	"

இம்மூன்றும் ஒன்றிரண்டாய் உடைத்து வறுத்து ஆழாக்கு ஜலம்விட்டு அரையாழாக்கு கியாழமாக யிறக்கி தேன்விட்டு (3) வேளை கொடுக்கவும்.

பித்தவாயுவினால் கண்ட வயிற்றுவலிக்கி கியாழம்

வெட்பாலரிசி	பலம்	4
சீரகம்	"	4
செகப்பு நெருஞ்சிவேர்	"	½

இம்மூன்று மருந்தும் சேர்த்துயிடித்து மூன்றுநாளைக்கிரண்டு வேளையும் கியாழம்வைத்து சாப்பிட வயிற்றுநோய் தீரும்.

சிறுபிள்ளைகட்கு அபானத்தில் இரத்தங்கண்டால் கியாழம்

வில்வயிலை, துத்தியிலை, செம்பருத்தியிலை, வெள்ளைவெங்காயம், சீரகம், இவைகள் சமமாய்ப்போட்டு யிடித்து கியாழம் வைத்து காலையில் மாத்திரம் கொடுக்க மூன்றுவேளையில் சவுக்கியமாகும் வாய்ரெணம் கண்டவர்களுக்கு இந்தக்கியாழத்தை இருவேளையாக மூன்றுநாள் கொடுக்க நாபியின் ரெணம் தணிந்து வாய்புண்ணு ஆறிவிடும்.

குளிர்காச்சலில் கண்ட நாவறட்சிக்கியாழம்

வட்டத்திருப்பி, வசம்பு, நிலவேம்பு, நிலப்பூச்சி, மிளகு, இவை (5) தினுசும் சட்டியில்போட்டு நீராகக்கருக்கி கருஞ்சீரகம், ஓமம் பொரியவிட்டு அரைப்படி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாக யிறக்கி இருவேளை கொடுக்கத்தீரும்.

மேற்படி காச்சலுக்கு வேறுவித கியாழம்

ருத்திரசடையை பிட்டிட்டுப்பிழிந்து அந்தரசத்தில் மிளகு, லவுங்கம், தூளாக்கிப் போட்டுக் கொடுத்தால் சுரம்விட்டுப் போகும்.

வாத சுரத்திற்குக் கியாழம்

வட்டத்திருப்பிவேர்	விஷ்ணுகரந்தி
மரமஞ்சள்	மூக்குரட்டைவேர்
பேறாமுட்டிவேர்	நொச்சியிலை
சுக்கு	கஞ்சாங்கோனர
மிளகு	துளசி
திப்பிலி	நார்த்தம்வேர்
கடுக்கா	நார்த்தம்யிலை
தானிக்கா	சிறுதேக்கு
வெள்ளைப்பூண்டு	

இவை வகைக்கி ஒருபலம் இடித்து தூணிநீரில் போட்டு நாலுக்கொன்றாய் கியாழம் வடித்துக்கொடுக்கவும் பத்தியமாக யிருக்கவும்.

ஊஷ்ண வாயுவிற்குக் கியாழம்

(2½) பலம் சிவதை வேர் கொண்டுவந்து பஞ்சுபோல் இடித்து ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்கு கியாழமாகக் காய்சி வடித்து இருவேளை கொடுக்க நிவர்த்தியாகும்.

பல்வலிக்கி கியாழம்

நீலிமருந்து செடியென்னும் அவுரிச்செடி சமூலம் கொண்டுவந்து நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து வாய்கொப்பளிக்க பல்வலிதீரும் (4-5) வேளை செய்யவும்.

கியாழவகைபரணி
முற்றிற்று

உ
தேவிசகாயம்

பதினோராவது

வீரியவிர்த்திவகை பரணி

மதனகாமேசுரக்குளிகை

வாலைரசம்	களஞ்சி	3	பூனைக்காஞ்சிவித்து	பலம்	½
லிங்கம்	"	1	பூமிசக்கரைக்கிழங்கு	"	"
முருங்கைவித்து	பலம்	½	நிலப்பனங்கிழங்கு	"	"
ஜாதிக்காய்	"	"	சமுத்திராசோதிவிரை	"	"
முத்து	"	"	ஜாதிபத்திரி	"	"
கிராம்பு	"	"	சாரப்பருப்பு	"	"
அபினி	"	"	வெண்காரம்	"	"
கஞ்சா	"	"			

இவைகள் யாவும் பொடிசெய்து முத்தினதேங்காய்க்குள் அடைத்து மூடி சாணிபொதிந்து காயவைத்து சிரட்டை கருகும்படி புடம்போட்டெடுத்து சிரட்டைநீக்கி அப்படியே கல்வத்திலிட்டரைத்து பீங்கானில் வைத்துக்கொண்டு கெச்சக்காய்ப்பிரமாணம் யெடுத்து சக்கரையிற் பொதிந்து சாப்பிடவும், (5) நாள் (7) நாளுண்டானபிறகு போகிக்கவும் வீரியம்கெட்டிப்படும் கலிதமாகாது இதற்குமாற்று எலுமிச்சம்பழம். நித்தியம் மாலையில் இந்தக் குளிகை தின்றபிறகு யிரவில் புளிசேர்க்காமல் பால்ஊற்றிக்கொண்டு போசனம்செய்யவும்.

ஸ்தம்பனக்குளிகை

குங்குமப்பூ, அபின், ஆபில்விரை, வகைக்கி ரூபாயிடை-1, ஜாதிக்காய் விராகனிடை-1, இவைகளைக் கல்வத்திலிட்டு தேன் சிறுகவிட்டு மெழுகுபோலரைத்துக் கடலையளவு குளிகைசெய்து மாலையில் 6-மணிக்கு சாப்பிடவும், படுக்கையில் வெத்திலைதின்று போகிக்கவும் வீரியமதிகரிக்கும்.

தாதுபுஷ்டிக்கு அதிசயக்குளிகை

மிளகு, எள்ளு, கெஞ்சா, சரியிடையெடுத்து வெந்ததும் வேகாதுமாய்வறுத்து கல்வத்திலிட்டு தேன்விட்டு மயனம் போலரைத்து

காட்டுயிலந்தங்காய்ப் பிரமாணம் குளிகைசெய்து மாலையில் படுக்கைக்கு நாலுமணிநேரம் முன்னதாய் ஒரு குளிகைதின்று உடனே ஆழாக்குப்பால் சாப்பிடவேண்டியது புளிப்பும் தண்ணீரும்கூடாது இஷ்டம்போல் போகிக்கலாம்,

வீரியக்கட்டுக்கு அடைக்கலாங்குருவி

அடைக்கலாங்குருவி (5) கொண்டுவந்து வயிற்றைக்கீரி பிச்சிமுதலான அசுத்தமெல்லாம் எடுத்துவிட்டு துவரைப்பிரமாணம் அபினி, சாலாம்பிசினி, தாலம்கான், கருவாப்பட்டை, ஜாதிக்கா, சபேத்துமுசலி, சீலாமுசலி, வகைக்கி விராகனிடை-1, இப்படி ஐந்துகுருவிக்கும் வயிற்றில்போட்டு தைத்து ஒரு குருவிக்கு துலாம்நெய்யாக (5) துலாம் நெய்விட்டு பொன்னிறமாகவறுத்து கல்வத்திலிட்டு எலும்புநீக்கி கொஞ்சங் கொஞ்சமாய் தேன்விட்டு மைபோலரைத்து காலை மாலை சுண்டக்காய் வீதம் சாப்பிடவும் காலையில் காரசாரத்துடன் போசனம் செய்யலாம் மாலையில் பால்சாதம் சாப்பிடவேண்டியது.

தாது புஷ்டிக்கி பேரீச்சம்பழம்

நீர்முள்ளிவிரை (2¾) விராகனிடை, அபினி விராகனிடை (¼) இதை பேரீச்சம்பழத்திற்கு உள்ளே வைத்து சாப்பிடவும், இப்படி காலைமாலை (5) நாள் (7) நாள் சாப்பிடவும்.

தாதுபெருக்க வெங்காய உபயோகம்

வெள்ளைவெங்காயம் அரிந்து நெய்யில்வறுத்து சாப்பிடவும் இப்படி வேளைக்கி ஒரு வெங்காயமாக இருவேளையும் இருபதுநாள் கொள்ளவும்.

ஆண்குறி பெருக்க

ஆண்காக்கைபித்து கொண்டுவந்து கல்வத்தி லரைத்து (3) நாள் தண்டில் தடவிக்கொண்டுவர பெருத்தும் நீண்டும் இருக்கும்.

தாதுபுஷ்டிக்கு லேகியம்

திப்பிலி
சித்தரத்தை
அமுக்கனாங்கிழங்கு
ஏலரிசி
இருவேலி
முதல்தரசந்தனம்
கருஞ்சீரகம்
கிராம்பு

கோஷ்டம்	மாசிக்காய்
சடாமாஞ்சி	மிளகு
அதிமதுரம்	ஜாதிக்காய்
தானிக்காய்	ஜாபத்திரி
கடுக்காய்	வால்மிளகு
ஏலக்காய்	நற்சீரகம்
அக்கிராகாரம்	

இதுகள் வகைக்கி களஞ்சி (1¼) சுத்திசெய்த கெஞ்சாத்தூள் பலம் (5) அமுக்கனாங்கிழங்கு பலம் அரை வெள்ளைக் கற்கண்டு பலம் அரை, கடைசரக்குகள் யாவுமிடித்து வஸ்திரகாயம்செய்து வெங்கலபாத்திரம் அடுப்பிலேற்றி தேன் சேர்-¼, நெய் சேர்-¼, மேற்படி பாண்டத்திலூற்றி சீனிசக்கரை வெல்லம் வகைக்கி கால்சேர்போட்டு பாகுபோல் கிளரி பிறகு கெஞ்சாத் தூளைப்போட்டுக் கிளறி அதின்பிறகு மற்ற சூரணத்தை கொஞ்சங்கொஞ்சமாய்த் தூவிக்கிளறி வழித்து கோப்பையில் வைத்துக்கொண்டு வேளைக்கி பாக்களவாக இருவேளையும் (10) நாள் அல்லது (20) நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் பசி அதிகரிக்கும் வாதக்கட்டு, வாய்வு, மேகம், உடம்பு மெலிவு, உட்புண்ணு, வாந்தி, மயக்கம், இவையெல்லாம் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும் இந்தலேகியம் சாப்பிடும்போது தேகத்தில் சிரங்கு உண்டாகும் அதற்குபயந்து நிறுத்தவேண்டாம் விடாமல் சாப்பிட்டுக்கொண்டேவந்தால் வியாதியெல்லாம் போய்விடும் விந்து அதிகரிக்கும் இரத்த உபிரியாகும் தேகபுஸ்டியாம்.

தாது புஷடிக்கு சூரணம்

நிலப்பனங்கிழங்கு வேண்டியமட்டும் கொண்டுவந்து மேற்றோல் சீவி கிழங்குகளை யிடித்து வஸ்திரகாயம்செய்து சமயிடை வெள்ளைசரக்கரை சேர்த்து நித்தியம் திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டுவர சொரி, சிரங்கு, வராது தாதுபுஷ்டி யதிகரிக்கும் விந்து ஊறும்.

தாது விர்த்திக்கு குடிநீர்

இரும்பை சிவக்கக்காய்ச்சி ஜெலத்தில் தோய்த்து இப்படி மூன்றுதிரம் தோய்த்து வடிக்கட்டி வைத்துக்கொண்டு அந்த ஜெலத்தை ஒருமண்டலம் தாகத்திற்கு வேண்டும்போதெல்லாம் போஜனம் செய்யும்போதெல்லாம் அதேஜெலத்தை உபயோகப்படுத்தி வந்தால் தாதுபுஷ்டி யுண்டாகும் அன்றியும் குடலிலுள்ள மாசுகளை அறுக்கும்

சிதளத்தைப் பிரிக்கும் அஜீர்ணபேதி, அதிசாரபேதி, கிராணி, இவைகளை நீக்கும். மூலஉதிரத்தை நிறுத்தும் இந்தத் தண்ணீர் மொத்தமா யில்லாவிட்டாலும் அப்போதைக்கப்போது செய்துக்கொள்ளலாம்.

தாது புஷ்டிக்கு ஜாதிக்கா

ஜாதிக்காயை துளைசெய்து பணவிடை அபினியை உள்ளேவைத்து பேரீச்சம்பழத்தை விரைபோக்கி ஜாதிக்காய்க்கு கவசஞ்செய்து உளுந்துமாவு அரைத்து அதற்குமேல் கவசஞ் செய்து மூன்றெருவில் புடமிட்டு உளுந்துமாவின் கவசம் வெந்தபிறகு யெடுத்து மாவின் கவசத்தைநீக்கி கல்வத்திலிட்டு தேன்விட்டரைத்து கடலைப்பிரமாணம் உண்டைசெய்து மாலையில் சாப்பிடவும் உடனே ஆழாக்குப்பாலில் சக்கரைப்போட்டுக் காய்ச்சி சாப்பிடவும் (10) நாள் கொள்ளவும் தாதுவிர்த்தியாக்கும் முகம் தேஜசுகொடுக்கும்.

இன்ப மருந்து

பொன்னம்பர் அல்லது வெள்ளியம்பர், ஒரு நெல்லிடை எடுத்து நீர் தாரையில் சொருகிவைக்க இன்பம் அதிகரிக்கும் ஸ்ரீபுருஷாள் யிருவருக்கும் அதிக யின்பத்தைக் கொடுக்கும் மேற்படி அம்பரில் (5) குண்டுமணியிடை மூன்றுநாள் சாப்பிட்டால் குன்மமுதலிய வயற்றுவலிகள் தீரும்.

தாது புஷ்டிக்கி

நீர்முள்ளிவிரை, சாலாம்பிசினி, கருவாப்பட்டை சமமாக யெடுத்திடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு கொடியாட்டின்பால் ஆழாக்கில் அரைபலந்தூள்போட்டு காய்ச்சி குடித்துவர கட்டுப்படாத வீரியபுஷ்டியுண்டாகும்.

தாதுபுஷ்டிக்கி குக்குடக்கருவு

வெங்காயவிரை கால்பலம் எடுத்து கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் கலக்கி குடித்துவர வீரியம் அதிகரிக்கும் மேற்படி விரையை தேனில்கலந்து குடித்தாலும் தாது புஷ்டி யுண்டாகும்.

தாதுபுஷ்டிக்கி முள்ளாங்கி உபயோகம்

செம்முள்ளாங்கிவிரை அரைபலம் ஆழாக்கு எருமைப்பாலில் போட்டு காய்ச்சி குடித்துவர தாதுவிர்த்தியாம், விந்து அதிகரிக்கும்.

தாது புஷ்டிக்கி

பேரரத்தை பொடிசெய்து 2 ½விராகனிடை பொடியை ஆழாக்கு பசும்பாலில் கரைத்து குடித்துவர தாது விர்த்தியாகும் நாற்பதுநாள் கொள்ளவும்.

வீரியவிர்த்திவகை பரணி
முற்றிற்று

உ
தேவிசகாயம்

பனிரெண்டாவது

கண்டாவிழ்த பரணி

நோய்வராதிருக்க

அதிமதுரச்சூரணம் சோம்புச்சூரணம் - வெள்ளைச் சர்க்கரை வகைக்கி ஒரு விராகனிடை, சித்திரமூலச்சூரணம் அரை விராகனிடை, யாவும் ஒன்றாய்க்கலந்து இரண்டுபாகமாக்கி காலையில் ஒருபங்கு மாலையில் ஒருபங்கு சாப்பிட வேண்டியது இதேபிரகாரம் சித்திரைமாதம் முதல்தேதிமுதல் ஆடிமாதம் கடைசி வரையில் சாப்பிட்டு அப்பியாசப்படுத்தின வர்களுக்கு யாதொரு நோயும் வராது கண் தெளிவுண்டாகும் தீராத தலைவலி ஒருதலைவலி சுரம் நீங்கும் பரிக்ஷைபாருங்கள் இதைச்சாப்பிடுகிறவர்கள் வாரத்திற் கொருநாள் நறுவிலிப்பிஞ்சும் ரோஜாப்பூவும் சமயிடை போட்டிடித்து பனங்கற்கண்டு போட்டு சாப்பிசெய்து சாப்பிட்டு வர வேண்டியது.

நாக்குப்பூச்சி யென்னும் பூநாக வுபையோகம் - நாக்குப்பூச்சியை யெள்யெண்ணெயில் காய்ச்சி குடிக்க நாள் பட்ட யிருமலை! நிவர்த்திசெய்யும் இரணங்களில் தடவ ஆறிப்போகும்.

கண்ணோய்க்கு - சிறுமா அல்லது நீலாஞ்சனம் கஸ்தூரி முத்து இவை சமமாய்ச்சேர்த்து கலிக்கம்போல் தீட்ட கண்ணோய்கள் அனைத்தும் தீரும்.

சுகபேதிக்குளிகை - சுத்திசெய்த வாளத்துடன் ரோஜாப்பூ உலர்த்தி நெல்லிக்காயின் மேற்றோல் சமயிடை சேர்த்து பழச்சார்விட்டு (3) நாள் அரைத்து கடலைப் பிரமாணம்

மாத்திரைசெய்து பெருஞ் சீரகக்கியாழத்தில் கொடுக்க வருத்தமில்லாமல் சுகுணமாக பேதியாகும்.

கட்டிகளுக்கு - உடையாத கட்டிகளுக்கு நிலமருந்தை அரைத்துப்பூச வுடையும் இடைவிடாது (4-5) வேளைப் பூசவும்.

பருக்களுக்கு - துத்தியிலையை யரைத்து பருக்களின்மேல் தடவவும் அல்லது மேற்படி யிலையை அரைத்து காடிவார்த்து கிளறிக்கட்டினாலும் கரையும்.

பருக்கள் உடைய - திராட்சப்பழம் ஆட்டுக்கொழுப்பு சமமாக சேர்த்தரைத்து பருக்கள் மேல் தடவ வுடையும்.

கட்டிகள் உடைய - சவுக்காரத்தையும் புறாவின் மலமும் சேர்த்து அரைத்து பருக்கள் கட்டிகள்மேல் தடவ உடையும்.

வெண்குட்டசாந்தி - வெள்ளைப்பூண்டை நவாச்சாரத்துடன் அரைத்து வெண் குட்டத்தின்மேல் தடவிவர வெண்மைமாறும்.

சிரங்கிற்கு - நீரடிமுத்தின் பருப்பை தயிரில் ஊறவைத்து எலுமிச்சம் பழச்சார் அல்லது காடிவார்த்து அரைத்து உடம்பில் பூசிக்கொண்டு உலர்ந்தபிறகு சாணந்தேய்த்து குளிக்க சொறி, சிரங்கு, முதலியதும் தீரும்.

இரணங்களுக்கு நாயுருவி - நாயுருவிசமூலங்கொண்டு வந்து யிடித்து சார்பிழிந்து யீயவெள்ளையைக் கலந்து ரெணங்களின் மேல் தடவிவர புண்கள் ரிணங்கள் ஆறிவிடும்.

தெய்வமோதிரம் - சூரியன் சந்திரன், சுக்கிரன், மூவரும் ஒரே ராசியில் சேர்ந்திருக்கும்போது பொன், வெள்ளி சமமாய்ச்சேர்த்து மோதிரம்செய்து அதில் பவழம் பொதிந்தாகச் செய்து வலது கைவிரலில் அணிந்தவர் யாவராலும் பூசிக்கப்படுவாரென்றும் சகலவித பொல்லாங்கி னின்றும் நீங்குவாரென்றம் பரிட்சையுள்ள அனேக யூநானி பண்டிதர்களும் சிலநூல்களும் சொல்லி யிருக்கின்றதை யிங்ஙனம் சுருக்கமாய் யெழுதினோம்.

பயம்நீங்க - (7) அல்லது (9) பவழத்தை குழந்தைகளிடுப்பிற்கட்ட நித்திரையில் மருண்டு அழுவதைநீக்கி பரிபூரண நித்திரை செய்யுமென்பது யூநானி ஆயுள்வேதம் சொல்லுகின்றது.

தொண்டை வலிக்கி - கோழிமுட்டை வெள்ளைக் கருவுடன் நவாச்சாரம்சேர்த்து குழைத்துப்பூச தொண்டைவலி யல்லது நோய்தீரும்.

நவாச்சார உபயோகம் - நவாச்சாரத்தை தேனில் உரைத்துப் பூச மயிர் உதிர்வதை நிறுத்தும்.

இரண்டாவது உபயோகம் - நவாச்சாரத்தை முலைப்பாலில் உரைத்து கண்களில் பூச கண்மாசுகளை அறுக்கும்

மூன்றாவது உபயோகம் - வீடுமுதலிய மனுஷாள் சஞ்சாரம் செய்யு மிடங்களில் விஷப்பூச்சிகள் இருக்க அல்லது வந்து நுழையவாகிலும் கண்டால் அந்தயிடத்தில் கட்டைநெருப்பில் நவாச்சாரத்தைப்போட்டு புகை கொடுத்தால் பயிரங்கப்படும் ஒருவித மூர்ச்சையாயும் கிடக்கும்.

பல்வலிக்கி - நன்னாரிவேர் கியாழத்தில் காடி கொஞ்சம்விட்டு வாய் கொப்பளித்துவர பல்வலி சுவஸ்தப்படும்.

கீல்வாத சாந்தி - நன்னாரிவேர் சூரணத்தோடு சமபாகம் வெள்ளை சருக்கரை சேர்த்து வேளைக்கி ஒரு விராகனிடையாக இருவேளையும் ஏழுநாள் சாப்பிட கீல்வாதம் ரொம்பவும் சவுக்கியப்படும் பறங்கிச்செக்கைக்கு உள்ள குணமெல்லாம் நன்னாரிவேர்க்கும் உண்டென்று அறிவீராக.

ஷர்பத்து - ஒருபலம் நன்னாரிவேருக்கு நாலுபலம் தண்ணீர்விட்டு நாலில் ஒன்றாய்க்காய்ச்சி யிருத்து அதற்கு சமபாகம் சர்க்கரைசேர்த்து ஷர்பத்து போல் காய்ச்சி குடிக்க பழமையான யிருமல் மூச்சடைப்பு பாரிசவாய்வு சாந்தியாம்.

ஆறாத புண்ணுக்கு - ஒரு நத்தையைப் பிடித்துவந்து கம்பியில் கோர்த்து விளக்கில் காட்ட தைலம் யிறங்கும் அதை பீங்கானில் பிடித்துக்கொண்டு அரைத்து ஆறாத மேகப்புண்கள் பருக்களின்மேல் பூச சீக்கிரத்திலாறும்.

படைகளுக்கு - நத்தையைச்சுட்ட சாம்பலை தேனில் கலந்து படைகளின் ஓரத்தில் வரும் புண்ணின்மேல் பூச சொஸ்தமாகும்.

வாந்திக்கு - மரக்காளான் காயின் சதை இரண்டுவிராகனிடை யெடுத்து ராத்திரிக்கு வென்னீரிலூறவைத்து காலையில் தெளிவாகவிருத்து சாப்பிட வாந்தியாகும் பித்தநீர் வெளிப்படும்.

நீர்உடைய - வெள்ளைச்சார்வேளையின்சார் (9) விராகனிடை பசும்பால் (12) ரூபாயிடை கலந்து குடிக்க கட்டுப்பட்டநீரை உடனே உடைக்கும்.

காயகற்பமூலிகை - முத்தின வெள்ளைச்சாரு வேளைவேரில் முதல் நாள் குண்டுமணிப்பிரமாணம் சாப்பிடவும் இரண்டாநாள் (2) குண்டுமணி இப்படியே நாளுக்குநாள் ஒவ்வொன்றதிகப்படுத்தி நாற்பதாவதுநாள் நாற்பது குண்டுமணிப்பிரமாணம் சாப்பிடவும் (41) நாள் துடங்கி ஒவ்வொருகுண்டு மணி குறைத்துக்கொண்டே நாற்பதாவதுநாள் ஒருகுண்டுமணியில் நிறுத்தவும் இப்படிசெய்தவர்களுக்கு ஒரு விதத்திலும் தீராத வாதரோகங்கள் சுரங்கள் நெரிக்காச்சல் பீனிசங்களும் தீரும் இது கிடையாவிட்டால் காட்டுச் சாறுவேளையும் உபயோகப்படுத்தலாம்.

காதுவலிக்கு சாம்பிராணி - சாம்பிராணியைப் பொடித்து எள்ளெண் ணெயில் போட்டுக் காய்ச்சி காதில் நாலைந்து துளிவிட (3) வேளையில் காதுவலிநீங்கும்.

முள்வெளிப்பட - ஆற்றுநண்டு அல்லது வயல்நண்டு பிடித்து யிடித்து முள்தைத்தயிடத்தில் வைத்துக்கட்ட முள் வெளிப்படும்.

முலைசிலந்திக்கு - மேற்படி ஆற்றுநண்டை பிடித்திடித்து அல்லது அரைத்து முலையின் மேல்வைத்துக் கட்ட முலைச்சிலந்தி ரணம் ஆறும்.

குதிக்கால் அல்லது ஆசன வெடிப்புக்கு - மேற்படி ஆத்து நண்டை யிடித்து பில்லைதட்டி சுட்ட சாம்பலை குதிக்கால் அல்லது ஆசன வெடிப்பின்மேல் தேனுடன் கலந்து பூச ஆறும்.

பெரும்பாட்டுக்கு - இரும்பை சிவக்கக்காய்ச்சி பசும் மோரில் தோய்த்து அந்த மோரை சாதத்திற்கு வேண்டிய போதெல்லாம் தாகத்திற்கும் குடித்துவர பெரும்பாடு சகலகழிச்சல் பேதியும் கட்டும். சூட்டு உடம்பிற்கு ஆகாது இரைச்சிநெய் சேர்த்துக்கொள்ளவும்.

படைகட்கு - நண்டுக்கல்லை அரைத்துப் படைகளின் மேல் பூச நமைச்சல் சொரி விலகும் மேற்படி கல்லையரைத்து பொன் வெள்ளி சாமான்களை விளக்க அதிகசோதியுண்டாம்.

மூலரெத்தம் நீங்க - ஒருபிடி துத்தியிலையை சுத்த ஜெலத்தில் போட்டு ஒரு இராத்திரி ஊறவைத்து காலையில் பிசைந்து யிருத்துக்கொண்டு அத்துடன் சமபாகம் பசும்பால்விட்டு குலுக்கிசாப்பிடவும் இப்படி (3) நாள் (5) நாள் அல்லது (7) நாள் சாப்பிடவும் கடைசிநாளில் சர்க்கரை சேர்த்து சாப்பிடவும் மூலவுதிரம் நீங்கிவிடும்.

மேக திமிர்வியாதிக்கு - துத்திச்செடியின்கிளை அல்லது காம்புகளை கத்தையாகக் கட்டிக்கொண்டு வேண்டிய மட்டும் பசும்பால் விட்டு அடுப்பேற்றி தீயெரித்து துத்திக்காம்புகளால் துழாவிக்கொண்டேயிருந்தால் சுண்டிவரும் அதன்பிறகுயிறக்கி ஒரு யிராத்திரிமுழுதும் அசையாம லாறவைத்துக் காலையில் பார்க்க உறைந்து சக்கரைபோலாகும் அதில் நாலுக்கொருபங்கு ஏலரிசிபொடித்து சேர்த்து வைத்துக்கொண்டு அந்திசந்தியாக திருகடி பிரமாணம் நாற்பதுநாள் சாப்பிட்டுவர திமிர்சோம்பல் மேக ஊரல் மேகவியாதிகள் யாவும் நீங்கும் இச்சாபத்தியமிருக்கவும்.

ரணங்கள் ஆற - துரிசியை பொடித்து தேங்கா யெண்ணெயில் விட்டு கல்வத்திலிட்டு அரைத்து ரணங்களில் தடவிவர ஆறிப்போகும் பேன்கொட்டை ஏலரிசியும் கொஞ்சம் சேர்க்கலாம்.

நீரொழுக்கிற்கு - திவிதாட்சிப்பழத்துடன் மிளகு சமமாய் சேர்த்தரைத்து சாப்பிட கல்லடைப்பு நீரொழுக்கு நீங்கும்.

வாய்வேக்காட்டிற்கு - அதிகாலையில் திருநீற்று பச்சிலையை வாய் கொண்டமட்டும் மென்றுதின்ன நீங்கும் ஐந்து நாள்தின்ன நீங்கும்.

சயித்தியத்திற்கு - அரிசித்திப்பிலியைப் பொடிசெய்து பச்சை வெத்திலைச் சாறும் தேனும் சமமாய்ச் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுக்க சயித்தியம் கோழை சுரம் முதலியதும் தீரும்.

சாதாரண யிருமலுக்கு - ஆனைதிப்பிலியை பொடிசெய்து தேனில் குழைத்து சாப்பிட யிருமல் யீளையைப் போக்கும் அஜீர்ணத்தை மாற்றும் வயற்று உப்பிசத்தை நீக்கும்.

வாய்வேக்காட்டிற்கு - தானிக்காயைச் சுட்டு சூரணம் செய்து சமனிடை சக்கரைசேர்த்து நிதம் ஒருவிராகனிடையாக வென்னீரில் சாப்பிட்டுவர வாயிலதிக நீர்ஒழுக்கல் கட்டுப்படும் கண்கள் குளிரும்.

பல்வலிக்கு - தாளிசப்பத்திரியை பொடிசெய்து பல்லில்தேய்க்க வலி தீரும் ஈறுபலப்படும்.

ஷர்பத்து - தாழம்பூவின்வேர் கியாழமிட்டு அதில்சக்கரைச் சேர்த்து ஷர் பத்துபோல் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் சொரிசிரங்கு தினவு படைகள் மாறும் தேகவலிவுதரும்.

சொரி சிரங்கிற்கு - அரைபடி நல்லெண்ணெயில் செந்தாழைப்பூவின் யிதழ்களைப்போட்டு பூமிபுடமாக யிருபது நாள் புதைத்துவைத்து பிறகெடுத்து தேகத்திற்பூசிவர மேகரிணங்கள் சொரிசிரங்கு தினவு படைகள் தீரும் தேகசுத்தியாம் அவயவங்களுக்கு வலிவுதரும்.

அம்மைகாணாதிருக்க - மேற்கூறியபடி பூமிப்புடம் வைத்தெடுத்த தாழம்பூ எண்ணெயை அம்மைக்காணாத பிள்ளைகட்கு மாதம் 1-க்கு 2-அல்லது 5-நாள் வீதமாக அந்தந்தமாதம் முதலில் கொடுத்துக்கொண்டுவரில் ஒருவித அம்மையுங்காணாது அப்படி அம்மைவந்தாலும் 4-5- கொப்பளத்திற்கு அதிகமாய் காணமாட்டாது.

ரணங்களாற - ரணங்கள் அல்லது புண்ணுகளை சீக்காய்தேய்த்து கழுவிவிட்டு தாழம்பூசுட்ட சாம்பலைப்போட்டு அப்பிக்கொண்டு வந்தால் ஆறிவிடும்.

பெண்கட்கு வெள்ளைகண்டால் - மணத்தக்காளி தக்காளி இரண்டும் சமமாய் இலையுங் காயுமாகப் பறித்துவந்து கியாழமிட்டு உள்ளுக்குச் சாப்பிட்டு ஒண்ணுக்கு போகும்போதெல்லாம் யோனியிற்படும் படியாக தாராளமாய் இந்தக்கியாழத்தால் அலம்பிக்கொண்டுவர நீங்கும் உள்ளுக்குயிருவேளையும் சாப்பிடவேண்டியது.

தக்காளிகியாழம் - தக்காளியல்லது மணத்தக்காளியை யிலையுங் காயுமாகப் பறித்து கியாழமிட்டு வாய் கொப்பளித்துவர பல்லுநோய் உண்ணாக்கு வளர்ச்சி தொண்டைநோய் ஈரல்வீக்கம் இவைதீரும்.

சோம்பு சூரணம் - சோம்பு யென்னும் பெருஞ்சீரகத்தை யிடித்து சூரணஞ் செய்து அதற்கு சமன்சற்கரை சேர்த்துக் கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு சித்திரைமாதம் முதல்தேதி முதல் நிதம் (2) விராகனிடையாக ஆனிமாதம் கடைசி வரையில் சாப்பிட்டு வருவோருக்கு அந்த வருடம் முழுமையும் யாதொரு வியாதியுமுண்டாகாது.

பேன்சாக - படிகாரத்தைப்பொடித்து மைபோல் வஸ்திரகாயஞ்செய்து தண்ணியில் கரைத்து தலையில் தேய்த்து ஒரு ஜாமம் சென்று ஸ்நானஞ்செய்யபேன் ஈறு முதலானதுஞ் சாகும்.

பல்நோய்க்கு - படிகாரமும் கொட்டைப் பாக்கும் சமமாய்க் கொண்டு வந்திடித்து வஸ்திரகாயஞ்செய்து பல்லில் தேய்த்துவர பல்வலிதீரும்.

தீராத வெள்ளைக்கு - படிகாரத்தை பொரித்து பொடித்து அதற்கு சமன் கற்கண்டும் உலர்ந்த நெல்லிக்காயின் மேற்றோலும் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு யிரண்டு விராகனிடையாக நாளொன்றிற்கு மூன்றுவேளையும் பசுவின்மோரில் கரைத்து சாப்பிடவும் இப்படி (7) நாட்கொள்ள தீராத

வெள்ளை நீர்கடுப்பு இவைதீரும் இச்சாபத்தியம் ஒருசமயம் இரும்பல் காணுமாகில் பசும்பால் கறந்தவுடன் நுரையோடு சாப்பிடவும்.

மயிர்கருக்க - சூரத்து நிலாவிரையை பச்சையாகக் கொண்டு வந்து அத்துடன் மறுதோன்றியிலை சமனாகச் சேர்த்து பூசிவர மயிர்கறுத்துவரும்.

தினவுசிரங்கிற்கு - சூரத்துநிலாவிரை கியாழத்தில் காடிசேர்த்து உடம்பில் தேய்த்து 2-மணிநேரம் சென்று குளித்து வர சொரி சிரங்கு தினவு படைமுதலியதும் நீங்கும்.

பிரசவ வேதனைக்கு - ஜவ்வாது அரைவிராகனிடையுங் குங்குமப்பூ கால்விராகனிடையுஞ் சேவல் சூப்பில் கலந்துகொடுக்க பிள்ளையுதிக்காமல் உபத்திரவப்படுகிறவர்கட்கு உடனே பிண்டம் வெளிப்படும்.

கருந்தேமலுக்கு - மறுதோன்றியிலையுடன் சவுக்காரம் சேர்த்து அரைத்துப் பூசிவர கருந்தேமல் படைகள் நரம்பிழுப்பு கால்நோய் இதுகள்தீரும்.

பிள்ளைகள் தலைசிரங்கிற்கு - சவுக்காரத்தை ரோஜாப்பூ எண்ணெயில் குழைத்து பிள்ளைகள் தலையில் பூசிவர சிரங்குகள் ஆறும்.

வயிற்றில் மரித்தபிண்டம் வெளிப்பட - சரக்கொன்றைக் காயின் மேலோட்டை பொடிசெய்து அத்துடன் குங்குமப்பூவும் சற்கரையுஞ்சேர்த்து பன்னீர்விட்டரைத்து உருண்டை செய்து பிள்ளை யுதிக்காமல் வருத்தப்படுகிறவர்க்கும் அல்லது வயிற்றில் தானே மரித்தவர்களுக்குங் கொடுக்க உடனே வெளிப்படும்.

கெற்பமில்லாதவர்க்கு - சதகுப்பை கருஞ்சீரகம் மரமஞ்சள் இவைகள் சமனாகச்சேர்த்து சூரணஞ்செய்து அதற்குச் சரிபாகம் புட்டிவெல்லஞ் சேர்த்து பிசைந்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் காலை மாலை யிரண்டு வேளையும் சாப்பிட்டுவரில் உதிரச்சிக்கலை யறுக்கும்

கருப்பக்குழியை சுத்திப்படுத்தி கரு தங்கும்படிச்செய்யும் சூட்டுடம்பிற்கு புளிப்பு மாதுளம்பழம் சாப்பிட்டுக்கொண்டுவரில் மிகவும் நலம்.

சூட்டினால் வந்ததலைவலிக்கு - கொத்தமல்லி விரையையும் சந்தனமும் அரைத்துப்பூச தலைவலி நீங்கும்.

பல்நோய்க்கு அற்புதமருந்து - சித்திரமூலத்தை யரைத்து வலது உள்ளங்காலில் தடவ யிடதுபக்கம் பல்வலிதீரும் இடதுள்ளங்காலில் தடவ வலது பக்கம் பல்வலி தீரும் இதை படைகளின் மேல் தடவ மாறிப்போகும் இதை கோழிமுட்டை மேல் தடவி ஒருநாள் வைக்க மேல்தோல் சிவந்தநிறமாய்விடும்.

வெளுத்தமயிர்க்கருக்க - கொட்டைக்கரந்தை செடியானது பூ எடுப்பதற்குமுன் சமூலமும் பிடுங்கிவந்து இதற்குச்சமயிடை கையாந்தகரை சமூலம் சேர்த்து நிழலிலுலர்த்திச் சூரணம்செய்து தேன் அல்லது நெய்யிற்கலந்து ஒருமண்டலம் சாப்பிட்டுவர வெளுத்தமயிர் கருத்துப்போகும் சிவகரந்தைக்கு இதிலுமதிக குணமுண்டு யென்பார்கள்

ஒருதலைவலிக்கி - குங்குமப்பூ அபினி விளாம்பிசினி பனைவெல்லம் இதுகள் வகைக்கி விராகனிடை-1, நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டறைத்து காயிதத்திற்றடவி கன்னப் பொரியாகிய உயர்ந்து வலியெடுக்கும் நரம்பின்மேல் ஒட்டிவர இரண்டொரு வேளையில் தீரும்.

இரண்டாம் பாகம்
முற்றிற்று

இனி மூன்றாம்பாகம்.

உ
தேவிசகாயம்

அனுபோக வயித்திய
பிரம்மரகசியம்
மூன்றாம் பாகம்

சிவகிரி அங்கமுத்துசுவாமி நாயகர்
அனுபவமாயிருந்த

தீர்மான நாடி

கனமாகவே மூன்றுநாடியுந்தா னெழுந்திடில் ஜன்னியாம்
தானசைந்து குதித்து அம்புபோல் தானடந்திடில் ஜன்னியாம்
ஊனமாமையம் ரெண்டுவாதம் தொன்று ஓடிடில் ஜன்னியாம்
உற்றவாதத்தை ஐயத்தோடுற வோடியாடிடில் ஜன்னியாம்
மீனபம்பரம் நீரில்வண்டுபோல் மீறிசுற்றிடில் ஜன்னியாம்
மிக்கவேதெரித் தோடிடில்பித்த மிக்க ஒளித்திடில் ஜன்னியாம்
போனமாய்கை மாதர்தம்மை புணர்த்தி செய்வது போலவே
பித்தவாதத்தை யையத்தோடுற பேசியாடிடில் மரணமே.

தினவெண்பா

உத்தமத்தி லுத்தமமாம் உதையகதிர் வெள்ளி
மத்திபமாம் திங்கள்புதன் வன்குருவே - சத்துருவாம்
செவ்வையாய் சனிமரணம் செப்பினோ மித்தினத்தில்
நல்வாய் மருந்துண்ண நால்.

வினையறியும் விருத்தம்

தந்தவெற்றிலைப் பாக்கை யெண்ணிமூன்றிற் பெருக்கியாரில்
முந்தவே கழித்துமீந்த தொன்றுக்கு லாபம்ரெண்டில்
வந்திடும் ஆனிமூன்றில் வருஞ்சுபம் நாலில்துக்கம்,
ஐந்துஜீவனமுண்டாகும் ஆறுக்குமரணந்தானே.

உ

தேவிசகாயம்

நூன்முகம்

இதைக் கண்ணோக்கும், ஆசிரியரே, இவ்வுலகின் கண்பேரின்பத்தைப் பெறவும், சிற்றின்பத்தை யனுபவிக்கவும், மனிதனல்லது மற்றப் பிராணிகளுக்கு மிகவுங் கஷ்டமாயிருக்கிறது ஏனெனில், நன்மை தீமையென்கிற கிருத்தியங்களைப் பகுத்தறிந்து நடக்கவும், கஷ்ட, சுக, துக்க, சந்தோஷங்களைத் தனது செய்கைவாறு அனுபவிக்கவும், வருங்காலம், நிகழ்காலம், சென்றகாலம், என்னும் முக்காலங்களின் உணர்வை உணரவும் ஏதுவான ஆன்மா என்னும் அறிவு மானிட தேகத்தில் நிலைகொண்டிருக்கிறது. மற்ற ஐந்து வர்க்கத்திற்கும் பகுத்தறியும் அறிவு இல்லாமையால் மனிதன் சகலஜந்து ஜாலங்களுக்கு மேலானவன் எனப்படுகிறான் ஆகையால்தான் மற்றச் சராசரப்பொருள்கள் இவனது உபயோகார்த்தமாக உண்டாக்கப் பட்டிருக்கிற தென்று எண்ணப்படுகிறது. மனிதனுக்கு வேண்டிய நன்மைகளை சிருஷ்டித்த கடவுளை எவ்வாறு தொழுவதோ தெரியவில்லை.

மனிததேகம் தாயினது குட்சியிலிருந்து "பிரசூதிகா வாயுவினால் தலைகீழாய் பூமியின்மேல் தள்ளப்பட்டது முதல் (மரணம் அதாவது தேகமாறல்) வரைக்கும் கஷ்டம், சுகம், துக்கம், சந்தோஷம், என்னு மவைகளை பிரத்தியேகமாயும் கலந்தும் அனுபவித்தே வருகிறது அனுபவிப்பது ஆன்மாவா அல்லது தேகமா, என்று கேள்வி கேட்கும் பட்சத்தில் நூலாசிரியர் அவரவர்களுக்கு தோன்றும் வாறு தங்கள் கிரந்தங்களில் புகட்டி யிருக்கிறார்கள். அவைகளை யெடுத்துக் கூறின் இச்சிறியநூல் விஸ்தாரமாய் முடியும். ஆன்மா வென்ற பதத்திற்குப் பொருள், சுருதி" ஆத்துமகீத்ரு வஸ்தூல சூக்ஷ்மகாரண சரீரேப்யோ வியதிரிகத பஞ்ச கோசாதீத, அவஸ்தாதிரிய ஸு‌ட்சிஸ்ஸன் எதிஷ்டதிஸா ஆத்துமா "ஆன்மா வென்பது புலன் படாது, ஸ்தூலமும், சூக்குமம், காரணம் என்னும், காரணப்பெயருடைய மூன்று சரீரங்களுக்கு வேறானது, அன்னமயம், பிராணமயம், மனோமயம்,

விக்கியானமயம், ஆனந்தமயம் என்னும் (5) கோசங்களுக்கு யெட்டாதது, சாக்கிரத்தை சுவப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளுக்கு சாட்சிசுரூபமாயுள்ளது. இத்தியாதி குணங்களுடையதை ஆன்மா வென்று சொல்லுவார்கள்.

"தேகம்" என்னும் பதத்திற்குப் பொருள் - திஹயதே அன்னரசேனேதிதேஹ அப்னதிஹ உபசயே அன்ன ரசாதிகளினால் விருத்தியாகப் படுகிறது தேகம், சரீரம் என்னும் சொல்லுக்கு சீர்யத இதிசரீரம், ஸ்ருஹிம்ஸாயாம், நசிக்கிற சி சரீரம், என்று பொருள், வார்த்தைகளது சொல்லர்த்தத்தை ஆராயும்பொழுது மேற்கூறிய சுகதுக்காதி விஷயங்களை (ஆத்துமா என்னும் பிராணன்) தேகத்தினிடமாக அனுபவித்து வருகிறதல்லாது தேகத்தைவிட்டல்ல பிராணனை ஆக்கையினிடமாக உண்டெனெ அறிந்தோமே யல்லது பிரத்தியேகமாய் பார்த்ததில்லை விஷயாதிகளின் பயனை தேகத்தின் பிரிவுகளால் ஆன்மா அனுபவிக்கிற தென்று பூர்வாசிரியர் தங்களது செய்யுட்களில் புகட்டியிருந்தாலும் தோற்றத்திற்கு தேகத்திற் கென்றே நிச்சயிக்கப்படுகிறது. வியாதிகள் சம்பவிப்பதால் பிராணனுக்கு இடையூர் உண்டாகுமென்ற பயமே யல்லது வேறல்ல ஒருமனிதனுக்கு வியாதிகளுண்டாகி சிகிச்சைகள் செய்யாமல் அதிகரித்தால் வரும்பயன் 'பிராணன் போய்விடும்' என்றே முடியும் 'ஆத்மசுத்தி' என்னும் இரண்டு சொற்களுக்கு தேகத்தில் வியாதிகள், உறுப்புகளின் ஆக்கிரம நடத்தல் என்பவைகள் இல்லாமலிருந்தால், மனசாஞ்சலியம் இல்லாமை எனப்பொருள் விளங்குகின்றது ஆகையால் 'பூர்வஜன்ம கிருகம் பாபம் வியாதி ரூபேனபீடயேத' என்றால் ஜன்மாந்தித்தில் செய்த பாவம் இந்த ஜன்மத்தில் வியாதி உருவங்கொண்டு நன்மை பீடிக்கிறது, எனத்தெரிந்து சிகிச்சைகள் செய்யாமல் இருந்துவிட்டால் வியாதிகள் நீங்குமா, ஒருகாலமும் நீங்காது தேகத்தை வியாதிகளணுகாமல் காப்பாற்றி வருவது (அவயவங்கள் உறுப்புகள்) அவயவங்களின் தொழில் கிரமமாய் நடத்தலே சௌக்கியம், அக்கிரமமாய் நடத்தல் வியாதி, வியாதிகளைப் போக்க அனுபவத்தால் கண்டுக் கொண்ட பதார்த்தமே ஔஷதம் ஔஷதங்களைத் தெரிவிப்பது ஆயுர்வேதம்.

ஆயுர் வேத

உற்பத்திசரித்திரம்

வேதங்கள் - 4, ருக்கவேதம், எஜுர்வேதம், சாமவேதம், அதவணவேதம், இவைகளைச் செய்தவர் பிரம்மதேவர், சீர்திருத்தினவர் வேதவியாசர்.

சாஸ்திரங்கள்-9, வேதாந்தம், வைகேஷிகம், பாட்டம், பிரபாசம், பூர்வீகமீமாம்ஸம், உத்திரமீமாம்ஸம், சிக்ஷாவியாகரணம், சந்தஸ்ஸு, நிருத்தம், ஜோதிஷம், கல்பம் என மதாந்திரம்.

புராணங்கள்-18, மச்சபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், பிரம்மபுராணம், வைஷ்ணவபுராணம், பாகவதபுராணம், சைவபுராணம், லிங்கபுராணம், பௌஷியாத் புராணம், நாரசீய புராணம், கருடபுராணம், பிரம்ம கைவர்த்தபுராணம், ஸ்கந்த புராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேயபுராணம், பிரம்மாண்ட புராணம், பத்மபுராணம்.

கலைக்கியானங்கள்-94, அக்ஷரலக்ஷணம், லிகிதம், கணிதம், வியாகரணம், நீதிசாஸ்திரம், ஜோதிஷம், தர்மசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுணசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், சாமுத்திரிக சாஸ்திரம், ரூபசாஸ்திரம், இதிஹாஸம், காவியம், அலங்காரம், சாதுரியம், நாடகம், நிருத்தம், சப்தப்பிரமம், கானசாஸ்திரம், வேணுசாஸ்திரம், மிருதங்கசாஸ்திரம், தாளவாத்தியம், தனுர்வித்தை, சுவர்ணபரீட்சை, இரதபரீக்ஷை, கஜபரீக்ஷை அஸ்வபரீட்சை, இரத்தின பரீட்சை, பூபரீட்சை, யுத்தலக்ஷணம், மல்லுயுத்தம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதுனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், ரசவாதம், காந்தருவாதம், பீபிலவாதம், கௌதுவவாதம், தாதுவாதம், ஆரூடம், நஷ்டப்பிரசனம், முஷ்டிய்பிரசனம், ஆகாசப்பிரவேகம், ப்ரகாயப்பிரவேசம், ஆகாசகமனம், அதுர்சியம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், அக்கினி ஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், வாயுஸ் தம்பனம், திருஷ்டி ஸ்தம்பனம், வாக்குஸ்தம்பனம், சுக்கில ஸ்தம்பனம், ஜனனஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், அவஸ்தைப்பிரயோகம்.

யுகங்கள்-4, (1-வது) கிருதயுகம், இக்காலத்தில் மனிதர்கள் சத்தியவந்தராயும், நோயற்ற வாழ்வையுடையவர்களாயும், நித்தியானந்த ஸ்திதியில் இருந்தார்கள்.

(2-வது) திரோதாயுகம், இந்தயுகத்தில், மனிதர்கள் இரண்டிலொருபங்கு துஷ்டர்களாயும், வியாதிகளுக்குட்பட்டு வயதுகுறைந்து, ஞானசக்தியின் க்ஷீணதிசை அடைந்து, ஒஷதியின் சகாயம் வேண்டுவோறாய் இருந்தார்கள் இந்தயுகம் தொடங்கி மனிதர்களுக்கு ஔஷதப்பிரயோகங்கள் வேண்டியிருந்தன.

(3-வது) துவாபரயுகம், மனிதர்களில் பேர்பாதி பாவிகளாகிய பரஸ்திரீலோலராய் இருந்தார்கள்.

(4-வது) கலியுகம், இந்தயுகத்தில் பாவம் அதிகரித்து வயது வரவர குறைந்துக் கொண்டு வியாதிகள் அதிகரித்து உலக முழுதும் வியாபித்து ஜனங்களை அதிக சேதப்படுத்திக் கொண்டிருக்கிறது.

திரேதாயுகம் தொடக்கத்தில் சிலர் கொடுமை செய்ய முயன்றதை சிருஷ்டிகர்த்தாவான பிரம்மதேவர் அறிந்து இனிமேல் தடையில்லாமல் பிராணிகளுக்கு வியாதிகள் வந்தணுகும் அவைகளால் மனிதர்களுக்கு இடையூர்களும் உயிர்சேதங்களும் சம்பவிக்கும்யென்ற யோசனையுடன், முன்புதன்னால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வேதங்களுக்கு நான்கு உபவேதங்கள் உண்டு பண்ணினார், எவைகளென்றால், அர்த்தவேதம், ஆயுர்வேதம், காந்தருவவேதம், தனுர்வேதம், என்றநான்கு வேதங்களாம், இந்த உபவேதங்கள் நான்கில் ஏதுலிங்கம், சிகிச்சை என்னும் முப்பொருளைவிவரிக்கிற ஆயுர்வேதத்தில் நோய் அணுகாமலும், அனுசரித்தநோயை நீக்கிக்கொண்டு இவ்வுலகத்தில் சுகமாய் வாழும்படியான விதிகளையும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆயுர்வேதத்தை சர்வதயாபர மூர்த்தியாய் பஞ்ச கிருத்தியங்களுக்கு ஆதாரபூதராய், சச்சிதானந்தரூபமாய் விளங்கும் தேவர்களுக்கெல்லாம் தேவரான மகாதேவர் தமது தேவியாராகிய பார்வதி தேவியாருக்கு அருளிச் செய்தாரென்றும், அந்த சர்வலோகமாதா நந்திதேவருக்கு கடாட்சித்தாளென்றும் அந்நந்திதேவர் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சித்துபுருஷர்களுக்கும் கற்பித்து கொடுத்தாரென்றும் சில நூலாசிரியர் எழுதி இருக்கிறார்கள். யுகங்களின் தொடக்கத்தில் பிரம்மதேவரால் உண்டான ஆயுர்வேதமே நமக்கு முக்கியமானது. இதில் ஒருலக்ஷஞ் சுலோகங்கள் உண்டென சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயுர்வேதம் மனிதர்களின் அறிவுக்கு முற்றிலுமெட்டாதப் பொருளென்று பிரஜாபதி அறிந்து எட்டுபாகங்களாக பிரித்தார் காலகதியால் நேர்ந்த அறிவினால் அந்தகிரந்தம் நாசமடைந்து சில

பாகங்கள் மாத்திரம் அபுரூபமாய் அகப்படுகின்றன தற்கால வைத்திய சாஸ்திரங்களெல்லாம் இந்த ஆயுர்வேதத்திலிருந்து உற்பத்தியானவைகள்.

(1-வது) சல்லியம், ஸஸ்திரீகம், இது ஸஸ்திர சிகிச்சை, காயசிகிச்சை, விரணசிகிச்சை, ஆயுதங்களின் பிரயோசனம் இவை முதலியவைகளை தெரிவிக்கின்றது.

(2-வது) ஊர்த்துவாங்க ஸாலக்கியம். இதில் கண்டத்திற்குமேல் யிருக்கிற உறுப்புகளின் விவரத்தையும் அவைகளுக்கு காணுகிற வியாதிகளையும் தெரிந்துக்கொள்ளலாம்.

(3-வது) காயசிகிச்சை இது சுரம், அதிசாரம் உன்மாதம் குஷ்டம் முதலிய தேகத்தில் உண்டான வியாதிகளையும், அவைகளின் சிகிச்சைகளும் தெரிவிக்கின்றது.

(4-வது) பூதவைத்தியம், இதில் பேய்முதலியவைகளால் சம்பவிக்கிறதென்னும் மனோரோகங்களை தெரிவித்திருக்கின்றது தேவதைகள், பிதுர்தேவதைகள், பிசாசுகள் முதலியவைகள் கோபமடைந்து தேகத்துக்குள் பிரவேசித்து மனதைக் கெடுத்து பூதசுரம் முதலியவைகளை உண்டுபண்ணுகின்றனவாம். இவ்வித ரோகங்களை மணிமந்திர ஸ்நானபூசை பிரார்த்தனைகளால் நீக்க வேண்டியதாம்.

(5-வது) கௌமாரபிரத்தியம், இதில் குழந்தைகளுக்கு காணுகிற வியாதிகளையும், சிகிச்சைகளையும் அறியலாம்.

(6-வது) அகதந்திரம், இது விஷயங்களைக் குறித்து சொல்லுகின்றது.

(7-வது) ராசயன தந்திரம் இதில்வாதம் செய்கிற முறைகளை அறியலாம், ஜீவிக்கும் நாட்களை விர்த்திசெய்கிற கற்பமுறைகளையும் தெரிந்துக்கொள்ளலாம் வியாதிகள் அணுகாமயிருக்க நாம் அனுசரிக்க வேண்டிய விதிகளையும் தெரிந்துக்கொள்ளலாம்.

(8-வது) வஜீகரணதந்திரம் இதில் ஜனனேந்திரியங்களுக்கு காணுகிற வியாதிகளையும் வீரியவிர்த்தி செய்துக் கொள்ளுகிற வழிகளையும் அறிந்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய எட்டுவித பிரிவுகள் உளதென்று பழய நூல்களாகிய சரசம் ஸூஸ்ருதம், முதலிய கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது ஆராய்ச்சியாலும், பழக்கத்தினாலும், வைத்திய கிரந்தங்கள் உண்டாயின வென்றுசொல்ல அத்தாட்சிகளனேகங்களுண்டு, சவத்தை அறுத்து உறுப்பு உறுப்புகளாய் சோதித்து சரீர ஏற்பாடுகளை செவ்வையாய் அறிந்து நூலாசிரியர்கள் லோகோபகாரமாய் தங்கள் நூற்களில் எழுதினார்களென்று கண்டிருக்கின்றது நிகழ்காலத்து வைத்தியர்கள் தேகசோதனைகளை பாராட்டாமல் அசுசிகொண்டிருக்கிற படியால் வைத்திய விஷயங்கள் யாவும் அவர்களுக்குச் சந்தேகமாகயிருக்கிறது.

இந்த (ஆயுர்வேதம் ஆயுசை தெரியப்படுத்தும்நூல்) பிரம்மாவினால் தக்ஷபிரஜாபதிக்கு உபதேசிக்கப்பட்டது. அவர் அதையுணர்ந்து (சிகிச்சாதர்சனம்) யென்னும் சாஸ்திரத்தை உண்டாக்கி பானுவின் புதல்வர்களாகிய அஸ்வனிதேவர்களுக்கு கற்பித்தார். அஸ்வனிதேவர்கள் வைத்தியமுணர்ந்து தேவ வைத்தியர்களானார்கள். அவர்கள் சிகிச்சாரத்தின தந்திரம் பிரம்மஹிக்கியம் என்னும் கிரந்தங்களைச் செய்தார்கள், வைரவ மூர்த்தியாய் கிள்ளிவிடப் பட்ட சதுர்முகனது சிரசை இவர்கள் வைத்திய யுக்தியால் ஒழுங்காக சேர்த்துவிட்டார்கள். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தங்களில் உண்டான காயங்களை தட்சணமே சொஸ் தப்படுத்தினார்கள் முதலில் சல்லியம் என்னும் சாஸ்திரத்தை பழக்கத்திற்கு கொண்டு வந்ததாய் தெரிய வருகிறது நிகழ்காலத்து வைத்தியர்கள் அதை கையாடாமல் அசுசி கொண்டு நாவிதர்களுக்கும், சங்கிலிகளுக்கும் கொடுத்து விட்டார்கள் தேவ அரசனுக்கு உண்டான பாரிச வாதத்தை குணப்படுத்தினார்கள் இன்னும் அனேக அற்புத சிகிச்சைகளை செய்து இவ்விருவர் கீர்த்தியையும் புகழையும் பெற்றார்கள். தேவர் கோன் அவர்களது வைத்திய திறமையை அறிந்து தானும் இவர்களிடத்தில் ஆயுர்வேதத்தை கற்றுக் கொண்டு அனேகருக்கு உபகாரியானான்.

சிலகாலஞ் சென்றபிறகு வைத்தியருக்குள் வர்னாசிரம பேதங்கள் ஏற்படவே சிகிச்சைகளும் வெவ்வேறாக பிரிந்தது பூலோகத்தில் மனிதர்கள் நோய்களால் படுந்துயரத்தை ரிஷிகள் அறிந்து அவைகளை நீக்க மார்க்கத்தை தேட ஆங்கீரசர், பரத்வாஜர், கார்கேயர் முதலான ரிஷிகள் இமயமலையில் சபை கூடினார்கள். தங்கள் ஞானதிருஷ்டியில் மனிதர்களது பிணிகளை நீக்கதேவ்ராஜனது சகாயம் வேண்டியதென்று தெரிந்துக் கொண்டார்கள் பிறகு அச்சபையோ பரத்வாஜரை

தேவலோகத்திற்குப்போய் இந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுவரும்படி வேண்டிக் கொண்டார்கள். பரத்வாஜரும் சம்மதித்து மேல்லோகத்திற்குப் போய் இந்திரனைக் கண்டு பலவித ஆசிகள் கூறி தன்கருத்தை வெளியிட்டார். தேவர்கோனும் சந்தோஷத்தோடு ஆயுர்வேத சூத்திர முழுவதையும் பரத்வாஜருக்கு கற்பித்தார். ஆயுர்வேத முழுவதுங்கற்ற பரத்வாஜர் மறுபடியும் இமயமலைக்குவந்து ஆயுர் வேதமுழுவதையும் ரிஷிகளுக்கு கற்பித்தார். ரிஷிகள் ஆயுர்வேத சூத்திரங்களை முழுதுங் கற்றுணர்ந்து தேசங்கள் தோறும் போய் மனிதர்களின் பிணிகளை சொஸ்தப்படுத்தி ஆங்காங்கு தங்கள் ஆசிரமங்கள் தோறும் வைத்திய கல்விச்சாலைகளை ஏற்படுத்தி வருந்தினவர்களுக்கு கற்பித்து வந்தார்கள்.

அத்திரேயர் தனது ஆசீர்மத்தில் வைத்திய கல்விச்சாலையை ஏற்படுத்தி அனேகஜனங்களுக்கு நூலை கற்பித்து வந்தார் தமது மாணாக்கர்களில் சிறந்தவர்களாகிய அக்கினிவேஸ், பிலர்ஜடுகர்ணர், பராசர், ஹரீதர், க்ஷீரபாணி ஆகிய இவர்களுக்கு ஆயுர்வேத சூத்திரமுழுதுங் கற்பித்துக் கொடுத்தார். இவர்களோ ரோகநிதானம், குணபாடம் முதலிய அத்தியாயங்களைச் செவ்வையாக அறிந்து, பிரபல வைத்தியர்களாகி அனேக ஆண்டுகள் மரணாவஸ்தையன்றி வாழ்ந்தார்களென்று சரகம முதலிய நூற்களில் சொல்லியிருக்கிறது. இவர்கள் தங்கள் தங்கள் பேர் வழியாகச் செய்த நூல்களாவன - அக்கினிவேஸ தந்திரம், பில தந்திரம், ஜடுக்கர்ணசம்ஹிதை, பராசரம்ஹிதம், ஹரீதசம் ஹிதம், க்ஷீரபாணி தந்திரம் ஆகிய இவைகளாம் இக்கிரந்தங்கள் ரிஷிகளுக்கு முன் அரங்கேற்றப்பட்டன. அவைகளுக்குள் அக்கினி வேசதந்திரம் முக்கியமான தென்று பிரகடனைச் செய்தார்கள். சிலகாலம் சென்றபிறகு சரசமுனிவர் இந்நூலைத் திருத்தி சரகம் என்னும் ஒரு நூல்செய்தார், இந்தச் சரகமே பூர்வசிறந்த கிரந்தம்.

வேறு கிரந்தங்களில் செப்பியிருப்பது யென்னவெனில் ஜலபிரளயத்தில் சாஸ்திரங்களெல்லாம் அடித்துக் கொண்டு போனதாகவும், அவைகளை ஆதிசேடன் கண்டெடுத்ததாகவும், அமிர்தத்துக்காக, தேவர்களும், அசுரரும் மந்திரகிரியைக் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது அமிர்த கலசத்தோடு தன்வந்திரி பகவான் பிறந்து இந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுக் கொண்டு சுவர்க்கலோகத்தில் வைத்தியஞ்செய்து மஹாவைத்திய ரென்று

புகழ்பெற்றுப் பூலோகத்து மனிதர்கள் வியாதியால் படுத்துயரத்தை ஞானதிருஷ்டியால் அறிந்து இவர்களது பிணிகளை நாசப்படுத்த காசிராஜாவாக திருவவதாரஞ் செய்தனராம்.

தன்வந்திரி பகவான் பூலோகத்து ஜனங்களை நோய்களிலிருந்து மீட்க இராஜனாக அவதரித்திருப்பதை ரிஷிகள் ஞான திருஷ்டியால் அறிந்து இவரிடத்தில் உபதனுபர் போதாரண்யர், ஷுஸ்ருதர், கோபிரஜர் ஆரப்பிரஹ, ருகீதர் ஆகிய இவர்களை வைத்தியங் கற்றுக் கொள்ளும்படியாய் அனுப்பினார்கள். ரிஷிகளும், தன்வந்திரியான அரசரை வனத்தில் கண்டு நமஸ்கரித்து வைத்தியத்தைக் கற்பிக்கும்படிக்கு பிரார்த்தித்தார்கள். அவர் அதற்கிசைந்து வைத்திய சாஸ்திர முழுதுங்கற்றுக் கொடுத்தார் இச்சங்கதி ஸ்ரீராமர் அரசாண்ட நாட்களில் நடந்ததாக குறித்திருக்கிறது, பிறகு தன்வந்திரி பகவான், ஸுஸ்ருதரை அழைத்து ஆயுர்வேதம் பெரியகிரந்தமாகையால் இக்கால ஜனங்களதை அறிந்துக் கொள்வது கஷ்டம் ஆகவே சகலரும் சுலபமாய் தெரிந்துக் கொள்ளும்படி சங்கிரகித்து ஒரு கிரந்தம் எழுதுமென்றார் அவரும் ஆசானது கட்டளையின் படி ஒரு நூல் செய்தார் அதற்கு ஷுஸ்ருதம் யென்று பெயர் அக்காலத்தில் ஜனங்கள் வியாதிகளற்றவர்களாய் யெங்கும் யுத்தங்கள் அதிகரித்திருந்தமையால் காயசிகிச்சையை அதிகமாய் பாராட்டாமல் ஸஸ்திர சிகிச்சை முக்கியமாய் எழுதியிருக்கிறது.

பூர்வீக ஆயுர்வேத சூத்திரங்களை அனுசரித்து சரகம் ஸுஸ்ருதம் என்கிற இரண்டு கிரந்தங்கள் யெழுதப்பட்டன இக்கிரந்தங்கள் இந்து வைத்தியத்திற்கு மூலகிரந்தங்கள், ரிஷிகள், தேவர்கள், சித்துபுருஷர்கள் முதலானவர்கள் இவ்விரண்டு கிரந்தங்களைக். கற்று தங்கள் தங்கள் இஷ்டப்படி அனேகநூல்களை செய்தார்கள் சரகத்தை யனுசரித்தவர்கள் 'காயவைத்தியர்களானார்கள்' ஸுஸ்ருதத்தை யனுசரித்தவர்கள் ஸஸ்திர வைத்தியர்களானார்கள் ஆயுர்வேதத்திலுள்ள (8) பிரிவுகள் ஸுஸ்ருதத்தில் (6) பிரிவுகாளய்க் காணலாம் (1-வது) சூத்திர ஸ்தானம், (2-வது) நிதானஸ்தானம், (3-வது) சரீரஸ்தானம், (4-வது) சிகிச்சாஸ்தானம், (5-வது) கல்பஸ்தானம், (6-வது) லோகவிஸ்வுத்திர ஸ்தானம் ஆகிய இவைகளாம்.

சரகம், ஸுஸ்ருதம், இவ்விரண்டையும் அனுசரித்து (பாஹட்டாசாரியார், பாஹாட்டம், அஷ்டாங்கஹிருதயம்) என்னும் ஒருநூலை இயற்றினார் இதில் நூதனவிஷயங்க்ளையுங் காணலாம்.

ஆயுர்வேதத்தை சங்கிரகித்து பூர்வாசாரியர்கள் பிரேதங்களை தொடக் கூடாதென்று யாருஞ் சொல்லவில்லை, சரீரஸ்தானத்தை யெழுதுவதற்கு பிரேதத்தை அறுத்துப் பார்க்காமல் யூகையின் மீதில் யெழுவது மிகவும் அசாத்தியம் ஆயுர்வேத ஆரம்பத்திலிருந்து ஸஸ்திர சிகிச்சை வுண்டென தெரிய வருகிறது அது யெந்தகாரணத்தினால் அற்றுப் போயிற்றோ தெரியவில்லை வஸ்திர சிகிச்சை யில்லாத தினாலும், நூதனமாய்க் கற்றுக் கொள்பவன் சரீர அவயவங்களின் பரிசோதனை செய்யாததாலும், இந்து வைத்தியம் இந்த ஹீனஸ்திதிக்கு வந்துவிட்டது சமஸ்கிருதத்திலும் மற்ற பாஷைகளிலும் கணக்கிட முடியாத வைத்திய கிரந்தங்கள் ரிஷிகளாலும், சித்து புருஷர்களாலும், பண்டிதர்களாலும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவைகளை யெடுத்துக் கூறின் கிரந்தம், விஸ்தாரமாய் முடியும். சகல வைத்திய கிரந்தங்கள் சரகம் ஸுஸ்ருதம் என்னும் இரண்டு கிரந்தங்களிலிருந்து யெடுத்து கூறப்பட்ட தல்லது வேறல்ல, ஆகையால் அக்கிரந்தங்களுடைய பெயர்களும், நூலாசிரியர்களையும் இவ்விடமெடுத்து யெழுதுவதால் பிரயோசனமில்லை.

ரோகங்களைப்பற்றிய விதங்கள்

பூர்வாசாரியர்கள் குறித்திருக்கிற (4448) ரோகங்கள் எளிதில் அறியும் பொருட்டு வகுப்பு வகுப்புக்களாக பிரித்திருக்கிறார்கள். அப்பிரிவுகள், ஒருவர் பிரித்தவிதமாய் மற்றொருவர் பிரிக்கவில்லை.

ஆயுர்வேதத்தில் கண்டிருக்கிற வகுப்புகள்.

1-வது, காதரோகங்கள், கிரந்திரோகங்கள்
2 " இந்திரிய ரோகங்கள், சிரோரோகங்கள்
3 " சர்வரோகங்கள்
4 " பூதகணரோகங்கள்
5 " பாலரோகங்கள், பாலிந்தரோகங்கள்
6 " விஷப்பிரதிவிஷம்
7 " ரசாயனம்
8 " மனுஷிய அபிவிர்த்தி

வேறொரு சாஸ்திரத்தின் வகுப்புகள்

1-வது சாத்திய ரோகங்கள்
2 " கஷ்டசாத்திய ரோகங்கள்
3 " அசாத்திய ரோகங்கள்

மற்றொரு சாஸ்திரம்

1-வது பாரம்பரிய ரோகங்கள்
2 " ஆகந்துக ரோகங்கள்

சரகசாஸ்திரம்

1-வது ஆகந்துகரோகங்கள்
2 " நிஜரோகங்கள் அல்லது சரீரரோகங்கள்
3 " மானசரோகங்கள்
4 " ஸ்வாபாவிக ரோகங்கள்

மற்றொரு சாஸ்திரம்

1-வது ஸஸ்திரசாத்திய ரோகங்கள்
2 " சினேயாதிசிரியா சாத்திய ரோகங்கள்

மற்றொரு சாஸ்திரம்

1-வது அதிபாலபிரவர்த்தித ரோகங்கள்
2 " ஜன்மபவபிரவர்த்தித ரோகங்கள்
3 " தோஷபலபிரவர்த்தித ரோகங்கள்
4 " சங்காதபலபிரவர்த்தித ரோகங்கள்.
5 " காலபலபிரவர்த்தித ரோகங்கள்
6 " தெய்வபலபிரவர்த்தித ரோகங்கள்
7 " ஸ்வபாவபலபிரவர்த்தித ரோகங்கள்

வடமொழியில் உள்ள ஆயுர்வேத பாலபோதினி என்னும் அனுபோக வயித்திய பிரம்மரகசியம் என்ற நூலை மொழி பெயர்த்து முதலிலிருந்து அச்சிடக்கருதி இந்நூலின் பிரயோஜனத்தை சகலருக்குங் காட்டும்படிக்கு அதிலுள்ள சிலகைமுறைகளை மாத்திரம் இரண்டு பாகங்களாக மகாஸ்ரீ, ஜெகந்நாதபுரம் கோஷாயி சுவாமிகள் அனுக்கிரகத்தின்படி யெனது சினேகிதரான சிதுமணவூர் முனிசாமி முதலியாரவர்களால் அச்சிட்டிருக்கின்றது. அம்முறைகளது பிரயோசனத்தைக் கண்டு களிகூர்ந்து, இந்தியா, சிலோன், சிங்கப்பூர், முதலிய இடங்களிலிருந்து அனேக வைத்தியர்கள் இன்னூலை சாங்கோ பாங்கமாய் மொழி பெயர்த்து வசனரூபமாய் அச்சிடும்படி கேட்டுக் கொண்டமையால் மேற்படி கிரந்தத்தை மொழி பெயர்த்து

சரகம், ஸுஸ்ருதம், பரஹாட்டம், சித்தஸார்ணவம், அஸ்வனிசம் ஹிதம், கார்க்கேயம், மாதவநிதானம், முதலிய கிரதங்களின் அபிப்பிராயங் களையும், சிகிச்சைகளையும் கூடச் சேர்த்து மூன்றாவது பாகமுதல் கிரந்த பூர்த்தி ஆகிறவரையிலும் வசனமாக வெளியிடலாகினேன்.

மூன்றாவது பாகத்தில், வைத்திய பரிபாஷையும், வைத்தியர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள், கஷாயவிதி, சுரவிதி, சூரணவிதி, மருந்து அருந்தும் காலம், மாத்திரைவிதி, ஔஷதங் கூட்டுமுறை, பஸ்பவிதி, பத்தியபிரசம்சை, சிகிச்சைகள் பேதம், அரோக்கிய பிரசம்சை, தைலாஞ்சனகுணம், கிரந்த ஆரம்பம், வைத்தியன் லக்ஷணம், தூதபரீட்சை முதலியவைகள் சரீரரலக்ஷணம், இரத்தவிஷய விவாணம், ஜடராக்கினி விசாரம், வாதாதி பிரகுருதி பேதவிவரணம், நாடிகள் விவரணம், நாடி பரீட்சை, அஷ்டவித பரிட்சைகள், சுரங்களும் அவைகளுக்கு சிகிச்சைகளும் அடங்கியிருக்கின்றன.

சில ஒஷதிகளின் பெயர்களை தமிழில் காண்பது மிக கஷ்டமாய் இருந்தபடியால் அவைகளை வடமொழிகளாகவே அச்சிட்டிருக்கிறது.

இலக்கண இலக்கிய விதியின்படி இந்நூல் அச்சிட்டால் கல்விமான்களுக்கல்லது மற்றவர்களுக்கு பயன்படாது. ஆகையால் சிறிய குழந்தையும் இதிலுள்ள விஷயங்கள் தெரிந்துக் கொள்ளும்படியான சுலபநடையுடன் எழுதலாயிற்று. வடமொழியிலிருந்து இக்கிரந்தம் மொழி பெயர்த்தால் அளவிட முடியாத சொற்குற்றங்கள், பொருட்குற்றங்கள், அடங்கியிருக்கின்றன ஆகையால் இதைக் கண்ணோக்கும் கனவான்கள் சலத்தினின்று பாலையுண்ணும் அன்னத்தைப்போல் பிழைகளை பாராட்டாமல் குணங்களை நாடுவீர்களென்று நம்புகின்றேன்.

இப்படிக்கு,
ஜெ.சீதாராம்பிரசாத்.

வைத்திய பரிபாஷை

திரிகடுகு	சுக்கு, மிளகு, திப்பிலி
திரிபலை	கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல்
திரிகந்தம்	சந்தனம், அகில்கட்டை, தேவதாரி
திரிசுகந்தம்	சாதிக்காய், சாபத்திரி, லவங்கம்
திரிபழுகம்	பால், நெய், தேன்
திரிமஞ்சள்	மஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள்
திரிமூலம்	திப்பிலிமூலம், சித்திரமூலம், கண்டுமூலம்
திரிபத்திரி	லவங்கப்பத்திரி, ஜாபத்திரி, தாளிசப்பத்திரி
திரிநிம்பம்	வேம்பு, நிலைவேம்பு, கறிவேம்பு
திரிசாதம்	லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாககேசரம்

முக்கூட்டுயெண்ணெய், நெய், யெள்ளெண்ணெய், ஆமணக்கு யெண்ணெய்

முக்காலம்	காலை, உச்சி, மாலை
திரிதோஷம்	வாதம், பித்தம், சிலேத்துமம்
முப்பழம்	வாழைப்பழம், மாம்பழம், பெலாப்பழம்
சதுர்சாதம்	லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, நாககேசரம்

ஏலம்மஹா பஞ்சமூலம் வில்வவேர், மின்னவேர், ஈச்சுரமுலி, பாதிரிவேர், பெருமரவேர்பட்டை

லகுபஞ்சமூலம் கண்டங்கத்திரி, இருவிதம், ஈரிலைத்தாமரை, மூன்றிலைத்தாமரை, நெருஞ்சி

மேற்படி (10) சரக்குகள் கூட்டுக்கு தசமூலமென்பது பெயர்

திருபணபஞ்சமூலம் நாணல்வேர், தர்பைவேர், கரும்புவேர், நெல்பயிர்வேர், வெள்ளை, அருகம்வேர்

பஞ்சகோலம் சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம்

மஞ்சவாசம் லவுங்கம், ஏலம், கருப்பூரம், ஜாதிக்காய், தக்கோலம்

பஞ்ச அமிர்தம் பால், சருக்கரை, நெய், தேன், வாழைப்பழம்

அஷ்டமூலம் முத்தக்காசு, விஷ்ணுகிரந்தி, பேய்ப்புடல்வேர், சீந்தில்கிழங்கு, கஞ்சாங்கோரை, ஆடாதோடைவேர், கருந்துளசி, பற்பாடகம்.

அஷ்டவர்க்கம் சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம்.

பரிமளதிரவியம் ஜாதிக்காய், ஏலம், லவங்கம், லவங்கப்பட்டை, ஜாபத்திரி

உப்புபேதங்கள் அமரி உப்பு, கறிஉப்பு, கந்தஉப்பு, கல்லுப்பு, கம்பு உப்பு, அல்லது வெடியுப்பு, அல்லது பொட்டிலுப்பு, சவட்டுப்பு, அட்டுப்பு, கருப்புப்பு, வளையலுப்பு, இந்துப்பு, மாஉப்பு, வழலையுப்பு.

காரங்களாவன வெங்காரம், சீனக்காரம், சவுக்காரம், அப்ளாகாரம்.

க்ஷாரங்களாவன நவாக்ஷாரம், யவாக்ஷாரம், சத்திக்ஷாரம், தும்பக்ஷாரம்.

நவஇரத்தினங்களாவன மாணிக்கம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பவளம், முத்து, மரகதம், நீலம்.

உலோகங்கள் பொன், வெள்ளி, தாம்பிரம், பித்தளை, வெண்கலம், தரா, வெள்ளீயம், காரீயம், துத்தநாகம், இரும்பு, எஃகு, காந்தம், மண்டூரம்.

பாஷாண வகையாவன பாதரசம், பூரம், லிங்கம், வீரம், கந்தம், தாளகம், அரிதாரம், மனோசிலை, மிருதார்சிங்கி, வெள்ளைப்பாஷாணம், கௌரி பாஷாணம், நீலாஞ்சன பாஷாணம், தொட்டிபாஷாணம், மடல் துத்தம், மயில்துத்தம், துரிசி, அன்னபேதி முதலியவைகளாம்.

லேக்கியம் நாக்கால்நக்கிச் சாப்பிடும்படியான மருந்து
சோஷியம் உறுஞ்சி விழுங்கும்படியான மருந்து
பேயம் குடிக்கும்படியான மருந்து
காதியம் மென்று தின்னும்படியான மருந்து.

எரிப்பு திட்டம் (2) விரல்கனமுள்ள ஒருவிறகால் எரிப்பது, தீபாக்கினி என்பது, மேற்படி கனமுள்ள (2) விறகால் எரிப்பது, கமலாக்கினி, மேற்படி கனமுள்ள (4-5) விரகால் எரிப்பது, காடாக்கினி.

புட்திட்டம் (2) முழம் அகலம், (2) முழம் உயரம், வரட்டியை அடுக்கிப் போடுகிற புடத்திற்குப் பெயர் கஜபுடம் என்பது ஒருமுழபுடம்

லகுபுடம் என்பது ஒரு ஜாண் உயரத்திற்குட்பட்ட புடத்திற்குப் பெயர் குக்குடபுடம் என்பது.

லங்கணம், ஆகாரம் இல்லாமல் வைப்பதற்கு லங்கணம் என்று பெயர், இதில் மூன்றுவிதம் சுத்தலங்கணம், தாரலங்கணம், லகுலங்கணம் ஆம்.

வைத்தியர்கள்
கவனிக்க வேண்டிய
சில முக்கிய விஷயங்கள்

செம்பு, பித்தளை, வெங்கலம், இவைகளில் மருந்துகள் செய்யவும் வைக்கவுங்கூடாது, பிரயோகத்தில் அனேகசரக்குகளைச் சேர்ப்பது நல்லதல்ல, பிரயோகத்திலிருக்கிற முக்கியச் சரக்கின்குணத்தை யதிகப்படுத்த இரண்டொன்றும், அந்தமுக்கிய சரக்குக்கேதாகிலும் துற்குணமிருந்தால் அதைச் சமனப்படுத்த ஒன்றிரண்டும் இருந்தால்போதும் நிகழ்காலத்து ஜனங்களது தேகஸ்திதியையும், பூசராத்தையும், காலங்களின் பேதாபேங்களையும் அறிந்து நூலையே ஸ்திரமெனநம்பி மாற்றாமலிருக்கப்படாதென்பது அவிவேகம்.

மற்றொரு முக்கிய விஷயம் வைத்தியன் அறிந்திருக்கவேண்டிய தென்னவெனில் ஒவ்வொரு ஔஷதமும் சரீரத்தில் வியாபித்து செய்கிற குணங்களேயாம் அப்படியறிந்துக்கொண்டவனே பதார்த்தங்களை ரோகத்தின்மேல் உபயோகப்படுத்த பாத்திரனாகிறான் குணமும் பிரமாணமும் அறியாமல், பதார்த்தங்களை உபயோகப்படுத்துவதால், நமது தேசத்து திவ்விய ஔஷதங்கள் மேல் இங்கிலீஷ் ஜனங்கள் தூஷணை நேரிட்டிருக்கின்றன சிலவிடங்களில் அகாலமிருத்தியு சம்பவிக்கின்றது, இது சகலமும் அறிந்தவிஷயம்.

(4) மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அபினிசேர்ந்த மருந்துகள் கொடக்கலாகாது, ரசம்சேர்ந்த ஔஷதங்கள் குழந்தைகளுக்கு அதிகமாய்க் கொடுத்த போதிலும் கெடுதிசெய்யும்.

ரசம், கந்தகம், பாஷாணம், இவைகள் குரூரமருந்துகள் ரோகச்சிகிச்சைகளில் இவைகளைக் கையாடுவதைப்பார்க்கிலும் மூலிகைகளின் மேல் ஞாபகம்வைத்தால், ரோகிகள் வருத்தமடையார்கள்.

ஔஷதம் பிரயோகங்களோடு ரோகிக்கு நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது. சுப்பிரவஸ்திரம் கட்டிக் கொள்ளும்படி செய்பவேண்டியது. துர்க்கந்த பதார்த்தங்களையும், சனக்கூட்டத்தையும் நீக்கிவைக்க வேண்டியது, ரோகியை நல்லகாற்றுள்ள விடத்தில் இருக்கச்செய்யவேண்டியது, ரோகிக்கு வேண்டியவைகளை நடப்பிக்க ஒரு ஆள் அருகாமையிலிருக்கும் படிச்செய்யவேண்டியது மேற்கூறிய விஷயங்களில் வைத்தியர்கள் ஞாபகம் வைத்து நடப்பிக்க வேண்டிய தவசியம், அவசியம், அவசியம்.

ஔஷதங்கள் செய்வதில் புதியசரக்குகளையே உபயோகப்படுத்த வேண்டியது. ஆனால் வாயுவிளங்கம், திப்பிலி, வெல்லம், கொத்தமல்லி, தேன் முதலிய பதார்த்தங்கள் ஒரு வருஷத்திற்கு மேல் பட்டதாய் இருக்க வேண்டியது. ஆடாதோடைதண்ணீர்விட்டான்கிழங்கு சீந்திற்கொடி, கொடிபூசினிவேர், கொடிசம்பாலைப்பட்டை, பெரியசோம்பு, அமுக்கிறாக்கிழங்கு நன்னாரிவேர், நிலவேம்பு இவை முதலிய மூலிகைகளில்யெப்பொழுதும் பச்சையாகத்தானே உபயோகப்படுத்தல் வேண்டும் ஆயின் அவைகள் பச்சை யென்று இடைக்குமேல் இடவும் படாது குறைக்கவும் படாது மேலும் மூலிகையின் பிரிவுகள் சொல்லாத இடங்களில், அம்மூலிகையின் வேர்களையே சேர்த்துக்கொள்ளவும்.

கஷாயங்கள், சூரணங்கள் முதலியவைகளில் சேர்க்கப்படும் மூலிகைகளில் ஏதாவது அகப்படாமல் போனால், அவைகளுக்ககுபதில் சமானகுணமுடைய வேறுமூலிகையை "தன்வந்திரி நிகண்டின்படி சேர்த்துக்கொள்ள வேண்டியது" ஔஷதங்களில் சேர்க்கப்படும் திரவியங்களது பிரமாணம் சொல்லப்படாத இடங்களில் சமயிடையாய்ச் சேர்த்துக்கொள்ளவும்.

கியாழவிதி

கியாழங்கள் காச்சுவதில் உபயோகப்படுஞ் சரக்குகளை வகை ஒன்றுக்கு (4) துலாம் எடையாய் சேகரித்து, அவைகளை இடித்து ஒருபாண்டத்தில்போட்டு அதில் ஒருபடி சுத்தஜலம் விட்டு மந்தாக்கினியால் எட்டில் ஒருபங்காய்ச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டியது, சிறியவர்களுக்கு (¼) துலாம் எடைமுதல் ஒருதுலாம் எடைவரைக்குங் கொடுக்கலாம், பெரியவர்கள் (4) துலாம் வரையிலும் குடிக்கலாம், மேலும் கியாழத்திற்கு நாலிலொருபாகமும்,

பித்ததோஷத்தில் எட்டிலொருபாகமும், சிலேத்தும தோஷத்தில் பதினாறில் ஒருபாகமும், சேர்த்துக்கொள்ள வேண்டியது. தேனைச் சேர்ப்பதில், சிலேத்துமதோஷத்தில் கியாழத்திற்கு நாலிலொருபாகமும், பித்தரோகத்தில் எட்டிலொருபாகமும், வாதரோகத்தில் பதினாறிலொருபாகமும் சேர்த்துக்கொள்ள வேண்டியது. ஆகிலும், சீரகம், குக்கிலம், சூரங்கள், சிலாசத்து, பெருங்காயம் முதலியவைகள் (¼) துலாமிற்கு அதிகமாய்ச் சேர்க்கப்படாது பால், வெல்லம், நெய், எண்ணெய், சுரசம், சூரணம் முதலியவைகள். ஒருதுலாத்திற்கு அதிகமாய் கியாழத்தில் சேர்க்கப்படாது.

(கல்கம்) அல்லது சரசவிதி இலை, பச்சைவேர், பச்சைப்பட்டை, இவைகளில் ஒன்றை இடித்துப் பிழிந்து தனிரசத்துக்கு, சுரம் அல்லது சுவரசகஷாயம் என்று பெயர். அதிமுதரம், அரத்தை, இவ்வித உலர்ந்த சரக்குகளைத் தண்ணீர்விட்டிடித்து அல்லது அரைத்து ரசம்பிழிந்துக் கொள்ள வேண்டியது இதற்குக் கல்ககஷாயம் என்று பெயர்.

(சூரணவிதி) சிலபதார்த்தங்களை வெண்கலம், அல்லது இரும்பு உரலிலும், மிருதுவான பதார்த்தங்கள் கல்லுரல் அல்லது கலுவத்திலுமிட்டு தூள்செய்துக்கொள்ள வேண்டியது. மாசிக்காய். கடுக்காய், இவ்வித துவர்ப்புபதார்த்தங்களை இரும்புஉரலிலிட்டு தூள்செய்யலாகாது. கறுத்துக் கெட்டுப்போகும். தூள்செய்வதற்கு வேண்டிய கருவிகளாகிய உரல், உலக்கை, கலுவம், கத்தி இவை முதலியவைகள் சுத்தியாய் இருக்க வேண்டியது. யோகங்களில் சேருகிறசரக்குகளை முதல்சூரணித்து பிறகு நிறுத்து எடுத்துக் கொள்ளவேண்டியது முதல்நிறுத்துக்கொண்டு பிறகு சூரணிப்பதில் சேதமாகிற சரக்கு நிறைகுறையும். அப்படி சூரணித்து வஸ்திரகாயஞ் செய்த சூரணத்தை ஸ்திரீ புருஷாள் அரைதுலாம் முதல் ஒருதுலாம் நிறைவரையிலும், சிறியவர்கள் ஏழுகுண்டுமணி எடைமுதல் இருபத்தொன்று குண்டுமணி எடைவரையிலும், தேகத்துவங்கள் வியாதியின் பலன், தேசகாலங்களை அறிந்து அருந்தல் வேண்டியது. இச்சூரணத்துடன் வெல்லம் சேர்க்கவேண்டுமானால் சமஎடையாயும், சர்க்கரையானால் இரட்டிப்பாயும், பெருங்காயம் நெய்யில் வறுத்துக் கொண்டும், நெய்யை பெருங்காயத்திற்கு இரட்டிப்பாயும், ஜலம் சூரணத்திற்கு நாலுபங்கு அதிகமாயும் சேர்ந்துக்கொள்ள வேண்டியது.

சூரணங்களாகிலும், லேகியங்களாகிலும், மாத்திரைகளாகிலும், அருந்தினபிறகு பாலைக் குடிக்கவேண்டுமானால், வாதரோகத்திற்கு (12)

துலாம், பித்தரோகத்திற்கு (8) துலாம் சிலேத்துமரோகத்திற்கு (4) துலாம் குடிக்கவேண்டியது, சூரணத்தை முழுகிறவரையிலும் பால்வார்த்து அது சுண்டுகிற வரையில் உலர்த்திவைக்கிறது சுத்தியெனப்படும்.

ஔஷதசேவனகாலம், மருந்து அருந்துங்காலம்

கியாழங்கள் சூரணங்கள், உபயோகிக்கும் காலங்கள் கூறாதயிடங்களில், காலைமாலை அருந்தவேண்டும் ஆனால் வமனவிரேசனங்களுக்கு, வாந்திக்குப் பேதிக்கும் காலையில் மருந்து பிரயோகப்படுத்த வேண்டியது. வாந்தியாவது, பேதியாவது, செவ்வையாய் ஆனபிறகு லேசாய்புசிக்க வேண்டியது. அபானவாயுவு கீழ்நோக்குகிறவரைவிலும் ஔஷதங்களை பிரயோகப்படுத்த வேண்டியிருந்தால் போஜனத்திற்கு முன்பாகவே ஔஷதத்தை பிரயோகிக்கவேண்டியது. அசீரணத்தை ஹரிக்கப்பண்ணும் சகல ஔஷதங்களையும் புசிக்கும் காலத்தில்தானே பிரயோகிக்கவேண்டியது. அக்கினிதீபனத்தையுண்டாக்கும் சகல ஔஷதங்களை போஜன மத்தியில் பிரயோகிக்க வேண்டியது. வியானனை சமனிக்கப்பண்ணும் ஔஷதங்களை புசித்த பிறகு பிரயோகிக்கவேண்டியது. விக்கல் கம்பவாயுவு என்னும் இவைகளுக்கும், சகல ஔஷதங்களையும் புசிக்கும் காலத்தில் தானே பிரயோகிக்கவேண்டியது. அக்கினிதீபனத்தையுண்டாக்கும் சகல ஔஷதங்களை போஜனமத்தியில் பிரயோகிக்கவேண்டியது. விக்கல் கம்பவாயு என்னும் இவைகளுக்கு போஜனத்திற்கு முந்தியாகிலும், போஜனகாலத்திலாகிலும், ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது. பிராணவாதம் பித்தம் இவைகளில் மாலை போஜனமான பிறகு ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது. கொமட்டல், விக்கல், இரைப்பு, விஷம், தோஷம், தாகம் இவைகளில் புசிப்புக்கு முன்பாகிலும், அல்லது புசித்தபிறகாகிலும், ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டும். கர்ணரோகம் நேத்திரரோகம், நாசிரோகம், சிரோரோகம், இவைகளது வாதாதி தோஷங்கள் ஹரிக்கிறதற்கு பிரயோகிக்கும் ஔஷதங்களை போஜன மத்தியகாலங்களிலும், இரவிலும் பிரயோகிக்க வேண்டும்.

மாத்திரைவிதி

மாத்திரைகள் செய்யும்பொழுது அதில் சேரும் சரக்குகள் யெல்லாவற்றையும் சூரணித்து கலுவத்திலிட்டு சொல்லியிருக்கிற அனுபானங்களால் கையில் ஒட்டாமலிருக்கும்படி அரைத்து

மாத்திரைகள் செய்து அதிலுள்ள நீர் உலறுகிறவரையிலும் நிழலிலுலர்த்த வேண்டியது. மாத்திரைகளில் ரசம் கந்தகம் முதலியவைகள் சேர்க்கவேண்டியிருந்தால், அவைகளை வெவ்வேறாக கல்வத்தில் இடித்து பிறகு மற்றசரக்குகளை கூட்டிக்கொண்டு சகலமும் கலக்கும்படி செவ்வையாய் அரைக்க வேண்டியது.

சினேஹபாகவிதி ஔஷதம் கூட்டுமுறை

நெய்யி, எண்ணெய், ஜலம், த்ரவபதார்த்தங்கள் இவைகளை சரக்குகளின் கூட்டைவிட நான்குபங்கு அதிகமாய் சேர்க்கவேண்டியது. சரக்குகள் மிருதுவானவைகளா யிருந்தால் அவைகளுக்கு நான்குபங்கு அதிகமாய் ஜலத்தையாகிலும் சாற்றையாகிலும் சேர்க்கவேண்டியது. சரக்குகள் கடினமாயிருந்தால் எட்டுபங்கு அதிகமாய் சேர்க்கவேண்டியது. மிகவும் கடினமான சரக்குகளாயிருந்தால் பதினாலுபங்கு அதிகமாய் சேர்த்துக்கொள்ள வேண்டியது. தைலங்களில் சுரசங்களை கால்பலமாகிலும், காலே அரிக்கால் பாகமாகிலும், அரைபாகமாகிலும் சேர்க்கவேண்டியது. பால், தயிர், சுரசம், மோர் முதலியவைகளை தைலங்களில் கலக்க வேண்டியிருந்தால் அவைகளுக்குச் சமயிடையாய் சேர்க்கவேண்டியது. மேலும் சுரசங்களை தைலங்களில் கலக்கும்பொழுது அவைகள் அரைக்கால் பாகத்திற்கு அதிகமாயிருக்கக்கூடாது. இவ்விதமாய் இடைகளை சமமாய்க்கூட்டி மந்தாக்கினியில் தைலங்களை காச்ச வேண்டியது. தைலங்கள் மிளகுபதமானவுடனே அல்லது அதை அக்கினியில் போட்டால் சப்தமொன்றும் இல்லாமலிருந்தால் பக்குவம் திரண்டதென்று அறிந்துபாண்டத்தையிறக்கி அனல் ஆறினவுடன் வடிக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டியது.

பஸ்பவிதி

தாம்பிரம் முதலிய லோகங்களை சாஸ்திரங்களில் பெரியவர்களின் அனுபவத்தால் சொல்லிய பிரகாரம் சுத்திசெய்யவேண்டியது. சுத்தியானபிறகு அவைகளை ரேக்குகளாயும், பொடிகளாயும் தட்டிக்கொண்டு மூலிகைகளை அரைத்து அதற்கு லேபனம்செய்து சிப்பியில்வைத்து அதின்வாயை சீலைமண்செய்து வெய்யலில் உலர்த்தி கஜபுடம்போட அவைகள் பஸ்பமாகும். அந்தபஸ்பத்தை யெடுத்து அனுபான விசேஷங்களால் அரைத்து பில்லைதட்டி சூரியபுடம் வைத்து மறுபடியும் மூசையில்வைத்து

சீலைமண்செய்து புடம்வைக்க பஸ்பமாகும். இதே மாதிரியாய் பிரதிபுடத்திலும் செய்ய வேண்டியது.

இக்கலியுகத்து ஜனங்கள் மிகவும் துர்பலராயும், மந்தாக்கினியுடையவர்கள். ஆனால் தேசம், காலம், வயது, பிரகிருதி தேகதத்துவங்களை செவ்வையாய் அறிந்துவைத்தியன் ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது.

கல்வங்கள் லட்சணம்

கருங்கல்வத்தில ஔஷதங்களரைத்து உட்கொண்டால் வலியும் ஆரோக்கியமும் உண்டாம். வெள்ளை கலுவத்தில் பலம் க்ஷீணிக்கும். பச்சை கலுவத்தில் திரிதோஷ சமனமாகும். சிவப்பு கலுவத்தில் திரிதோஷங்கள் உண்டாகும்.

பத்திய பிரசம்சை

ரோகிக்கு பத்தியத்தைவிட வேறுமருந்து கிடையாது பத்தியமில்லாதவனுக்கு ஔஷதப் பிரயோகங்களால் பிரயோசனமில்லை. ஆகையால் பத்தியத்துடன் ஔஷதங்களை அருந்த வேண்டியது.

சிகிச்சை பேதங்கள்

தெய்வசிகிச்சை. ரசம், கந்தம், பாஷாணம் முதலியதாதுவர்க்க ஔஷதங்களைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மானிஷசிகிச்சை. ஒஷதி, மூலிகைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

ராக்ஷசசிகிச்சை. காரம், க்ஷாரம், அக்கினி, சஸ்திரம், இவை முதலியவைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

மாந்திரீகசிகிச்சை. சித்தசிகிச்சை, மந்திரம், பூசை, ஜபம் முதலியவைகளைக்கொண்டு செய்யும் சிகிச்சை.

ஆரோக்கிய பிரசம்சை
நோய் அன்றி யிருக்க

சஹஜமாய் வருஷத்திற்கிரண்டு விசை வாந்திக்கும், மூன்று விசைபேதிக்கும், நான்குவிசை நசியமும், ஆறுவிசை அஞ்சனமும், செய்துக்கொள்ளவேண்டியது. தேகத்தினிட தத்துவங்களை அறிந்து யுக்தானுசாரமாய் வமன விரோசனங்களை அருந்த வேண்டியது.

தைலாப்யஞ்சன குணம்

தைலாப்யஞ்சனத்தால் சர்மகதரோகமும், பாதப்யஞ்சனத்தால் நேத்திரரோகமும், நேத்திராப்யஞ்சனத்தால் தந்த தோஷங்களும், ஸ்ரோத்ராப்யஞ்சனத்தால் தந்தரோகங்களும், சிரோப்யஞ்சனத்தால் சகலரோகங்களும், தேஹாப்யஞ்சனத்தால் சர்மகத சகலரோகங்களும் நசிக்கும்.

உ
தேவிசகாயம்

திரிமூர்த்திகளின் தூதி

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

பத்தொடரு பான்மூன்றிற் பெருசுர மாதியநோய்ப்
பரப்பையெல்லாம்
கொத்தொடுத் துரைக்குமிந்த நூற்புகலத் தத்தநடை
கூடிக்கையில்
ஒத்தொருநா டியிற்சுழலும் வாதபித்த வையம்போ
லொன்றிற் றோன்றி
முத்தொழிலைப் புரியுமொரு மூவரிரு பதமலரை
முடிமேற் கொள்வாம்.

வைத்தியன் லட்சணம்

கிரமமாய் ஆசாரியனிடத்தில் வைத்திய சாஸ்திரத்தை அப்பிய சித்தவனும், அமிருதஹஸ்தனும், சிகிச்சைசெய்வதில் நுட்பமான புத்தியுடையவனும், பேராசையற்றவனும், தைரியசாலியும், பிராணி களிடத்து தயையுடையவனும், தேஹதத்துவசாஸ்திரம், பதார்த்த குணசாஸ்திரம், யோகசாஸ்திரம் செவ்வையாய் அப்பியசித்து தன்தேகத்தைப்போல் இதரதேகத்தைபாவித்து ப்ரணயபிரவேசத்தால் இதர சரீர தத்துவங்களை அறிகிறதுபோல், ரோகியினது சரீரதத்து வங்களை அறிந்து சிகிச்சைபண்ணுகின்றவன் தான் மஹாவைத்தியன் அவன் தான் ஈஸ்வரனுக்கு சமானன்.

துஷ்டவைத்திய லட்சணம்

எந்தவைத்தியன் சாஸ்திரானுபவமில்லாது சகலமும் தெரிந்தவன் போல் நடித்துக்கொண்டு சிகிச்சைசெய்ய முயல்கின்றானோ அவனை விஷத்தைப்போல் பார்க்கவேண்டியது.

தூதபரீக்ஷை கூப்பிடவருபவன் பரீக்ஷை

குருடு - கூன் - செவிடுமுதலிய அங்கவைகலயம உடையவன், பயமுள்ளவன், தீனன், கெட்டியாயும் அமங்களமாயும் பேசுவோன், ரூபஹீனன், மலினவஸ்திரத்தைத் தரித்தோன், சஸ்திரங்களை தரித்தோன், கோலைகையேந்தினவன், ரோகபீடிதன், எப்பொழுதும் கெட்டசெய்கைகளை செய்வோன், சிகப்புவர்ண புஷ்பமாலிகாலங்கிருதன், சிகப்பு சந்தனத்தைப் பூசிக்கொண்டவன், சர்வாங்கமும் தைலத்தைப் பூசிக்கொண்டவன், சேற்றைப் பூசிக்கொண்டவன், அசுசியா யிருப்போன், கருப்பு சாவரத்தை தரித்தவன், தான்வரும்பொழுது மற்றொருவனை துணையாய் இட்டுக்கொண்டு வருபவன், ஜடை தரித்தவன், பெண்கள், கிழவன், நானாவித வர்ணமுள்ள ஈரத்துணியை யாவது, அல்லது ஒரே வஸ்திரத்தை தரித்தவன், கழுதை, ஒட்டகம், எறுமை இவைகளின் மீது சவாரிசெய்து வருபவன், சுரஹீனன், தூரத்திலிருந்து கூப்பிடுவோன் முதலிய லக்ஷணங்களுடையவன் ரோகியிடத்திலிருந்து வைத்தியனைக் கூப்பிட வந்தால் அந்த பிணியாளியிடத்திற்கு வைத்தியன் போக வேண்டியதில்லை.

அசுபசகுணங்கள்

வைத்தியன் ரோகியிடத்திற்குப் போகும்பொழுது துர்க்கந்தபதார்த்தங்கள், கதாவர்ப்புள்ள பதார்த்தங்கள், உப்பு, பச்சைப்பயிர், எள்ளுமுதலான கருப்புதானியங்கள், வெல்லம், விறகு, விரட்டி, வைக்கல், அமேத்தியம், மிகவும் துர்க்கந்தமாய் நாள்சென்று கெட்டபதார்த்தங்கள், சேறு, தைலம், நெய், வெற்றிபாத்திரங்கள், வலை, உரிகள், முதலியவைகள் தென்பட்டாலும், துர்பாஷைகளை பேசுவோன், தும்புகிறவன், கூக்குரலிட்டமுகிறவன், வாந்திசெய்வோன், சண்டாளன், குரூரமான ஆயுதங்களைதரித்தவன் முதலியவர்கள் எதிர் நோக்கினாலும், குரூரமானபட்சிகள், நாலுகால்ஜந்துக்கள் இவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டு ஊளையிடுகிறசத்தத்தைக் கேட்டாலும், யுத்தம், கலகம், அபாயம் இவைகளைப் பார்த்தாலும், மேடைகள், வீடுமண்டலங்கள், பூர்ணகும்பங்கள், தற்செயலாய் பூமியின்மீது விழுந்தாலும், குதிரை-ஆசனம்-படுக்கை-முகம்-குப்புறக்கிடக்கிறதைப் 'பார்த்தாலும், உடும்பு-ஒணான்-பூனை-குரங்கு முதலியவைகள் மார்க்கத்தில் குறுக்கிட்டாலும், ரோகியின் வீட்டிற்குப்புகும்பொழுது அவ்வீட்டிலிருந்து மங்களகரமான

வஸ்துக்கள் வெளியில்வந்தாலும், இவைகளெல்லாம் அசுபசகுனங்கள். ஆகையால் வைத்தியன் அப்பிணியாளியிடத்திற்குப் போகப்படாது.

சுபசகுனங்கள்

வைத்தியன் ரோகிவீட்டிற்குப்போகும்பொழுது, புருஷனிடது பக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கும், பெண்வலது பக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்கும்போனால் சுபமுண்டாகும் வினைதீரும். ஆனால் ஆண்யானை-ஆண்கோவேறு கழுதை-பெண் கறுப்புநாய்-இவைகள் எதிரிட்டால் அசுபமுண்டாகும். குடை பசு-பிராம்மணர்கள் -கன்னிகை மாமிசம்-கள்- வாரவனிதை கோரோஜனம் செவிக்கின்பங் கொடுக்கும் சிருங்காரரச பிரதான மானபாட்டு -வாலிபன் - உத்தமனானயோகி எதிரிட்டால் சுபமுண்டாகும் அதிசீக்கிரத்தில் நோய்கள் தீரும்.

சரீரலட்சணம்

இந்தச்சரீரம் (72) ஆவிரநரம்புகளும், (3½) கோடிரோமங்களும், சர்மதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது என்கிற (7) தாதுக்களும், பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற (5) பூதங்களும், அவைகளாவன (25) தத்துவங்களும், (5) கோசங்களும், (9) துவாரங்களும், என்கிற இவைகளுடன் கூடி (96) அங்குலமுயரமாயும் இருக்கின்றது.

தேக தத்துவ சாஸ்திர சங்கிரகம்

அன்னபானாதிகளின் இரசத்தால் உண்டான இந்தமனித தேகத்தின் மேல்பாகத்தில் (3) கோசங்கள் இருக்கின்றன.அவைகளில், வயிற்றில் அன்னமயக்கோசம், மார்பில் பிராணமயக்கோசம், சிரசில் மனோமயக்கோசங்கள் இருக்கின்றன. இந்த மனோமயக்கோசத்தில் விக்கியானமயம், ஆனந்தமயம், என்கிற இரண்டுகோசங்கள் கலந்திருக்கின்றன.

இத்தேகம் (900) நரம்புகள், (310) அஸ்திகள், (107) மர்மஸ்தானங்கள், (700) போலுநரம்புகள், (24) இரத்தவியாபகமான பேலுநரம்புகள், (500) மாமிசப்பைகள், (16) கண்டநரம்புகள் யென்கிறவைகளுடன் சேர்ந்திருக்கிறது, யௌவன காலத்தில் (556) பலம் இரத்தம் தேகத்திலிருக்கிறது, ஆண் தேகத்தில் (10) துவாரங்களும், பெண்தேகத்தில் (13) துவாரங்களும் இருக்கின்றன. இச்சரீரத்தில் (7)

கலைகள், (7) ஆசயங்கள் (7) தாதுக்கள், (7) உபதாதுக்கள், (7) பொரைகள் இருக்கின்றன.

மேலும் மார்பில் சிலேத்துமதாது, ஜீவரக்தாயம் மென்கிறவைகள் இருக்கின்றன. இவைகளுக்கீழ் வஸ்தியென்கிற மூத்திரசாயம் யிருக்கிறது. ஆனால் பெண்களுக்கு (3) ரக்தாசயங்கள் அதிகமாய் யிருக்கின்றன.

வாதமானது வீரியவந்தமாயும், ரஜோகுண சுரூபமாயும், சீதளமாயும் இருக்கிறது. பித்தமானது உஷ்ணமாயும், சத்துவ குணசுரூபமாயும் இருக்கிறது. சிலேஷ்மமானது தாமதகுண சுரூபமாயும், குருவாயும், சீதளமாயும் இருக்கிறது. சிராதமனீ என்கிற நாடிகள் நாபிஸ்தானத்தில் இருக்கின்றன.

இரத்த விஷய விவரணம்

இப்பூமியின் கண் மனிதனால் புசிக்கப்பட்ட அன்னபானாதிகளால் ஜனித்த ரசதாது முதலில் கஞ்சிபோலும், பிறகு அதிசூட்சுமமான சலரூபமாயும் மாறுகின்றது. பிறகு அந்த ரசம் பிராணவாயுவால் அடிக்கப்பட்டுசுத்தமாகி தேஜசுடன் கலந்து ரத்தமாகிறது. அந்த ரத்தத்தையே பிராணரசமென்றும், பிராணா தாரத்திற்குக் காரணமாகையால் ஜீவரசமென்றும் சொல்லுகிறார்கள். இது இடைவிடாமல் தேகமுழுதும் வியாபித்துச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது, இந்த ஜீவரசமானது விஷத்தால் பிறந்த நுரையுடனும் அதிகரித்த சீதளவிஷத்தாலும் சேருமாகில் அப்பொழுது அந்தந்த சிலேஷ்மபித்தத்தால்கலந்து மார்பில் கட்டிகட்டும் இப்படிரத்தம் ஸ்தம்பித் திருக்கும்பொழுது தேகியானவன் அசைவற்றமரம்போல் கிடப்பான். ஹிருதயத்திலுள்ள ரத்தகோசம் ஸ்தம்பித்தால் அப்பொழுதேபிராணன் போய்விடும். ஆகையால் மார்பில் இரத்தங் கட்டியாய் கட்டியிருக்கும்பொழுதே, ஊஷ்ணமான ஔஷதங்களை பிரயோகிக்க வேண்டியது. அப்படிபிரயோகிப்பதால் ரத்தமானது கரைந்து தேகமுழுதும்வியாபித்து, தேகியை அசையச்செய்யும் சாதாரணமாய் ரத்தமானது தேகத்தில் இருக்கவேண்டிய அளவிற்கு அதிகரித்தாலும், குறைந்தாலும் நோயல்லதுமரணமாவது சம்பவிக்கச் செய்யாமற் போகாது ஆகையால் பிராணாதாரத்திற்கு ரத்தவியாபகமன்றி வேறாதாரங்கிடையாது. இதை வயித்தியர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

ஜடராக்கினி விசாரம்

தேகபோஷணைக்காக புசிக்கப்பட்ட அன்ன பானாதிகள் போய் சேருகிற இடத்துக்கு (ஆமாசயம்-அன்னாசயம்) என்று பேர். ஆமாசயத்தில் ஜனித்து அன்னபானாதிகளைத் தஹிக்கிற திரவத்துக்கு (ஜடராக்கினி-உதராக்கினி) என்று பேர் அந்த உதராக்கினிகிரமமாய் இருந்தால் சமாக்கினியென்றும் இடந்தப்பிநின்றால் விஷமாக்கினி யென்றும் விசேஷ பதார்த்தங்களை தஹிக்கும்படி அவ்வளவு சக்தி யுண்டாயிருந்தால் தீக்ஷணாக்கினி யென்றுஞ் சாதாரணமாய் உண்ணுகிற உண்டியை தஹிக்க வல்லமையில்லாம லிருந்தால் மந்தாக்கினி யென்றும் பெயராம்.

வ்தாதி பிரகிருதிபேத விவரணம்

வாதமானது. வெப்பம், இலேசத்துவம், குளிர்ச்சி, சுறசுறப்பு, அணுத்துவமாகியவைகளை ரூபமாகப் பெற்றிருக்கிறது. காது, நாபியின்கீழ், இடுப்பு, தொடை, எலும்பு, சருமம், முதலிய இடங்களில் சஞ்சரித்துக்கொண்டு நாபியின்கீழ் ஸ்தானத்திலேயே குடி கொண்டிருக் கிறது. மேலும் சகலமும் பெற்றிருக்கிறதேகத்தை மனோவுச்சாகம் உசுவாசநிசுவாசங்கள், அபானவாயு, தும்மல், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு, சப்ததாதுக்களின் சுபாவங்கள், நேத்திராதி இந்திரியங்களின் சுபாவங்கள் ஆகிய இவைகளைக்கொண்டு போஷித்துதான் விகாரமில்லாம லிருப்பதாம்.

வாயுவானது. பிராணன், உதானன், வியானன், சமானன், அபானன், என (5) பிரிவாயும், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற (5) உபவாயுக்களாயும் விவரிக்கப்பட்டு இருக்கிறது.

பிராணவாயுவானது. தலையேவீடாகக் குடிகொண்டு மார்பிலும், கழுத்திலும், சஞ்சரித்துக்கொண்டு, ஹிருதயம், பஞ்சேந்திரியங்கள், சித்தம், புத்தி, யென்பவைகளை தன்வசப்படுத்திக்கொண்டு, உமிழ்தல், இருமல், ஏப்பம், நிசுவாசம், அன்னத்தையுட் செலுத்தல். என்னும் இச்செய்கைகளையுண்டாக்கும். இது உசுவாசநிசுவாசரூபமாகவிருக்கும் காரணத்தால் பிராணவாயுவெனப் பெயர் பெற்றது, (பிராணன்-யென்பது) சுவாசரூபம்).

உதானவாயுவானது மார்பே இடமாக விருந்து மூக்கு கண்டம், தொப்புள், யென்கிற மூன்றிடங்களில் சஞ்சரித்து, பேச்சுண்டாவதற்குக்

காரணமாகி சரீரத்திற்கு வண்ணம், ஒளி நினைப்பு, யென்னும் குணங்களை உண்டாக்கிறது (உது-என்பது, மேல்)

வியானவாயுவானது. இருதயத்தையே இடமாக்கிக்கொண்டு தலைமுதல் பாதம் வரைக்குஞ் சஞ்சரித்துக் கொண்டு நடத்தல், குனிதல், நிமிர்தல், இமைத்தல், விழித்தல் என்னுஞ் செய்கைகளை உண்டாக்குகிறது (வியானன் என்பது, பரவுதல்)

சமானவாயுவானது. நாபிஸ்தானமே இடமாக்கிக் கொண்டு வயிறுமுற்றிலுஞ்சஞ்சரித்துக்கொண்டு புசிக்கும் அன்னபானாதிகளை உள்ளிழுத்துக்கொண்டு அவைகளைச் சீரணிப்பித்து, சாரம்வேறு, திப்பிலி வேறாகப்பிரித்து, மலமூத்திரமாகச் செய்கின்றது (சமம் - என்பது, நடு)

அபானவாயுவானது. குதஸ்தானமே இடமாக்கிக் கொண்டு இடுப்பின் பூட்டிலும், ஆண்குறி, பெண்குறிகளிலும், அடிவயிற்றிலும், அடிதொடையிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு, சுக்கிலம், சோணிதம், மலம், மூத்திரம், கருப்பம் என்னுமிவை முதலியவைகளை வெளிப்படுத்துகின்றது. (அபானம்-என்பது, கீழ்)

இந்த பஞ்சவாயுக்களு மல்லாமல் வாயிலிருந்து வாந்தி பண்ணச்செய்வது (நாகனென்றும்) நேத்திரத்திலிருந்து விழிக்கச்செய்வது (கூர்மனென்றும்) மூக்கிலிருந்து குருகுருத்துத் தும்மச்செய்வது (கிருகரனென்றும்) கொட்டாவி கொள்ளச் செய்வது (தேவதத்த னென்றும்) வீங்கச்செய்வது (தனஞ்சயனென்றும்) ஐந்து உபவாயுக்கள் இருக்கின்றன.

பித்தமானது. அதிஉஷ்ணம், இலேசத்துவம், பளபளப்பு, விரோசனம், சலத்தைதருதல், ஆகிய இவைகளை ரூபமாகப் பெற்றிருக்கின்றது. உந்தி, கண், ஆமம், ரசதாது, உதிரம், வியர்வை, சருமம், ருசியையுணர்த்த நாவிலூறுகின்ற ஜலம் ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக்கொண்டு விசேஷமாக உந்திஸ்தானத்திலேயே இருக்கும். மேலும், சீரணம், உஷ்ணம், பார்வை, பசிதாகம், சுவை, காந்தி, புத்தி, ஞாபகம், சவுரியம், மிருது, முதலிய குணங்களைக்கொண்டு தேகத்தைப் போஷித்துத் தான்விகாரமில்லாமலிருக்கின்றது. அதுஅனலம், இரஞ்சகம், சாதகம், ஆலோசகம், பிராசகம் என ஐந்துபிரிவாய் இருக்கின்றது.

அனிலபித்தமானது (ஆமாசுயஸ்தானத்துக்கும் சீதகட்டு ஸ்தானத்துக்கும் நாபிஸ்தானத்துக்கும்) மத்தியில் இருந்து பஞ்சபூதங்களுக்குப் பிரதானமாகித் தனது அக்கினியால் சகல பதார்த்தங்களை வரளப்பண்ணி, சீரணிக்கச்செய்து மலம்சலம் வெவ்வேறாகப்பிரித்து மற்றநான்கு வகைப் பித்தங்களுக்கு பலத்தைக்கொடுத்து காப்பாற்றி வருகிறது அப்படிக் காப்பாற்றி வருவதால் இதற்கு பாசகபித்தமென்றும் சொல்லுவார்கள். (அனலம்-என்பது, அக்கினி பாகம்) என்பது, அன்பு.)

ரஞ்சகபித்தமானது. சீதக்கட்டு ஸ்தானத்திலிருந்து ரசதாதுவைப் போஷித்துவருகிறது, (ரஞ்சகம்-என்பது, போஷித்தல்)

சாதகபித்தமானது. இருதய ஸ்தானத்தில் வாசம்பண்ணிக்கொண்டு, அறிவு, புத்தி, அபிமானம் முதலானவைகளைக் கொண்டு இஷ்டமான பிரயோஜனங்களைச் சாதித்து வருகிறது (சாதகம் - என்பது, துணைக்காரணம்)

ஆலோசக பித்தமானது. கண்களில் வாசம் பண்ணிக் கொண்டு எல்லாப்பொருள்களையும் நன்றாய்த் தெரியப்படுத்துகின்றது. (ஆலோசகம் - என்பது, அறிவிப்பு)

பிராசக பித்தமானது. சருமத்தில் வாசம்பண்ணிக் கொண்டு சருமத்தில் ஒளிகெடாமல் காந்தியை யுண்டுபண்ணுகின்றது. (பிரகாசம் - என்பது, காந்தி)

சிலேஷ்மமானது. வழுவழுப்பு, சீதளம், கனத்தல், மந்தத்துவம், நாறுதல், மினமினுப்பு, ஸ்திரம் ஆகிய இவைகளை ரூபமாகப் பெற்றிருக்கின்றது. மார்பு, சிரசு, நாசி, நா, கண்டம், புத்தி, கணுக்கள், உரோமம், ஆமம், ரசதாது, மேதோதாது ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக்கொண்டு விசேஷமாக மார்புஸ்தானத்திலேயே இருக்கின்றது, மேலும் மழமழப்பு, அசையாமை, கீல்களுக்குறுதி முதலிய குணங்களைக்கொண்டு தேகத்தை போஷித்துத் தான்விகார மில்லாமலிருக்கின்றது இது அவலம் பகம், கிலேதகம், போதகம், தருப்பகம், சந்திகம், என ஐந்து பிரிவாகி இதயஸ்தானத்தி லிருக்கின்றது.

அவலம்பக சிலேஷ்மமானது. இதய ஸ்தானத்திலேயே வாசம் பண்ணிக் கொண்டு, தனது சுபாவ பராக்கிரமத்தைக் கொண்டு

... திரிகஸ்தானத்திற்கும் அதாவது (முதுகின்கீழ் நடுத்தண்டெலும்பின் மூட்டும் இரண்டு தொடைகளி னெலும்பின் மூட்டுஞ் சேர்ந்திருக்கும் இடமாம்) அன்னசாரத்தைக் கொண்டு இதயஸ்தானத்துக்கும், சலத்தொழிலைக் கொண்டு மற்ற நான்கு சிலேஷ்மங்களுங்கும். ஆதாரமாய் இருக்கின்றது இது ஒவ்வொரு வேளை யிளகியும், கீல்களைவிட்டு நீங்கியும், பின்பு கூடியும் இருக்கும். இப்படியிருந்தாலும் நிகழ்ச்சிரூபமாகவே இருக்கும். இந்தத்தொழிலைக்கொண்டு மற்ற நான்கு சிலேஷ்மங்களுக்கும் ஆதாரமாய் இருக்கின்றது. (அவலம்பகம் யென்பது, பற்றுதல்)

கிலேதக சிலேஷ்மமானது. ஆமாசய ஸ்தானத்திலேயே வாசம்பண்ணிக்கொண்டு உண்ணப்பட்ட அன்னபானாதிகளை மிருதுவாக்குகிறது. (கிலேதகம் - என்பது, சரம்)

போதக சிலேஷ்மமானது. நாவில் வாசம் பண்ணிக்கொண்டு உண்ணுகிற அறுசுவைகளையும் தெரிவிக்கின்றது. (போதகம்-என்பது, உணர்தல்)

தருப்பக சிலேத்துமமானது. சிரசில் வாசம் பண்ணிக்கொண்டு இரண்டு கண்களுக்குங் குளிர்ச்சியைத் தருகின்றது (தருப்பகம்-என்பது, சுகம்)

சந்திகசிலேஷ்மமானது, கீல்களில் வாசம் பண்ணிக்கொண்டு சுபாவமாக சகலகீல்களையுந் தளரச்செய்கின்றது, (சந்திகம்-என்பது, கீல்)

வாதத்துக்கு பாதம் முதல் நாபிவரைக்கும் இடமென்றும் பித்தத்துக்கு நாபிமுதல் கண்டம் வரைக்கும் இடமென்றும் சிலேஷ்மத்துக்கு கண்டமுதல் சிரசுவரைக்கும் இடமென்றும் சிலநூலர்சிறியர்கள் எழுதியிருக்கிறார்கள் அன்றியும் மலத்தைப்பற்றியது வாதமென்றும், மூத்திரத்தைப் பற்றியது பித்தமென்றும், விந்துவைப்பற்றியது சிலேஷ்மமென்றும், சிலசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வாதத்தின் தொழில்

சரீரத்தில் கருநிறம், செந்நிறம், சஞ்சரிப்பு, பிகுத்தல், முடக்குதல், நோவு, நித்திரையின்மை, இளைப்பு, ரோகம், குத்தல், குடைச்சல்,

துவைத்தல்போலும், பிடித்தல்போலுமிருக்கும், திமிர், முறுக்குதல், குன்றல், புரளல், சந்தோஷம், தாகம், நடுக்கல், நடித்தல், குழிவிழுதல், களைத்தல், அவயவபின்னம், திருகிக்கொள்ளல், அசைதல், மரம்போற் கிடத்தல், துவர்ப்பாக வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை உண்டாக்குதலாம்.

பித்தத்தின் தொழில்

சரீரத்தில் மஞ்சள்நிறம், வெப்பம், தாகம், ரோகமில்லாது போலிருத்தல், ஜீரணவேளையிற் காங்கைசெய்தல், வியர்வை, எப்போதும் வியர்வைகசிதல், ஞாபகம், கோபம், அசைவின்மை, மூர்ச்சை, அவமதிப்பு, புளிப்பாகவும், கசப்பாகவும், காரமாகவும், வாய் நீரூரல், என்னு மிக்குணங்களை யுண்டாக்குதலாம்.

சிலேஷ்மத்தின் தொழில்

சரீரத்தில் சுவேதநிறம், வழுவழுப்பு, பாரிப்பு, தினவு, சீதளம், மரியாதை, கீல்களசையாமை, கர்வம், மந்தகுணம், மினுமினுப்பு, விரைவில் சீரணித்தல், அநித்திரை, உப்பாகவும், தித்திப்பாகவும், வாய் நீரூறல் யென்னும் இக்குணங்களை யுண்டாக்குதலாம். இதுவெகுநாள் நீடித்து உபத்திரவம் பண்ணத்தக்க தென்றறிக.

நாடி, ஸ்பர்சம், ரூபம், சப்தம், நேத்திரம், மலம், மூத்திரம், நாக்கு, என்கிற எட்டுவிதப் பரிட்சைகளால் தேகத்தின் தோஷங்களை யறியலாம்.

நாடி பார்க்கும் விதி

வைத்தியன் ரோகியின் வலதுகையை முழங்கை முதல் தனது இடதுகையால் செவ்வையாய் பிடித்து அந்தக்கையின் அங்குஷ்டமூலத்தில் உட்புறமத்தியில் தனது இடதுகைவிரல்களால் வாயுவின் கதியை பரிட்சித்து ரோகநிதானம் அறியவேண்டியது.

தைல அப்பியங்கன ஸ்நானம்பண்ணினவனுக்கும், தூங்கி யெழுந்தவனுக்கும், புசித்தவனுக்கும், ஆற்றின் வெள்ளத்தைப் போல்நாடி அதிவேகமாய் நடக்குமாகையால் அக்காலங்களில் நாடி பரீட்சிக்கக்கூடாது.

ஸ்திரீபுருஷநாடி பேதம்

பெண்களுக்கு இடதுகையிலும், ஆண்களுக்கு வலதுகையிலும் நாடி பரீட்சிக்க வேண்டியதென்று பரமேஸ்வரர் பார்வதிக்கு அருளினார். ஏன் புருஷர்களுக்கு வலதுகரமும் அபலைகளுக்கு யிடதுகரமும் பரீட்சிக்கவேண்டியதென்று உமாதேவியார் கேட்கச் சொல்லுகிறார்.

ஓ பெண்கள் நாயகமே! நாபி கூர்மமானது பெண்களுக்கு மேல்நோக்கியும் புருஷர்களுக்கு கீழ்நோக்கியுமிருக்கிறபடியால் ஆண்பெண்களுக்கு நாடிகள் வித்தியாசமாயிருக்கும் ஆகையால் புருஷாளுக்கு வலதுகையும், பெண்களுக்கு இடதுகையும், பேடியாயிருந்தால் அவனது குறியை அனுசரித்து வலது அல்லது இடது கைநாடிகளை பரீட்சிக்க வேண்டியது.

ஜீவசாட்சி நாடிகதனம்

ஓ பெண்ணே! ஆங்குஷ்டமூலத்தின் நாடி ஜீவசாட்சியென்று சொல்லப்படுகின்றது. அதின் சலனவிசேஷத்தால் ரோகியின் சுகதுக்கங்களை அறிய வேண்டியது. மேலும் அதற்குஸ்னாயுவென்றும், வசயென்றும், ஸிம்ஸ்ரவென்றும், தமனியென்றும், தாமனியென்றும், தந்துகியென்றும், ஜீவிதஞ்ஞுவென்றும், சிரவென்றும் பெயர்களுண்டு.

நாடி சின்னம்

ரோகியின் மணிபந்தத்தில் வைத்தியன் பரீட்சிக்கும்பொழுது (தனது தர்ஜனிவிரல் பெருவிரலின் பக்கத்துவிரல்) ஸ்பரீட்சிக்கும்நாடி வாதமென்றும் (மத்யமவிரல் நடுவில்) ஸ்பரீட்சிக்கும் நாடிபித்தமென்றும், (அனாமிகை அதின் பக்கத்துவிரல்) ஸ்பரீட்சிக்கும் நாடி சிலேத்துமமென்று அறியவேண்டியது. ஒ கௌரி முன்பு உனக்கு யோகதத்துவார்த்தங்களை போதிக்கும்பொழுது துயில்கொண்டதுபோல் இப்போழுது மிராமல் கவனமாய்க் கேட்டிருவென்று சொல்லுகிறார் நடுவிரலில் நாடி அதிவேகமாய் நடந்தால்வாதமென்றும், தர்ஜனியில் நடந்தால் பித்தமென்றும், அனாமிகையில் சிலேத்துமமென்றும், மத்யமதர்ஜனிகளில் கலந்து அதிவேகமாய் நடந்தால் பித்தவாதமென்றும், மத்யம அனாமிகைகளில் கலந்து அதிதீவிரமாய் நடந்தால் வாதசீதளமென்றும், மத்யமாங்குளி நாடிநடக்காமல் அனாமிகை

தர்ஜனிநாடிகள் கலந்து அதிவேகமாய் நடந்தால் பித்தசீதளமென்றும், வாதபித்த சிலேத்துமங்கள் மூன்றும் நடந்தால் திரிதோஷம் அல்லது சன்னிபாதமென்றுஞ் சொல்லவேண்டியத வாயு வீசும்பொழுது அதின் எதிருள்ள பதார்த்தத்தை அதிகமாயும், பின்னுள்ள பதார்த்தத்தை மந்தமாயும், அசையச்செய்வதுபோல் மத்தியிலுள்ள வாதநாடி முதலில் இருக்கும் பித்தநாடியை அதிகமாயும், பின்னாகயிருக்கும் சிலேத்தும நாடியை மந்தமாயும் அசையச் செய்கின்றது.

அஷ்டதாது ஸ்தானங்கள்

ஹஸ்தத்வயகத நாடிகள் இரண்டு, பாதத்வயகத நாடிகள் இரண்டு, கழுத்தின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு, நாசிகையின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு, எனநாடிகள் எட்டு. பெருவிரலின் மணிகட்டுக்குக்கீழ் மூன்று அங்குல ஸ்தானங்களிலும், பாதத்தை அனுசரித்த நாடிகள் குல்ப பிரதேசம் அதாவது காலின்மணிக்கட்டுக்குக்கீழ் மூன்று அங்குல ஸ்தானங்களிலும், கழுத்தில் அனுசரித்தநாடிகள் இருபக்கத்தில் இரண்டு அங்குல ஸ்தானங்களிலும், நாசிகையில் அனுசரித்தநாடிகள் ஒரு அங்குல ஸ்தானங்களிலும் ஆக இவ்வெட்டு ஸ்தானங்களிலும், பிரணவாயுவு அனுசரித்திருக்கின்றது.

அசீரணம், மந்தம், சுரம், பசி, வாதபித்த சிலேத்துமங்கள் என்னுமிவைகளை கைநாடிகளால் அறிய வேண்டியது.

அகந்துகசுரம், தாகம், ஆயாசம், புணர்ச்சி, பலஹீனம், பயம், சோகம், கோபம் என்னுமிவைகளைக் கழுத்து நாடிகளால் அறிய வேண்டியது.

மரணம், ஜீவிதம், காமம், நேத்திரரோகம், தலைநோவு, காதுநோவு, முகரோகம் என்னுமிவைகளை நாசிகையின் நாடிகளால் அறியவேண்டியது.

ஸ்வஸ்த நாடிலட்சணம்

சாதாரணமாய் நோயில்லாமனிதனது நாடிக்கு (பூலதா) என்றுசொல்லப்படும் அந்தநாடி சர்ப்பத்தின் அசைதல்போலும், ஸ்திரமாயும், பலிஷ்டமாயும் நடக்கும். காலையில் சீதளமாயும், மத்தியானத்தில் உஷ்ணமாயும், மாலையில் தீவிரமாயும் நடக்கும்.

தோஷ நாடி

நாடி வாதரோகத்தில் குறுக்காயும், பித்தரோகத்தில் சஞ்சலமாயும், சிலேத்துமத்தில் ஸ்திரமாயும், துவந்தத்தில் கலப்பாயும் நடக்கும்.

வாதபித்தத்தில் நாடி பாம்பு, அட்டைபோலும், பித்தத்தில் காக்கை ஊர்க்குருவி தவளைபோலும், சிலேத்துமத்தில் அன்னம், மயில், புறா, கோழி, இவைகளைப்போல் நடக்கும்.

வாதபித்தத்தில் நாடி சர்ப்பத்தைப்போலும், தவக்களைப்போலும் நடக்கும்.

வாத சிலேத்துமத்தில் பாம்பு, அன்னம். இவைகளைப் போல் நடக்கும்.

பித்த சிலேத்துமத்தில் மண்டூரம், மயில், இவைகளின் நடையாயும், சூட்சுமமாயும், சீதளமாயும் இருக்கும்.

திரிதோஷத்தால் உண்டான சன்னிபாதத்தில் நாடி மந்தமாயும், நின்றுநின்று சூட்சுமமாயும் புஜத்தின்மீதிலும் கையிலும் அநேகவிதமாய் நடக்கிறதுபோலும் இல்லாததுபோலும் தோன்றும்.

எவனுடைய நாடிதோஷங்கள் அதிகரித்துமிகவும் ஸ்திரமாயும், மந்தமாயும், சூட்சுமமாயும், குறுக்காயும், நடக்குமோ அந்தநாடியை அசாத்தியநாடி என்று அறிய வேண்டியது.

எந்தநாடி வியாகூலமாயும், சீதளமாயும், மந்தமாயும், மந்தமாய் நின்றுநின்றும் இருப்பிடத்தை விட்டு விட்டும் நடக்குமோ அந்தநாடியை மரணகுறிநாடி என்று எண்ணவேண்டியது.

நாசி கை சீதளமாயும், கண்ணிமியில்லாமலும், நாடி தன்யிடத்தைவிட்டும் இருக்குமோ அவன் அந்தக்ஷணத்தில் மரணமாவான்.

எவனுடையநாடி, தன்யிடத்தைவிட்டு கடுகு அளவு அப்புரம் சலித்திருக்குமோ அவன் மூன்று நாளையில் மரணமடைவான்.

ஸ்பரிச லட்சணம்

வாதரோகத்தில் சரீரம் உஷ்ணமாயும், பித்தத்தில் அதிக உஷ்ணமாயாகிலும், அல்லது அதிகசீதளமாயாகிலும், சிலேத்துமத்தில் சீதளமாயும், துவந்தத்தில் பலவிதமாயும் இருக்கும்.

ரூபலட்சணம்

சரீரமானது வாதரோகத்தில் கறுப்பாயும், பித்தத்தில் மஞ்சளாயும், அல்லது சிவப்பாயும், சிலேத்துமத்தில் வெண்மையாயும், துவந்தத்தில் கலப்பாயும், சந்நிபாதத்தில் அனேக வர்ணங்களாயும் இருக்கின்றது.

சத்த லட்சணம்

வாதத்தில் சமமான வார்த்தைகள், பித்தத்தில் சிரிப்பு பிதற்றல், சிலேத்துமத்தில் ஹீனசுரம், தவந்தத்தில் கல்ந்த வார்த்தை.

ரோகோற்பத்தி

சாதாரணமாய் மனிதனுக்கு ரோகங்கள் உண்டாவதற்கு ஆறுவிதகாரணங்கள் கூறப்பட்டிருக்கின்றது. அவை யெவை எனில் அதிகமாய் நீர் அருந்தல், அதிகமாய் மாதரின் புணர்ச்சி, பகலில்நித்திரை, இரவில் ஜாகரணம், மலமூத்திரத்தை அடக்குதல் என்பவைகளாம்.

சுரகோஸ்வரூபம்

உருத்திரமானது கோபாக்கினியில் ஜனித்தவனும், சகலபூதங்களை தபிக்கச்செய்கிறவனும், மூன்றுகால்கள், மூன்றுசிரங்கள் பெரியவயிறு என்னுமிவைகளை யுடையவனும், புலியின் சர்மத்தை போர்வையுடையவனும், தேகச்சாயை கபிலவர்ண முடையவனும், மஞ்சள் நிறமுள்ள கண்களை யுடையவனும், குட்டையான தொடையெலும்பை யுடையவனும், பயங்கரமான உருவமுடையவனும், அதிகவலுவையுடையவனும், லோகநாசத்திற்காக பிறந்தவனுமாகிய புருஷனை சுரமென்று சொல்லுவார்கள். இந்த சுரமென்னும் புருஷன் தாவரசங்கமங்களான சகலவஸ்துக்களில் வெவ்வேறான பெயர்களால் விளங்குகின்றான். இவன்பிராணிகளில் உற்பத்திக் காலத்திலும் முடிவுகாலத்திலும் தோன்றுகிறான். இவனதுதாபத்தை தேவர்கள், மனிதர்கள், தவிர மற்றப்பிராணிகள் சகிக்கமாட்டார்கள்.

சுரமானது சகலரோகங்களில் பிரதானமாய்ப்பாவத்தால் சனித்தால் பாபசொரூபமுடைய தன்மரணத்தை யுண்டுபண்ணுவதாயும், சரீரத்தைவிருத்திசெய்யும் இந்திரியத்தை நாசப்படுத்தி மரண சொரூபத்தையுடையதாயு மிருக்கிறது. இது தக்கனது யாகத்தை நாசப்படுத்திய மகோதேவரது கபாலநேத்திரத்திலிருந்து ஜனித்த கோபசொரூபத்தையுடையது, உற்பத்தி நாசனம் இவைகளில் மோகத்தையுண்டாக்கும். மிகவும் சந்தாபசொரூபமுடையது, இது அஹீத ஆகாரங்கள் அருந்துவதாலும், மாதரின்புணர்ச்சி மலமூத்திரமடக்குதல் இந்திரியங்களுக்கு அதிசந்தோஷம் அதிபீடனம்முதலிய அஹிதா சரங்களால் உற்பவிக்கின்றது. இதுபலபெயர்களால் பசுபட்சியாகி சகலஜந்துகளில் வர்த்திக்கின்றது. ரோகபதி, பாப்மா, மிருத்யு, ஓஜோசிந, அந்தக என்னும் நாமங்களால் விவரிக்கப்படுகின்றது.

ஜீவரஜாதி பேதங்கள்

ஆனைகளுக்கு உண்டாகுஞ் சுரத்திற்கு பாகலமென்றும், மலைகளுக்குண்டாகுஞ்சுரத்திற்கு சிலாசித்து வென்றும், பாம்புகளுக் குண்டாகுஞ் சுரம் நிர்மோகமென்றும், தண்ணீருக்குண்டாகுஞ் சுரத்திற்கு நீலிகாவென்றும், பசுக்களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு சீதிகாவென்றும், நிலத்திற்குண்டாகுஞ் சுரத்திற்கு ஊஷரமென்றும், நாய்களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு அளர்க்க மென்றும், புலிகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு திருஷ்டி ப்ரத்யவரோதனமென்றும், குதிரைகளுக்குண்டாகுஞ் சுரத்திற்கு அபஸ்முருதியென்றும், மயில் களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு சிகோத்பேதமென்றும், காக்கைகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு பிரவாஹதமென்றும், பூனைகளுக் குண்டா குஞ்சுரம் பிருஷ்டபேதமென்றும், அல்லது ரோமநாசன மென்றும், பெருச்சாளிக்குண்டாகுஞ்சுரம் தத்துரமென்றும், கிளிகளுக் குண்டாகும் சுரம் பித்திகாயமென்றும், சிறுத்தைமுதலிய ஜந்துக்களுக்கு உண்டாகும் சுரம் ஸ்ரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதர் களுக்கு மித்தியா ஆஹாராதிகளில் சுரமுண்டாகும். யானை முதலிய காட்டுமிருகங்களுக்கு மரணகாலத்தில் தற்கடையாய் சுரமுண்டாகும். இந்தப்பிரகாரம் அநேகவிதங்களாய் சுரங்கள் சிவனது கோப சொரூபத்தை யுடையதாயிருக்கின்றன.

நிகழ்காலத்துக்குச் சனங்களுக்குச் சம்பவிக்கிற சுரங்
களின் நிதானங்களையுஞ் சிகிச்சைகளையுந் தெரியக்
காட்டி பிறகு மற்றசுரங்களைக் கிரமமாய்
சொல்லுகிறேன்.

ஆயிக சுரலட்சண மென்பது முறைக்காய்ச்சலின் லட்சணம்

(மாதவநிதானம்) சரீரத்தில் குளிர், சரீரஞ் சிலுசிலுத்தல் அதிகதாகம், சந்தாபம், மார்நோய், தலைவலி, தேகத்தில் குடைச்சல், வயிற்றுபக்கங்களில் சூலை, ஆகாதவஸ்துகள் மீது இஷ்டம், சோம்பல், பாதங்கள்-மார்பு-முகம்-என்னும், இடங்களில் வீக்கம், சரீரத்தில் பாண்டுவர்ணம், கண்களில் மஞ்சள்நிறம், நேத்திரங்களில் ரத்தம் இல்லாமல் வெளுத்திருத்தல், அதிசாரம், சரீரத்தில் ஜாட்டியம், கை-கால்-எரிச்சல், என்னும் லக்ஷணங்களுடையது ஆஹிககரம்.

சீதசுரலட்சணம்

(சித்திரசாரவணம்) தேகத்தில் குளிர்ச்சி, நடுக்கல், தினவு, சோம்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, பிரமை என்னும் குறியுடையது சீதளம்.

(மதாந்திரம்) சிலேத்துமவாதங்கள் இரண்டும் முதலில் ரசதாதுவை அனுசரித்து நடுக்கலையும், குளிரையும் உண்டாக்கிப் பிறகு சுரத்தை உண்டுபண்ணும் அந்த சிலேத்தும வாதங்கள் சாந்தமானபிறகு பித்தம் பிரகோபித்து தாகத்தை யுண்டாக்கும், இந்தகுறிகள் சாதாரணமாய் சீதபூர்வ சுரங்களுக்குள்ள தென்று அறிய வேண்டியது.

சீதசுரங்களுக்கு பாசுபதாஸ்திரரசம் (ஆயுள்வேதம்)

ரசபஸ்பம்	சுத்திசெய்தமனோசிலை
தாம்பிரபஸ்பம்	சுத்திசெய்தசங்குபாஷாணம்
சுத்திசெய்தகெந்தகம்	சுத்திசெய்த கெளரிபாஷாணம்

இவைகளைச் சமயிடையாய்க்கொண்டு கல்வத்திலிட்டு கரசனாங்கன்னியிலை ரசத்தால் இரண்டுநாள் விடாமல் அரைத்துமாத்திரைகள் செய்து சிப்பியில் வைத்து சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் இரண்டு ஜாமங்கள் அதாவது கந்தகம் ஜீரணம் ஆகிறவரைக்கும் காடாக்கினியாய் எரித்துச் சாங்கசீதலத்தில் யெடுத்து இரண்டு குண்டுமணி யெடை இஞ்சி ரசத்தில் ஒருநாளுக்கு இரண்டுமுறை கொடுத்தால் சகல ஆயிகசுரங்களுஞ் சூரியனைக்கண்ட பனிபோல் விட்டுநீங்கும்.

மஹாபாசுபதாஸ்திரரசம்

சுத்திசெய்த	சங்குபாஷாணம்	பாகம்	2
"	கபரி	"	1
"	நேர்வாளம்	"	1
"	லிங்கம்	"	1

இந்த தினுசுகளை கல்வத்திலிட்டு கருவூமத்தை இரசத்தால் ஒருஜாமமரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து அதில் ஒன்றை குளிர்ந்தவுடனே இஞ்சிரசத்தில் கொடுக்கவும் இந்தப்பிரகாரம் மூன்றுவேளைகொடுத்தால் ஒருநாள் இரண்டுநாள் மூன்றுநாள் முறைக்காய்ச்சல்களும் சீதசுரங்கள், மன்மததாபத்தினால் தபிக்கிற பூங்கொடியாள் தன்நாயகனைக் கண்டமாத்திரத்தில் யெப்படி மன்மதாக்கினிவிட்டு ஒடுமோ அவ்வண்ணம் இந்த ஔஷதப்பிரயோகத்தினால் சகல முறை சீதசுரங்களும் விலகிடும். இதற்குப் பத்தியம் உப்பில்லாத கஞ்சி கொடுக்கவும். இதை திரிராத்திரி சுரங்களுக்குங் கொடுக்கலாம் இந்த மகாபாசுபதாஸ்திரரசம் சீதசுரங்களை நாசப்படுத்த சிவபெருமானால் உமாதேவியாருக்கு உபதேசிக்கப்பட்டதென்று சித்யவித்யாபூ என்னும் ரிஷிசொல்லியிருக்கிறார்.

இரண்டுநாட் கொருவிசைவருந்
துவாஹிக சுரலட்சணம்

(பாஹாட்டம்) கைகாலெரிச்சல், முகம் பாண்டு வர்ணமாய்ச் சோகையுடன் கூடியிருந்த்தல், வயிற்றில் எரிச்சல், வெளியில் சீதளமாய் யிருத்தல், இந்த லட்சணங்களுடையது துவாஹிகசுரம். மேற்கண்ட பாசுபதாஸ்திர மாத்திரையைக் கொடுக்க நீங்கும்.

திரிராத்திரிசுரம்
மூன்று நாளுக் கொருமுறை வருஞ்சுரம்.

(பூஜ்யபாரியம்) தேகத்தில் கருப்புநிறம், கண்டத்தில் கோழை, தாபம், தேககுளிர்ந்திருத்தல் என்னும் குணங்களுடையது திரிராத்திசுரம்.

பிரதாபமார்த்தாண்டரசம்

சுத்திசெய்த	ரசம்	பாகம்	1
"	லிங்கம்	"	2
"	நேர்வாளம்	"	4

இவைகளைக் கல்வத்திலிட்டு நாகதந்திப்பட்டை இரசத்தால் இரண்டு ஜாமம் அரைத்து (8) குன்றிமணியெடை மாத்திரைகளுருட்டி வெல்லத் தண்ணீரிலாவது அல்லது சர்க்கரைத் தண்ணீரிலாவது கொடுத்தால் பேதியாகும். இதைக்கொடுத்த மறுநாளிலிருந்து அடியிற்கண்டச் சுராங்குச மாத்திரையை (7) நாளைக்குக் கொடுக்கச் சொஸ்தமாகும்.

சுராங்குசம்

சுத்திசெய்த	இரசம்	பலம்	1
"	கந்தகம்	"	1
"	நாபி	"	1
"	ஊமத்தன்விரை	"	3
"	மாச்சுக்கு	"	6
"	திப்பிலி	"	6
"	மிளகு	"	6

இவைகளைச் சூரணித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாளரைத்து இரண்டு குன்றிமணி எடைமாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி ஒருமாத்திரையை யிஞ்சிசுரசத்தில் கொடுத்தால் வாதசுரம், பறந்தோடும். இதுவாதசுரங்களுக்கு கைகண்டமுறை. இந்தமாத்திரைகளை (7) நாள் காலை மாலை. பிரயோகித்தால் சகல முறைக்காய்ச்சல்களும் விஷசுரங்களுந் திரிதோஷசுரங்களும் வெளிச் சத்தைக்கண்ட இருளைப்போல் விட்டு நீங்கும் என்று ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கின்றது.

விஸ்வாமித்திர முறை சுராங்குசம்

தாம்பிரபஸ்பம்	பாகம்	1
சுத்திசெய்த தாளகம்	"	2

இத்தினுசுகளைக் கல்வத்திலிட்டு பாகயிலைச்சாற்றால் ஒரு ஜாமமரைத்துப் பில்லைசெய்து சூரியபுடமிட்டு பூதரயந்திரத்தில் புடம் வைத்தெடுத்துச் சதுரக்கள்ளிப்பாலால் மறுபடியும் அரைத்து முன்பு சொன்னதுபோல் புடம் வைத்தெடுத்துக்கொண்டு (5) குன்றிமணி யெடை இஞ்சிச் சுரசத்தில் கொடுத்தால் முறைக்காய்ச்சல்கள் யாவும் யெனது தபாக்கினியைக் கண்டு தேவர்களெல்லோரும் எப்படி தம் பதியைவிட்டு அயனிடத்திற்கு ஓடினார்களோ அப்படி ஓடிவிடும். இரசவர்க்கங்களென்று பயப்படவேண்டாம் வாய்பிடிக்காது உபயோகித்துப் பார்க்கலாமென்று விஸ்வாமித்திர மகாரிஷியால் சொல்லப் பட்டிருக் கிறது.

நந்திதேவரால் சகல சுரங்களுக்கும் அருளிச்செய்த மஹா சுராங்குச ரசம்

சுத்திசெய்த	ரசம்	சுத்திசெய்தகபரி
"	கந்தி	அப்பிரகபஸ்பம்
"	தாம்பிரபஸ்மம்	காவிக்கல்
"	மனோசிலை	நாகதந்திவிரை
"	லிங்கம்	லோகபஸ்மம்
"	தாளகம்	வெங்காரம்
"	ஹோமாட்சிகம்	வங்கபஸ்மம்

இவைகளை வகைக்கு ஒருபலம்வீதம் வாங்கிக் கல்வத்தில் இட்டு பழச்சாற்றால் (3) நாள் துளசியிலைச்சாற்றால் (3) நாள் சித்திரமூலரசத்தால் (3) நாள் புளியிலைச்சாற்றால் (3) நாளாக அரைத்துப் பிறகு மேற்கூறிய நாலுவகைச்சாறுகளை சமமாய்க் கலுவத்தில் மருந்துடன் நிரப்பி நிழலிலுலர்த்தி அதில் ஒருமாத்திரையை இஞ்சிசுரசத்திற்கொடுத்தால் பசிதீவினை யுண்டாகி சகலமான சுரங்களுஞ் சூரியன் இருளை ஓட்டுவதுபோல் ஓட்டிவிடுமென்று உமாதேவியார் தமது உமாகலை க்கியானத்தில் சொன்னார்களென்று நந்திதேவர்சொல்லியிருக்கிறார் இம்முறையை ஸ்ரீராமபிரான் தனது பத்தினியாகிய சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு தென்திசைக்கு வந்தபொழுது தன்பாரியாளையிழந்த வியாகூலத்தால் தாபசுரமுண்டாகி அகஸ்தியமனிவர் இம்முறையைச் செய்துக்கொடுத்து அவரது தாபசுரத்தை சந்திரனைக்கண்ட தாமரைப்பூவைப்போல் மறைத்துக்கொள்ளும் படி செய்தாராம். இந்த முறையைப்போல சுரங்களை நாசப்படுத்தும் வேறுமுறை கிடையா தென்று முனீஸ்வரர்களெல்லோரும் கொண்டாடினார்களாம். இதைச்செய்து அனுபவித்து அதன்நன்மை தீமையை யறிந்துக் கொள்ளலாம்.

நாலுநாளைக் கொருமுறைவருஞ் சுரம்

(மாதவநிதானம்) குளிர் தேகத்தில் சிலுசிலுப்பு, தலைச்சுற்றல், நடுக்கல், கண்கள் பச்சை நிறம் என்னுங் குணங்களுடையது நாலுநாளைக் கொருமுறைவருஞ் சுரம்.

(பாஹாட்டம்) மேதோதாது மச்சாதாது இவைகளில் எதிலாவது தோஷம் கலக்குமானால் இக்காய்ச்ச லுண்டாகும்.

இக்காய்ச்சலுக்கு தன்வந்திரி பகவானாற் சொல்லப்பட்ட மஹாதக்கினிகுமாரரசம்

சுத்திசெய்த இரசம்	சுத்திசெய்தலிங்கம்
" வசநாபி	சுத்திசெய்த தாளகம்
" வெள்ளைப்பாஷாணம்	அப்பிரரேகபஸ்மம்
" கந்தகம்	தாம்பிர பஸ்மம்

இவைகளைச் சமயெடையாக கல்வத்திலிட்டு கரசானாங் கண்ணிரசத்தால் ஒருநாள் அரைத்து அம்மருந்தை காசிக் குப்பியில் வைத்து சீலைமண்செய்து ஒருநாள் வாலுகாயந்திரத்தில் மந்தாக் கினியால் யெரித்து சீதளமானபிறகு யெடுத்துக்கொண்டு மறுபடியுங் கரசனாங்கண்ணி இரசத்தாலரைத்துக் கடலையளவு மாத்திரைகள் செய்து பத்துநாள் இஞ்சிசுரசத்தில் காலைமாலை உட்கொண்டால் சகலசுரங்களும் பறந்தோடும். இம்மருந்தை மேற்கண்ட சுரத்திற்கும் பஞ்சமூல கஷாயத்தில் சாப்பிடவேண்டியது.

இதுவுமது.

(மாதவநிதானம்)முறைக்காய்ச்சல்களுக்கு திப்பிலி, கடுக்காய், அல்லது தி.ப்பிலி, சீரகம், அல்லது சர்க்கரை, சீரகம், அநுபானமாய்க் கொண்டு வெந்நீர்ச்சாப்பிடவும் ஆனால் மருந்தை இஞ்சிசுரசத்தில்தானே கொடுக்கவும். இப்படிச் செய்வதால் குளிர், நடுக்கல், அதிதாபம் முதலியவைகளுடன் கலந்த முறைக்காய்ச்சல்கள் சீக்கிரமாய் விலகிவிடும்.

முறைக்காய்ச்சல்களுக்கு நசியங்கள்

வெள்ளைக் காக்கட்டான், கருங்காக்கட்டான், மிளகு வெள்ளுள்ளி, இவைகள் சமயெடையாய் அரைத்து நசியம் செய்தால் முறைக்காய்ச்சல்கள் பறந்தோடும்.

இதுவுமது

குராசாணி ஓமம், இந்துப்பு, மிளகு, வெள்ளுள்ளி இவை சமயெடையா்ய் எருக்கன் பாலில் நசியம்செய்வித்தால் முறைக்காய்ச்சல்கள் கூச்சல்போட்டுவிழுகிற மூர்ச்சைநோயும் விட்டு அகலும்.

மசூசிகா என்னும் அம்மைசுரலக்ஷணம்

(மாதலநிதானம்) இந்த அம்மைசுரம், வாதபித்தசிலேத்துமத்தால் மனிதர்களுக்கும் கற்களுக்கும் உண்டாகின்றது அதற்கு சிகிச்சைசெய்வது மிகவும் அசாத்தியமாம். இந்தச் சுரம் உண்டான மூன்றுநாள் வரையிலும் மிகவும் மும்முறமாயிருக்கும் திரிதோஷமுறைக்காய்ச்சல்களுக்கு நாடிநடக்கிறதுபோல் இதற்கும் நடக்கும். மேலும் இது மிகவும் உக்கிராகாரமாய் (8-9-10) நாட்கள் வரையிலும் தேகத்திற் குள்ளிருந்து பிறகு கொப்பளங்கள் உண்டாகிச் சீழ்கசைந்து பக்கு கட்டும். இது சக்திசொரூபமுடையது மேலும் இதுவாதபித்த சிலேத்துமங்களை ரசாதிசப்த தாதுக்களுடன் அநுசரிக்கிறதினால் யெட்டு அல்லது ஒன்பதாவதுநாளில் சுரம் குறைகிறது இது முதலில் அதிகுரூரமாய் இருக்கிறதினால் அதன் நுட்பத்தையறிய வைத்தியர்களுக்கு அசாத்தியமாய் இருக்கிறது கொப்பளங்கள் வட்டமாய்க் கண்களுக்கு இன்பமாய்த்தோன்றினால் பித்தத்தால் உண்டானதென்றும், கருங்குரங்கு மயிர்களைப்போல் எங்குந் தடித்து விஷத்தைப்போல் யிருந்தால் சிலேத்துமத்தால் உண்டானதென்றும், தோஷத்துடன் கலந்து நாக்கைப்போ லிருந்தால் வாதத்தால் உண்டானதென்றும், திரிதோஷத்தாலுண்டானால் அவன் யெமனைப்போல் பார்ப் பானென்றும் அறியவேண்டியது.

(ஆயுர்வேதம்) உக்கிரரூ, அதிக கலை, திரிசூலை, டமரகம், கோவம், நேத்திரங்களில் புகையெழும்புதல் பெரிய கோரைகள் என்னுங்குணங்களுடைய சுரத்தை மஹாசத்திசுரச் சொரூபமென்று அறியவேண்டியது.

(கலைக்கியானம்) தாகத்துடன் கலந்தசுரம், யெப்பொழுதும் பசி, தாகம், மூர்ச்சை, முகத்தில் துர்நாற்றம் வாந்தி, நமைச்சல், வயிற்றுநோய் யென்னும் லக்ஷணங்களுடையது மசூரிகாசுரம் அல்லது அம்மைசுரமென்று அறியவேண்டியது இது எட்டுவிதமாய் உண்டாகின்றது.

அசாத்திய அம்மைசுர லக்ஷணம்

(அஸ்வனிசம்ஹிதை) கொப்பளங்கள் பவளக்குண்டுகளைப் போலும், வட்டமாயும், நீண்டும், கறுப்பாயும், சிவப்பாயும், நானாவிதவர்ணமாயும், தோன்றியுஞ் சீக்கிரத்தில், மறைந்தும், தாகம்,

பேதி, தேகநடுக்கல், சுவாசகாசங்கள், பிதற்றல், விக்கல், மூர்ச்சை, தாபம், கால்கைகளில் வீக்கம் என்னும் லக்ஷணங்களிருந்தால் அசாத்திய ரோகமென்றே யறியவேண்டியது.

சிகிச்சைகள்

(சித்தசார்ணவம்) மசூரிகாசுரங்கள் மிகவும் குரூரமான வைகளாம். மூர்ச்சை திரிதோஷ சன்னிபாதங்களால் அனேகவிதங்களாயிருக் கின்றன. மனிதர்களுக் குண்டாகும் சத்திசொரூபமான அம்மை சுரங்களுக்குத் தூபங்கள், இயந்திரங்கள், திலகங்கள் பூஜைகள் முதலிய சிகிச்சை களால் சாந்திப்படுத்தவேண்டியது. அவைகளைச் சாந்திப் படுத்தும் விதங்களை ஹரீதகர் ஆத்திரேயர்முதலான ரிஷிகள்சொல்லி யிருக்கிறதை நான் சங்கிரகித்து சொல்லுகிறேன் அவைகளை மனிதர்கள் ஆசரிக்க வேண்டியது.

வாதபித்த சிலேத்துமத்தால் உண்டான அம்மை சுரங்களுக்கு

மஞ்சள்	சீரகம்
சுக்கு	கொத்துமல்லி
வேப்பிலை	பற்பாடகம்
ஏலக்காய்	சிறு காஞ்சொறி
ஆடாதோடைஈர்க்கு	நொச்சிலி
சீந்திற்கொடி	வாயுவிளங்கம்
துளசியிலை	தக்கோலம்
லவுங்கப்பத்திரி	லவுங்கப்பட்டை
முக்காவேளை	நிலவேம்பு
வில்வம்	

மேற்கூறிய தினுசுகளைச் சமயெடையா யெடுத்துத் தண்ணீர் விட்டரைத்து சாற்றைபிழிந்து உட்கொண்டால் அம்மைசுரங்கள் சாந்தப் படும்.

இதுவுமது
மாதவ நிதானம்

இலுப்பைப்பூ	வேப்பிலை
மஞ்சிஷ்டி	கோரைக்கிழங்கு
வெட்டிவேர்	நெல்லிப்பருப்பு
கொத்துமல்லி	சீந்திற்கொடி
அதிவிடையம்	

இவைகளைச் சமயெடையா யெடுத்துச் சூரணித்து இவ்வெடைகளுக்கு எட்டுபங்கு அதிகமாய்த் தண்ணீர்வார்த்து எட்டில் ஒருபாகம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சிய கஷாயத்தை கொடுக்கவும்.

இதுவுமது
ஸித்தவித்தியாபூ

இலுப்பைப்பூ	குருவேர்
ஜாதிக்காய்	முசுமுசுக்கை
தேவதாரி	வில்வவேர்
பாகல்	கோரைக்கிழங்கு
சீந்திற்கொடி	

மேற்படி தினுசுகளை சமயெடையா யிடித்து ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்கு ஜலம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சிய கஷாயத்தைக் கொடுத்தால் அம்மைசுரங்கள் விட்டகலும். குரூரஞ்செய்யாது மேலும் மஹேஸ்பரதூபங்க்ள் போடவேண்டியது சண்டபானுதிலகம் வைக்கவேண்டியது. இப்படிபட்ட அற்புத சிகிச்சைகள் செய்தால் அம்மைசுரங்கள் உடனே விட்டகலும்.

கிருமிச்சுரம் என்பது
புழுக்களாலுண்டாகும் சுரம்

(ஆயுர்வேதம்) சுரம் தேகத்தில் பலவிதவர்ணங்கள் வயிற்றுவலி, மார்பெரிவு, எப்பொழுதும் பிதற்றல், அன்ன துவேஷம் அதிசாரம் என்னும் குணங்களுடையது கிருமிச்சுரம்.

சிகிச்சை

(மாதவநிதானம்) வாய்விளங்கத்தை புளித்த நீரிலரைத்து காலையில் உட்கொண்டால் புழுக்கள் நாசமாகும். புழுக்களை நாசப்படுத்த இதைப்போன்ற ஔஷதம் வேறு யாதொன்றுங் கிடைப்பதரிது.

இதுவுமது

கருங்காலிவேர்ப்பட்டை, குடசப்பாலை, வேப்பன்பட்டை, வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், இவைகளைச் சமயெடையாய்ச்சூரணித்து இவைகளுக்குச் சமமாகச் சுத்திசெய்த

வெள்ளைச்சிவதை சூரணங்கலந்து பிரதிதினம் மூன்றுவிராகனிடை சூரணத்தைபசுவின் மூத்திரத்தில் (7) நாள் உட்கொண்டால் சகலமான கிருமிகள் நாசமாகும்.

இதுவுமது

முருக்கன் விதைகள், வெல்லம், எள்ளு, வாய்விளங்கம், இவைகளை சமயெடையாய்த் தேங்காய்நீரிலரைத்து உட்கொண்டால் கிருமிகள் நாசமாகும்.

இதுவுமது

(ஆயுர்வேதம்) வாய்விளங்கம், நொச்சிலி, கடுக்காய், எலிக்காது இலைவிரை, வெள்ளுள்ளி, முருக்கன்விரை, சித்திரமூலம் இவைகளைச் சமயெடையாயிடித்து ஒருபடி ஜலம்விட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சித் தேவர்கள் அமிர்தத்தை அன்புடன் உட்கொண்டதுபோல் கிருமிரோகம் உடையவர்கள் இதை உட்கொண்டால் கிருமிகள் நாசமாகிறதுமல்லாமல் திவ்வியதேகமுடையவர்களாவார்கள்.

இதுவுமது
பூஜ்யபாதீயம்

கோரைக்கிழங்கு	முருங்கைவிதை
எலிக்காது இலைவிரை	தண்ணீர்விட்டான்கிழங்கு
தேவதாரி	வாய்விளங்கம்
	திப்பிலி

இவைகளைச் சமயிடையா எடுத்துச் சூரணித்து ஒருபடி ஜலம்விட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சின கஷாயங்குடித்தாலும், அல்லது பெருங்காயம், வாய்விளங்கம், திப்பிலி இம்மூன்றுதினுசுகளை சுத்தஜலத்திலரைத்து உட்கொண்டாலுங் கிருமிரோகங்கள் நாசமாகும்.

கிருமிரோக பத்தியங்கள்

புடலங்காய், வேப்பம்பூ, சக்கரவர்த்திக்கீரை, முள்ளாங்கி, பச்சைப்பயறு, வாய்விளங்கம், (90) நாள்பயிரான பழய நெல்லு இவைகளை சகலவிதமான உணவுகளில் கிருமிரோக பீடிதர்கள் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

கிருமி ரோகங்களுக்கு ஆகாது

பால்-இரைச்சிகள்-வெல்லம்-நெய்-தயிர்-கீரை வகைகள் மொச்சைக்கொட்டை-புளி-தேன்-தித்திப்புப் பண்டங்கள் ஆகாது.

ஐந்துசுரலக்ஷணம் என்றால் பூச்சிக்கடியால் உண்டான சுரலக்ஷணம்

(ஆயுர்வேதம்) உருசி, கண்கள் கறுநிறம், தேகம் பாண்டு வர்ணம், வாந்தி, பிதற்றல், அதிசாரம், மார்புநோய், சுரம், முதலிய லக்ஷணமுடையது ஐந்து சுரமென்று சொல்லப்படும்.

ஐந்துசுரங்களுக்குக் கீடமார்த்தனரசம்

சுத்திசெய்தரசம்	பாகம்	1
சுத்திசெய்தகந்தி	"	2
ஊமம்	"	3
வாய்விளங்கம்	"	4
விஷமுஷ்டிப்பட்டை	"	5
முருக்கன்விரைகள்	"	6

இவைகளைச் சூரணித்துக் தேனைவிட்டரைத்து (9) குன்றி மணியளவு மாத்திரைகள்செய்து அதில் ஒருமாத்திரையைக் கோரைக் கிழங்கு கஷாயத்தில் உட்கொண்டால் ஐந்துரோகங்கள் நிவர்த்தியாகும்.

சுராதிசாரலக்ஷணம்

(மாதவநிதானம்) சுரம், அதிதாபம், மார்புநோய், அருசி, பேதி, சீதம், அல்லது ரத்தம் வீழல் என்னுங் குணங்களுடையது அதிசாரசுரமென்று சொல்லப்படும்.

கனகசுந்தரரசம் (ஆயுர்வேதம்)

சுத்திசெய்தலிங்கம்	சுத்திசெய்தகெந்தகம்
மிளகு	திப்பிலி
வெங்காரம்	சுத்திசெய்தநாபி
	சுத்திசெய்த ஊமத்தன்விரை

மேற்படி தினுசுகள் சமனிடையாய் யெடுத்துக்கொண்டு காஞ்சாயிலைச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்துக் கடலை அளவு மாத்திரைசெய்து அநுபானம் விசேஷங்களால் பிரயோகித்தால் அக்கினிமாந்தம், தீவரசுரம், சகலஅதிசாரங்கள், கிராணிகள் குமாரனது வேலாயுதம் தாரகாசூரனது தேகத்தையும், புகழையும், நாசப்படுத்தியது போல் ஒடிவிடும். இந்தப்பிரயோகத்தை தேவவாசனுக்கு செய்து கொடுத்து அதிசாரசுரங்கள் சுவஸ்தமானதாக தன்வந்திரிபகவான் சொல்லியிருக்கிறார்.

கொத்தமல்லி	சுக்கு
முத்தக்காசு	வில்வப்பிஞ்சு

இவைகளைச் சமனிடையாய் இடித்து ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்காகச் சுண்டக்காய்ச்சிய கஷாயத்தை உட்கொண்டால் அதிசாரசரங்கள், விஷச்சுராதிசாரங்கள், மூர்ச்சை, தாகம், வாந்தி முதலிய்வைகளை பறந்தோடச்செய்யும்.

ரத்தாதிசார சுரலக்ஷணம்

(பூஜ்யபாதீயம்) இரத்தக்கழிச்சல் அல்லதுமலம் நீராய்ப்போகுதல், தாகம், தீவரமான சுரம், விலோமவாதம், தேகமாத்யந்தம் நோவு முதலிய குணங்களடையது ரத்தாதிசாரமெனப்படும். இதற்கு மேற்கூறிய கனகசுந்தரரச்சத்தையே பிரயோகிக்கலாம்.

இதுவுமது
மாதவநிதானம்

சுக்கு	திப்பிலி
தொட்டாற்சிணுங்கி	குடசம்பாலை
அதிவிடையம்	ஓமம்
வில்வம்	

இவைகளைச் சமனிடையா யிடித்து கஷாயம்வைத்து உட்கொண் டால் சீதம், சூலை, கபம், ரத்தம், இவைகளுடனிருக்கும் சுராதிசாரங்க ளெல்லாம் சுவஸ்தமாகும்.

தோஷாதிசாரம்

தேகத்துக்குள் அதிதாபம், வெளியில் சீதளம், கால்கைகள் குளிர்ந்திருந்தல், பிதற்றல், வாந்தி, விக்கல், இருமல், அருசி, நடுக்கல்,

பிரமை, ஆயாசம்,தேகம் பாரமாய் இருத்தல், தூக்கம்பிடியாமை, மதம், சீதத்துடன் கலந்து ரத்தக்கழிச்சல், மார்பு வலியென்னும் லட்சணங் களுடையது தோஷாதி சாரமென்று பெயர். இது அசாத்தியம், அதிசீக்கிரத்தில் எமபுரத்தில் போய்க் குடியிருப்பான்.

சுரத்தால் பீடிக்கப்படுகிறவனும், சுரம்நீங்கினவனும், தேகத்தில் வலுவுவருமளவுஞ் சீக்கிரஞ்சீரணமாகாத ஆகாரங்கள் இரைச்சிகள் முதலியவைகள் சாப்பிடப்படாது. குளிர்ந்தசலம் அருந்தப்படாது. பகல் நித்திரை செய்யப்படாது. கஷ்டமான வேலைவெட்டிகள் செய்யப் படாது என்று பூர்வீக நூலாசிரியர்களின் உத்தேசம் அப்படியே நடக்குதல் நலமென்று என்னுடைய அனுபோகம்.

மேற்கூறிய விதிகளைத்தவிர்த்து நடந்தால் சுரம் மறுபடியும் வந்தணுகும் அப்படிபோன சுரத்தை விலைக்கு வாங்கினவனை லங்கணம் முதலியவைகள் வைத்து சுரங்களின் தன்மைகள் அறிந்து ஔஷதங்கள் பிரயோகிக்கவேண்டியது.

சுரம்விட்டதற்கு லக்ஷணம்

அன்னத்தின்மீது இஷ்டம், தலை நமைச்சல், தும்மல், சரீரத்திலே சத்துவம், வியர்வை, முகபாகமென்னும் குறிகள் சுரம் விட்டதென்று அறியவும்.

சுரம்வருங்காரணம்

வாதாதிதோஷ பிரகோபத்தால் ஆமாசயத்தைச் சேர்ந்து அஜீரணம் உண்டுபண்ணும் சீரணிக்காத ஆகாரரசங்கள் ரோமகூபங்கள் முதலிய ஸ்ரோர்த்ர மார்க்கங்களைத்தடுத்து பக்குவாசயத்திலிருக்குஞ் சடராக்கினியை வெளிப்படுத்தி அத்துடன் கலந்து தேகமெல்லாம் வியாபித்து அதிசூடான சுரத்தை உண்டுபண்ணும் சுரத்தில் ரோமகூபாதி ஸ்ரோத்திர மார்க்கங்களைத் தடுக்கிறதால் வியர்வை வெகுதுர்பலமாய் தட்டு கிறது வியர்வை தோன்றாமை உடல் இந்திரியங்கள் மனது இவைகளில் அதிதாபஞ் சர்வாங்கமும் வேதனை யென்னும் லட்சணங்கள் ஏககாலத்தில் யெந்தரோகத்தில் தோன்றுமோ அதற்குச் சுரமென்றுபேர்.

சுரத்தின்முன்ரூபம்

ஆயாசம், எந்தபதார்த்தங்களின் மீதில் இச்சையில்லாமை, தேகம் நிதம் நானாவித வர்ணமாய் தோன்றல், வாயில்ருசி வேற்று

மையாய்த்தோணல், கண்களில் நீர்க்கோவை, குளிர், வெய்யல், காற்று, படுக்கை இவைகள்மீதிச்சை, துவேஷம், கொட்டாவி, தலைவலி, சரீரம்பாரமாய்த்தோன்றல், கோழை, கோவம், சந்தோஷமில்லாமை என்னும் லட்சணங்களிருந்தால் சுரம்வருமென்ற அறிய வேண்டியது. மேற்கூறிய வாதபித்த சிலேத்தும சுரங்களின் சாமானியகுறிகள் வாதசுரத்தில் கொட்டாவியும். பித்தசுரத்தில் கண்களெரிவும், சிலேத்துமசுரத்தில் அன்னத் துவேஷமும் உண்டாம்.

மாதவ நிதானம்
வாத சுரம்

உறுப்புகளில் குத்தல், அதிகமாய் தலைநோவுதல், சரீரம் கொஞ்சம் ஊஷ்ணமாயும் அல்லது அதிகசூடாயாவது மிருக்கும், சரீரமுழுதும் எரிச்சல், மலமூத்திரம் பந்தித்தல், மலமூத்திரம் சுஷ்கித்து வெளி ப்படாமை, அப்படி வெளிப்பட்டால் ஆட்டின் புழுக்கைப்போல் இருக்குதல், பற்கள் உதடு சருமம் கறுப்பு நிறமாய்த்தோன்றல், கொட்டாவி அல்லது திமிர் விடுதல் யென்றால் தேகம் ஒடித்தல், குளிர், அரோசகம், சரீரம்பந்தித்தல் ஒருபக்கம் பந்தித்தல், நமைச்சல், கண்டத்தில் குத்தல், வாந்தி. வயிறுப்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, தாபம், அதிகசீதளம், அதிகமாய் மூத்திரகாதமென்றால் நீர்பந்தித்து கொஞ்ச மாய்வருதல், கால்கள் நகங்கள் இவைகளில் குத்தல், சூலை இந்த லட்சணங்களுடையது வாதசுரம்.

(பாஹாட்டம்) ஒருவேளை சுரம் தோன்றல், ஒருவேளை இல்லாமற்போலிருத்தல், மறுவேளை அதிதீவிரமாயும் கொஞ்சமாயும் இருத்தல், ஒருவேளையில் அதிதாபம், சிலவேளையில் சீதள மாயிருத்தல், ஒருவேளை கைகால்களில் மிகவுஞ் சூடாயும், மறுவேளையில் குளிர்ந்து மிருத்தல், காலில் திமிர்பிடித்தாற்போலும் இல்லாமலும், உறுப்புகளில் அதிகநோயும் ஒருவேளையில்லாமையும் மார்பில்நோவும், புஜங்கள் கழுத்துப்பக்கங்கள் சிரம் இவைகளில் நோவு, புசித்த ஆகாரம் சீரணியாமை, தூக்கம்பிடியாமை, தொண்டையும் உதடுவரளல். முகம், நேத்திரம், நகங்கள், சருமம், மலமூத்திரங்கள், கருப்புடன் கலந்த சிவப்பாயிருத்தல், காதுகளில் ஓசை, ஒருவேளை பக்க எலும்புமுதல் சகல எலும்புகளும் நொறுங்கிப் போவதுபோல் இருத்தல், வாய் துவர்த்தல், பற்களெல்லாம் புளிப்புத்தின்கிறதுபோல் கூசல், ஏப்பம், கோழை, இருமல், வியாகூலம், நடுக்கல், பிதற்றல், வெய்யிலில் இருக்க இஷ்டம் முதலிய லட்சணங்கள் வாதசுரத்திற்கு உளதென்று அறியவும்.

பித்த சுரம்

(ஆயுர்வேதம்) தேகமுழுமையும் எரிச்சல், கைகால்களில் அதிகஎரிச்சல், அதிதாகம், தேகம்சுற்றல், தலைநோவு, வாயில் தித்திப்பாயிருத்தல், முகம் சுஷ்கித்தல், மூர்ச்சை, அக்கினிமந்தம், அருசி, தேகமிளைத்தல், தேகம்மரத்தல், மனசாஞ்சலியம், எந்த வஸ்துக்களிலும் இச்சையில்லாமை. அதிசாரம், வாந்தி, நித்திரைபங்கம், மலம், மூத்திரம், நேத்திரம், முகம், சருமம், நகம், என்னுமிவைகள் மஞ்சளைப்போலும், பச்சிலை ரசத்தைப் போலும் தோற்றல், கேசாதிபாதம் வரையிலுஞ் சுரங் குபீரென்றுண்டாகும் அப்போது பிதற்றலுடன் அபத்தவார்த்தை, வாயானது காரமாயிருத்தல், நாசியிலும்வெடித்துப் புண்காணல், சீதளவஸ்துவில் விருப்பம், கர்வம், கசப்பு, உமிழ்நீரில் கொஞ்சம் இரத்தம்வீழல், புளியேப்பம், தேகத்தில் சிவந்தபடை, சுவாசத்தில் துர்க்கந்தம் வீசுதல் என்னுமிக்குணங்களை யுடையது பித்தசுரம்.

சிலேஷ்மசுரம்

(சித்தவித்தியாபூ) இருமல், சுவாசத்தோடிரைப்பு, நாசியடைப்பு, வாந்தி, நெஞ்சிற்கோழை, தாகம்பிரமை, கோழை, வெண்மைநிறம், நமைச்சல், சரீரம் மஞ்கள் வர்ணம், வாயானது தித்திப்பாய் இருத்தல், அதிக உமிழ்நீர், சிந்தை, பயம், மந்தாக்கினி, தாபம், வியர்வை, திணறல், அதிகமாய் மூத்திரம்வெளிப்படுதல், தலைவலி, மாத்தல், கண்டத்தில் நோவு, அதிநித்திரை என்னுங் குணங்களுடையது சிலேஷ்மசுரம்.

(பாஹாட்டம்) அருசி, ஜாட்டியம், காதில் பிரதிசத்தம், வாயில் இனித்தசலமூறல், மலமூத்திரங் கொஞ்சமாய் வெளிப்படுதல், மார்பு விகுத்தலுடன் துடித்தல், சுவாசத்தோடிரைப்பு, நாசியடைப்பு, சரீரமெல்லாம் விகுத்தல், வாந்தி, இருமல், சருமம் மலம் மூத்திரம் இவைகள் வெளுத்தல், சர்வாங்கத்திலும் நோவின்றிச் சிறிதும் பெரிதுமாய்க் கண்டு கண்டாகத்தடிப்பெழும்பல் நமைச்சல் என்னும் குணங்களுடையது சிலேஷ்மசுரம்.

வாத பித்தசுரம்

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, யெரிச்சல், சோர்ந்துவீழல், தலைபாரம், முகம் தொண்டைவறளல், வாந்தி, தொண்டையில் கிரிகிரிப்பு, யெந்தபதார்த்தத்திலும் இச்சையில்லாமை, கண்கள் இரண்டும்போதல், கீல்களில்நோவு, கொட்டாவி இந்த குணங்களுடையது வாதபித்தசுரம்.

(பாஹாட்டம்) தலைபாரம், மூர்ச்சை, வாந்தி, சர்வாங்கத்தில் எரிவந்தம், மோகம், தொண்டைவாய்வறளல், எந்தபதார்த்தத்திலும் இச்சையில்லாமை, கீல்களில்நோவு, அதிதாகம், தாபம், பிரமை, ரோம சிலிசிலிப்பு, கொட்டாவி பிதற்றல் யென்னும் இக்குணங் களுடையது வாதபித்தசுரம்.

வாத சிலேஷ்மசுரம்

(ஆயுர்வேதம்) முகம்வற்றல், அரோசகம், கீல்களிலுந்தலை யிலும்நோவு, நாசியில் பீநசம்போல் சலம்பெருகல், இருமல், இரைப்பு, மலபந்தம், சைத்தியம், கண்களிரண்டும் மூடல், பிரமை, உடம்பு, திருப்புகிறதுபோ லசைதல் யென்னு மிக்குணங்களுடையது வாத சிலேஷ்மசுரம்.

(பாஹாட்டம்) அரோசகம், கீல்களிலும் தலையிலும் நோவு சர்வாங்கவேதனை, நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, நாவெளுப்பு, தாகம், மந்தாக்கினி, நெற்றி, புருவம், கழுத்து என்னுமிவைகளில் நோவு, பிதற்றல், அழுதல், பிரலாபம், நித்திரைப்பங்கம், வாயில் தித்திப்போடு வாந்தி, வியர்வை, சுவாசம் என்னுமிக்குணங்களுடையது வாதசிலேஷ்மசுரம்.

சிலேஷ்ம பித்தசுரம்

(பூஜ்யபாதீயம்) (சைத்தியம்) தேகமானது ஸ்தம்பம் போல் மரத்தல், சரீர அவஸ்தை, ஆயாசம், வியர்வை, யெரிச்சல், தாகம், இருமல், சோர்ந்துவீழல், சோம்பல், வாயில் கசப்பைத்தேய்த்ததுபோலிருத்தல் என்னுமிக்குணங்களுடையது சிலேஷ்மபித்தசுரம்.

(பாஹாட்டம்) ரோமச்சிலிர்ப்பு, மார்பிலும், பிடரியிலும், நோவு, நாவில்முட்போலிருத்தல், பிதற்றல், கண்ணிற்சலம்வடிதல், தலைநோவு, அதிநித்திரை, அல்லது நித்திரைபங்கம், ஏப்பம் எரிச்சல், வாந்தி, மூர்ச்சை, இரைப்பு, சரீரம் நறுக்கித் துவைத்தது போலிருத்தல், என்னு மிக்குணங்களுடையது சிலேஷ்ம பித்தசுரம்.

இரண்டு தோஷங்களாற் பிறந்த தொந்தச்சுரலக்ஷணம்

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, தாபம், நித்திரைபங்கம், தலைநோவு, ரோமச்சிலிர்ப்பு, அரோசகம், சுவாசகாசம், வியர்வை யில்லாமை, பிதற்றல், நடுக்கல், சோஷைஎன்னு மிக்குணங் களுடையது தொந்தசுரமென்று ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது.

சந்திபாத சுரம்

(மாதவநிதானம்) பகலில்நித்திரை, இரவில் நித்திரையின்மை, மூர்ச்சை, சரீரத்தில் அதிதாபம், வாதம் அதிகமாய் பிரகோபித்தல், சூளிர், வியர்வை, பிரலாபித்தல், மதம், நகைப்பு, மார்புநோவு, சுவாசகாசங்கள், சைத்தியம், சுரம், தாகம், தலைநோவு, நாவுதுவளலின்றிச் சுட்டது போலிருத்தல், ரோமச்சிலிர்ப்பு என்னு மிக்குணங்க்ளுடையது சந்நிபாதசுரம்.

(பாஹாட்டம்) சந்நிபாதசுரங்களுக்கு சொல்லியிருக்கும் குணங்களெல்லாம் உண்டாயிருக்கும். இச்சுரத்தில் அடிக்கடி தேகயெரிச்சல், அதுபோலவே சைத்தியம், பகலில் நித்திரை, இரவில் நித்திரையின்மை, ஒருவேளை இரவிலும் பகலிலும் நித்திரை அல்லது அடிக்கடிவியர்வை, ஒருவேளையின்பம், பாடல், ஆடல், ஆசியம், நகைப்பு முதலிய விகாரச்சேட்டை, கண்கள், நீர்கம்மலோடு கலக்கிச் சிவந்துசொருகுதல், கண்களின் இமையொட்டிக்கொள்ளல், விலாப் பக்கங்களிலும், சிரசிலும், அடித்தொடைகளிலும், கீல்களிலும், எலும்புகளிலும், நோவு, பிதற்றல், காதிலிறைச்சலுடன் நோவு, கண்டத்தில் முட்சொருகுதல் போலிருத்தல், நாவுதுவளலின்றிச் சுட்டது போலிருத்தல், தேகங்கனத்தல், எல்லாக்கணுக்களிலும் துர்ப்பலம், உமிழ் நீரானது சிவந்து நுரைத்திருத்தலோடு கசப்பு, தலைநடுக்கலுடன் அதிநோவு, மலபந்தம் அல்லது கொஞ்சங் கொஞ்சமாக மலம்வெளிப் படுதல், முகத்தில் பளபளப்பு, ஈனற்றொனி, பிரமித்தல், சோம்பல், தோஷமானது சிரசில் நாள்பொறுத்துச் சாத்தியப்படுதல், எப்பொழுதும் கண்டத்திற் குறுகுறுவென்னும் சப்தம் இக்குணங்களுடையது சந்நிபாதசுரம்.

தாகசுரம்

(சித்தரஸார்வணம்) சர்வாங்கவேதனை, தாகம், வாய்வறளல், விகாரவார்த்தைகள், தாபம், அதிகதுக்கம், மூர்ச்சை, பிதற்றல், அக்கினிமாந்தியமென்னு மிக்குணங்களுடையது தாகசுரம்.

அசீரணம்

(சரகம்) சுரங்காணல், கொட்டாவி, விக்கல், அக்கினிமாந்தியம், முழங்கால்களில் நோவு, புளியேப்பமென்னு மிக்குணங்களுடையது அசீரணசுரம்.

பூதசுரம்

(மாதவநிதானம்) காரணமின்றி நகைப்பு, அழுதல், அதிகசுரம், குமரகண்டவலியைப்போல் இழுத்தல், கண்ணையுருட்டி விழித்தல், பிரலாபம், சரீரங்கருக்குதல், அதிக திண்டி, சகலவஸ்துக்களிலும் அபேக்ஷை, பாடல், ஆடல், உரோமச்சிலிர்ப்பு, சோம்பலென்னு மிக்குணங்களுடையது பூதசுரம் அல்லது பூதாவேதசுரம் என்பர் சிலர்.

அபிகாதசுரம்

(மாதவநிதானம்) அதிகநடையினாலும், பயிரிடுதல் முதலிய உழைப்பினாலும் இந்த சுரம் பிறக்கும் இதனால் முதல் முதல் உடம்பில் வாய்வானது நீக்கமற நிறைந்து அதிகரித்து இரத்தத்தை வேதனையுடன் கெடுத்து வாயுலரல், தேகநிறங்கெடுதி, சர்வாங்கநோவு யென்னும் இக்குணங்களையுண்டாக்கி சுரம்மேலிடும் இது அதிக உழைப்பினால் வருதலால் அபிகாத சுரம் எனப்பெயர்பெற்றது.

விஷச்சுரம்

(மாஹாட்டம்) பசி, அதிதாகம், பிரமை, அடிக்கடி சுரம் வருதல், குளிர், மலமூத்திரம் வெளிப்படுதல், சரீரம் எரிச்சல், மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, மார்நோய், ஆயாசம், மோகம், முதல் நாள் அல்லது மூன்றாவது நான்காவது நாட்களிலாவது தாபத்துடன் சுரம் தோற்றல், முதல்நாளில் ஒருமுறை அல்லது பலமுறை குளிர் சுரம்வருதல் என்னுமிக்குணங் களுடைய விஷசுரம், இச்சுரத்தில் அசாத்தியக்குறிகளிருந்தால் அசாத்தியம் என்றுஞ் சாத்தியக்குறிகளிருந்தால் சாத்தியமென்றும் அறிய வேண்டியது.

(நித்தியாநாதீயம்) ஒருவேளை யெரிச்சல், அதுபோலவே சயித்தியம், ஒருவேளை சுரங்காணல், ஒருவேளை இன்மை, ஒருவேளை மூன்றுநான்குதகுதி விட்டுவிட்டுக் குளிர்காணல் யென்னும் லட்சணங் களுடையது விஷசுரம்.

சுரத்தால் விடப்பட்டவன் அபத்தியங்கள் செய்வதால் தோஷங்கள் பிறந்து நாளுக்குநாள் ரசாதிசப்த தாதுக்களில் ஒன்றுடன் கலந்து இந்த விஷசுரத்தை உண்டாக்குகின்றது. இதுதோஷத்தால் பிறந்ததானபடியால் முதலில் அல்பமாய்த் தோன்றி நாளுக்குநாளதிகரிக்கும் நீடித்தால் நித்திய சுரத்தை உண்டுபண்ணும்.

(ஆயுர்வேதம்) தோஷங்கள் ஏழுதாதுக்களுடன் கலந்து விஷசுரங்களை பிறப்பிக்கச்செய்கின்றது. இந்தச்சுரம் சந்தகம், சத்தம், துவாயிகம், திருதீயகம், சதுர்த்தகம் யென்று ஐந்து வகைகளாம். தோஷம் ரசதாதுவை அநுசரித்தால் சந்தத சுரமுண்டாகும். ரத்த தாதுவை அநுசரித்தால் சத்தச்சுரம் உண்டாகும். மாமிசதாதுவை அநுசரித்தால் துவாயிகசுரம், அதாவது இரண்டுநாளைக்கொரு முறைவருஞ்சுரம் உண்டாகும். மேதோதாதுவை அநுசரித்தால் திராயிகசுரம், அதாவது மூன்று நாளைக்கொருமுறைவருஞ்சுரம் உண்டாகும். அஸ்திமச்சாதாதுக்களை அநுசரித்தால்மரணத்திற்குச் சமானமானசாதுர்த்திக சுரம் அதாவது நான்குநாளைக் கொருமுறைவருஞ் சுரமுண்டாகும்.

ரசதாதுவை அநுசரித்து (7-10-12) நாட்கள் வரையிலும் இரவும்பகலும் விடாது காயும் சுரத்திற்கு சந்ததமென்று பேர். பகலில் இரண்டுமுறை இராத்திரி இரண்டு முறை அல்லது பகல் ஒருமுறை இராத்திரி ஒருமுறை அல்லது பகலிலாவது இராத்திரியிலாவது இரண்டுமுறைவருஞ் சுரத்திற்குசத்தமென்றுபேர். மாமிசதாதுவை அநுசரித்து இரண்டுநாளைக்கொரு முறைவருஞ் சுரம் மாதங்கள் வரையிலும் நீடித்திருக்கும் அதற்கு, அன்யேத் யுஷ்கம் என்றுபேர். மேதோதாதுவை அநுசரித்து மூன்றுநாளைக் கொருமுறைவருஞ்சுரந் திரிதீயகம் என்று பேர். இந்தச்சுரம் அயனங்கள் அதாவது (6) மாதங்கள் அளவும்பாதிக்கும் அஸ்திதாது மச்சதாதுக்களை அநுசரித்து வருஞ்சுரம் சாதுர்த்திகம் என்று பேர். இது நான்குநாளைக் கொருமுறைகாய்ந்து வருஷங்கள் தோறும் நீடித்து சுக்கில தாதுவை அநுசரித்து துர்ப்பலமுண்டாக்கி மரணத்தையுண்டுபண்ணும் ஆகையால் இந்த விஷசுரத்தின் சாத்தியா சாத்தியங்களை அறிந்து தகுந்த சிகிச்சைசெய்ய வேண்டியது. இந்த விஷசுரத்திற்கு ஆத்திரேயர் காலாக்கினி ருத்திரபைரவரசத்தை பிரயோகித்தால் அதிசீக்கிரத்தில் நீங்குமென்று சொல்லியிருக்கிறார்.

காலாக்கினி ருத்திர பைரவரசம்
(ஆத்திரேயர் முறை)

சுத்தி செய்த	வசநாபி	பாகம்	1
"	கந்தகம்	"	1
"	பாதரசம்	"	1
"	சாதிக்காய்	"	½

மேற்படி தினுசுகளை கல்வத்திலிட்டு இடித்து இவைகளுக்கு பேர்பாதிபாகம் திப்பிலிச்சூரணத்தைக்கலந்து வெற்றிலைச்சாற்றால் இரண்டுநாள் அரைத்து இரண்டு அல்லது மூன்றுகுன்றியெடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைரவமூர்த்தியை பூசித்து ஒருமாத்திரையை வெற்றிலைச்சாற்றிலாவது, இஞ்சி ரசத்திலாவது, தும்பைப்பூரசத்திலாவது, கொடுத்தால், சீதளசுரங்கள், சந்நிபாதங்கள் விஷசுரங்கள், பீநிசம், அஜீர்ண சுரங்கள், வாந்தி, தலைநோவு, அக்கினிமந்தம், தருணசுரங்கள், பழயசுரங்கள், விட்டகலும். இதை வயித்தியர் செவ்வையாய் அறிந்து பிரயோகிக்கவேண்டியது. ரோகியின் பலாபலத்தை அறிந்து தயிர்சாதம் கொடுக்கவேண்டியது.

சுக்கிலதாதுகதசுரம்

(ஆயிர்வேதம்) கண்களிலிருள் கம்மல், மர்மஸ்தானமாகிய புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்பின்கீழ் உந்தி, உதடு, பீஜம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுண்டு விரல், தோள்யென்னு மிடங்களில்நோதல், ஆண்குறிசுரங்கள், இந்திரியச்சீரணம், அதிகநித்திரை, பிரலாபம், ஞாபகமறதி, அவயங்கள் சுட்கித்தல், ஈனத்தொனி, தலைதிருகுதல், பல்நோவு, ஏப்பம், விக்கல், அசீரணம், அரோசகம், பேதி, இருமல், சுவாசம், பிரமை, சர்வாங்கவெளிரலுடன் வீக்கம், தடித்தல், வாந்தி நடுக்கல், நித்திரைபங்கம், சோஷை, அன்னத்துவேஷம், அக்கினிமந்தம், வாய்தித்திப்பு, முகத்தில்வியர்வை, கைகால்குளிர்ச்சியென்னு மிக்குணங்களுடையது சுக்கிலதாதுகத சுரம்.

சுரசிகிச்சை

வெள்ளைச்சாரணைவேர்	கத்திரிச்செடிவேர்
எருக்கன்வேர்	கொள்ளுச்செடிவேர்
சித்தாமுட்டிவேர்	கண்டங்கத்திரிவேர்
நாய்வேளைவேர்	திப்பிலிமூலம், சுக்கு

இவைகளைச் சமயெடையா யெடுத்து ஒருபடி ஜெலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காய்ச்சி மூன்றுவிரற்கடைதிப்பிலிச் சூரணம்போட்டு காலைமாலை கால்மண்டலம் உட்கொண்டால் சுக்கிலதாதுகதசுரம் இவைகள் நீங்கும்.

சுரங்களது குணங்களை அதிகமாய் விவரித்தால் இக்கிரந்தம் விஸ்தாரமாய் முடியும், ஆகையால் முக்கியமானவைகளை மாத்திரம்

விவரித்துக்கொண்டு மற்றவைகளின் பேர்களை மாத்திரம் சொல்லிக்கொண்டு போகிறேன்.

ஆமசுரமென்பது, சீதத்தைப்பற்றியசுரம்
தத்வகாதிசுரமென்பது, சருமத்தைப்பற்றியசுரம்
அந்தர்கதசுரமென்பது, உட்சுரம்
ரக்ததாதுகதசுரமென்பது, ரத்தத்தைப்பற்றியசுரம்
மாமிசகததரமென்பது, மாமிசத்தைப்பற்றியசுரம்
அஸ்திகதசுரமென்பது, எலும்பைப்பற்றியசுரம்
காலசுரமென்பது, வயதையனுசரித்தசுரம்
ரசகதசுரமென்பது, இரசத்தைப்பற்றியசுரம்

ஆகந்துகசுரமென்பது, அருந்துகின்ற அறுசுவை வருக்கங்களின் காரணமில்லாமல் வருஞ்சுரம். இந்த ஆகந்துகசுரமானது அபிகாதசுரம், அவிஷங்கசுரம், சாபச்சுரம், அபிசாரசுரம், என நான்குபிரிவா யிருக்கின்றது.

அபிகாதசுரம் என்றால் குத்துகாயம் முதலிய விரணங்களினாலும், அக்கினியிடத்திருந்து நடத்துந் தொழிலினாலும், அதிகநடையினாலும், பயிரிடுதல் முதலிய உழைப்பினாலும், உண்டான சுரத்திற்குப் பெயர்.

பூதாவேசசுரம், அவுஷதகந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம், பயச்சுரம், துக்கச்சுரம், காமச்சுரம் ஆகிய இவ்வேழுக்கும் அபிஷங்கசுரமென்று பேராம். அபிஷங்கமென்பது சேர்க்கை.

சாபச்சுரம் யென்பது பெரியோர்கள் சபித்ததினால் உண்டாகுஞ்சுரம்.

அபிசாரசுரம் யென்றால் அதர்வணவேத மாரணமந்திரங்களைக்கொண்டு ஒருவன் பெயரைச்சொல்லி ஓமஞ் செய்ததினால் பிறந்து ஆச்சரியமான கொப்பளங்கள், மனதுதபித்தல், தாகம் என்னும் இக்குணங்களையுடையது அபிசாரசுரம்.

சங்கமதோஷச் சுரம்

கண்கள் நீர்க்கம்மலோடு கலங்கிச்சிவந்து சொருகுதல், தலையிலும் தொடையிலும் நோவு, வயிறெரிச்சல், கீல்களெல்லாம்

நோவுதல், தாகம், ஆராட்டம், நடுக்கல், பொய்பேசல், உள்ளங்கை உள்ளங்கால் குளிர்ச்சி என்னுமிக் குணங்களை யுண்டாக்கும் இது சையோகத்தினால் பிறந்ததால் சங்கமதோஷச்சுரம் என்று பெயர்.

விஷூசி அல்லது வாந்திசுரம்

புளித்த ரத்தவாந்தி, தபித்தல், மார்பில் நெருப்புப் பட்டதுபோல் எரிச்சல், கண்டத்திலும் நெற்றியிலும் வியர்வை, பேதியில் சீதம்வீழ்தல், சதாதாகம், துர்பலம், கைகால் குளிர்ச்சி, உடம்பெல்லாந் துவைத்ததுபோலிருத்தல், நிறக்குறைவு, இந்திரிய நஷ்டம் யென்னும் இக்குணங்களை யுண்டாக்கும், இந்த விஷூசிசுரமுடையவன் நாலுநாளைக்குள் யெமபுரத்திற் கேகுவான்.

மேற்படி சுரத்திற்கு சிகிச்சைகள்

பெருமரப்பட்டை இரசமாவது, அல்லது புளியன் மரப்பட்டை இரசத்தையாவது, மாம்பட்டை இரசத்தையாவது. தயிர்காசுக்கட்டி இவைகளுடன் கலந்து குடித்தால் வாந்திசுரம் சொஸ்தமாகும்.

(ஆயுர்வேதம்) புளியன்வேர்ப்பட்டை ரசத்தை எண்ணெயிற்கலந்தாவது அல்லது கலக்காமலும் தலை உள்ளங்கால் நாபி என்னுமிடங்களில் தடவி யுட்கொண்டால் வாந்திசுரம் நிற்கும்.

(ஆயுர்வேதம்)
வாந்திசுரத்திற்கு அக்கினிகுமாரரசம்

சுத்திசெய்த	ரசம்	பாகம்	1
"	கந்தகம்	"	1
"	வெங்காரம்	"	1
"	நாபி	"	3
பலகரைபஸ்பம்		"	3
சங்குபஸ்பம்		"	3
மிளகுசூரணம்		"	8

மேற்படி தினுசுகளை கல்வத்திலிட்டு பழச்சாற்றால் இரண்டு நாள் அரைத்து இரண்டுகுன்றியிடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒவ்வொரு மாத்திரையை சரீரபலாபலத்தை அறிந்து காலைமாலை வெற்றிலைச்சாற்றால் பிரயோகித்து பிறகு சுத்தசலத்தை குடித்தால், வாந்தி, சுரம், ஆரோக்கியம், சந்நிபாதம், அசீரணம், இவைகள் நீங்கும்.

காமாலை சுரம்

(மாதவநிதானம்) மலங்கருப்பாயும், மூத்திரம் மஞ்சளாயும் வெளிப்படுதல், சோம்பல், மோகம், வாந்தி, தாகம், அரோசிகம், வயிறு உப்பிசம், கண்கள் சிவப்புநிறம், சுரம் யென்னுங் குணங்களுடையது காமாலைசுரம், இதில் சுவாசகாசங்களிருந்தால் அசாத்தியம்.

தருணாதி சுரபிரமாணம்

(பாஹாட்டம்) சுரங்களுக்குமுதல் (7) நாள் பாலியதிசை பிறகுபத்துநாள் யௌவனதிசை, அதின்மேல் வார்த்தீகதிசை.

அசாத்திய சுரலக்ஷணம்

(நித்தியநாதீயம்) இரும்பும்பொழுதும் உமியும் பொழுதும் ரசத்துடன் கலந்து கோழை விழுதல், விக்கல், மார்பு, நோவு, சுவாசம், மலமூத்திரம் பந்தித்தல், பிதற்றல் என்னுந் துற்குணங்களுண்டாகி சுரமும்விடாமலிருந்தாலும் அல்லது இரைப்பு மூர்ச்சை, ரோசிகம், வாந்தி, தாகம், அதிசாரம், பிரமை, விக்கல், இருமல் தேகவேதனை என்னுமிப்பத்து உபத்திரவங்களிருந்தாலும் மனிதர்களைக்கொல்லும்.

(ஆயுர்வேதம்) இரைப்புடனிருமல், விக்கல், சிரோபாரம், நாவறளல், வாந்தி, மூர்ச்சை, அதிசாரம் என்னுந் துர்க்குணங்களுடன் கலந்து சுரம்விடாமலிருந்தால் மனிதர்களைக்கொல்லும்.

சுரத்தின் தசாவஸ்தைகள்

(ஸித்தரஸாரணம்) (1) வது, கொஞ்சம் ஞாபகமிருக்குதல், (2) வது, முன்னிறந்தவர்களைக் கண்ணிற்கண்டு பேசுதல், போலிருத்தல், (3) வது, சித்தப்பிரமை யாகுதல், (4) வது, மேல்மூச்சுவாங்குதல், (5) வது, விழித்தவிழி விழித்ததுபோலிருக்குதல், (6) வது, வேற்றுக் குறலுண்டாகும், (7) வது, சரீரமுழுவதும் மரண எரிச்சலெழுப்புதல், (8) வது, தன்கையினால் முகத்தைத் தடவிக்கொள்ளுதல், (9) வது, சரீரமுழுவதுஞ் சிலேஷ்ம வியர்வைகாணுதல், (10) வது, மரணம்.

சுரத்தின் பிரமாணம்

(நித்தியநாதீயம்) வாதசுரத்திற்கு (7) நாட்கள், பித்தசுரத்திற்கு (10) நாட்கள், சிலேஷ்மசுரத்திற்கு (12) நாட்கள் கால பிரமாணஞ் சொல்லியிருக்கின்றது.

(அக்கினிமாதம்) வாதசுரம் (14) நாட்கள், பித்தசுரம் (18) நாட்கள், சிலேஷ்மசுரம் (22) நாட்கள், வியாபித்து காலப்பிரமாணம் ஆனவுடன் சொஸ் தமானாலுமாகும், அல்லது கொன்றாலும் கொல்லும், இந்தக்காலப் பிரமாணங்களுக்கு மேற்பட்டால் பழயசுரமாகிறது என்று அறியவும்.

(ஹரீதம்) வாதாதி சிலேஷ்மசுரங்கள் முதல் ஜாமத்தில் வெளியில் தோன்றினால் (8) அல்லது ஒன்பது நாட்களில் சொஸ்தப்படும். இரண்டாவது ஜாமத்தில் தோன்றினால் (11) அல்லது பதின்மூன்று நாட்களில் சொஸ்தப்படும். மூன்றாம் அல்லது நான்காம் ஜாமத்தில் தோன்றினால் (15) அல்லது இருபத்தொரு நாட்களில் சொஸ்தப்படும்.

பழயசுரங்களுக்கு
மாலிநீவசந்த ரசம்
(ஸித்தாஸாரணம்)

* சுத்திசெய்த	கபரி	பாகம்	2
"	மிளகு	"	1

மேற்படி தினுசுளை கல்வத்திலிட்டு வேப்பன்பட்டை ரசத்தால் மூன்றுநாள் அரைத்து ஆறுகுன்றியெடை மாத்திரைகள் செய்து சீரகம், திப்பிலி, அனுபானமாய்ப் பிரயோகித்தால் சீரணசுரம், அஸ்திகதசுரம், தாதுகதசுரம், சுராதிசாரம், மாமிசகதசுரம், புராணசுரங்கள் சொஸ்தமாகும்.

ரசகல்பங்கள்

சுத்திசெய்தகபரியை கல்வத்தில் இட்டு (11) நாள் இடைவிடாமல் அரைத்து ஏழுகுன்றியெடை மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி ஒரு மாத்திரையை தேன், திப்பிலி சூரணம், அனுபானயுத்தமாய் உட்கொண்டால் பழையசுரங்கள் நான்கு ஜாமங்களில் சொஸ்தப்படும்.

சுத்திசெய்தகபரியை கல்வத்திலிட்டு பசுநெய்யால் எட்டு நாட்கள் இரவும்பகலும் அரைத்து நாலுகுன்றியெடை மாத்திரைகள் செய்து திப்பிலிசூரணம் அல்லது லவங்கச் சூரணம் அனுபானமாய் உட்கொண்டால் புராணசுரங்கள் ஒரு ஜாமத்தில் விட்டகலும்.

சுத்திசெய்தகபரி மிளகு இவைகள் சமனிடையாய் கல்வத்தில் இட்டு எறுக்கன்வேர் ரசத்திலும் கோமூத்திரத்திலும் (80) ஜாமங்கள் இடைவிடாமல் அரைத்து ஏழுகுன்றியெடை மாத்திரைகள் செய்து

* கபரி என்றால் துத்தம் என்று அறிக.

இலவங்கம், திப்பிலி, தேன் அனுபானமாய் கொடுத்தால் புராணசுரங்கள் நீங்கிவிடும்.

சுத்திசெய்த	கபரி	பாகம்	1
"	நெல்லிக்கா கெந்தகம்	"	1

மேற்படி தினுசுகளை கல்வத்திலிட்டு (88) ஜாமம்வரை ஆட்டுப்பாலாலும், (88) ஜாமம்வரை பசுவின்பாலாலும் அரைத்து நாலு குன்றிஎடை மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி ரகம், திப்பிலி, தேன், அனுபானம் உட்கொண்டால் பழயசுரங்கள் அக்னிமந்தம் முதலியவை அரைநாழிகையில் சொஸ்தப்படுகு

கபரிசுத்தி

ஒருபலம் கபரியை சூரணித்து கந்தையில் மூட்டைகட்டி (7) ஜாமங்கள் நரமூத்திரத்தாலும் (2) ஜாமங்கள் கோமூத்திரத்தாலும் டோலா யந்திரத்தில் யெறித்தாலும் அல்லது பசுவின்நெய்யில் ஏழுபொங்கு வருகிறவரையிலும் வறுத்தாலும் சுத்தியாகும். சுத்திசெய்த கபரியை மேற்கூறிய பிரயோகங்களில் உபயோகிக்கலாம்.

இச்வர மூராரி

(ஆயுர்வேதம்) சுத்திசெய்த கபரியை (21) தகுதி பழச்சாற்றால் சுருக்கு கொடுத்து பிறகு அதை ஆர்க்க பொடிசெய்து அச்சூரணத்தில் ஆறுகுன்றியெடை சர்க்கரை அனுபானத்திலாகிலும், அல்லது தேன்திப்பிலி அனுபானத்திலாகிலும் உட்கொண்டால் சகல சுரங்களும் சூரியனைக்கண்ட பனிப்போல் விட்டகலும்.

(பாஹாட்டம்)
இச்வரஹரி

சுத்திசெய்த	லிங்கம்	பாகம்	1	மிளகு	பாகம்	1
"	நாபி	"	1	திப்பிலி	"	1
"	வெங்காரம்	"	1	சுக்கு	"	1
"	நேர்வாளசூரணம்		7	கடுக்காய்	"	1

மேற்படி தினுசுகளை கல்வத்திலிட்டு பழச்சாற்றால் ஒரு ஜாமமரைத்து நாலுகுன்றிஎடை மாத்திரைகள் செய்து இஞ்சி சுரசத்தில் உட்கொண்டால் அந்தக்ஷணமே சுரங்கள் நீங்கும்.

(நித்தியா நாதீயம்)

சகலசுராதிஹர குளிகைகள்

ஜாதிக்கா	ஏலக்காய்
சுக்கு	பத்திரி
மிளகு	லவங்கப்பட்டை
திப்பிலி	கர்ச்சூர்க்கா
கடுக்காய்	திராகைஷ
தானிக்காய்	அகர்
நெல்லிவற்றல்	முசுமுசுக்கை
சந்தனம்	தக்கோலம்
கொத்தமல்லி	அதிமதுலம்
சீரகம்	அஸ்வகந்தி

மேற்படி தினுசுகளை சமமாய் சூரணித்து அதற்கு சமமாய் சர்க்கரை பாகுபிடித்து மேற்படி சூரணத்தை கலக்கி, இலந்தங்காய் அளவு மாத்திரைகள் செய்து உட்கொண்டால் சகல சுரங்கள், பித்தரோகங்கள், சுவாசங்கள், இருமல், க்ஷயம், பாண்டு, காமாலை, பிரமேஹம் முதலியவைகளை நாசப்படுத்துமென்று பூஜ்யபாதமகாரிஷி சொல்லியிருக்கிறார். கைகண்டமுறை.

(ஆயுர்வேதம்)
இச்வரவைரிகுளிகை

சுத்தித்த ரசம்	பலம்	3	சுக்கு	பலம்	1½
" கந்தகம்	"	3	திப்பிலி	"	1½
" வசநாபி	"	3	மிளகு	"	5
" ஊமத்தன்விரை		3			

மேற்படி தினுசுகளை கல்வத்திலிட்டு வெல்லத்தண்ணீரில் ஒரு ஜாமம் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள்செய்து ஒருமாத்திரையை வெல்லத்தில் கொடுத்து பிறகு வென்னீர் குடித்தால் எவ்விதமான சுரங்களும் ஏழுநாளைக்குள் சொஸ்தமாகும்.

(சரகம்)
ஜ்வரகஜகேசரி

முத்தக்காசு	சுத்திசெய்த ரசம்
சுத்திசெய்த லிங்கம்	சுத்திசெய்த கந்தகம்

இந்த தினுசுகளை சமஎடையாய் கல்வத்திலிட்டு தேனால் ஒருஜாமம் அரைத்து ஆறுகுன்றிஎடை மாத்திரைகள் செய்து ஒருமாத்திரையை சுரம்வந்தவுடனே இஞ்சி சுரசத்தில் கொடுத்து பால்சாதம் சாப்பிட்டால் சகலசுரங்கள் நாசமாகும்.

(ஆயுர்வேதம்)

நாரசிம்மரசம்

சுத்தித்த	நேர்வாளம்	பாகம் 1	சுத்தித்த நாபி	பாகம்	1
"	கந்தகம்	" 1	ரசம்	"	1

இந்த தினுசுகளை சூரணித்து இரண்டு குன்றிஎடை சூரணத்தை சர்க்கரையில் கலந்துகொடுத்தால் சகல சுரங்களும் நிவர்த்தியாகும்.

(ரசரத்னாகரம்)

சகலசுரங்களுக்குஞ்

சண்டேஸ்வர ரசம்

சுத்திசெய்த	ரசம்	சுத்தித்த	நாபி
"	கந்தகம்	"	தாம்பிரபஸ்பம்

இந்த தினுசுகள்ள சமயெடையாய் கல்வத்திலிட்டு இஞ்சி ரசத்தால் நாளொன்றிற்கு ஒருஜாமம் அரைத்து பிறகு நொச்சியி லைச்சாற்றால் நாளொன்றிற்கு ஒருஜாமமாக ஏழுநாளரைத்து குன்றியெடை குளிகைசெய்து நிழலிலுலர்த்தி ஒருமாத்திரையை இஞ்சிச்சுரசத்தில் கொடுத்தால் சகல வாதாதி தோஷங்களையும் அவைகளாலுண்டாகும் சுரங்களையும் அதிசீக்கிரமாய்ச் சொஸ்தப் படுத்தும். குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவும், தாகத்திற்கு பாலை கொள்ளவும், வேண்டுமானால் மா, பலா, கதலிமுதலிய பழங்களைச் சாப்பிடவும், சந்தனம், அத்தர், அகர் முதலிய வாசனை திரவியங்களைப் பூசிக்கொள்ளச் செய்யவும், குளிகைகளில் இதற்குச்சம மானது கிடையாது இவை வயித்தியர்களை புகழ்பெறச்செய்யும்.

சிவபெருமானால் சொல்லப்பட்ட

ஸ்ரீஜயமங்களரசம்

(சித்தரஸாரணவம்)

சுத்தித்த	வாலைரசம்	பாகம் 1	இந்துப்பு	பாகம்	1
"	கந்தகம்	" 1	மிளகு	"	1

சுத்தித்தவெங்காரம்	"	1	சுவர்ணபஸ்பம்	"	1
தாம்பிரபஸ்பம்	"	1	காந்தபஸ்பம்	"	2
வங்கபஸ்பம்	"	1	லோஹபஸ்பம்	"	1
ஹோமாஜிகபஸ்பம்	"	1	வெள்ளிபஸ்பம்	"	2

இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்து ஊமத்தனிலைச் சாற்றாலும், கருநொச்சி யிலைச்சாற்றாலும், தசமூலகஷாயத்தாலும், நிலவேம்பு கஷாயத்தாலும், மும்மூன்றுநாள் பிரத்தியேகமாய் ஒவ்வொருவிதச் சாற்றாலரைத்து இரண்டு குன்றியெடை மாத்திரைகளைச்செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒரு மாத்திரையை சீரகம் தேன் இவைகளில் அனுபானமாய் கொடுத்தால் வெகுநாளாக பாதிக்கும் ஜீரணசுரம், எட்டுவிதங்களான சாத்தியா சாத்தியசுரங்கள், துவந்தசுரங்கள், சந்நிபாதசுரங்கள், விஷச்சுரங்கள், மேதோகத மாமிசகத அஸ்திகத மாச்சாகத சுரங்கள், பயங்கரமான அந்தர்கத சுரங்கள், நானாவித தோஷங்களால் உண்டானசுரங்கள், சுக்கிலகதசுரங்கள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும் இது சிவபெருமானால் கூறப்பட்ட ஜயமங்களரசம் இது வலிவை யுண்டுபண்ணி சகலவியாதிகளை வோட்டிவிடும்.

சகலசுரங்களை ஹரிக்குங் கஷாயம்

கண்டுபாரங்கி, முத்தக்காசு, பற்பாடகம், பூனைகாஞ்சொறி, சுக்கு, நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சீந்தற்கொடி, ஆடாதோடை ஈர்க்கு இவைகளை சமயெடையாய் யிடித்து ஒருபடி சலம்விட்டு ஆழாக்காக சுண்டக்காய்ச்சி காலை மாலை குடித்துவந்தால் சகல சுரங்களும் நாசமாகும்.

வாதசுரத்திற்கு சட்யாதிகஷாயம்

கிச்சிலிக்கிழங்கு	சீந்திற்கொடி
தாமரைக்கிழங்கு	சுக்கு
கீறுதேக்கு	வட்டத்திருப்பி
கடுக்காய்ப்பூ	நிலவேம்பு
பூனைகாஞ்சோரிவேர்	கடுகுரோகணி

இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம்வைத்து குடித்தால் சகலவாதசுரங்களும் யிருமலும்போம்.

பித்தசுரத்திற்கு திராக்ஷாதி கஷாயம்

திராகைஷ, கடுக்கா, பற்பாடகம், முத்தக்காசு, கடுகுரோகணி, கொண்ணைப்புளி இவைகளைச் சமயெடையாய் இடித்து கஷாயம்வைத்து குடித்தால் பிதற்றல், மூர்ச்சை, பிரமை, தாகம், சோஷை நாவரட்சிபோம்.

சிலேஷ்மசுரத்திற்கு பிப்பல்யாதிகஷாயம்.

திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, ஏலக்காய், ஓமம், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, தக்கோலம், கண்டுபாரங்கி, வேப்பின்விதை, பெருங்காயம், கடுகுரோகணி, கடுகு, வாய்விளங்கம், அதிவிடையம், தர்ப்பைவேர், இவைகளைச் சமஎடையாயிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சிலேத்துமசுரங்கள் சொஸ்தமாகும்.

வாதசிலேஷ்ம சுரத்திற்கு முஸ்தாதிகஷாயம்

கோரைக்கிழங்கு, பற்பாடகம், சுக்கு, சீந்திற்கொடி, பூனைகாஞ் சோரிவேர் இவைகளை சமஎடையா யிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் வாதசிலேத்துமசுரம், அரோசிகம், வாந்தி, தாகம், சோகைஷ சொஸ்தமாகும்.

வாதபித்த சுரத்திற்கு பஞ்சபத்திரகஷாயம்

சீந்திற்கொடி, பற்பாடகம், கோரைக்கிழங்க, நிலவேம்பு, சுக்கு, இவைகளை சமயெடையாக யிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் வாதபித்தசுரஞ் சொஸ்தமாகும்.

பித்தசிலேஷ்மசுரத்திற்கு சண்டகாரியாதிகஷாயம்

கண்டங்கத்திரிவேர்	நிலவேம்பு
சீந்திற்கொடி	சந்தனத்தூள்
கண்டுபாரங்கி	கோரைக்கிழங்கு
சுக்கு	பேய்ப்புடலை
வெட்பாலை அரிசி	கடுகுரோகணி
பூனைகாஞ்சோரிவேர்	

இவைகளை சமயெடையாய் இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் பித்தசிலேஷ்மசுரம், தாகம், நாவரட்சி, அரோசிகம், விக்கல், இருமல், கர்ப்பசூலை, குட்சிசூலை. சொஸ்தமாகும்.

சன்னிப்பாத சுரத்திற்கு
பூநிம்பாதி கஷாயம்

நிலவேம்பு	கடுகுரோகணி
தேவதாரி	வெட்பாலையரிசி
தசமூலம்	கொத்தமல்லி
சுக்கு	ஆனைத்திப்பிலி
கோரைக்கிழங்கு	

இவைகள் சமயெடையாய் வாங்கி இடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சோம்பல்; பிரலாபம், இருமல், அரோசிகம், தாகம், மேகம், சுவாசகாசங்கள், சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

ஆகந்துக சுரத்திற்கு
வியாக்கிராதி கஷாயம்

கண்டங்கத்திரிவேர் சுக்கு சீந்திற்கொடி இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம்போட்டு அதில்மூன்றுவிரற்கடைதிப்பிலி சூரணம்போட்டு உட்கொண்டால் சீரணசுரங்கள், அரோசிகம், சுவாசம், இருமல், சூலை, அக்கினிமந்தம், பீநிசம் இவைகள் சொஸ்தமாகும்.

விஷசுரத்திற்கு முஸ்தாதி கஷாயம்

கோரைக்கிழங்கு. நெல்லிவற்றல், சீந்திற்கொடி, சுக்கு கண்டங்கத்திரிவேர் இவைகள் சமயிடையாய் இடித்து கஷாயம்போட்டு அதில் மூன்றுவிரற்கடை திப்பிலிசூரணமும் தேனுங்கலந்து உட்கொண்டால் விஷசுரம் நீங்கும்.

ஆயிகசுரங்களுக்கு
நாகராதிகஷாயம்

சுக்கு, சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், கொத்தமல்லி, இவைகளை சமயெடையாயிடித்து கஷாயம்வைத்து அதில் தேனுஞ் சர்க்கரையுங்கலந்து உட்கொண்டால் திரியாஹிக சுரங்கள் நீங்கும்.

திரிதீயககர கஷாயம்

ஆடாதோடை, நெல்லிவற்றல், சித்தாமல்லி, தேவதாரி, கொத்துமல்லி, சுக்கு, இவைகள் சமயெடை இடித்து கஷாயம் வைத்து அதில் தேனுஞ் சர்க்கரையுங்கலந்து உட்கொண்டால் திரிதீய சுரம் நீங்கும்.

சகலசுரத்திற்கு சுகபேதிகஷாயம்

நெல்லிவற்றல், சித்திரமூலம், கடுக்காய், இந்துப்பு, திப்பிலி இவைகள் சமயெடைசூரணித்து வெந்நீரால் உட்கொண்டால் அலுப்பில்லாமல் சுகமாய் பேதியாகி சகலசுரங்கள், சிலேத்துமங்கள், அரோசிகங்கள், மந்தம், இவைகள் நீங்கி பசிதீவினை யுண்டாகும்.

சாதுர்த்திககர கஷாயம்

கடுக்காய், சித்தாமல்லி, சுக்கு, தேவதாரி, நெல்லிவற்றல், ஆடைதோடை இவைகளைச் சமயெடையாக எடுத்திடித்து கஷாயம்வைத்து அதில்கற்கண்டுந் தேனுங்கலந்து உட்கொண்டால் சாதுர்த்திகசுரம் அதிசீக்கிரமாய் விட்டகலும்.

அதிசாரசுரத்திற்கு கஷாயங்கள்

சுக்கு, அதிவிடையம், கோரைக்கிழங்கு, நிலைவேம்பு, சீந்திற்கொடி, வெட்பாலையரிசி, இவைகள் சமஎடையாயிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சகல அதிசார சுரங்கள் விட்டகலும்.

ஆமாதிசாரத்திற்கு தான்யாதிகஷாயம்

சுக்கு, அதிவிடையம், கோரைக்கிழங்கு, குருவேர், வில்வப்பழம், சுக்கு இவைகள் சமயெடையாயிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சீதம் நசித்து ஆமாதிசார சுரங்கள் விட்டகலும்.

சுராதிசாரங்களுக்கு நாகராதிகஷாயம்

சுக்கு, தேவதாரி, கொத்துமல்லி, கண்டங்கத்திரி, இரண்டு விதப் இவைகள் சமயெடை இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டாச் சுராதிசாரங்கள் விட்டகலும்.

இரக்தாதிசார சுரத்திற்கு கஷாயம்

வெட்பாலையரிசி, அதிவிடயம், வில்வப்பழம், குருவேர், முத்தக்காசு இவைகளை சமயெடை இடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் சீதம், சூலை, இரத்தம் என்னும் இவைகளுடன் கலந்து வெகுகாலமாய் அவஸ்தைப்படுத்தல், அதிசார சுரங்கள், சூரியனைக்கண்ட பனிபோல் விட்டகலும். (அனுபானம்)

இதுவுமது

யானைவணங்கிப்பட்டை, இலந்தபட்டை, நாவல் பட்டை, மாம்பட்டை இவைகளிலேதாகிலும் பசுவின்பாலில் இடித்து ரசம் பிழிந்து தேன்கலந்து உட்கொண்டால் ரக்தார்திசாரம் விட்டகலும்.

சோமாதி சாரத்திற்கு கஷாயம்

தேவதாரி, அதிவிடயம், மாவுசுக்கு, வாய்விளங்கம், முத்தக்காசு, மிளகு, வெட்பாலையரிசி இவைகள் சமயெடை இடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் கூடிய சீக்கிரத்தில் சோமாதிசாரங்கள் நீங்கும்.

(பூச்யபாதீயம்)

பழையசுரங்களுக்கு
மகாலவங்காதி சூரணம்

இலவங்கப்பட்டை	பாகம்	1	திப்பிலி	பாகம்	14
நாககேசரம்	"	2	சுக்கு	"	32
ஏலக்காய்	"	4	அமுக்கறாகிழங்கு	"	64
மிளகு	"	8			

மேற்படி தினுசுகளைச் சூரணித்து அச்சூரணத்திற்கு சம யெடையாய் சற்கரையைக்கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் வென்னீரால் உட்கொண்டால் கபம், பித்தம், பாண்டு, குன்மம், பழயசுரங்கள், மூலவியாதி, அரோசிகம், அசீரணம், பெருமூச்சு, சுவாசகாசம், விக்கல், குசுமரோகம், மார்புநோவு, பாரிசவாதம், முதலிய வியாதிகள் சிங்கத்தைக்கண்ட யானையைப்போல் பறந்தோடும்.

பழயசுரங்களுக்கும், சூயகாசங்களுக்கும்
ஏலாதிச்சூரணம்

ஏலக்காய்	ஜாதிக்காய்

இலவங்கப்பட்டை	சீந்திற்சர்க்கரை
இலவங்கப்பத்திரி	கொத்துமல்லி
நாகசேசரம்	வசம்பு
மிளகு	கடுகுரோகணி
நிலவேம்பு	ஆடாதோடையீர்க்கு
குருவேர்	அதிமதுரம்
சாமந்தி	திராக்ஷை
கோரைக்கிழங்கு	கிச்லிக்கிழங்கு
திப்பிலி	சந்தனத்தூள்
குந்துருஷ்கம்	மருதமரப்பட்டை
தக்கோலம்	ஜாதிமொக்கு
கோஷ்டம்	கண்டுபாரங்கி

இந்ததினுசுகளை சமயெடையாய் யெடுத்து சூரணித்து அச்சூரணத்திற்கு சமஎடையாய்ச் சர்க்கரைக்கலந்து மூன்று விரற்கடை பிரமாணம் உட்கொண்டு வென்னீர்குடித்தால் சிலேஷ்ம பித்தசுரங்கள், பாண்டு, க்ஷயரோகம், மூலவியாதி, அரோசிகம், குன்மம், பழயசுரங்கள், சுவாசகாசங்கள், விக்கல், மார்பு நோவு, சொஸ்தமாகும். இது ஜனங்களுக்கு மிகவும் நன்மையானதென்று பூஜ்ஜியபாதரிஷி சொல்லியிருக்கிறார்.

(ஆயுர்வேதம்)
முறைக்காய்ச்சலுக்கு.
நிம்பாதிசூரணம்

வேப்பிலை	பாகம் 1	ஓமம்	பாகம் 5
திரிபலங்கள்	" 3	திரிலவணங்கள்	" 3
திரிகடுகு	" 3	நவாக்ஷாரம்	" 3

இந்த தினுசுகளை ஒன்றாய்ச்சேர்த்து சூரணித்து காலையில் உட்கொண்டால் சகல முறைக்காய்ச்சல்களும் பழயசுரங்களும் சொஸ்தமாகும்.

சகலசுரங்களுக்கு சுதரிசனச்சூரணம்

கடுக்காய்	ஓமம்
தானிக்காய்	கரும்வெட்பாலையரிசி
நெல்லிவற்றல்	முருங்கவிதை
மஞ்சள்	காவிக்கல்

மரமஞ்சள்	வசம்பு
கண்டங்கத்திரி 2-விதம்	இலவங்கப்பட்டை
கிச்சிலிக்கிழங்கு	தாமரைக்கொடி
சுக்கு	கொத்துகடும்பை
மிளகு	வாய்விளங்கம்
திப்பிலி	சித்திரமூலம்
மோடி	தேவதாரி
பெருங்குரும்பை	சவ்வியம்
பூனைக்காஞ்சோரி	கொடிமுந்திரிப்பழம்
கடுகுரோகணி	பேய்ப்பொடலை
பற்பாடகம்	ஆடாதோடை
முத்தக்காசு	தண்ணீர்விட்டான்கிழங்கு
புங்கம்வேர்	இலவங்கம்
வேப்பன்வேர்ப்பட்டை	வெள்ளைத்தாமரை
தாமரைக்கிழங்கு	தேள்கொடுக்குசெடிசமூலம்
அதிமதுரம்	இலவங்கப்பத்திரி
வெள்ளைவெட்பாலையரிசி	ஜாபத்திரி
சிறுதேக்கு	தாளிசப்பத்திரி

இவைகளைச் சமயெடையாய் சூரணித்து சூரணத்திற்கு பேர்பாதி நிலவேம்புச் சூரணங்கலந்து சலத்தால் ஒருரூபாயெடை உட்கொண்டால் வாதபித்த சிலேஷ்மசுரங்கள், துவந்த சுரங்கள், திரிதோஷசுரங்கள், ஆயிகசுரங்கள், சப்ததாது கதசுரங்கள், மேகம், பிரமை, பீநிசம், தாகம், சுவாசகாசங்கள், பாண்டு, காமாலை, பக்கசூலைகள் முதலிய ரோகங்கள் திருமாலினது சக்கிரம் அரக்கர் குலத்தை நாசப்படுத்தியதுபோல் நாசப்படுத்தும்.

(கார்க்கேயம்)

சகலசுரங்களுக்கு ஆமலக்யாதிசூரணம்

நெல்லிவற்றல்	திப்பிலி
சித்திரமூலம்	இந்துப்பு
கடுக்காய்	

இவைகளை சமயெடையாய் சூரணித்து மூன்று விரற்கடை பிரமாணம் உட்கொண்டால் சகல சுரங்கள்போம் தோஷங்களை பேதிக்கும் அராசிகத்தை விலக்கும் மந்தத்தையோட்டி பசிதீவினை யுண்டாக்கும்.

விஷசுரங்களுக்கு ஹரீதக்யாதி சூரணம்

கடுக்காய், வேப்பனிலை, சுக்கு, இந்துப்பு, சித்திரமூலம், மேற்படி தினுசுகளை சமஎடையாய் சூரணித்து மூன்றுவிரற்கடை பிரமாணம் உட்கொண்டால் விஷசுரம் விட்டகலும்.

சீதசுரங்களுக்கு கிராதாதிசூரணம்

நிலவேம்பு	வாய்விளங்கம்
சிவதைவேர்	சுக்கு
திப்பிலி	கடுகுரோகணி

இந்த தினுசுகளை சமயெடையாய் சூரணித்து அச்சூரணத்தில் எருசிட்டிக்கை தேனிற்கலந்து உட்கொண்டால் சீக்கிரத்தில் சீதசுரங்கள் விட்டகலும்.

மேககசுரத்திற்கு அஸ்வகந்தி ரசாயனம்

அஸ்வகந்தி	பலம் 26	காட்டெருமைப்பால்
ஏலம்		சுக்கு
இலவங்கப்பட்டை		மிளகு
இலவங்கப்பத்திரி		திப்பிலி
சிறுநாகப்பூ		வெட்டிவேர்
கொத்துமல்லி		கிராம்பு
கொடிமுந்திரிப்பழம்		திப்பிலிமூலம்
சந்தனத்தூள்		சித்திரமூலம்
சன்னலவங்கப்பட்டை		சவ்வியம்
கடுக்காப்பூ		

இவைகள் தினுசுக்கு (3) விராகனிடை இவையெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ்செய்து நாலுபடி பசும்பால் ஒருசட்டியில் வார்த்து அதில் (50) பலம் சீனிசர்க்கரைப்போட்டு வடிகட்டி பக்குவஞ் செய்துக்கொண்டு அதில் மேற்படி சூரணத்தைப் போட்டு நெய் படி (2) தேன்படி (1) இவைகளை அவற்றுடன் சேர்த்து ரசாயனபக்குவமாய் செய்துக்கொண்டு இரண்டுவேளை ஒருமண்டலஞ் சாப்பிட மேககசுரம், ரத்தபயித்தியம், பித்தரோகம், அஸ்திசுரமுதலான வியாதிகள் சொஸ்தமாகும் இச்சாபத்தியம்.

அந்தர்கதகாய்ச்சலுக்கு
அஸ்வகந்திலேகியம்

நெய்படி 1	தாளிசப்பத்திரி
சுக்கு	சிறுநாகப்பூ
மிளகு	கிராம்பு
திப்பிலி	கொடிமுந்திரிப்பழம்
அரத்தை	ஏலம்
தூதுவளைவேரின்பட்டை	சீரகம்
கண்டங்கத்திரிவேர்ப்பட்டை	லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி	கண்டத்திப்பிலி

இந்த தினுசுகள் வகைக்கு பலம் (1) இத்துடன் அமுக்கிறாகிழங்கு பலம் (20) சீனிசர்க்கரைபலம் (10) பால் படி (1) அமுக்கிறாகிழங்கு தூதுவளை கண்டங்கத்திரிவேர் இவைகளை மாத்திரம் வேரேயெடுத்து வைத்துக்கொண்டு, மற்றச் சரக்குகளை யெல்லாம் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு சகலத்தையும் சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து பாலுஞ்சர்க்கரையும் பாகுப்போல் பக்குவஞ் செய்துக்கொண்டு இந்தச் சூரணத்தை அதில்போட்டு நெய்யையும்வார்த்து அத்தோடு ஒருசேர்தேனையும்விட்டு லேகிய பக்குவமாய்ச் செய்துக்கொண்டு வேளைக்கு கொட்டைப்பாக்களவு நாளொன்றிற்கு இரண்டுவேளை அரைமண்டலஞ் சாப்பிட அந்தர்கதசுரம், இருமல், அக்கினிமந்தம் முதலியவைகள் நீங்கும் இச்சாபத்தியம்.

சுரங்களுக்கு
வாய்விளங்காதிசூரணம்

வாய்விளங்கம்	பெருங்காயம்
சுக்கு	இந்துப்பு
சித்தரத்தை	கண்டுபாரங்கி
திப்பிலி	

இந்ததினுசுகளை சமயெடையாயெடுத்து சூரணித்து அதில் கால்பாகம் நவாச்சாரம் பொடிசெய்து சேர்த்து வேளையொன்றிற்கு இரண்டு விராகனிடை தேனிற்கலந்து நாள்ஒன்றிற்கு இரண்டுவேளை சாப்பிட சுரங்கள், இருமல், இரைப்பு, அரோசிகம் அக்கினிமந்தம் அனுகூலமாகும்.

சகலசுரங்களுக்கு பிப்லாதிரசாயனம்

திப்பிலி	பலம்	16	திப்பிலிமூலம்	பலம்	2
சர்க்கரை	"	8	சவ்வியம்	"	2
வாய்விளங்கம்	"	4	கொடிவேலி	"	4
கண்டுபாரங்கி	"	4	சுக்கு	"	2
மிளகு	"	4	லோகசிந்தூரம்	"	2
சீரகம்	"	4	கையாந்தகரைசூரணம்	"	2
லவங்கப்பட்டை	"	4	லவங்கப்பத்திரி	"	1
ஏலம்	"	1	கடுக்காய்	"	1
தானிக்காய்	"	1	நெல்லிமுள்ளி	"	1
ஜாதிக்காய்	"	½	தேன்	"	8

இம்மருந்தகளை யெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சர்க்கரையும் தேனுஞ் சேர்த்து அரைத்து ஒருபாத்திரத்தில் யெடுத்து வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு பெரியகழற்சிக்காய்ப் பிரமாணம் நாள் ஒன்றுக்கு இரண்டுவேளைவிகிதம், ஒருமண்டலம் சாப்பிட்டால் சகலசுரங்கள் பஞ்சகாசம், இருத்துரோகம், பாண்டுரோகம், வாயு, அக்கினி மந்தம்முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட இருள்போல்பறந்தோடும்.

சுரபாண்டுரோகங்களுக்கு தாளிச்சாதிவடகம்

தாளிசப்பத்திரி	ஏலம்
மிளகு	சிறுநாகப்பூ
சவ்வியம்	இலவங்கப்பட்டை
கிராம்பு	விலாமிச்சைவேர்

இந்ததினுசுகள் வகைக்குப்	பலம்	1½
திப்பிலிமூலம்	பலம்	2
திப்பிலி	"	2
சுக்கு	"	3

இவைகளையெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து சேலம் சர்க்கரை இரண்டுசேர், அச்சூரணத்தோடுசேர்த்து அரைசேர்பாலை அதின்பேரில்தெளித்து நன்றாய் கிளறி ஒருகுண்டுசட்டியில் இரண்டுபடிபசுவின் பாலையும் இரண்டுபடி சலத்தையும் ஊற்றி அந்தகுண்டுசட்டியின் வாயை ஒருசவுக்கத்தால்மூடி அதின்மீது கிளறினச் சூரணத்தைவைத்து ஆவிவெளியே போகாதபடி அதின்பேரில் ஒருசட்டியை கவிழ்த்து அடுப்பின் பேரில்வைத்து

பால்சுண்டுகிறவரையிலும் யெரித்து பிறகு அதில்வெந்து இருக்கிற்சூரணத்தை ஒருசுத்தமானபலகையின் மீது கொட்டி ஒருசேர் பசுவின் நெய்யைவிட்டு ஆறாமலிருக்கும்பொழுதே கொட்டைப்பாக் களவாக பில்லைபில்லையாய் தட்டி ஒருபீங்கானில் வைத்துக்கொள்ள வேண்டியது வேளைஒன்றுக்கு ஒரு பில்லையாகநாள் ஒன்றுக்கு இரண்டுவேளை சாப்பிட்டுவந்தால் சுரத்தினால் உண்டாகும் ரோகங்கள், வாத ரோகங்கள், சிலேத்துமம், வரட்சி, கிராணி, பாண்டு ரோகங்கள், மார்புவலி, வாயுவினாலுண்டாகும் மூலரோகங்கள், குன்மம், கபம், பீநிசம், இரைப்பு, இருமல், நெஞ்சுவர்ட்சி, நெஞ்சுவலி முதலியவைகள் கூடிய சீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

அஜீர்ணசுரத்திற்கு
ஹரித்ராவடகம்

மஞ்சள், வேப்பிலை, திப்பிலி, மிளகு, மரமஞ்கள், வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சுக்கு இந்த எட்டையும் சமயெடையாய் சேர்த்து வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒருநாள் ஊறவைத்து மறுநாளெடுத் தரைத்து குன்றியெடை மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் அசீரணசுரத்திற்கு வெந்நீரில் ஒருமாத்திரையைக் கொடுக்கவும். அதிசாரம்கிராணிகளுக்கு மூன்றுநாள் மோரிலும், சர்ப்பவிஷங்களுக்கு எட்டுமாத்திரையை உள்ளுக்குக் கொடுத்து ஒரு மாத்திரையை அதின்மீது அரைத்து தடவவும், கண்ணில் சிவப்பு நீர்வொழுதல், திமிர், புழுவெட்டு, கண்மயிர் உதிரல் இவைகளுக்கு கோமூத்திரத்தில் அல்லது தண்ணீரில் உரைத்து கண்ணிற்போடவும், திரிதோஷவிஷசுரத்திற்கு வெல்லத்திலும், இரத்த அதிசாரத்திற்கு ஏலம் இலவங்கப்பத்திரி இவைகளை வறுத்துபொடி செய்து அதோடு சேர்த்துக்கொடுக்கவும், பாண்டுக்கு, கோமூத்திரத்திலும், தேள்கடிக்கு எருக்கம்பாலில் ஒருமாத்திரை அரைத்து தடவ சொஸ்தமாகும்.

சுரங்களுக்கு அரக்குதைலம்

ஒருவீசை அரக்குவாங்கி அதில் (4) வீசை ஜலம்விட்டு நாலில் ஒருபாகமிருக்கும்படிக்குச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதற்குச் சமமாய் நல்லெண்ணெய் வார்த்து அவைகளுக்கு நான்குபாகங்கள் அதிகமாய் தயிரின் தேட்டை ஜலத்தைச்சேர்த்து ஒரு பெரியசாலில் வார்த்து அமுக்கிறாகிழங்கு, மரமஞ்சள், தேவதாரிசக்கை, காட்டுமிளகு, கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், பெருங்குரும்பைகிழங்கு,

கடுகுரோகணி, தும்பராஸ்டகம், சதாபிலை, அதிமதுரம் இவைகளை வகைக்கு ஒருரூபா எடை சூரணித்து மேற்படி தைலத்தில்போட்டு காய்ச்சி தைலபக்குவத்தில் இறக்கிக்கொள்ள வேண்டியது. இதைதேய்த்து கொண்டு குளித்தால் சகல சுரங்கள், உள்மாந்தம், மூர்ச்சை, அபஸ்மாரம், பூதாவேசங்கள் முதலியவைகளை விலக்கிவிடும், இது கர்ப்பிணி ஸ்திரீகளுக்கு மிகவும் நன்மையைச்செய்யும்.

விஷசுரங்களுக்கு
சஹதேவிகிருதம்

சஹதேவியிலைரசம்	படி	1	கடுகுரோகணி	பலம்	4
பசுநெய்யி	"	1	பால்	படி	1

இவைகளை ஒன்றாய்க்கலந்து பாகம்செய்து மிளகு பதமாய் காய்ச்சி வடித்துக்கொண்டு உச்சிகரண்டிவீதம் உட்கொண்டால் விஷச்சுரங்கள், சீதசுரங்கள், முதலிய வியாதிகளை விலக்கிவிடும் தேகத்திற்கு வலிவுகொடுக்கும்.

விஷசுரங்களுக்கு
இட்சிரஷட்பலகிருதம்

சுக்கு	செவியம்
திப்பிலி	சித்திரமூலம்
திப்பிலிமூலம்	இந்துப்பு
மிளகு	

இவைகள் வகையொன்றிற்கு (2½) பலம் யெடுத்து எல்லாதினுசு யெடைக்குச் சமமாய் பசுவின்பால்விட்டு, பசுவின்நெய் பலம் (16) இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து காய்ச்சிமிளகு பதத்தில் இறக்கிக்கொள்ள வேண்டியது ஒரு கரண்டி விகிதம் உட்கொண்டால் சகல விஷசுரங்கள் குன்மம் இவைகள் போம்.

மூன்றாங்காண்டம்
முற்றிற்று

இனி நான்காவது காண்டம்.

—

தேவிசகாயம்

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்

நான்காவது காண்டம்

முதலாவது

வியாதிகளின் காலபரணி

விநாயகர் துதி

வெண்பா

ஓதவினையகலு மோங்குபுகழ்பெருகும்
காதற்பொருளனைத்துங் கைகூடும் -சீதப்
பனிக்கோட்டுமால்வரைமேல் பாரதப்போர்தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் றாள்.

நூன்முகம்

(27-நட்சத்திரங்களில் இன்னநட்சத்திரத்தில் சுரம் கண்டால் இத்தனைநாளில் தீருமென்றறிக)

பரிமருத்துநாளில் தோன்றுங்காச்சல்
பார்த்தரிகயீராறு நாளிற்றீரும்
விரிகதிரோன் பிறந்தநாள் துடர்ந்தகாச்சல்
மீளாதுபனிரெண்டு நாளில்மெய்யா
எரிபிறந்தகார்த்திகைக்கு விடுமெட்டாநாள்
இலக்கமறமீறிநின்றால் யிருபத்தொன்றில்
பரவுவெப்புவிட்டகலும் நவ்விநாளில்
பற்றுசுரம்விட்டகலுந் தொட்டநாளே. (1)

தொட்டரிய ரோகணியிற் பற்றிவந்த
சுரங்களது பத்தானாட் டோகைநல்லாய்

கெட்டதிருவாதிரையில் சுரங்கள்கொல்லும்
கேட்கவொண்ணாபொல்லாத கிலேச்னாளாம்
மட்டுநறும்புனர்பூச மீரெட்டானால்
வந்தசுரம்பூரமிரண் டாறாநாளில்
திட்டமுரவிட்டுவிடும் சொன்னேன்சொன்னேன்
தீராதாயிலியமீ ரைந்திற்சாவை. (2)

ஈரைந்தில் ஆயிலியங் கொல்லாதாகில்
இருபத்திநாலானாள் சாந்தமாகும்
நேரைந்துமகத்துசுர மீரார்நாளில்
நிக்கிரகம் செய்யாமல் நிற்குமாகிற்
றார்துஞ்சமூவைந்தா னாளில்வெப்பு
தான்றணியுமென்று நூலோர் தானேசொன்னார்
சீரஞ்சாப்பூரத்திற் பிறந்தவெப்பு
செலுத்துபத்து விருபத்தி ரெண்டிற்றீரும். (3)

உத்திரத்தில் பற்றுசுரம் பத்தானாளில்
உருக்கிவிடும் மேல்நின்றா லுரைக்கக்கேளு
இத்தரையிலிருபத்தி ரெண்டாநாளி
லிடருபடக்கொன்று விடு மின்னங்கேளே
அந்தசுரம்யெட்டானாள் விட்டுப்போகும்
அடுத்தசித்திரையது தானதுவுமெட்டே
பத்திவிடுமேல்நின்றா லுரைக்கக்கேளு
பரிந்துவிடும் பயிற்றிரண்டு நாளில்மீளும். (4)

கேளுரைக்க சோதிசுரம் நாலாநாளிற்
கிலேசமறா தேயிருந்தாற் பதினாலாநாள்
மீளாமல் மேல்நின்றால் பயிற்றுநான்கு
மிக்கநாள் தனிலகலும் விகாகவெப்பு
தோளாசைபடுமிருபத் தொன்றிற்கொல்லும்
தொடரனுடமெட்டானால் தொடங்கிமீண்டால்
மீளாதுபனிரெண்டா நாளிற்றீரும்
முன்கோட்டையீராறில் முடிகித்தீரும். (5)

முடுக்கவரு மூலவெப்பு பத்தானாளில்
மூண்டுபின்புந்தணியாமல் மீறிநின்றால்

கடுகவெப்புநாலைந்து நாளிற்றீரும்
காணறியபூராட மொன்பதானாட்
படுகளமாய் கொன்றுவிடு முத்திராடம்
பாதகஞ்சே ரெட்டானாள் பதினாலாநாள்
குடிகெடுத்தேவதைத்துவிடுந் திருவோணத்தில்
கொண்டவெப்பு நாலெட்டில் குணமாந்தானே. (6)

குணமாகும் அவிட்டமீ ரைந்துநாளில்
கொள்சதையமாறாநான் குணமாம்வெப்பு
அணுகாமல் மேனின்றால் பனிரெண்டாநாள்
அச்சமிகும் ஆயிழையே யறையக்கேளாய்
பிணியுருக்கும்பொல்லாத பூரட்டாதி
பிலத்தனாளொன் பதனில் பிடித்துக்கொல்லும்
தணிவுகின்றவுத்திரட் டாதிநாளில்
றரித்தவெப்புபன்னி ரெண்டிற் சாந்தமாமே. (7)

வேறு

ரேவதி நாள்சுரம்

சாந்தமாம் பதினாலாநாள் றணிந்திடாதிருந்ததாகில்
சேர்ந்தநாளெட்டில்வைப்பு தீர்ந்திடுந்திண்ணமாக
சூழ்ந்தநாளிருபத்தேழும் துகளறத்தெரிந்துகொண்டு
போந்தவாரறிந்து மிக்கப் புகழ்பெறமருந்துசெய்யே.

புடம்வைத்தபுண்கள் அல்லது கட்டிகளை அறுக்க ஆகாத்திதிகள் அறிக அகஸ்தியர் வாக்கியம்

சீர்பெரும்பிரத்மை சேரும்பெருவிரல்
நேர்பெருயுள்ளங் கரலதுதுதிகை
திரிதிகை முழங்கால் சேர்ந்திடுமென்க
சவுத்திப்பெருந்துடை தாவியசப்தமி
குய்யத்திடத்தே குடியிருந்திடுமாம்
அய்யமேசஷ்டி யமர்ந்திடும்நாபி
சப்தமிமுலையில் தானிருந்திடுமே
யொத்திடும் அஷ்டமி யோதினோம்கரத்தில்

மெத்திடுநவமி மேவியகழுத்தில்
அதரந்தசமியி லாகுமவ்விடத்தே
ஏகாதசியில் யிருந்திடும்நாவில்
துவாதசியில் துயின்றிடுநெற்றி
திரயோதசியில் சேர்ந்திடும்புருவம்
சதுர்த்தசிபிடரி தானிருந்திடுமே
உதித்திடும்பூரணம் உச்சியிலுறையும்
செப்பியவமிர்தம் நிலைநின்றதனால்
சத்திரம்பண்ணில் தானெழும்நோய்கள்
கொப்பளித்திடினும் குத்துப்பிடினும்
தப்பிலா அரவம் தான்கடித்திடினும்
அட்டைகடிக்கினும் அடிதடிச்சிலந்தியும்
வயத்தில்பிணியெனும் மரணமதாகுமே
காசினிதனிலே கைவிஷதாரி
திதிகளையறிந்து செய்திடப்பலிக்கும்
மலைதிகழ்முனிவர் மகிழ்ந்துரைத்தனரே.

தன்வந்திரிபகவான் அருளிய பணக்கட்டளை

கேளப்பாதோஷத்துக் கீரஞ்சுபத்து
கெணிதமாய் சுரத்துக் கீரைஞ்சுபத்து
வாளப்பாக்ஷயமுதலாய் நீரிழிவுகாசம்
வரிசையாய் மூணுபத்தி பணமேகேளு
நாளப்பாமருந்திட்டு முக்கால்வாங்கு
நலமில்லாப்பிளவைபவுத் திரமாங்குட்டம்
சூளப்பாயீரஞ்சு பொன்னேவாங்கு
துடியானதாது நஷ்ட மீரஞ்சுவாங்கே. (1)

வாங்குவாய் மேகமென்றே சூலைக்கெல்லாம்
வரிசையாயஞ்சு பணங் கூட்டிவாங்கு
நீங்கிடவே பணமிருபத் தஞ்சுகேளு
நிலையில்லாசத்திகுன்மம் வயற்றுக்கெல்லாம்
தாங்கிட்டமகோதரமும் ரெத்தபித்தம்
தந்தத்தில் புத்துமுதல் கெற்பரோகம்
பாங்குபெறபதினைந்து பொற்பணங்கேள்
பழுதுசொன்னாலவுழ்தப்பை கட்டிப்போடே. (2)

போடப்பாயிந்தமுறை நீபொருளே தந்தால்
போய்மருந்து அவுழ்தத்தை கொடுத்துந்தீரு
கோடப்பாகோடியென்ற ரோகமெல்லாம்
குறிப்பாகபாடுதற்கு யென்னாலாகா
தேடப்பாகிடைக்காது வயித்தியத்திற்கு
சிறப்பளித்தமட்டுமடா ரோகந்தீரும்
நாடப்பாநி தியாசை பிரியாதார்க்கும்
நாவினால் தருமவிலை நவின்றிட்டேனே. (3)

சீடற்கறிவு

பாரடா நூலீய்ந்தோர் மனநோய்ச்செய்தால்
பரிவான வல்வினைகள் வந்துசூழும்
வாரடாபொருளீய்ந்து நூலைப்பாறு
வளமானபொருளுனக்கு யில்லாவிட்டால்
காரடாபணிவிடைகள் செய்துக்கேளு
கனமான அவர்கையால் கொடுக்கவாங்கு
நாரடாபதைப்பாய்நீ திருடினாக்கால்
நலமான சாபங்கள் வருகும்பாரே. (4)

நூலின்பயன்

ஏட்டிலுள்ள நூல்களெல்லாம் செவிக்கேயின்பம்
இன்பரசவஸ்துவெல்லாம் நாவுக்கின்பம்
ஊட்டுகின்ற பொசிப்பெல்லா முடலுக்கின்பம்
உறங்குகின்ற சூட்சமெல்லாம் உயிருக்கின்பம்
நாட்டிலுள்ள அலங்கிருதம் கண்ணுக்கின்பம்
நன்மலரின்பரிமளங்கள் நாசிக்கின்பம்
ஆட்டிவிக்குஞ்சித்தருட பொருளைக்காட்டி
அரிவிக்கும் குருமுருகா யறிந்துகொள்ளே. (5)

காலபரணி
முற்றிற்று

இனிவியாதிகளின்
வரலாற்றுப்பரணி
கூறப்படும்.

உ
தேவிசகாயம்

இரண்டாவது
வியாதிகளின்
வரலாற்றுப் பரணி

நேத்திரரோகம் - மாதர்களை யுற்றுப்பார்த்து மோகித்தல் துயில் நீங்கும் பெண்களினமேல் பயில்விழி நாட்டல் மாதர்குளிக்கும் நீர்க்கரையினின்று நீங்காதிருத்தல், உயிர்வதை செய்தலைக் கண்ணுற்றும் விலக்காதிருத்தல், பசுக்களின் பால் கரக்கையில் விழிநோக்கி பிரம்மித்தல், இத்தகை போன்றயின்னும் பலவிதகுற்றங்களால் கண்ணோய்கள் (96) விதங்களாய்ச் சம்பவிக்குமென்றறிக.

ஆநந்தவாய்வு - உயிர்ப்பிராணிகளைக் கட்டியும் தூக்கி ஊஞ்சலாட விட்டும், அறுத்தல், பசுவையடித்தல், பலஜீவராசியில் வயற்றைக்கீரிகுடல் வெளிவரக்காணல் இவைகளால் வாதரோகம் (84)ல் ஆநந்தவாய்வென்னும் ரோகம் சம்பவிக்குமென்றறிக.

வாய்வுகள் - சிசுக்களை திடுக்கிடவடித்தல், உதைத்தல், ஜீவ ஜெந்துக்களை காலால்மிதித்தும் கையால் முறித்தல், வறுமையுற்ற முதியோர்களுக்குக் காலினால் யேவலிடுதல், இவைகளால் வாத சம்மந்த வியாதிகள் அணுகுமென்றறிக.

பித்தவியாதிகள் - கடன் வாங்கிக்கொடாமையாலும், பெரியோரை மணம்நோகப் பேசி யேசுவதாலும், தாகபானம் உதவாததாலும், பித்தட்சயம், பித்தகாசம் மந்தாரகாசம், ரத்தகாசம் சுவாசகாச மிவைகள் உண்டாகும், அன்றியும்

யெலிகடியாலும், மூலத்தில் அனல் அதிகரித்து மூலையில் நீர்கசிந்து நெஞ்சில் சுவாசம்சுவரி கபத்தை உரையச் செய்துவிடும் யென்றறிக.

குன்மவியாதிகள் - பிற்பசியினால் வருந்துவதைக் கண்ணுற்றும் அன்ன மிடாமல் உண்டதாலும், ஒருவரிடம் உண்டியைத் தடுத்தலாலும், வயர்யெரியக்கெடுதலாலும், அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி வயரெரியக்கண்டலாலும், குடும்பத்தைக் கலைத்தலாலும், குன்மம் யெரிகுன்மம் குலைகுன்மம் தொண்டைக்கட்டிகள் இவை உண்டாகும் அன்றியும் நெல் உமி கல் யிவையுண்பதால் வயிற்றில் சோறைசேர்ந்து குடலில் மாசுபற்றியும் உண்டாவதுண்டு இவ்வித குற்றங்களால் உண்டாகும் (7) வித குன்மங்களையும் அவுழ்தங்களால் நீக்க சாத்தியப்படும்.

பித்தபயித்தியம் - பெரியோரை நிந்தைசெய்தல், தேவஸ்தலங்களை யழித்தல், தூஷணைசெய்தல், ஸ்ரீகள் கெற்பநோயில் விந்துவிடல், சிசுவைமரித்தல், கன்றுக்குப் பால்விடாமல் கரத்தல், இளம்பயிரை யழித்தல், பிஞ்சுகளைபறித்தல், இவைகளால் பித்தம் மயக்கவியாதி பித்தபயித்தியம் பித்தவாய்வு சேஷ்டைகள் உண்டாகுமென்றிக.

பாண்டு நோய் - தாய் தந்தையர் மனம் நோகவும்பேசல், அவர்க்கு பயமுறவும் தண்டிக்க முயலுதல், மனிதரை வம்புசெய்தல், ஆங்காரத்தால் அகந்தை யிடும்பு யியற்றல், பொய்பேசல், இவைகளால் பாண்டு மகோதரம் பெருவயர் இவை வந்தணுகுமென்றறிக, அன்றியும் ஜீவருக்கு நஞ்சிடுதலாலும் மேற்படி ரோகம் சம்பவிக்குமென்றறிக.

பிளவைகண்டமாலை - குருதூஷணஞ் செய்தல், வழியில் முள் அடைத்தல், மரங்களை காரணமின்றி பூவுதிரவும் கிளையொடியவும் அடித்தல், கல்லெரிதல், பச்சைக்கொடி பூசைகட்குயன்ற பூஞ்செடி யிவைகளை நிஷ்காரணமாய் வெட்டல், கிள்ளல், இரண்டாய் பிளந்தெரிதல், இவைகளால் பிளவை கண்ட மாலையுண்டாக்கும், அன்றியும் தன்பார்வைக்கெட்டாவிடங்களில் கட்டிகள் புரைவிழும் ரிணங்கள் கரப்பான் வண்டுகடி குழிப்புண்கள் உண்டாம் யென்றறிக.

குடைச்சல்கள் - ஜீவஜெந்துக்களின் கைகால்களை முறித்தெரிதல், ஊர்வன பறவை பட்சி காகம் நாதம் இவைகளை காரணமின்றி வலிவிற் கொன்ற தோஷத்தால் கை கால்களில் குத்தல் குடைதல் கரணைகளிற்பிடிப்பு முடக்கு வீக்கம் இவைகள் அணுகுமென்றறிக.

குட்டங்கள் - ஸ்திரீகள் விசேஷசம்பந்தத்தா லுண்டான மேகம் கிரந்தி இவைகளால் (6) விதகுட்டமும், மண்ணுளியன் முதலிய சர்ப்பக்கடி வண்டு எலிபூச்சி யிவைகளின் கடியாலுண்டாவது (8) விதகுட்டமும், ஜீவவதை மாதாபிதாக்கள் மனநோக்காட்டாலும், தெய்வவுருக்களை யழித்தலாலும், பெரியோரை பங்கப்படுத்தி மனம்குன்றச் செய்வதாலும் (4) விதகுட்டம் ஆக (18) குட்டங்களின் காரணமென்றறிக.

சுரரோகம் - நீரிலுள்ள ஜெந்துக்களை ரவியில்போடல், நெருப்பிலிட்டு சுடுதல், தசையருத்தல், தண்ணீர்கொடாதல், சூரியனை நினையாததோஷம், இவற்றால் சுரரோகம் வந்தணுகும் அன்றியும் சுரத்தில் மூன்றுவிதமுண்டு அஸ்தியைப்பற்றிய சுரமானது தாகம்மிகுத்து தேகம்வெளுத்து குளிர்ச்சி யடுத்து ஒவ்வொருவேளையில் சுரம் மிகுதியாய்க் காணும் உதிரத்தைப் பற்றிய சுரமானது அதிகமாய்க்காய்ந்து யிளைப்பு வேர்வை மூர்ச்சை சித்தப்பிரமை உடல்னோகும் தாகிக்கும் மாமிஷத்தைப் பற்றிய சுரமானது சமானகாய்ச்சலும் அதிக சுவாசமும் மூர்ச்சையும் மயிர்கூச்சும் ஆயாசம் நோக்காடு நமைச்சல் இவைதரும்.

கண்டமாலை - மேகநீரானது நரம்புவழியாய் சென்று உதிரங்கெட்டு கட்டிபோல் திரண்டு ரிணமாகி கண்டத்தைச் சுற்றி யரித்து தடித்து வெடித்து புரையோடும்.

மகோதரம் - அக்கினியதிகரித்து நீருண்டாகி திரேகம் கனத்து வயற்றில் வாய்வும் ஜெலமும்சேர்த்து பெருகச்செய்யும் மிராக்கால் நெஞ்சுவரண்டு தாகிக்கும்.

பெருவயறு - ஞானிகளை நிந்தித்து பழித்துயிகழ்தலாலும், ஜீவஜெந்தை வதைத்தலாலும் நேரிடும் அன்றியும் தேகம்வெளுத்து வற்றி

கருவிகள் மந்தித்து வயறுபெருக்கும் மலந்தீயும் அன்னஞ்செல்லாது.

நீராம்பல் - தேகம்வெளுத்து வற்றி மார்பின்கீழ் வயரும் காலும் வீங்கி தாகித்து புளிப்புமீது உண்டாக்கும்.

பிரநீர்க்கோவை - தேகத்தில் அக்கினிமீறி நீர்கோர்த்து கண்டவர் பயப்படும்படி பெரும் பூதம்போல் வீக்கம் உண்டாக்கும்.

நீராமை - ஆமைபோல் வயற்றில் கட்டியுண்டாகும் குடல்முறுக்கி அக்கினிசுவாலையா யன்னத்துவேஷமாகும்.

பீலிகை - வயற்றில் யீரலைப்பற்றி குழவிபோல்திரண்டு குறுக்கேயிருந்து பிரளும் மேலேரும் உடல்வற்றும்.

பீனிசம் - மூலத்தில் கனல் அதிகப்பட்டு சிரசில் நீர்தங்கி நாசிவழியாய் உதிரமாயும் சீழாயும் ஜெலமாயும் வெளிவரும் இது (8) வகைப்படும்.

வாதபீனிசம் - நாசி வரளும் நீர்வடிந்து சளி நாற்றமில்லாமல் வரும்.

பித்தபீனிசம் - நாசிவழியாய் மஞ்சள் நிறமாய் சளி வடியும் புலால் நாற்றம்வீசும்

சிலேத்துமபீனிசம் - நாசியை மாறிமாறியடைத்து முத்துபோல் நீர் வடிந்துநாறும் துணுக்காக சளிவிழும் நாசியில் ஊசிபோல் குத்தும் கண்ணில் பீளைசாறும்.

நீர்பீனிசம் - நாசியில் நீர்வடியும் மழைகாலத்தில் பிடரியும் முகமும் வூரலுண்டாகும். அடிக்கடி தும்மல்வரும் தலை கழுத்து வலிக்கும்.

சீழ்பீனிசம் - கபாலத்தி லதிகவெப்பங்கொண்டு கபால முதல் நாசிவரையில் புண்ணாகி சீழ்வடியும் தலைவலிக்கும்.

உதிரபீனிசம் - கபாலத்தில் வட்டவட்டமாய் புண்ணாகி நாசி வழியாய் உதிரம்வரும் தலைவலிக்கும்.

சீராய்பீனிசம் - நாசியில் யீருள்ளி கூடும்போல் சீழ்திரண்டுவரும் மணம்தெரியாது விடாமல் தலைவலிக்கும்.

நவமூலம் - உள்மூலமென்பது அபானத்தில் சதைவளர்ந்திருக்கும், பிரமூலம் பனைவாயில் கத்திபோலிருக்கும், இரத்தமூலம் முளைவெளிவந்து இரத்தம் வடியும், சீழ்மூலம் அடிவயறு நொந்து மலத்துடன் சீழ்வரும், மூலபாண்டு சரீரம் வூதி வயற்றில் மலம் கட்டும் முளை மூலம் வெளிதள்ளி மலமிறங்கும், வாதபித்த சிலேத்தும மூலமானது மேற்கண்டவைகள் ஒன்றோடொன்று மிசிரமாகும்.

காமாலை - உதிரங்கெட்டு தசைவெளுத்து யீரல்கருகி தசைகளில் கிருமிகள்பட்டு மாமிசத்தைத் தின்று மஞ்சள்நீர் கொள்வதன்றி பலவியாதிகளை யுற்பவம்செய்யு மென்றறிக.

அதிசாரம் - வயிறுபொறுமி சரீரம்வாடும் மலம் கருமையாகவும் நுரையுடனும் காணும் இதற்கு வாத அதிசாரம் யென்றுபெயர்.

பித்த அதிசாரம் - மலம் பசுமையோடும் சீதரத்தம்விழும் அபானத்தில் கடுக்கும் இவை பித்தாதிசாரம்.

சிலேட்டும அதிசாரம் - மலம் வெண்மையாகவும் சீதம் நுரையாகவும் காணும்.

சுர அதிசாரம் - சுரங்காயும் வயிறுகழியும் சீதமும் இரத்தமும் விழும்.

அசாத்திய அதிசாரம் - மலம் வூன்போல துணுக்கை துணுக்கையாய் விழும் தேன்போலும் கரிபோலும் காணும்.

வியாதிகளின் வரலாற்றுப் பரணி
முற்றுப்பெற்றது.

உ
தேவிசகாயம்

மூன்றாவது
இங்கிலீஷ் வகைபரணி

இங்கிலீஷின் அவுஷதங்கள் அளவிறந்ததாக யிருப்பினும் சகலரும் இலேசில் கையாளத் தக்கவைமாத்திரங் கூறப்படும்.

அசீரணத்திற்கு

(பெப்பிரமெண்டாயில்) (2) துளிமுதல் (5) துளிவரையில் நல்லஜெலத்திலாகிலும் சர்க்கரையிலாகிலும் கொடுக்கவும் இப்படி (3) மணிக்கொரு முறையாக இரண்டு மூன்றுவேளை கொடுக்க பசிதீபன முண்டாகும்.

கீல்வாய்வு வீக்கம் பிடிப்பு இதுகட்கு

(லிடில்சு ஒரியண்டல்பாம்) என்னும் அவிழ்தத்தைக் கொண்டு வந்து கீல்நோய் குத்தல் குடைதல் வீக்கம் உள்ள விடங்களில் முன்னதாகவே ஆத்துமணலைக்கொண்டு வந்துவறுத்து மெல்லிய சீலையில் முடிந்து ஒத்தடம் கொடுத்து மேற்படி யிடங்களில் நன்றாய்ச் சூடு உண்டானபிறகு மேற்கூறிய லிடில்சுஒரியண்டல் பாம்யென்னும் அவுழ்தத்தில் கொஞ்சம் தொட்டு அந்தப்பாகங்களில் தேய்க்கச்செய்யவும் தடவிய யிடங்களில் அந்தத்தயிலம் தோற்றப்படாமல் உள்ளுக்கே கிரகிக்கும்படி மிக்க வலிவுடைத்தாய் தேய்க்கவேண்டும். இப்படி காலைமாலை இருவேளையும் தேய்த்துவரில் சவுக்கியமாகும்.

வாதம் இடுப்புவலி பக்கசூலை பாரிசவாய்வு திமிர்வாதம் இதுகட்கு

மேற்கூறியபடி ஆத்துமணலை மிக்கசூடு கொள்ளும்படி வறுத்து துணியில்முடிந்து நோய்வுள்ளபாகங்களில் நன்றாய்ச் சூடெழும்ப ஒத்தடம்போட்டு பிறகு (லிடில்சு ஒரியண்டல்பாம்) யொன்னும் தயிலத்தைத் தேய்க்கவும் நாலுமணிநேரத்திற்கு ஒருமுறையாக

ஒருநாளைக்கு மூன்றுவிசை உபயோகப்படுத்தவும் ஆக்ஷேபனையின்றி சவுக்கியப்படும்.

தொண்டை நோய் இருமல் மார்சீதளம் இவைகட்கு

மேற்கூறிய (லிடில்சு ஒரியண்டல்பாம்) யென்னும்தயிலத்தை மார்பிலும் தொண்டையிலும் முதுகிலும் கழுத்திலும் கீழ் மட்டும் நன்றாய்த்தேய்த்து உடனே மார்பிலும் கழுத்திலும் பிளானல் முதலிய உயர்ந்தகம்பளிப் பட்டைகளினால் சுற்றிவைக்க வேண்டியது இப்படி இரவும்பகலும் கூடிய இரண்டுநாள் உபயோகப்படுத்திவரில் சவுக்கியத்தை யுண்டுபண்ணும்.

சுவாசக்குழாய் தாபனம் இரப்பு முதலியவைகட்கு

பத்துநிமிஷம் அல்லது கால்மணிநேரம் வரையிலும் மேற்படி தயிலத்தை மார்பிலும் முதுகிலும் நன்றாய்த் தேய்த்து அவைகளைக் கம்பிளியினால்சுற்றி சூடுண்டாகும்படி செய்வித்துவரில் சுகத்துக்கனுகூலமாகும் சீதளநோய் உள்ளவர்கள் மேற்படி தயில புட்டியை கார்க்குத் திறந்து முகருவார்களானால் அனுகூலத்துக்கிட முண்டாகும் ஒருகோப்பையில் கொதிக்கக் காய்ந்த தண்ணீரில் ஒரு டீக்கரண்டி தயிலத்தைவிட்டு அதிலுண்டாகும். ஆவியை மூக்கின் வழியாய் உட்கொள்ள வேண்டியது.

தலைவலி ஒருதலைவலி யுள்ளவர்கட்கு

கன்னப்பொரியிலும் நெற்றியிலும் கழுத்தின் பின்புறத்திலும் காதின்புறத்திலும் மெதுவாயும் நன்றாயும் தேய்க்க வேண்டியது நோய் முகத்தில் யிருக்குமானால் கன்னத்தில்நன்றாய் தேய்க்கவேண்டியது.

ஈலையினால் சகிக்கிற குழந்தைகட்கு

முதலாவது வாந்தி யுண்டுபண்ணும்படியாய் கொஞ்சம் படிகாரஜெலம் அல்லது பச்சைவெங்காயமும் கொடுக்கவும் பிறகு தயிலத்தை கழுத்து முழுவதும் மார்புமுழுவதும் நன்றாய் உபயோகித்து குழந்தையை கம்பிளியினால் சுற்றிவைக்கவும்.

பல்லு நோய்க்கு

(லிடில்சு ஒரியண்டல்பாம்) யென்னும் தயிலத்தைக் கொஞ்சம் பஞ்சியினால்தொட்டு பல்லுநோ யுள்ளயிடத்தில் அல்லது அதற்கருகில் வைக்கவும்.

வயற்றுப்பிடிப்பு வயற்றுவலி

வயற்றுவலி அல்லது வயற்றுப் பிடிப்புள்ளவர்கள் உடனே அந்தபாகத்தின் மீது மேற்படி தயிலத்தில் கொஞ்சம்தொட்டு தேய்க்கவும் ஒருமணிநேரத்திற் கொருகால் உபயோகப்படுத்தினால் அப்பொழுதே குணப்படும்.

இசிவு அல்லது ஜன்னிக்கு

மார்பு கழுத்துசுற்றிலும் முதுகு அல்லது கழுத்துப் பின்புறத்தின் கீழ்பாகத்திலும் நன்றாய்த்தேய்த்து கம்பளியால் சுற்றி சூடுண்டாக்கிவைக்கில் குணத்திற்கிடமுண்டாம்.

தேள் குளவி பூரான்கடிக்கு

மேற்படி விஷசெந்துக்கள் கொட்டுதல் அல்லது கடித்தயிடத்தில் இந்த தயிலத்தை நன்றாய்த் தேய்த்துவிட்டு பின்பு அதேயிடத்தில் இந்த தயிலம் கொஞ்சம் யிருக்கும்படி வைக்க வேண்டியது.

பித்தத்திற்கு

(சல்பர் காஷ்டிக்டிலியுடம் டிஞ்சர் காடனம் டிஞ்சர்சிஞ்சி பரீஸ்சுகர்) கொஞ்சம் தண்ணீரில் கொடுக்க்வும் அல்லது சோடா கலம்பாதூள் பிஸ்மத் ரேவல்சீனி தூளாக்கி (15) குன்றியிடை கொடுக்கவும்.

நீர் ஒழுக்கிற்கு

(எகஷ்டிராக்ட் பெல்டோணா) கால் கிரையன், ஒப்பியம் கால்கிரையின், கொயினான் கால்கிரையன் இவைகூட்டி மாத்திரை செய்து, வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு கொடுக்கவும்.

வயிற்று கிருமிகட்கு

(சாண்டநின்) பெரியவர்க்கு (5) கிரையன் எடுத்து கொஞ்சம் சர்க்கரையில் கலந்து கொடுக்கவும். சிறுவர்களுக்கு ஒருகிரையன் முதல் தேகதிடப்படி (4) கிரையன் வரையில் சர்க்கரையில்கலந்துக் கொடுக்கவும்.

ஒருதலை நோய்க்கு

காஜிபுட்டாயில், சிலம்நாயில், வோலியம் காசு இவைகளில் யெதுவாகிலும் தடவலாம் உடனுக்குடன் சற்று சவுக்கியத்தை யுண்டாக்கும்.

சீதளம் ஜலுப்புக்கு

மேற்படி ஆயில்களில் யெதுவாகிலும் கழுத்தைச் சுற்றியும் பிடரியிலும் கொஞ்சம் தடவித் தேய்த்து நாசியில் கொஞ்சம் முகரவும் குணப்படும்.

வாய்வுகளுக்கு

வாய்வு, குத்தல், குடைதல், பிடிப்பு இப்பேர்க்கொத்த வியாதிகள் உள்ளபாகங்களின் மீது வறுத்தமணலை மூட்டைக்கட்டி ஒத்தடங் கொடுத்து நன்றாய் சூடேறினபிறகு மேற்கூறியபடி ஆயில்களிலெதுவானாலும் கொஞ்ச கொஞ்சமாய்விட்டு நன்றாய்த்தேய்க்கவும் தயிலங்கள் மேல்புறம் தோற்றாமல் உள்ளுக்கு கிரகிக்கும்படி அழுத்தமாய் தேய்க்கவும் இப்படி காலை மாலையாக இரண்டொருநாள் உபயோகப் படுத்திவரில் சவுக்கியமுண்டு.

இதுவும் வாய்வுகட்கு

பட்டாஸ் நயின்டர்ஸ், பொட்டாஸ் அயோட்டம் யிவைகளை நல்லதண்ணீரிலாகிலும். பிராந்தியிலாகிலும் அரை அல்லது முக்கால் திராம் உள்ள அளவில் மேற்படி அவுழ்தம் கொஞ்சம் கலந்து கொடுக்கவும்.

வெள்ளைக்கு

கொப்பாப்பியா (10) துளிமுதல் (30) துளிவரையில் சர்க்கரையில் கலந்து கொடுக்கவும் இப்படி காலை மாலை (3) நாள் சாப்பிடத்தீரும்.

இதுவும் வெள்ளைக்கு

மூங்கில் உப்பு, மாசிக்காய், வால்மிளகு, மூன்றும் சமனிடைகொண்டுயிடித்து வஸ்திரகாயஞ் செய்து (கொப்பாப்பியா)

விட்டுப் பிசைந்து லேகியம்போல் வைத்துக்கொண்டு கழற்சிக் காயளவு யிருவேளையும் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சூதகவாய்வுக்கு

(பில் ஆலோஸ் யெயிட்மர்) 5-கிரையின் புசித்தவுடனே நல்ல ஜெலம் நாலுமுழுங்கு சாப்பிடவும் இப்படி இரண்டொருநாள் செய்ய அல்லது சவுக்கியப்படுமளவும் உபயோகிக்கவும்.

கொருக்கிற்கு

காஸ்டிக் டெஞ்சுபுளு, அயிண்டு மெண்டு இவை கூட்டி நன்றாய்ரேகித்து ரிணத்தின்மீது தடவிவரவும்

கண்ணோய்க்கு

ஜிங்சல்பாஸ், காலணாயெடை ஒருடமிளர் ஜெலத்தில் விட்டு கிளாசில் வைத்துக்கொண்டு துணியில்தொட்டு நேத்திரத்தில் துளிதுளியாக தீட்டிவரவும்.

இதுவும் கண்ணோய்க்கு

ஒரு டமிளர் ஜெலத்தில் அரைபலம் (சுகர்லட்) போட்டு கலக்கி மெல்லிய சீலையால் தொட்டு கண்களில் படும்படி தீட்டிவரவும் சவுக்கியமாம்.

சுரங்களுக்கு

கொயினன், ஜின்கொயினன், (2½) குன்றி தேனிலாகிலும் கெந்தக திராவகத்திலாகிலும் கொடுக்கவும்.

முறைகாய்ச்சலுக்கு

பவுலர்ஸ் லோலீஷன், திராவகம் பித்தகியாழத்தில் (2) துளிமுதல் (5) துளிவரையில் தேகதிடங்கண்டு கொடுக்கவும்.

இருமலுக்கு

டிஞ்சர்கேம்பர் திராவகம் (10) துளிமுதல் (30) துளிவரையில் நல்ல ஜெலத்தில் கொடுக்கவும், இப்படி இருவேளையும் கொடுக்க

வேண்டியது திரேகத்தின் பலமறிந்து துளிகளை குறைத்தும் உயர்த்தியும் உபயோகிக்கவும்.

இதுவும் இருமலுக்கு

டிஞ்சர்சில்லி டிஞ்சர் அய்யாசாமி இந்த திராவகங்களையும் (10) துளிமுதல் (30) துளிவரையில் கொஞ்சம் ஜெலத்தில் கலந்து கொடுக்கலாம் இருமல் சுவஸ்தப்படுமளவும் உபயோகிக்கவும் சீதளபதார்த்தங்களை அனுசரிக்கக்கூடாது.

வயற்று வலிகட்கு

டிஞ்சர் ஒப்பியம் (5) துளிமுதல் (15) துளிவரையில் தேக திடமறிந்து ஒருதிராம் நல்ல ஜெலத்தில் கலந்துக் கொடுக்கவும் இப்படி யிருவேளையும் கொடுக்கவும்.

இதுவுமது

டிஞ்சர் அசப்பட்டிடா (10) துளிமுதல் (30) துளிவரையில் ஒருதிராம் நல்ல தண்ணீரில் கலந்து கொடுக்கவும்.

இதுவுமது

சோடா (25) குன்றியிடை எடுத்து கொஞ்சம் சர்க்கரையில் கலந்து கொடுக்கலாம்.

விரைநோய்க்கு

டிஞ்சர் அயிடியன் நோயுள்ளபாகத்தில் தடவி போஸ்தக்காய் கியாழம் காப்பிடம் கொடுக்கவும்.

குடைச்சல்களுக்கு

லெனிமண்டம் பெல்டோணா, கேம்பர் குலோர்ட்பாரம் லைகர் அமோனியா, லெனிமண்டம் ஒப்பியம், இவைகளை சமபாகமாகக் கலந்துக்கொண்டு குடைச்சல் உண்டாகிய பாகத்தின்மீது கொஞ்சங்கொஞ்சமாய்த் தடவி சூடுண்டாகத் தேய்க்கவும் ஒருநாளைக்கு இருமுறையாக சுவஸ்தப்படுமளவும் உபயோகிக்கவும்.

பக்கயிழுப்புக்கு

ஏம்பிளாஷ்டகம் பெல்டோனா யிழுப்புள்ள பாகத்தில் நன்றாய்த்தேய்த்து திரும்பவும் தடவி வைக்கவும்.

அதிசாரபேதிக்கு

சில்பேட் ஆப்காப்பர்-½, கிரையனும் ஒப்பியம்-½, கிரையனும் கலந்து கொடுக்கவும், துவர்ப்புள்ள குழம்பு துவையல் அனுசரிக்கவும்.

நீர்துவார அடைப்பு அல்லது எரிவுக்கு

வால்மிளகு விராகனிடை-1½ நன்றாய்ப்பொடித்து வஸ்திரகாயம் செய்து நிறுத்தெடுத்து (10) பலம் ஜெலத்தில் கரைத்து ஒருதினத்திற்கு நாலுதரம் பாகித்துக்கொடுக்கவும்.

அஜீரணபேதிக்கு

காசுக்கட்டி விராகனிடை-2½, லவுங்கப்பட்டை விராகனிடை-½, ஆறுபலம் தண்ணியை அடுப்பிலேற்றி முக்காலே அரிக்கால்பலம் கற்கண்டைப் பொடித்துப்போட்டு பாகுசெய்துகொண்டு மேற்படி இரண்டுசரக்கும் தூள்செய்து அந்த பாகில்போட்டு லேகியம்போல கிளறி வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு காலே அரிக்கால்முதல் முக்கால் பலம் வரையில் கொடுக்கவும்.

மாரில் கபமில்லாத வரட்டிருமலுக்கு

நரிவெங்காயம் விராகனிடை காலேவீசம், சுக்குத்தூள் (1) விராகனிடை, கபநாயகம்-அரையே அரிக்கால் விராகனிடை, சோம்பு குன்றியிடை, இவைகளை ஒரு விராகனிடை கற்கண்டு பாகில் சேர்த்தரைத்து இரண்டு குன்றியிடை மாத்திரைசெய்து 5-மாத்திரைவரையில் கொடுக்கலாம்.

இங்கிலீஷ் வகைபரணி
முற்றுப்பெற்றது

இன்னம் அனேக அற்புதமான அவிழ்த மறைகள்
ஐந்தாம் பாகத்தில் வெளியிடப்படும்.

உ
தேவிசகாயம்

நான்காவது

மகான்களால் கையாண்டுவந்த

பெருமருந்துபரணி

இராமபாண இடிமருந்து

இடிமருந்து * அரிதாரங் காந்தம் யெள்ளு
யெட்டிவிதை செங்கொட்டை சித்ரமூலம்
வடிமருந்து * ரசங்கெந்தி மஞ்சள்ஓமம்
மாசிக்காய் ஜாதிக்காய் வசம்யீருள்ளி
குடிமருந்து * கொள்ளுக்காய் துருசுதுத்தம்
கோழிமுட்டை இந்துப்பு கோட்டங்கார்கோல்
அடிமருந்து * தக்கோல மக்கிராகாரம்
அமைத்திடித்து கலசமிட்டு அறையக்கேளே. (1)

அறையக்கேள் யோனிதன்னி லிங்கந்தன்னில்
அண்டத்தில் புடைகரப்பான் புரையின் புண்கள்
விரையக்கேள் மூக்கெரித்தல் கரப்பான்சூலை
வெடிப்புத்துக் குலைப்புத்து யீரல்புத்து
விறையக்கேள் வெண்குட்டம் குரைநோய்குட்டம்
விழித்திருப்பன் விணாத்தண்டின் விஷநீர்ப்புத்து
முறையக்கேள் முடியாத முடக்குசூலை
மூட்டோடே வியாதியெல்லாம் போமுண்பீரே. (2)

உண்பீரேல்பத்தியந்தா நிதற்கோயில்லை
உயிரானயிடிமருந்து ராமபாணம்

---

* இடி மருந்தென்பது - வெடியுப்பு
வடி மருந்தென்பது - சாராயம்
குடி மருந்தென்பது - கஞ்சா
அடி மருந்தென்பது - சவுக்காரம்

உண்பீரேல் சிறுசுண்டை யளவிலேதான்
உற்றதொரு மோருஞ்சோ ருண்டுமுன்னே
உண்பீரேல் அடுத்தடுத்து மூழ்கிமூழ்கி
உள்ளபடிமண்டலமே செல்லுமட்டும்
உண்பீரேல்தேகமது பொன்போலாகும்
உள்ளபடி பூவையரைப் புணர்ந்திடாதே. (3)

புருடருக்கும் பூவையர்க்கும் சொல்லுவன்கேள்
புணர்ச்சிதள்ளியிருக்கட்டும் மூன்றுமாதம்
இருடருக்கும்பிணியேது ராமபாணம்
எந்தெந்தநோய்வரினும் யெமன்வந்தாலும்
திருடருக்குபலிக்குமது ராமபாணம்
சித்துவிளையாடுமடா சிவன்மேலாணை
குருடருக்கும் செய்முறையாய் ஜெயமேயாகும்
கோதண்டரகுராமர் பாணந்தானே. (4)

ஸ்ரீமகான் சொக்கலிங்கப் பரதேசி யவர்கள்
கையாண்டுவந்த
சரமாரித்தைலம்

அமுஞ்சிவிதை	**புன்னைவிதை**
கடுக்காய்விதை	**புங்கம்விதை**
தாணிக்காய்விதை	**கார்கோலரிசி**

இந்த ஆறுவித்துகளையும் சமபாகமாய் நிறுத்தெடுத்து ஒரு பாண்ட த்தில்போட்டு சிறுவர்களின் சிறுநீர்விட்டு (20) நாள் ஊறியபிறகு (21) வதுநாள் யெடுத்து நிழலில் உலர்த்தி யெடுத்து அத்துடன் மிளகு நாழிபோட்டு கலந்துக்கொண்டு (5) தமருள்ளபாண்டத்தில் சரக்குகளைப்போட்டு வாய்ப்பாட்டுக்கு பானைகவிழ்த்து சீலைமண்செய்து உலர்ந்தபிறகு அடியிலுள்ள தமருக்குநேராய் சிறுபாண்டம் பொருந்தச்செய்து பூமியில் அடிபாண்டம் தெரியாமல் புதைத்து சரக்குள்ள பாண்டம் துவக்கி வரட்டியடிக்கி குழித்தயிலம் யிறக்க வேண்டும்.

நடுபாண்டத்திலிருந்தே வரட்டியடுக்க வேண்டியதான போதிலும் மூன்று பாண்டங்களும் பூமிக்குள் இருக்கும்படி பெரும்பள்ளமாக வெட்டி சுற்றளவுக்கும் பாண்டத்திற்குப் பொருத்தமாக வரட்டிகள் அடுக்கி குருத் தியானத்துடன் அக்கினியிட வேண்டியது

அவ்வாறுசுசிகரத்துடன் பிறர் சஞ்சரிக்காத மறைவிடமான யிடத்தில் வைக்கவேண்டிய குழிப்புடத்தின் அருகில் தயிலம் யிறங்குமளவும் நிர்வாணிபூசை செய்ய வேண்டியது.

(ஓம் கிலியும் சௌவும் ஐயும் றீயும்
வறீயும் கிறீயும் ஆம் ஊம்.)

என குழியின் நிதானம் அறிந்து தயிலம் இறங்குமளவும் இந்த ஒன்பது வாக்கியமும் புருவநிதானத்துடன் ஓதியிருந்து பிறகு தயிலத்தை சீசாவில்யிருத்து வைத்துக்கொள்ளவும்.

இந்த தயிலத்தினால் தீரும் வியாதிகள்

வைத்திருந்த தயிலத்தை கொஞ்சந்தொட்டு
மயிர்நுனியில் தடவிவிடக் கருத்துபோகும்
எய்த்திருந்தவெடிசூலை கண்டமாலை
எண்ணூறுசொரிசிரங்கு கரப்பானெல்லாம்
உய்த்திருந்து கெட்டோடுந் தயிலந்தன்னை
ஒடிகுறவு நோய்களுக்கு பூசிப்பாரு
மொய்த்திருந்த நோய்களெல்லா மோடிப்போகும்
முழித்திருந்து தயிலத்தை மூழ்குவாயே. (1)

மூழ்கையிலே விஷநீரு முடிசிரங்கு
மூர்க்கமுள்ள தலைவெட்டி ரோகந்தீரும்
மாய்கையிலே புழுவெட்டி ரோகந்தீரும்
மகிமையிலே வயிரதுவுங்கறுத்துபோகும்
மூழ்கையிலே யசாத்தியநோய் நடுக்கல்தீரும்
முடிசிரங்கு குருந்தடிப்பு வினையுந்தீரும்
ஆழ்கையிலே பாம்பரணை கடியுந்தீரும்
அரணைகடிச்சிலந்திகடி * வாளம்போமே. (2)

போனமென்றகுழிவாழை மூட்டுவாழை
புடைத்தெழுந்த துடைவாழை முதுகுவாழை

* வாளம் என்பது வாளவிரியன். ஓர் பாம்பு

ஆமையடி ஊமையடி சிலந்திவாழை
அப்பனே சொல்லுகிறே னன்பாய்த்தானே
வேமென்றகண்ணோசி யிடுப்புசிட்டை
இருபுடரி நுணிநாசி சிலந்திபுத்து
தாணுங்கிமிள வையிமை கண்மேல்வாதம்
சரிநேத்திரபிளவையிதில் தணியும்பாரே. (3)

தணிவான பெண்குறிமேல் கரப்பான்கட்டு
தடர்சிலந்திபடர்சிலந்தி யல்குல்புத்து
பிணியான பவுத்திரமும் முளைமூலந்தான்
பின்கரப்பான் முன்கரப்பான் அண்டபுத்து
துணிவாத உந்திப்புண் துடையில்புத்து
துடிசூலையிடிசூலை மேகசூலை
கெணியாத அலைகடிமேல் யிலைமேற்புண்கள்
கீழ்நாக்கு மேல்நாக்கு புத்துப்போமே. (4)

புத்து போம்யிருபிளவை நகத்தின்சூலை
புரைவிழுந்தபடுஞ்சிரங்கு நிறுத்தும்பாரு
அத்துப்போம் நாக்குண்ணி மூக்குண்டபுண்ணு
அகலாதநோய்களெல்லா மகன்றுபோகும்
வெத்துப்போம் முளையான நோய்களெல்லாம்
விழிமுழிங்கியிமை முழிங்கி வெகுநாள்புண்கள்
செத்துப்போம் யித்தனைக்கும் பூசும்போது
தீர்ந்துப்போம் யின்னமுண்டு சொல்லக்கேளே. (5)

சொல்லக்கேள் நல்லரவம் விரியன்பாம்பு
சூழெலிகள் குருட்டெலிகட் புடையன்மூக்கன்
வெல்லக்கேள் தேளோடு நட்டுவாக்காலி
விஷமுள்ளுதைத்தாலும் பூசுபூசு
இல்லக்கேள் ஒழிந்துவிடும் விஷங்களெல்லாம்
இத்தயிலம் வெகுசுருக்கு மெத்தநன்று
சொல்லக்கேள் விஷங்களோடு நோய்கள்யாவும்
கொல்லவென்றேயித்தயிலம் கூறினேனே. (6)

கூறினேன் புகையிலையும் புளியுந்தள்ளு
கூரரியபச்சைமீன் தள்ளுதள்ளு
மீறியேதிண்ணாதே அசனத்தைத்தான்
மிழுங்காதேயுரங்காதே மிகச்சொல்லாதே

ஏறினேன்யென்றவரை யிகழந்திடாதே
யேசாதேவையாதே திட்டாதேநீ
ஆறியேபதமாக உண்டால் மைந்தா
அமுர்தமது தன்னிலையாய் நிலைக்கும்பாரே. (7)

குருதுணைவுண்டாகவும்

சகலமேகராஜாங்க ரசகெந்திமெழுகு

இரசம்	வாலுமுவை
கெந்தி	சோம்பு
ரசகற்பூரம்	ஏலம்
அரிதாரம்	ஜாதிக்காய்
காந்தம்	மிளகு
துருசு	சீரகம்
துத்தம்	கார்கோலரிசி
முதார்சிங்கு	மாசிக்காய்
சுக்கு	தேவதாரம்
ஓமம்	வாய்விளங்கம்
மஞ்சள்	வசம்பு
திப்பிலி	லவுங்கம்
அரத்தை	பரங்கிசெக்கை
கோஷ்டம்	சேங்கொட்டை
கருஞ்சீரகம்	கடுக்காய்தோல்
காட்டுசீரகம்	சிறுதேக்கு
முந்திரிக்கை	தாளிசம்
பிரம்மிமூலம்	யெட்டிவிரை
நீர்பூண்டு	தேற்றான்வித்து
கொள்ளு	எள்ளு
தேங்காய்	அமுக்குராவேர்
சின்னிவேர்	கொப்பரைதேங்காய்
சங்கம்வேர்	கொல்லங்கோவை

இவைகளை வகைக்கு ஒரு விராகனிடையாக நிறுத்தெடுத்து கல்லுரலில்யிட்டு யிடித்து வஸ்திரகாயம்செய்து அத்துடன் இரண்டு கோழிமுட்டைகளை உடைத்து ஊற்றி பிறகு நிறுத்தெடுத்து

அதுயிருக்கும் யிடைக்கு சரியிடை பழைய பனைவெல்லஞ்சேர்த்து கல்லுரலில்போட்டு பூணில்லாத மர உலக்கையால் மைபோல் குத்தியெடுக்கவும்.

இதனால் தீரும்வியாதிகள்

குத்தப்பாயிதுநேரே பனைவெல்லந்தான்
குணமாகநால் ஜாமம் யிடித்துத்தீரும்
பெத்தப்பாவழித்தெடுத்து சிமிழில்வைத்து
பேதமில்லை சுண்டக்காய் வீதங்கொள்ள
முத்தப்பாமோருஞ்சோ றுண்டுமுன்னே
முசியாமல் மருந்துண்ணு மண்டலந்தான்
சித்தப்பாமுழுகுநாள் மருந்துண்ணாதே
சிறப்பாகபத்தியந்தா னில்லைதானே. (1)

தானென்றவெடிசூலை மேகசூலை
தயவான யிடிசூலை புடைக்குஞ்சூலை
வானென்ற துடிவாத சூலையோடு
வளமானகால் குடைச்சல் கரணைதீரும்
மானென்ற ஆம்புவிப் புருதிமாலை
மதியாத குட்டமொடு விஷநீர்தீரும்
கோனென்றகுரைநோயும் சிரங்குதீரும்
குணமான புழுவெட்டு தடிப்பும்போமே (2)

போமேநீயோனிதன்னில் லிங்கந்தன்னில்
பொலிவான ஆமையடி சிலந்திமேகம்
தாமேநீசெங்கிரந்தி கருங்கிரந்தி
தயவான அரிகிரந்தி பொரிகிரந்தி
வாமேநீ பருங்கிரந்தி யிடிகிரந்தி
வளமாகயிடிவிழுந்த புரைமேற்புண்கண்
ஆமேநீ அரைக்கடியுந் தண்டிற்புண்ணு
அடைவான குள்ளிமா தேவியாமே. (3)

ஆமேநீதுடைவாழை மூட்டுவாழை
அடைவான குழிவாழை முதுகுவாழை
சேமேநீ புழுகுவாழை விலாவில்வாழை
செயலான தமர்காயாச் சிலந்தியோடு

ஓமேநீகுரிப்புற்று யோனிப்புற்று
ஒளிவான யிடிப்புற்று. கன்னப்புற்று
தாமேநீ பல்சிலந்திக் கன்னத்தோசை
சதைவளருங்கண்ணோசை போகும்பாரே. (4)

பாரடாபிளவையொடு பிளவைப்பூச்சி
பண்டானராஜ னென்ற பிளவையோடு
கூரடாநேத்திரமேல் பிளவையோடு
கொடிதான துடிசிலந்தி புடைசிலந்தி
தேரடா பவுத்திரங்கள் முளைமூலங்கள்
நெடியபதமெட்டுசக் கரத்தினோடு
வீரடாயிவையெல்லாந் தீருந்தீரும்
விதமாகபோகருட செயலால்தானே. (5)

சகலவிஷங்கள் பேய்பில்லி சூனியம் இவைகட்கு விஷமுஷ்டித் தைலம்

ஏரழிஞ்சி	சங்கங்குப்பி
எட்டி	கடம்பு
சங்கு	சிறுசின்னி
வன்னி	வெள்ளறுகு
புங்கு	ஆவிரைப்பட்டை
செண்பகப்பூ	மருக்காரை
இண்டன்	குண்டுமணிவேர்
கொத்தான்	ஆவாரை
நாயுருவி	சிவன்வேம்பு
பூனைகாஞ்சோரி	முள்ளி
புரசை	கருங்காலி
கிளுவை	வாகை
புனல்யிண்டு	கருவூமத்தை
அமுக்கரா	விடத்தேறு
பூவரசு	குட்டிப்பலா
குமரி	மிளகருணை
கொன்றை	ஆத்தி
கழற்கொடி	செங்கத்தாரி
பெருமரப்பூண்டு	அவுரி

இவ்வகளை சமனிடையாயெடுத்து நிழலில் உலர்த்தி ஒன்றிரண்டா யிடித்து குழித்தயிலம் யிறக்கி வைத்துக்கொண்டு உடனே,

கழுகு	கழுதைமண்டையோடு
ஆமை	எருமைக்கொம்பு
ஆந்தை	குதிரைக்குளம்பு
பச்சைஓணான்	ஆனைலத்தி
தேவாங்கு	ஒட்டைலத்தி
பச்சைதவளை	பன்றிலத்தி
பெருவிரியன்	கழுதைலத்தி
மனிதர்மண்டையோடு	வெள்ளாட்டுப்புழுக்கை

இவைகளை சமனிடை கொண்டுயிடித்து உலர்த்தி குழித்தயிலம் இறக்கிவைத்து இதில் அரைப்படியும் மேற்படி தயிலத்தில் அரைப்படியும் ஆக ஒருபடி·தயிலமும் ஒன்றாய் வார்த்து (மேல்மூடி) ஆறியபுடமாகவைத்து எட்டிக்கொட்டையை குழித்தயிலம் வைத்து அரைப்படியெடுத்து மேல்கலந்து வைத்த தயிலத்துடன் வார்த்து நன்றாய் வாய்புறத்திற்கு கார்க்கடைத்து ரவியில் வைத்துவிட்டு,

கருங்குங்கிலியம்	கஸ்தூரிமஞ்சள்
கருஞ்சீரகம்	மாசிக்காய்
இரசகற்பூரம்	இவ்வைந்தும் வகைக்குப்பலம் (1)

பரங்கிப்பட்டை பிரப்பங்கிழங்கு இவ்விரண்டும் வகைக்குப்பலம் (2) வலம்புரிக்காய் கடுக்காய் வகைக்குப் பலம் (1) ஓதியம்பட்டைச்சாறு சித்திரமூலச்சாறு இரண்டும் கலந்துக் கொண்டு இதைவிட்டு மேற்படி கடைசரக்குகளை அரைத்து முன்யிறக்கிவைத்திருக்கும் குழித்தயிலத்துடன் கலந்து வைத்துக்கொண்டு அத்துடன் மயிலெண்ணை அரைப்படி, வேப்பெண்ணெய் அரைப்படி கலந்து அடுப்பேற்றி தயிலபதமாயும் குருவனுக்கிரகத்தாலும் கைமுறை செய்முறையோடும் தெரிந்துக் காய்ச்சி யிறக்கி வைத்துக்கொண்டு திரேகத்தின்மீது துவளைவிடத் தீரும் வியாதிகளாவன.

மழமையாகிய கால்முடக்கு கைமுடக்கு, தீராதசூலை, குட்டம், குரைநோய், புடையன், விரியன், செய்யான், செவ்வெட்டை, மரவெட்டை, சகலவித வண்டுகடி, பில்லிசூனிய வேதைவைப்பு, பிசாசு, பூததுடர், வேதாளபார்வை, பிரமராட்சதி சந்திப்பு, இவைகள் தீரும்.

மற்றாநாள் வேதுதண்ணீர்விடவும் கைப்பு புளிப்பு தள்ளவும் உப்புகூட்டு கூட்டவும் பாசிப்பயர் முருங்கைப்பிஞ்சு முழுத்துவரை ஆவின்பால் இவையாகும் வியாதியும் தேகமும் முதலாகி சகலபலமும் தெரிந்துபத்தியம் வைக்கவும்.

பதினெண்மர் துணையுண்டாகவும்.

சகல வலிப்புகட்கும் சோதிரிஷத்தைலம்

அவுரிவேர்	குட்டிகுமிழ்வேர்
முன்னைவேர்	குட்டிக்களாவேர்
அழிஞ்சிவேர்	பெருங்குதம்பைவேர்
சிவனார்வேம்பின்வேர்	முருங்கைவேர்
சிறுபுள்ளடிவேர்	முளகருணைவேர்
சங்கம்வேர்	முக்காவேளைவேர்
செங்கத்தாரிவேர்	பாவெட்டைவேர்
வாகைவேர்	ஆதொண்டைவேர்
புங்கன்வேர்	வெட்பாலைவேர்
நொச்சிவேர்	கண்டங்கத்திரிவேர்
கொடிவேலிவேர்	தூதுளைவேர்
சத்திசாரணைவேர்	கூத்தன்குதம்பைவேர்
வெட்பாலைவேர்	ஓரிலைத்தாமரைவேர்
உத்தாமணிவேர்	நன்னாரிவேர்
எலியாலம்வேர்	முருக்கம்வேர்
குட்டிவிளாவேர்	

இந்த வேர்வகைகள் முப்பத்திமூன்றும் வகைக்கு ஒரு விராகனிடையாக நிறுத்தெடுத்து நிழலில் உலர்த்தி ஒரு அங்குலம் இரண்டங்குலம் அளவாக நறுக்கி பாண்டத்தில் வைத்துக்கொண்டு.

நற்பாகல்சார்	புங்கம்யிலைச்சார்
நாய்ப்பாகல்சார்	முடக்கத்தான்சார்
ஆடாதோடைச்சார்	காட்டுக்குறிஞ்சான்சார்
சிறுசின்னிச்சார்	மாவிலிங்கஞ்சார்
எருக்கிலைச்சார்	எலுமிச்சம்பழச்சார்

இந்த சார்வகைகள் பத்தும் வகைக்கு கால்படியாகயெடுத்து வெவ்வேறு பாண்டங்களில் வைத்து ரவியில்வைத்து,

கருஞ்சீரகம்	சதகுப்பி
கஸ்தூரி	சித்தரத்தை
பூதகரப்பான்பட்டை	பேரரத்தை
தஞ்சநைகர்சிட்டம்	செண்பகப்பூ
பெருங்காயம்	திப்பிலி
ஜாதிக்காய்	வாய்விளங்கம்
மஞ்சள்	கடுக்காய்த்தோல்
மரமஞ்சள்	செவியம்
குக்கில்	சிறுதேக்கு
அரப்பொடி	கடுகுரோகணி

இவைகள் வகைக்கி விராகனிடை (6)

வசம்பு விராகனிடை (10) உள்ளி விராகனிடை (10) வலம்புரிக்காய் விராகனிடை (16) இந்த பதினாறு தினுசுகளையும் கல்லுரலில்போட்டு யிடித்து வஸ்திரகாயம் செய்து முதலில் நறுக்கிவைத்திருக்கும் காட்டுவேர்கள் யாவும் பாண்டத்தில் போட்டு இரண்டுபடி கியாழம்வைத்து அரைபடி கியாழமாகக் குருகக்காய்ச்சி வடித்து வஸ்திரகாயம் செய்திருக்கும் கடைசரக்கை கல்வத்திலிட்டு இந்தக்கியாழத்தில் அரைக்கவும் கியாழம் மிச்சமானால் ஆறவைத்து ஆறவைத்து அரைத்தபிறகு முன் பிழிந்து வைத்திருக்கும் பத்துவகை சார்களையும் ஒவ்வொன்றாய் விட்டு அரைத்துவுடனே,

பசுங்கோமியம்	படி	கால்
எருமைக்கோமியம்	படி	"
வெள்ளாட்டுக்கோமியம்	படி	"
சிறுபிள்ளைகள் மூத்திரம்	படி	"

இந்த நான்குவகை நீரும்விட்டு அரைத்து சரணிப்பதமானபிறகு அத்துடன் விளக்கெண்ணை கால்படி வேப்பெண்ணை கால்படி இவ்விரண்டும் ஊற்றி குழம்பு பதமாய் கலந்து அடுப்பிலேற்றும்போது,

வவ்வால்	இரண்டு
கள்ளிக்காக்காய்	ஒன்று
பெருவோணான்	ஒன்று

முயல்	ஒன்று
சிற்றோணான்	மூன்று
உடும்பு	ஒன்று
நல்லபாம்பின் கண்டம்	ஒன்று
பச்சைமயில் இறகு	ஐந்து

இவைகள் ஒவ்வொன்றையும் அறுத்து உதிரத்தை மேற்படி எண்ணெய் பாண்டத்தில் பிடித்துக்கொண்டு இறகு தோல் குடல் இவை களைநீக்கி இறைச்சியையும் அத்துடன் போட்டு அடுப்பேற்றி யெரித்து இறக்கி வைத்துவிட்டு மறுநாள் அடுப்பிலேற்றி யெரித்து இறைச்சியில் யாவும் யெடுத்துத் தயிலத்தை மாத்திரம் பிழிந்துக்கொண்டு இறைச்சித் துண்டுகளை யெரிந்துவிட்டு எண்ணெயை வேறு சீசாவில் வடித்து வைத்துக்கொண்டு ஒரு துளிமுதல் ஒரு காசுயிடைவரையில் கொடுக் கவும் தலைமுதல் தேகம்முழுவதும் தேய்த்து துவளையிலிடவும் தேகவலிவு வியாதிகளின் நோக்கம் இவையுணர்ந்து உள்ளுக்கும் கொடுப்பதும் சர்வாங்க துவாளையிடுவதும் பண்டிதர்களுடைய பக்குவமாம்.

இதற்கு தீரும் வியாதிகள்

கோணைவலிப்பு, குமரகண்டவலிப்பு, பிரவலிப்பு, கூக்கை வலிப்பு, ஜன்னிவலிப்பு, ரணவலிப்பு, முகவாதவலிப்பு, முக ஜன்னிவலிப்பு, முயல்வாதம், பாரிசவாதம், உச்சிவாதம், கணுவாதம், வாதமென்றுசொல்லப்பட்ட சகலவாதங்களும், வலிப்பென்று சொல்லப்பட்ட சகல வலிப்புகளும், ஜன்னியென்று சொல்லப்பட்ட சகல ஜன்னிகளும் தீரும்.

பத்தியம்

புகையிலை, கருவாடு, மீன், இறைச்சி, கரப்பான், பண்டம், லாகிரி, பொடி, போகம், இவைநீக்கவும், அன்றியும் நோய்க்கிசைந்தபடி சமயோசித பத்தியம் வைப்பது வயித்தியம் அனுபவமாகும்.

சற்குருதுணையுண்டாகவும்.

லகுயிடிவல்லாதி

செங்கொட்டை	பலம்	10
எள்ளு	"	10
கொப்பரைத்தேங்காய்		2

பரங்கிப்பட்டை	பலம்	2
அமுக்கனாங்கிழங்கு	"	2
சித்திரமூலம்	"	2
கஸ்தூரிமஞ்சள்	"	2
கருஞ்சீரகம்	"	2
வாலுமுவை	"	2
குராசானி	"	2
வெற்றிலைக்காம்பு	"	2
கடுக்காய்தோல்	"	2
திப்பிலி	"	2
கோஷ்டம்	"	2

முதலில் சொல்லியிருக்கும் செங்கொட்டை பத்து பலத்தையும் ஒவ்வொரு கொட்டைகளின் மூக்கைவெட்டி சாணிப்பாலில்போட்டு மேல்மூடி மூன்றுநாள் ஊறவைத்து எடுத்து ஜெலத்தில் அலம்பிவிட்டு பிறகு இளநீரினால் அலம்பியெடுத்து கல்லுரலில்போட்டு எள்ளு பத்து பலத்தையும் அம்மியில்வைத்து அரைத்து கொப்பரை தேங்காயையும் அம்மியில் அரைத்து இந்தயிரண்டு முத்தையையும் உரலில்யிருக்கும் செங்கொட்டையுடன்போட்டு கெட்டப்பாறையினால் மூன்றுநாள் யிடிக்கவும் மைபோல் ஆகுமளவும் யிடிக்கவேண்டியது அப்படி மெழுகுபதமாய் யிடித்தானபிறகு பரங்கிச்செக்கை முதலாய் கோஷ்டம் வரையில் உள்ள பதினோரு தினுசுகளில் வெற்றிலைக் காம்புதவிர மற்றதுகளை வேறே வுரலில் யிடித்து வஸ்திரகாயம் செய்து முன்பு கல்லுரலி லிருக்கும் மருந்துடன் போட்டு ஒருநாள் யிடித்து வழித்து வைத்துக்கொள்ளவும் வெற்றிலைக்காம்பை எள்ளரைக்கும்போது கூடப்போட்டு அரைத்துக் கொள்ளவேண்டியது. இம்மருந்தை இடிக்க வேண்டிய மனிதன் காலையில் எருமைத்தயிறுசேர்ந்த பழையது வயறுநிரம்பப்புசித்து யிடிக்கத்துவங்கவேண்டும் யிடிக்கும்போது நிதம் ஒருகொப்பரைத்தேங்காய்த்தின்ன வேண்டும். இடித்து முடிவானபிறகு விளக்கெண்ணெய் தலைக்குத்தேய்த்து ஸ்நானம்செய்யவேண்டும்.

இதனால் தீரும் வியாதிகள்

தானென்ற வல்லாதி அந்திசந்தி
  தயவாக மண்டலந்தான் கொண்டாயானால்
வானென்ற குட்டமொடு கிரந்திசூலை
  வகையான அறையாப்பு மேகமெல்லாம்

கோனென்ற குன்மமெட்டு சுக்கிலவாய்வு
குணமில்லாரிணம் புரைகள் கிரந்திதீரும்
ஏனென்ற பத்தியந்தா நிச்சாபத்தியம்
இதமான உப்புமுதல் வறுத்துக்கூட்டே. (1)

கூட்டப்யாதயிர்மோரும் நெய்யுமாகும்
குணமான துவரையுட பருப்புமாகும்
நாட்டப்பாபாசியென்ற பயருமாகும்
நலமான நல்லாரைப் பொன்னாங்கண்ணி
ஆட்டப்பாமச்சமென்ற தெல்லாந்தள்ளு
அடைவாகமற்றதெல்லா மாகும்பாரு
ஆட்டப்பா விளக்கெண்ணை தேய்த்துமூழ்கு
அடைவாக சுந்திரம்போல் தேகமாமே. (2)

நாலுநாளைக்கொருதகுதி விளக்கெண்ணெயில் தலைமுழுகிவர வேண்டியது முழுகும்நாளில்மட்டும் மருந்துண்ணப்படாது, க்ஷவரம் செய்துக்கொள்ளும் தினத்திலும் மருந்துண்ணப்படாது, புகை சுருட்டும் லாகிரிவஸ்துவும் எப்போதும் கூடாது, இந்தமருந்தை புசிக்கும்நாள் துடங்கி மருந்துவிட்டபிறகு தொண்ணூறுநாள் வரையிலும் ஸ்ரீசம்மந்தம் கூடாது, வேளைக்கு ஒருசுண்டக்காயளவு சாப்பிடவேண்டும்.

குருதுணைவுண்டாகவும்

21-மேகத்திற்கும் சித்திரபல்லாதி

பால்வுள்ள செங்கொட்டைகளாக (100) கொட்டை கொண்டுவந்து குழித்தயிலம் யிறக்கி மூன்றரைபலம் தயிலம் நிறுத்துயெடுத்து வைத்துக்கொண்டு எள்ளு (5) பலங்கொண்டு வந்து ஜெலத்தில் வூறவைத்து பிசைந்து மேற்றோல்போக்கி உலர்த்தி கல்லுரலில்போட்டு நன்றாய் யிடித்தபிறகு அத்துடன் நல்லவெல்லம் (5) பலம் போட்டுயிடித்து பின்பு கெந்திபலம் (2) சூதம் பலம் (1) இவ்விரண்டும் கல்வத்தில்போட்டு அரைத்து நன்றாய் மசிந்தபிறகு யெடுத்து உரலில் யிருக்கும் மருந்துடன்போட்டு முன் யெடுத்து வைத்திருக்கும் குழித்தயிலம் (3½) பலத்தையும் மருந்துடன்விட்டு ஒருநாள் முழுதும் யிடித்து மெழுகுபோல் ஆனபிறகு யெடுத்து பீங்கான் கோப்பையில் வைத்துக்கொள்ளவும்.

ஒருவேளைக்கு மணிப்புங்கன்விரைப் பிரமாணமாக காலைமாலை இருவேளையும் 11-நாள் சாப்பிடவும் யாதொரு பத்தியமும் கிடையாது கடுகு நல்லெண்ணெ யாவற்றும் ஆகும் அல்லது இச்சாபத்திய மிருக்கலாம் தயிர் மோர் நெய் ஆட்டிறைச்சி விசேஷமாய்ப் புசிக்கலாம்.

தீரும் வியாதிகள்

கண்டமாலை, கொருக்கு, லிங்கப்புற்று, யோனிப்புற்று ரிணங்கள், கிரந்தி, மேகப்பட்டை, குட்டத்தடிப்பு, ஆசனப்பவுத்திரம், கொடிபவுத்திரம், மூலம், சீழ்மூலம், (21) வித மேகமும் தீரும், மறுபத்தியம் (11) நாள் ஆனபிறகு நல்லெண்ணெய் தேய்த்து தலைமுழுகலாம், ஒருசமயம் திரேகம் நமைச்சல் கண்டாலும் ஊதலானாலும் இரண்டு கப்பத்தேங்காயைத்திரிகி பால்யெடுத்து அந்தப்பாலில் (2) எலுமிச்சம்பழம் பிழிந்து சிரசுமுதல் திரேகமெல்லாம் பூசி நன்றாய்த்தேய்த்துக்கொண்டு வென்னீரில் குளிக்கவும்.

குருதுணைவுண்டாகவும்
பெருமருந்துவகைபரணி
முற்றுப்பெற்றது.

உ
தேவிசகாயம்

ஐந்தாவது
மாத்திரைவகைபரணி

பாலசஞ்சீவிக்குளிகை

சுக்கு	லிங்கம்
திப்பிலி	வெண்காரம்
மிளகு	கிராம்பு
ஓமம்	வகைக்குவிராகனிடை (1)

இந்த ஏழுவகையும் யிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சார்விட்டு மூன்றுஜாமம் அரைத்து உளுந்தளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

குழந்தைகள் சுரத்திற்கு துளசி அல்லது நாய்த்துளசி பிட்டவியல்செய்து பிழிந்தசாற்றில் குழந்தை வயதுக்குத் தக்கினபடி (1) அல்லது (2) மாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் தாய் இச்சாபத்தியம் யிருக்கவும், சன்னிசுரமானால் முலைப்பாவில் கொடுக்கவும், பெரியவர்களுக்கு ஜலதோஷம் தலைபாரம் கண்டால் ஒருமாத்திரை வெற்றிலையில் வைத்து மடித்துத் தின்னவும் மேற்படி சுரங்களுக்கு அந்தி சந்தியாக மூன்றுநாள் கொடுக்கவும்.

பாலபேதிக்குளிகை

ஜாதிக்காய்	திப்பிலி
ஓமம்	கஸ்தூரிமஞ்சள்
கிராம்பு	சுட்டவசம்பு
கருஞ்சீரகம்	காயம் வகைக்கு விராகனிடை-1
சுக்கு	வெள்ளைக்காக்கணாவேர் " 9

இவைகளையிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு வென்னீர்விட்டு 3-ஜாமம் அரைத்து மிளகு, கடலை, சிறுகுண்டை இந்த அளவுகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு குழந்தைகளின் வயதும் திடமும் பார்த்து வென்னீரில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் இப்படி ஏழுநாள் கொடுக்க மூன்று நாலுவிசை வயறுபோகும் பால்குடிக்கும் சிறுகுழந்தையாகில் தாயார் பத்தியமிருக்கவும் வென்னீரின் சாதம் உப்பில்லாமலே தின்னவேண்டும் அல்லது சங்கம்யிலையில் சுட்டு பஸ்பமான உப்புசேர்த்து முழுத்துவரையை வறுத்து உடைத்த பருப்பு துவையலாகும்.

தீரும்வியாதிகள்

சளியிருமல், சுழிகணம், விச்சுழி, அள்ளு, சன்னிதோஷம், மந்தம், வயறுநோய், பொருமல், இரைச்சல், கொருகொருப்பு, சுரம், இவைதீரும்.

மகாசுராங்கிசக்குளிகை

ரசம்	விராகனிடை	1	சுக்கு	விராகனிடை	4
கெந்தி	"	1	திப்பிலி	"	4
நாபி	"	1	மிளகு	"	4
ஊமத்தன்விரை	"	3			

இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சார்விட்டு மூன்றுஜாமம் அரைத்து குண்டுமணியளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும், இந்தமருந்தை தகுந்த அனுபானங்களுடன் பிரயோகித்தால் தினசுரம், இருமுறைசுரம், மும்முறைசுரம், நாலாமுறைசுரம், சகல காச்சலும் தீரும்.

சூலைகுடாரம்

ரசம்	நெல்லிமுள்ளி
நாபி	சுக்கு
வெண்காரம்	மிளகு
கெந்தகம்	திப்பிலி
கடுக்காய்	அரிதாரம்
தான்றிக்காய்	தாம்பிரபஸ்பம்
நேர்வாளம்	வாய்விளங்கம்

இவை சமன்கொண்டு கையாந்தகரைச்சார்விட்டு (3) ஜாமம் அரைத்து குண்டுமணியளவு உருட்டி மிளகு கியாழத்தில் திடமறிந்து ஒன்றிரண்டு உபயோகித்தால் சூலைகள் குன்மங்கள் தீரும்.

சுரநாதக்குளிகை

அரிதாரம்	பலம்	6
துருசு	"	3

இவ்விரண்டும் பாகயிலைச்சாற்றால் மூன்றுநாள் அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திக்கொண்டு இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க சீதசுரம் தீரும் காலை ஒரேவேளை உபயோகிக்கவும்.

சீதசுரக்குளிகை

வெள்ளைப்பாஷாணம்	பலம்	4
ஜாதிலிங்கம்	"	2

பசும்மோரைத் தெளியவைத்து அதில் கீழே நிற்கிற வண்டல் பலம்-3, அந்தமருந்தில்போட்டு ஒருநாள் முழுதும் அரைத்து பச்சைப்பயரளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திக்கொண்டு மோரில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும், குளிர்சுரம் சொஸ்தமாகும்.

வாலசஞ்சீவி

நாவிதிப்பிலிவெண்காரம் நல்லக்காசெடை மூவைந்து
மேவும் ஜாதிலிங்கமது வீசுங்காசெடைபத்தாகும்
தூவுநிம்பழத்தின்சாற்றில் சுகமாயரைத்து ஒருஜாமம்
காவியங்கயற்கண்ணாளே கடலைநிறைபோலுருண்டை செய்யே.

இதுவுமது

சுக்கு நீர்தன்னிற் கொள்ள சுகமுடன் வெதுப்புதீரும்
தக்கசீரகங்கிராம்பு தனிலிடதாகந்தீரும்
பக்காலின் விழிதிற்கொள்ள * பண்டையின்சுரங்கடீரும்
மைக்கண்ணாய் குளிகையின்பேர் வாலசஞ்சீவியாமே.

---

* பண்டை - பழையசுரம்

பாலவிரோசனக்குளிகை

திப்பிலி	களஞ்சி	2	கடுகுரோகணி	களஞ்சி	2
மிளகு	”	2	தேசாவரம்	”	2
சுக்கு	”	2	வாய்விளங்கம்	”	2

இவை யாவும் யிடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு சுத்திசெய்தவாளம் களஞ்சி (12½) மேற்படி மருந்துடன் போட்டு எலுமிச்சம்பழச்சார்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குண்டுமணிப்பிரமாணம் உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும், பிள்ளைகளுக்கு நிலாவிரை கியாழத்திலாவது சுக்குகியாழத்திலாவது (1) அல்லது (2) மாத்திரை இழைத்துக்கொடுக்கவும் நன்றாய் விரோசனமாகும் மாந்தம் வாய்வு சுரம் இவைதீரும்.

சர்வமாந்தக்குளிகை

வாளம்	விராகனிடை	8
சுக்கு	”	7
மிளகு	”	6
கெந்தி	”	2
வெண்காரம்	”	2
ரசம்	”	2
கடுகுரோகணி	”	2

இவைகளை யிலைக்கள்ளிச்சார்விட்டு அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். சுக்கு கியாழத்திலிட சுரந்தீரும், வாழைப்பழத்தில் கொடுக்க பேதியாகும், நொச்சி ஆடாதோடை துளசி இதுகள் பிட்டிட்டுச் சார்பிழிந்து அந்தச்சாற்றில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்க சகல மாந்தமும் கண்டிக்கும்.

சஞ்சீவிக்குளிகை

நாபி	களஞ்சி	1	சுக்கு	களஞ்சி	1
கருநாபி	”	1	தாணிக்காய்	”	1
தாரம்	”	1	மிளகு	”	1
இரசம்	”	1	திப்பிலி	”	1
வெண்காரம்	”	1	வாளம்	”	5

இவைகளைக் கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்து நிறுத்தவும் இப்படி ஒருநாளைக்கொரு ஜாமமாக

ஏழுநாள் அரைத்து குண்டுமணியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும், மாந்தம் மாந்தவலிப்பு குன்மம் இது கட்கு நொச்சிலி சாற்றிலிடத்தீரும், மூலவாய்க்கு ஜாதிக்காய்ப்பொடியில் ஒரு மாத்திரைவைத்து முலைப்பாலில்விட்டு யிழைத்துக்கொடுக்கவும், சூலைவாய்வு சர்வாங்கதவாதம் இவைகட்கு முருங்கப்பட்டைச் சாற்றிலிடவும். பாம்புகடிக்கு பழச்சாற்றிலிடவும் தீரும்.

கபாட மாத்திரை

ஜாதிக்காய், ஜாபத்திரி, சீரகம், அதிவிடயம், லவுங்கம், அபினி, வன்னிகெருப்பம், வெந்தியம், களச்சிவித்து, குரோசானிஓமம், வகைக்கு விராகனிடை (¼) கெஞ்சா சாறுவிட்டு அரைத்து வெந்தியப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும், தயிரிலாவது தேனிலாவது வாழைப்பூச்சாற்றிலாவது மூன்றுநாள் யிருவேளையும் கொடுக்க ரத்தமூலம், கிராணி, ஜெலக்கிராணி, வாய்வுக்கிராணி, சுழிக்கிராணி, நீர்தாரைக்கிராணி, பாண்டுக்கிராணி, அதிசாரக்கிராணி, யாவும்தீரும்.

குழந்தைகள் சுரமாத்திரை

லவுங்கம், சுக்கு, மிளகு, ஓமம், வெண்காரம், லிங்கம், குங்குமப்பூ வகைக்கு விராகனிடை-1, பழச்சாற்றாலரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து துளசி, நாய்துளசி, முலைப்பால் இதுகளில் கொடுக்கவும், ஜன்னி சுரதோஷம் இவைகள் தீரும், பெரியவர்கள் இரண்டு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்துத்தின்னவும், ஜலுப்பு, சீதளம், தலைபாரம், சுரம், இதுகள் தீரும்.

சிகப்புமாத்திரை

சுக்கு	அக்கிராகாரம்
திப்பிலி	கோஷ்டம்
மிளகு	வெண்காரம்
லவுங்கம்	லிங்கம்
வால்மிளகு	வகைக்கு விராகனிடை (1)

இவைகளை இஞ்சிச்சார்விட்டு இரண்டுஜாமம் அரைத்து துவரையளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும் சகலவியாதிகள் சுரம் யாவற்றிற்கும் கொடுக்கலாம்.

அமுர்தசஞ்சீவிக் குளிகை

கஸ்தூரி	பச்சைகற்பூரம்
குங்குமப்பூ	மிளகு
கோரோசனம்	சன்னராஷ்டகம்
செண்பகப்பூ	பளிங்குசாம்பிராணி

இவைகள் சமநிடைகொண்டு கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றில் ஒருஜாமம் முலைப்பாலில் ஒருஜாமமரைத்து பயறுபோலுருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் வெற்றிலையில் ஒருமாத்திரைவைத்து மடித்துத் தின்ன ஜலதோஷம் சுரதோஷம் சன்னி யாவும் தீரும்.

லட்சுமி நாராயணக் குளிகை

கெந்தகம், துருசு, சீனாகாரம், அரிதாரம், இவை சமனிடை சேர்த்து சாரணைவேர் கியாழத்தால் (3) ஜாமமரைத்து அதேகியாழத்தில் தொளாந்திரமாகக்கட்டி ஒருஜாமம் யெரித்து ஆறினபிறகுயெடுத்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து அனுபானமறிந்துக் கொடுக்க வாதசுரம், பித்தசுரம், சிலேட்டுமசுரம், விஷசுரம், சன்னிபாதசுரம். சகலமும் அனுகூலமாகும்.

கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி	ஜாபத்திரி
குங்குமப்பூ	தாளிசப்பத்திரி
பச்சைகற்பூரம்	வால்மிளகு
செஞ்சந்தனம்	தக்கோலம்
ஏலம்	கிராம்பு

இவைகளை வகைக்கு விராகனிடை-1, எடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து செவ்விளநீர்விட்டரைத்து பயருபிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் குழந்தைகள் முதல் உபயோகப்படுத்தலாம்.

குங்குமப்பூ குளிகை

குங்குமப்பூ	ஓமம்
பச்சைகற்பூரம்	அதிவிடையம்
அக்கிராகாரம்	லவுங்கப்பட்டை

மராட்டிமொக்கு	குரோசானிஓமம்
ஏலரிசி	கருஞ்சீரகம்

இவைகள் வகைக்கு விராகனிடை (1) எடுத்து ஆவாரை வேரின் கியாழத்தாலரைத்து பயரளவு குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

சகல ரோகத்திற்கும் கோடாசுழிக் குளிகை

சுக்கு	நாவி
திப்பிலி	நிருவிஷம்
மிள்கு	இரசம்
கடுக்காய்த்தோல்	கெந்தகம்
தானிக்காய்	வெண்காரம்
நெல்லிப்பருப்பு	நேர்வாளம்

நேர்வாளத்தை மாத்திரம் கிரமப்படி சுத்திசெய்து (6) விராகனிடை எடுத்துக்கொண்டு மற்ற பதினொருசரக்கும் வகைக்கு ஒருவிராகனிடையாக எடுத்து கரசனாங்கண்ணிச் சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து கலுவத்துடன் அப்படியே வைத்துவிட்டு மறுநாள் உதயத்தில் மேற்படி சாறுவிட்டு ஒருஜாமம் அரைக்கவும் இப்படி நிதம் ஒரு ஜாமமாக ஏழுநாள் அரைத்தபிறகு குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள்

விளக்கெண்ணெயில் ஒருமாத்திரையிழைத்துக்கொடுக்க பேதியாகும், மோரில் (1) அல்லது (2) மாத்திரைகொடுக்க கிராணிகள் தீரும், இஞ்சிச்சாற்றில் கொடுக்க செரியாகுணம் தீரும் கரசனாங்கண்ணிச்சாற்றிலிட குளிர்சுரம்தீரும் மேற்படி சாற்றிலிட அல்லது கியாழத்திலிட உடம்புநோய்தீரும் நொச்சிச்சாற்றிலிட சுக்கிலபிரமியந்தீரும் பழச்சாற்றிலிட உடம்புவீக்கந்தீரும் ஜாதிக்காயில் கொடுக்க பேதிகட்டும் பிரண்டைசாற்றில் கொடுக்க போகம் அதிகரிக்கும் ஆனை வணங்கிச்சாற்றிலிட உடம்புயிளைப்புதீரும்.

கோரைக்கிழங்குசாற்றில் (1) மண்டலமிட நாள்பட்டகிராணி தீரும், பாக்கில்கொடுக்க கெற்பமுண்டாகும்.

முருங்கப்பட்டைச்சாற்றிலிட வயற்றுசூலைதீரும் தயிரில்கொடுக்க அஜீரணம் தீரும்

ஊமத்தைசாற்றிலிட ஜன்னிபாதம் தீரும்
வெள்ளாட்டுப்பாலிலிட ஜெலரோகந் தீரும்
வெல்லத்திலிட மலக்கட்டு தீரும்
நெல்லிக்காய் சாற்றிலிட உடம்பெரிவு தீரும்
அன்னக்காடியிலிட பித்தந் தீரும்
புளிப்புமாதளம்பழம் சாற்றிலிட பசியுண்டாகும்
பொன்னாங்கண்ணிசாற்றிலிட பசியுண்டாகும்
கழுநீரிலிட சகல உஷ்ணமும் தீரும்
கோமூத்திரத்திலிட பித்தஉடம்புதிமிரும் தீரும்
முள்ளங்கிசாற்றிலிட மூலந்தீரும்
இலவம்பட்டைசாற்றிலிட விக்கல்தீரும்
எள்ளிலைச்சாற்றிலிட கண்படலம்தீரும்
சிறுநீரிலிட ஐந்துவகைகுன்மம் தீரும்
ஜாதிக்காயிலிட மூலக்கிராணிதீரும்
மிளகுபசும்நெய்யிலரைத்து அதிலிட பாம்புவிஷம் தீரும்
வசம்பில் கொடுக்க வாய்வுதீரும்
சுக்கில் கொடுக்க இரைப்புகடுப்பு தீரும்
சீரகப்பொடியும் சக்கரையும் கலந்து அதிற்கொடுக்க சகலசுரமும்
உஷ்ணமும் தீரும் குளிர்ச்சிதரும்
அலரியிலையில் நசியமிட வெரிதீரும்
காடியிலிழைத்துப்பூச சந்துவாதம்தீரும்
செண்பகமொக்கில் அரைத்துப்பூச வாதம்தீரும்
பழச்சாற்றிலிட பாம்புவிஷம் தீரும்.

இந்தகுளிகையை தினம் மூன்று உருண்டையாக இடைவிடாமல் மூன்றுவருஷகாலம் தின்றுவந்தால் திரேகம் வச்சிரகாயமாகுமென்று இந்தமுறைதந்தவர் சொல்லுகிறார். அன்றியும் வயித்தியர்கள் கையாடும் பக்குவத்தினால் எல்லா வியாதிகட்கும் இந்த ஒருவித மருந்தையே உபயோகிக்கலாமென்றும் தெரிவிக்கிறார்.

பூரமாத்திரை

இரசகற்பூரம்	விராகனிடை	10	மிளகு	விராகனிடை	2
வெண்காரம்	"	2½	திப்பிலி	"	2
பச்சைகற்பூரம்	"	1	கருஞ்சீரகம்	"	1

வாய்விளங்கம்	"	2	மோடி	"	2
லவுங்கம்	"	1	ஏலரிசி	"	1
சுக்கு	"	2	வாளம்	"	6

இவைகளில் சூரணிப்பதை சூரணித்துக்கொண்டுயாவும் கல்வத்திலிட்டு சுக்குகியாழத்தால் ஒருஜாமம் அரைத்து குன்றியளவுமாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் அந்திசந்தி இருவேளையும் பத்துநாளுண்ணவும் இச்சாபத்தியம்.

மதுரமாத்திரை

அதிமதுரம்	மாதுளம்பூ
ஜாதிக்காய்	சீரகம்
அதிவிடையம்	அக்கிராகாரம்

இவைகளை சமநிடைகொண்டு பொன்வறுப்பாய்வறுத்து யிடித்து சூரணித்து புளியாவரைச் சாற்றாலாட்டி மிளகளவு குளிகைசெய்து நிலலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில் சக்கரையில் ஒரு மாத்திரை கொடுக்கவும் வெப்புக் கழிச்சல் தீரும் இச்சாபத்தியம்.

சுரயேலாதிக்குளிகை

ஏலம்	சீரகம்
கோஷ்டம்	கருஞ்சீரகம்
திப்பிலி	அக்கிராகாரம்
மாசிக்காய்	பேய்ப்புடல்
மாஞ்சில்	கோரோசனை

இவைகள் வகைக்கு விராகனிடை-2½, யாக வாங்கி பொன்வறுப்பாய்வறுத்து யிடித்துச் சூரணித்து முலைப்பால்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து கடலைப்பிரமாணம் மாத்திரை செய்துவைத்துக்கொண்டு முலைப்பாலில்தானே யிழைத்துக் கொடுக்கக்காச்சல் உட்சுரம் இவைதீரும் இச்சாபத்தியம்

மாத்திரைவகைபரணி
முற்றிற்று.

உ

தேவிசகாயம்

ஆறாவது

எண்ணெய்வகைபரணி

சர்வரோகத்திற்கும்

பொது யெண்ணெய்

ஜாதிக்காய்	சித்தரத்தை
ஜாபத்திரி	கடுக்காய்
ஏலம்	தாணிக்காய்
கோஷ்டம்	மாசிக்காய்
அதிவிடையம்	சீரகம்
குங்குமப்பூ	வால்மிளகு
அதிமதுரம்	குரோசாணிஓமம்
சித்திரமூலம்	சதகுப்பி
சுக்கு	வசம்பு
செவியம்	ஓமம்
பேரரத்தை	

கடைசியில் கூறிய ஓமம் (5) விராகனிடை வசம்பு (6) விராகனிடை எடுத்துக்கொண்டு மற்ற சரக்குகள் யாவும் வகைக்கு இரண்டு விராகனிடையாக யெடுத்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு வசம்பைச்சுட்டு சாம்பலாக்கி சேர்க்கவும்.

ஈயத்தண்டு	தபசுமுருங்கை
பழம்பாசியிலை	நாவற்கொழுந்து
நுணாயிலை	கொட்டைக்கரந்தை
புங்கன்யிலை	சிறுபுள்ளடி
சங்கன்யிலை	துளசி
கழற்சியிலை	தும்பை
குதிரைவாலி	பொடுதலை

கண்டங்கத்திரி	வேளை
செருப்படை	வரட்பூலா
கோழியாவாரை	வெள்ளறுகு
ஆடாதோடை	பருத்தி

இவைகளின்சாறு வகைக்கு அரிக்கால்படியாக எடுத்து விளக்கெண்ணெய் படி (2) இவையாவும் ஒன்றாய்க் கலந்து முலைப்பால் ஆழாக்குவிட்டு திருநீற்றுப் பச்சிலைவேரும் கருவேப்பிலையீர்க்கும் வகைக்கு ஒவ்வொருபிடியெடுத்து ஒன்றிரண்டாய் நறுக்கிக் கூடப்போட்டு முன்செய்து வைத்திருக்கும் சூரணத்தையும் கொட்டி நன்றாய்க் கரைத்து ஒருநாள் சூரிய புடம்வைத்து பின்பு அடுப்பேற்றி மெழுகுபதமாய்க் காச்சி வடித்துக்கொண்டு காலையில் உச்சிக்கரண்டி வீதம் கொடுக்கவும் கணம் மாந்தம் சொறிசிரங்கு புண்கள் வாய்வுகள் நீர்மேகம் பிரமேகம் யாவும்தீரும் குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கும் ஆகும் வியாதியின் திடமும் தேகதிடமும் அறிந்து இச்சாபத்தியம் அல்லது கடும்பத்தியமும் வைக்கலாம்.

கதிர் யெண்ணெய்

சிறுபுள்ளடியிலைச்சாறு	பொடுதலைச்சாறு
கெச்சக்காய்கொழுந்துச்சாறு	புங்கம்வேர்ப்பட்டைப்பால்
அவுரியிலைச்சாறு	கோரோசனம்

கோரோசனம் விராகனிடை-1, புங்கம்பால் காலணாயிடை மற்றசாறுகள் வகைக்குப்பலம் - ½, விளக்கெண்ணை கால்படியில் யாவும்விட்டு ஒருநாள் சூரியபுடம் வைத்து மறுநாள் அடுப்பேற்றி மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து குழந்தைகளுக்கு துட்டிடை கொடுக்கவும் தாய் பத்தியமிருக்க வேண்டும் மாந்தம் வாய்வு வயருப்பிஷம் இவைதீரும் இச்சாபத்தியம்.

மேற்படி சூரியபுடயெண்ணெய்

சிறுபுள்ளடியிலை	அவுரியிலை
கழற்சிக்கொழுந்து	பொடுதலையிலை

இன்னான்கும் வகைக்கு ஒரு பிடியெடுத்து பஞ்சுபோல் நறுக்கி ஆழாக்கு நல்லெண்ணெயில் போட்டு (3) நாள் சூரியபுடம்வைத்து

உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் பூசலாம் கணமாந்தம் தீரும், இச்சாபத்தியம்.

மண்டைக் குடைச்சலுக்கு யெண்ணெய்

மணித்தக்காளி	கீழாநெல்லி
பொன்னாங்கண்ணி	வில்வயிலை
கரசலாங்கண்ணி	தேள்கொடுக்கிலை

இவைகள் யாவும் சமபாகமாய் கொண்டுவந்து யிடித்து சாறுபிழிந்து அந்த சாற்றுக்கு சமநிடை நல்லெண்ணெய் கூடவிட்டு ஒருநாள் சூரியபுடம் வைத்து மறுநாள் அடுப்பேற்றி கடுகுபதமாய் காய்ச்சிவடித்து (3) நாளைக்கொரு முறை ஸ்நானம் செய்ய வேண்டியது தலைமுழுகினவுடன் கடுக்கா மிளகு நீர் அரை யாழாக்கு குடிக்கவேண்டியது பகலில் நித்திரை செய்யவேண்டியது (5-6) முழுக்கில் மண்டைக்குடைச்சல் தீரும்.

கெணத்தெண்ணெய்

லவுங்கம்	லவுங்கப்பூ
வெந்தயம்	கோஷ்டம்
கடுக்காப்பூ	சோம்பு
சீரகம்	பூண்டு
ஜாதிபத்திரி	ஜாதிக்காய்

இவைகள் வகைக்கு (1¼) விராகனிடையாக உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு,

கற்றாழை	பொற்றலைக்கையான்
கோவை	பொன்னாங்கண்ணி
புளியாரை	ஈருள்ளி
கற்பூரவள்ளி	ஓமவள்ளி

இவைகளின் சாறு வகைக்குக் கால்படியாக யெடுத்து சித்தாமணக்கெண்ணை ஒருபடி பசும்பால் அரைப்படி இவைகள் யாவும் ஒன்றாய்க்கலந்து மேற்படி சூரணமும் போட்டு நன்றாய் கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு ஆறியபிறகு குங்குமப்பூ கோரோஜனம் வகைக்கு விராகனிடை (2½) எடுத்து மேற்படி

எண்ணெயிற் கலந்துக்கொண்டு காலையில் அரைபலம் அல்லது கால்பலம்வீதமாய் (௰) நாள் கொடுக்கவும் எண்ணெய் கொடுக்கும்போது எண்ணைக்கு சமனிடை முலைப்பால் கலந்து அனலில் காட்டிக்கொடுக்கவும்.

பாலசஞ்சீவி யெண்ணெய்

பொன்னாங்கண்ணி	குப்பைமேனி
எலிக்காதிலை	அவுரி
குரும்பை	பொடுதலை
முசுமுசுக்கை	ஆடாதோடை
கோவை	வல்லாரை
இம்பூரல்	துளசி
சிறுகீரை	குதிரைவாலி
கோழியாவாரை	தூதுவேளை
கொன்றை	தகரையிலை
விஷ்ணுகிரந்தி	கரசனாங்கண்ணி
ஓரிதழ்தாமரை	முருங்கையிலை
நருவிலியிலை	முருங்கப்பட்டை
இண்டு	ஈருள்ளி

இவைகளை வகைக்கு ஒவ்வொரு கொத்துயெடுத்து கல்லுரலில் போட்டு நன்றாய் பஞ்சுபோல் யிடித்து எட்டுபடி ஜெலம்வார்த்து அடுப்பிலேற்றி ஒருபடி கியாழமாகக் காய்ச்சி யிறக்கி வடித்துக்கொண்டு முத்தெண்ணெய் ஒருபடி அத்துடன் விட்டு கலந்து வைத்துக்கொண்டு,

பற்பாடகம்	சித்திரமூலம்
நிம்பப்பட்டை	கண்டுபரங்கி
சுக்கு	ஏலம்
செவியம்	சண்பகப்பூ
பேரரத்தை	சீரகம்
கோஷ்டம்	கிராம்பு

இவைகள் வகைக்கு (2) விராகனிடை யெடுத்து யிடித்து வஸ்திரகாயஞ்செய்து எண்ணெயிற்கலந்து கம்பிப்பிசின் ஒரு களஞ்சிகொண்டுவந்து எண்ணெய்விட்டரைத்து அத்துடன் கலந்துக்கொண்டு அடுப்பேற்றி மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு வேளைக்குத்துட்டிடை அல்லது காலணாயிடையாக

அந்திசந்தி கொடுத்துவந்தால் அட்சரங்கள் காச்சல் பதினெட்டு கணங்கள் யாவும் தீரும்.

இரத்தகெணத்திற் கெண்ணெய்

விருத்தம்

எண்ணெய்படி கால்குமரிச் சோறுதானும்
யெழில்விளாங்காயளவு கழுவிக்கொண்டு
அண்இண்டுதுமட்டிக்காய் சோறுகூட்டி
அதில்ஈரவெங்காயம்பத் தரிந்துபோட்டு
கண்ணெனவேமெழுகுபத மெரித்துவாங்கி
கணமான துட்டிடையா மெண்ணெய்தானும்
நண்ணெனவே நாலுநாட் கொருபோதீய
நாடாதுரத்தகணந் தீருந்தானே.

விபரம்

எண்ணை கால்படி விளாங்காயளவு கத்தாழை மடல்சாதம் தும்மட்டிக்காய்சோறு எலுமிச்சங்காயளவு, ஈரவெங்காயம் பத்து.

சம்பீரத்தெண்ணெய்

பசும்பால்	படி	1	வெந்தயம்	பலம்	1
சித்தாமணக்கெண்ணை	"	1	கோஷ்டம்	விராகனிடை	2
பழச்சார்	"	2	சீரகம்	பலம்	1
ஈருள்ளிச்சார்	"	½	கிராம்பு	"	1
கடுக்காய்தோல்	"	40	சம்பங்கிமொக்கு	"	1
சன்னலவுங்கப்பட்டை	பலம்	1	ஜாதிக்காய்	"	1
அதிமதுரம்	"	1	ஏலம்	"	1

கற்கவகைகள் யாவும்யிடித்து சூரணித்து பழச்சாற்றால் அரைத்து எண்ணெயிற்கலந்து மற்றயாவும் ஒன்றுபடுத்திபதமாய்க் காய்ச்சிவடித்து தேகத்திற்கு தக்கபடி (3-5-7) நாள் வீதம் கொடுக்கவும் மூலச்சூடு, கணச்சூடு, காந்தல், சொரிசிரங்கு, மேகச்சூடுகளும் தீரும் இச்சாபத்தியம்.

மேகசூட்டுக்கு எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	படி	1
எலுமிச்சம்பழச்சாறு	"	¼

இலந்தயிலைச்சாறு	படி	¼
வெங்காயச்சாறு	படி	கால்
கருஞ்சீரகம்	பலம்	¼
கத்தாழைச்சோறு	"	3
வெந்தயம்	"	1

கத்தாழைசாதத்தை ஏழுதரம் நல்ல ஜெலத்தில் போட்டு கழுவிப் பிசைந்தெடுத்து சுத்தியானது பலம் (3) கருஞ்சீரகத்தைப் பொடித்து வஸ்திரகாயம் செய்தது பலம் (¼) வெந்தியத்தை பசும்பால் விட்டரைத்துக்கொண்டு யாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பிலேற்றி கற்றாழைசாதம் நன்றாய் சிவக்குமளவும் காச்சி யிறக்கி வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டிவீதம் அந்திசந்தி இருவேளையும் கொடுக்க கொதிப்பு கணம் (18) கணச்சூடு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேகச்சூடு, பித்தவெட்டைமுதலிய யாவும்தீரும் குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கும் ஆகும் இச்சாபத்தியம்.

காதுநோய்களுக்கு எண்ணெய்

கோழியாவாரைவேர்	விராகனிடை	1
குத்துப்பாளைவேர்	"	1
ஆடுதின்னாப்பாளைவேர்	"	1
கற்பூரம்	"	1
பூண்டு	"	1

இவைகளை நல்லெண்ணெய் விட்டரைத்து (1½) பலம் நல்லெண்ணெயில் கலந்து அடுப்பேற்றிக்காய்ச்சி யிறக்கி பஞ்சியில்தொட்டு வேளைக்கு (3) துளியாக (4-5) வேளை காதில்விட்டால் காதுநோய்தீரும், மழையில் நனையக்கூடாது சீதள பண்டம் ஆகாது.

இதுவுமது
காது நோய்க்கு எண்ணெய்

முசுருமுட்டை	விராகனிடை	1½
பூனாகம்	"	"
நண்டிறைச்சி	"	"
பூண்டு	"	"

பூண்டைமாத்திரம் நசுக்கி (1¾) பலம் நல்லெண்ணெயில்போட்டு காச்சியிறக்கி பஞ்சியில்தொட்டு (4-5) வேளை காதில் விடவும் சவுக்கியமாகும்.

கெற்பசூட்டுக்கும் மேககாரகத்திற்கும் குளுமை யெண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	பலம்	10
கற்கண்டு	"	1
வெந்தியம்	"	1
ஏலம்	"	1
வெள்ளைவெங்காயம்	"	3

வெங்காயத்தை சிறுக அரிந்துக்கொண்டு மற்ற சரக்கை அரைத்துக்கொண்டு யாவும் எண்ணெயில் கலந்து சூரியபுடம் (10) நாள்வைத்து வேளைக்கு அரிக்கால்பலம் சாப்பிடவும்.

சிரங்குக்கும் மேகசூட்டுக்கும் எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	பலம்	5
மிளகு	"	1
பூரம்	விராகன்னிடை	½
முலைப்பால்	ஆழாக்கு	

பூரமும் மிளகும் முலைப்பால் விட்டரைத்து யாவும் ஒன்றாய்க்கலந்து (10) நாள் சூரியபுடம்வைத்து வேளைக்குக் கரண்டிவீதம் சாப்பிடவும், இச்சாபத்தியம்.

ரிணங்களுக்கு தேங்காயெண்ணெய்

சுத்திசெய்தகெந்தி	பலம்	¼
சுத்திசெய்ததாளகம்	"	"
குகைநீறு	"	"
காட்டுசீரகம்	"	"
கொடிக்கள்ளிப்பால்	"	"

இரண்டு தேங்காய்களைத்திருகி பால் பிழிந்துக்கொண்டு மேற்படி தினுசுகளை வஸ்திரகாயம்செய்து பாலில் கலந்துக்கொண்டு

பதமாய்க்காச்சி யிறக்கி பிரதிதினம் காலையில் காலணாயிடை சாப்பிட்டுவரவும், பத்துநாள் சாப்பிடலாம் இச்சாபத்தியம்.

லிங்கயெண்ணெய்

லிங்கம்	பலம்	½
விளக்கெண்ணெய்	"	1½

லிங்கத்தை முலைப்பாலில் மூன்றுநாள் ஊறவைத்து யெடுத்துக்கொணடு கல்வத்தில் இட்டு கொஞ்சம் எண்ணெய்விட்டு ஒண்ணரை ஜாமமரைத்து மேற்படி எண்ணெயில் கலந்து (3) நாள் சூரியபுடம் வைத்தெடுத்து காலையில் அரைபலம்வீதமாய் (7) நாள் அல்லது (10) நாள் சாப்பிடவும் மேகப்படை கரிமேகம் வெள்ளை சுருக்குதீரும் கடும்பத்தியம்.

கடுகெண்ணெய்

பெருங்காயம்	விராகனிடை	3	வெள்ளுள்ளி	விராகனிடை	3
வசம்பு	"	3	ஓமம்	"	3
சுக்கு	"	3	சதகுப்பை	"	3
கார்த்திகைக்கிழங்கு	"	3	மாவிலிங்கம்பட்டை	"	3
சாம்பிராணி	"	3			

மேற்படி சரக்குகளை குப்பைமேனிச்சார் விட்டரைத்து எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றி கடுகு பதம் வரும்போது இறக்கிவைத்துக்கொள்ளவும்.

மேற்படி எண்ணெயை சிறுகயெடுத்து மேலேதடவினால் ஜன்னிபோகும் சயித்தியந்தீரும் கைகால்குடைச்சல் மேல்வலி காதிரைச்சல் மண்டைகுத்து வலிப்புகள் தீரும் இச்சாபத்தியம்.

எண்ணெய் வகைபரணி முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்

ஏழாவது
தைலவகை பரணி

சங்கம்வேர்தைலம்

நல்லெண்ணெய்	படி	¼
மிளகு	பலம்	1
சங்கம்வேர்	தொலாம்	¼

சங்கம்வேரை ஒருதூணி ஆற்றுஜெலத்தில் போட்டு எட்டுக்கொருபங்காய் கியாழம்வைத்து யிறக்கி மிளகை கல்வத்திலிட்டு மேற்படி கியாழம் விட்டரைத்து எண்ணெய் கியாழம் யாவும் ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க் காச்சி நாலுநாளைக்சொருமுறை முழுகிவர குட்டம் சொறி சிரங்கு கிரந்தி சூலை ரோகம் செங்கரப்பான் வண்டுகடி சிலவிஷங்கள் க்ஷயம் குத்திருமல் வாதக்ஷயம் போகும்.

இருவேலித்தைலம்

வெட்டிவேர் பலம்-100, கொண்டுவந்து ஒன்றிரண்டா யிடித்து தூணிநீரில்போட்டு எட்டொன்றாய்க் கியாழம் வடித்து எண்ணெயில் கலந்து மெழுகுபதமாய்க் காச்சி முழுகிவர தேறாத ஜெடலம் தேறிப்போகும் கிருகிருப்பு பித்தமயக்கம் வாய்நீரூரல் தீரும்.

அருகன் வேர்தைலம்

கணுவுகள் நீக்கிய அருகன்வேர் பலம்-100, எடுத்துயிடித்து ஒருபடி ஜெலத்தில் போட்டு எட்டொன்றாய்க் காச்சிமுழுகிவர மூலச்சூடு, கபாலச்சூடு, சகலபித்தம், எட்டு வகை குன்மம், அழுகிரந்தி, சூலைவாய்வு, வயற்றுவலி, நெஞ்சில்நோய், நீர்க்கடுப்பு, மேல்வரட்சி இவைதீரும்.

கொட்டைப்பழத்தைலம்

அவுரிபழம் நூறுபலம் கொண்டுவந்து யிடித்து தூணி நீரில்போட்டு எட்டொன்றாய்க் கியாழம் வைத்துயிருத்து நாழி நல்லெண்ணெலில் கலந்து ஒருபலம் கருஞ்சீரகத்தையும் யிடித்து மேற்படி கியாழம்விட்டரைத்து அத்துடன் கலந்து மெழுகுபதமாய்க் காச்சியிறக்கி முழுகிவர வாதம் குட்டம் வாதகரப்பான் கண்டவீக்கம் இவைகள் தீரும்.

கரிசாலைத்தைலம்

கரிச்சாலைச்சாறு	பலம்	1
கற்றாழைச்சோற்றின்சாறு	"	1
நெல்லிக்காய்ச்சாறு	"	1
நல்லெண்ணெய்	"	1

இவை யாவும் ஒன்றாய்க் கலந்து ஒருபலம் ஜாதிக்காயை மேற்படி சாற்றாலரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காச்சிவடித்து முழுகிவர தலைநோய், செவிநோய், பித்தம் பீனிசங்கள், உஷ்ணங்கள் யாவும் தீரும்.

இலுப்பைப்பட்டைத் தைலம்

இலுப்பைப்பட்டை	பலம்	100
நல்லெண்ணெய்	படி	10
வேப்பெண்ணெய்	"	5
கம்மாருவெற்றிலைச்சாறு	"	1

இவையாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்காய்ச்சி முழுகிவர கபாலச்சூடு பறந்துபோகும் எண்ணை கணக்கின் பேரில் பட்டைமுதலியதைக் கணக்கிட்டு பிரித்துக்கொண்டு வேண்டியவரையில் செய்துக்கொள்ளலாம்.

கெற்பத்தைலம்

கொம்மட்டிப்பழவித்து அந்தயிடைக்கு வாளப்பருப்பும் கலந்து குழித்தயிலம் யிறக்கி புட்டியில் வைத்துக்கொண்டு தீட்டுவந்த (3) நாள் துடங்கி மஞ்சள்தூளில் களஞ்சித் தயிலம்விட்டு (3) நாள் காலையில் கொடுத்து வென்னீர்கொடுக்கவும் பேதியாகும். மருந்து ஒரேவேளைதான்.

மேகத்தைலம்

சந்தனம்	பலம்	10
விலாமிச்சம்வேர்	"	10
ஆவாரைம்பட்டை	"	10

இந்த மூன்றுவகையும் யிடித்து பானையில்போட்டு தூணிநீர்விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி முழுகிவர மேகம்தீரும் தேகம் யிருகும் நமை சொறி திமிர் இவைதீரும்.

வில்வாதித்தைலம்

வில்வவேர் பத்துபலம்யெடுத்து யிடித்து பதக்குநீரில் போட்டு எட்டொன்றாய்க்காச்சியிறக்கி அத்துடன் நாழி நல்லெண்ணெய்விட்டு மெழுகுபதமாய்க் காச்சிவடித்து முழுகிவர பித்தம், கபாலவெட்டை, மேகம், இருமல், தழுதணை, செங்கரப்பான், புண்புரை இவைதீரும்.

வெட்டிவேர்தைலம்

வெட்டிவேர்	பலம்	1
அதிமதுரம்	"	1
நல்லெண்ணெய்	"	12

வெட்டிவேரையிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து அதிமதுரத்தை அந்தக் கியாழத்தால் அரைத்து எண்ணெயில்போட்டு கியாழத்தையும்விட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து முழுகிவர பீனிசம், மண்டைசூலை, குட்டம், புறநீர்க்கோவை, கண்புரைச்சல், காதுமந்தம், இளைப்பு, கைகால்ஓச்சல், தாதுநஷ்டம், இருமல், தேககாந்தல், யிவைகள் தீரும் நாள்விட்டு நாள் ஒருமண்டலம் முழுகிவர வேண்டியது.

கொடிவேலித் தைலம்

கொடிவேலிவேர்	பலம்	10
நல்லெண்ணெய்	நாழி	1
சீரகம்	பலம்	1

கொடிவேலியை யிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன்றாய்க் கியாழம் வைத்திறக்கி வடித்து இந்த கியாழத்தால் சீரகத்தை அரைத்து

யாவும் எண்ணெயில்கலந்து மெழுகு பதமாய்க்காச்சி வடித்து முழுகிவர ஆநந்தவாய்வு மற்ற பலவிதவாய்வு சொறிசிரங்கு தினவு கிரந்தி வீக்கம் யாவும் தீரும்.

சீரகத்தைலம்

சீரகம்	பலம்	5
கார்போகியரிசி	"	1
நல்லெண்ணெய்	படி	1

சீரகத்தை பதக்கு நீரில்போட்டு எட்டொன்றாய்க் கியாழம்வடித்து இதேகியாழத்தால்போகியரிசியை அரைத்து யாவும் எண்ணெயில்கலந்து மெழுகுபதமாய்க் காச்சி முழுகிவர எண்வகைசுரம், வாய்வு, வாந்தி, பித்தம், கிருகிருப்பு, சோகை, பாண்டு, உஷ்ணரோகம், கெணம், கபாலச்சூடு, கபநீர்க்கட்டு இவைதீரும் கண்கள் குளிர்ச்சியுண்டாகும்.

கீழ்க்காய்நெல்லித்தைலம்

கீழ்க்காய்நெல்லி அரைதுலாம் எடுத்து நிழலில் உலர்த்தி ஆத்துஜெலம் தூணிகொண்டுவந்து அதிற்போட்டு எட்டொன்றாக கியாழம்காச்சியிறக்கி (2) படி நல்லெண்ணெயில் விட்டுக்காச்சி ஒருபலம் சக்கரைபோட்டு மெழுகுபதத்தில் முழுகிவர மேகம் உட்டிணம் கைகாலெரிவு உட்காச்சல் தினவுயாவும் தீரும்.

சவுரித்தைலம்

சவுரிப்பழம்	ஒன்று	
பச்சைகெஞ்சாயிலை	ஒருபிடி	
சடாமஞ்சி	விராகனிடை	2½
பளிங்குசாம்பராணி	"	"
கஸ்தூரிமஞ்சள்	"	"
பச்சியிலை	"	"
கிச்சிலிக்கிழங்கு	"	"
அமுக்கனாங்கிழங்கு	"	"
அதிமதுரம்	"	"

இவையாவும் யிடித்து வஸ்திரகாயம்செய்து ஒருபடி நல்லெண்ணையில் போட்டுக்கலந்து மெழுகுபதமாய்க் காச்சி (4)

நாளைக்கொருமுறை முழுகிவர புரயிசிவு, ஒற்றைத் தலைவலி, விடாத்தலைபாரம், ஜன்னி இவையாவும் தீரும்.

மேருவின்தைலம்

எள்ளெண்ணையோர் படியில் தும்பைமலரோர்பிடி
எரித்துபத மாய்வடித்து
இன்பமுடன் மூன்றுமுறை முழுகுமதின் விபரமும்
எடுத்துரைக்கக் கேளுமே
கள்ளமாசிரசு மட்டாகவதை தேய்த்துமே
காச்சியே சீக்காய்தனை
கருத்துடன் வென்னீரில் பச்சைஜெலமின்றியே
கணக்குடன் மூழ்கியன்று
தல்லிவிருபுளிமோர் குளிர்ந்தஜெலமின்றியே
ஸ்நானமது கொள்ளவல்லோர்
தள்ளாதசிரசிடிகள் பீனிசமுநேத்திரநோய்
தான்பயந் தோடுமிதினில்
வள்ளிதெய்வானையர னார்கிருபைபெத்தபொதி
மாமலை யகஸ்தியரிதை
வரிசையுடன் மேருவின் தைலமதைகவிதையாய்
வகுத்துரைத் தனர்பாருமே.

ஜன்னிக்கு மேற்பூசுந்தைலம்

வேப்பெண்ணெய்	படி	1
கலப்பைக்கிழங்குசாறு	"	1
கருநாபி	விராகனிடை	1
வசம்பு	"	5
வெள்ளைப்பூண்டு	"	5
காயம்	"	1
ஓமம்	"	5
சதகுப்பை	"	5
ஜாதிக்காய்	"	10

இந்தசரக்குகள் யாவும் மேற்படி கிழங்குசாற்றால் மைபோல் அரைத்து எண்ணெயில்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்க் காச்சிவடித்து சகலஜன்னிக்கும் மேலுக்கு பூசவும் கைகால்குடைச்சல்

வாய்வுபிடிப்பு சகலத்திற்கும் பூசி தேய்க்கலாம் உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது மஞ்சள் அரைத்துப்பூசி அதற்கு மேல் சாணம்போட்டு தேய்த்து நீர்விட்டு கழுவிப்போடவும்.

தும்பைத் தயிலம்

நல்லெண்ணை	பலம்	¼
தும்பைப்பூ	பிடி	2
கருஞ்செம்பைப்பூ	"	1
கம்மாருவெற்றிலைக்காம்பு	"	½
நஞ்சறுப்பான்பூண்டு	"	½
கோழிக்கிழங்கு	விராகனிடை	1
கஸ்தூரிமஞ்சள்	"	1
மிளகு	"	1
பூண்டு	"	1
வசம்பு	"	1
பால்சாம்பிராணி	"	2
சுக்கு	"	1

மேற்கூறிய பூவும் காம்பும் நசுக்கி யெண்ணையில்போட்டு மற்றசரக்குகள் யாவையும் யிடித்துப் பொடித்து வஸ்தரித்து அத்துடன் போட்டுக்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்க்காய்ச்[illegible]து முழுகிவர சுகஜன்னிசுரம் வாய்வு முகவாதசன்னி சுரம் இ[illegible] சிலவியாதிகள் தீரும்.

செம்பைத் தயிலம்

கருஞ்செம்பைச்சாறு	படி	¼	
வெள்ளுள்ளி	"	¼	
நல்லெண்ணை	"	½	
பளிங்குசாம்பிராணி	விராகனிடை		2½
டிக்காமல்லி	"	1½	

சாம்பிராணியும் டிக்காமல்லியும் இடித்துப் பொடித்து யாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி தைலபதமாய்க் காய்ச்சி வடித்து ஜன்னிநோய்கள் வாதநோய்களுக்குப் பூசி நன்றாய்த் தேய்க்கவும்.

அழிஞ்சித் தைலம்

அழிஞ்சிவிரை	பலம்	1
புங்கன்விரை	"	1
கடுக்காய்விரை	பலம்	1
தாணிக்காய்விரை	"	1
கார்போகியரிசி	"	1
எட்டிவிதை	"	¼
நல்லெண்ணை	"	12
வேப்பெண்ணை	"	2½

வித்துகள் யாவும் யிடித்துப் பொடித்து வேப்பெண்ணை விட்டரைத்து நல்லெண்ணையிற்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய்க்காய்ச்சி வடித்து தலைவலி, கழுத்துவலி, வாய்வு, வீக்கங்கள் சகலத்திற்கும் தேய்த்துவர நீங்கும்.

தீபாக்கினித் தைலம்

கெந்தி	பலம்	¼	மனோசிலை	பலம்	¼
சூதம்	"	"	பொன்னரிதாரம்	"	-

மேற்படி சரக்குகளைக் காடிவிட்டரைத்து சீலையில் தடவி திரிசெய்து வேப்பெண்ணெய்விட்டு கொளுத்தி சுடர்தைலம் வாங்கி வைத்துக்கொண்டு ஒரு விராகனிடை வெற்றிலைச்சாற்றில் ஒரு குண்டுமணிப்பிரமாணம் மேற்படி தைலத்தை கலந்துக் கொடுக்க வாதம் எண்பதும் தீரும் இச்சாபத்தியம்.

தைலவ.கைபரணி
முற்றுப்பெற்றது.

உ
தேவிசகாயம்

எட்டாவது

கியாழவகைபரணி

சந்தனக் கியாழம்

செஞ்சந்தனத்தூள்	பலம்	2
விலாமிச்சம்வேர்	விராகனிடை	2
வெட்பாலரிசி	"	2
கோரைக்கிழங்கு	"	2
சுக்கு	"	2

ஆத்துஜெலம் இரண்டுபடி கொண்டுவந்து அதில் மேற்படி சரக்குகள்யாவும் யிடித்துப்போட்டு அடுப்பேற்றி கால்படிகியாழமாக யிறக்கி வடித்துக்கொண்டு ஆறுவேளையாக பாகித்துக் கொடுக்கவும் கொடுக்கும்போது கொஞ்சம் சக்கரைபோட்டுக் கொடுக்கவும் சிரதோஷம், சிரவாய்வு, தலையிலுள்ள பித்தம், சேத்துமவாதம், வாதசுரம், நீர்க்கடுப்பு, மஞ்சளூறும் பித்தம், இவைகள் தீரும் இருமுறைகாய்ச்சி (12) நாள் இருவேளையும் கொடுக்கவும்.

சிறுகாஞ்சொரிக் கியாழம்

சிறுகாஞ்சொரிவேர்	பலம்	2
ஏலக்காய்	"	¼
சீரகம்	"	¼

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து இருவேளையுமாக எட்டுநாள் குடிக்க உட்சுரம், மூலவாய்வு, பித்தம், வாந்தி இவைதீரும்.

வெட்பாலைக்கியாழம்

வெட்பாலையரிசி	பலம்	1

சீரகம்	"	¼
கொடிவேலிவேர்	விராகனிடை	1½

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிவடித்து (3) நாள் இருபோதும் குடிக்க வாய்வுபித்த சுரம் தீரும், கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்கவும்.

வில்வக்கியாழம்

வில்வவேர்	பலம்	1
வில்வப்பழம்	"	1
நெற்பொரி	"	¼
சுக்கு.	"	¼
மிளகு	"	¼
கொடிவேலிவேர்	"	¼

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் வடித்து இருவேளையும் மூன்றுநாள் கொடுக்க வாய்வு, மேகவாய்வு, பித்தவாய்வு, யாவும் தீரும்.

இதுவுமது

வில்வவேர்	பலம்	¼
அமுக்கனாங்கிழங்குவேர்	"	¼
சுக்கு	"	¼

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு எட்டொன்றாய்க் கியாழம் வடித்து மூன்றுநாள் இருவேளையும் கொடுக்க விக்கல் வாந்தி இவையாவும் தீரும் பித்தசாந்தியாம்.

கோரைக்கிழங்கு கியாழம்

கோரைக்கிழங்கு	பலம்	1
விஷ்ணுகரந்தி	"	½
பற்பாடகம்	"	½
மிளகு	"	¼
மதுரம்	"	¼

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் வடித்து (3) நாள் இருவேளையும் கொடுக்கவும் க்ஷயம்யீளை யிளைப்பு அதிகசுவாசம் இவை தீரும், கியாழம் கொடுக்கும் போது கொஞ்சம் தேன்கூட்டவும்.

நெல்லிக்காய் கியாழம்

நெல்லிக்காய்	பலம்	¼
தாணிக்காய்	"	"
கடுக்காய்	"	"
மிளகு	விராகனிடை	1¼

இவைகளை இருநாழிநீர்விட்டு எட்டொன்றாய்க் கியாழம் வடித்து மூன்றுநாள் குடிக்கும்போது சுக்கு, திப்பிலி, மிளகு, மூன்றும் சரியிடையாய்ப்பொடித்து ஒரு சிட்டிக்கைப்போட்டு கொஞ்சம் தேன்விட்டு குடிக்கவும் யீளை, யிசிவு, மேகச்சூடு, இவைகள் தணியும்.

இலவம்பட்டை கியாழம்

இலவம்பட்டை இரண்டு குத்துயெடுத்து பஞ்சுபோல் நறுக்கி அரைக்கால்படி கஞ்சித்தண்ணியில் போட்டு நல்ல தண்ணீர் கால்படி வார்த்து இராத்திரி அடுப்பில் போட்டு வைத்து காலையில் பிழிந்து அசடுகள் போக்கி வடிகட்டி கொஞ்சம் சர்க்கரை கலந்து சாப்பிடவும். இப்படி (5-6) நாள் சாப்பிட மேக வெள்ளை தீரும். இச்சாபத்தியம்.

இரத்தபேதிக்கு கியாழம்

நாகப்பட்டை	பலம்	2½
அத்திப்பட்டை	"	2½
மாம்பட்டை	"	2½

இவைகளை பஞ்சுபோல் யிடித்து ஒருபடி தண்ணிவைத்துக் கால்படிகியாழமாக யிறக்கி இருவேளை சாப்பிடவும் இப்படி (5-6) நாள் சாப்பிட இரத்தபேதி தீரும்.

வாதசுரக்கியாழம்

பாவட்டம்வேர்	பலம்	1
சித்தாமுட்டிவேர்	"	"

ஓமம்	பலம்	1
உத்தாமணிவேர்	"	"

இவைகளை பஞ்சுபோல்யிடித்து ஒருபடி ஜெலம்வைத்து கால்படியாக கியாழமாக யிறக்கி வடித்து (5-6) வேளை சாப்பிட வாதசுரம்தீரும் கொஞ்சம் தேன்விட்டு சாப்பிடவும்.

பித்தசுரக் கியாழம்

பேய்ப்புடல்	பலம்	1
கோஷ்டம்	"	"
கொத்தமல்லி	"	"
சுக்கு	"	"
வில்வவேர்	"	"
பற்பாடகம்	"	2½

இவைகளை பஞ்சுபோல் யிடித்து (1½) படி ஜெலத்திலிட்டு எட்டுக்கொன்றாய் கியாழம்வடித்து (5-6) வேளை கொடுக்க சவுக்கியமாகும் கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டு கொடுக்கவும்.

சேத்துமசுரக் கியாழம்

இஞ்சி	பலம்	2½
பிரண்டை	"	1
கண்டங்கத்திரிவேர்	"	½
சித்தரத்தை	"	1
சுக்கு	"	½
பூனைக்காலிவேர்	"	½
பூலாவேர்	"	½
பொன்முசுட்டை	"	½
பூண்டு	"	½
வில்வவேர்	"	2

இவைகளை பஞ்சுபோல் யிடித்து (1½) படி ஜெலம்விட்டு எட்டொன்றாய்க் கியாழமிட்டு கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்கவும் (5-6) அல்லது (8) வேளை கொடுக்க தாகம், வாந்தி, மயக்கம், சுரம் இவை தீரும்.

மாந்தக்கியாழம்

வசம்பு காவட்டம்புல்லு இவ்விரண்டும் சமன் கொண்டு சட்டியில்போட்டு சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு ஆழாக்கு தண்ணிவிட்டு காலாழாக்காக யிறக்கிக் கொடுக்கவும் இப்படி (4-5) வேளை கொடுக்க மாந்தம் குணப்படும்.

அதிசாரதாபசுரம்

கொத்தமல்லி	சர்க்கரை
சீரகம்	கோஷ்டம்
விலாமிச்சம்	கற்பூரம்
வெட்டிவேர்	அதிமதுரம்
சந்தனம்	தாமரைக்கிழங்கு
கோரைக்கிழங்கு	அத்திப்பட்டை
நெல்லிப்பருப்பு	ஆலம்பட்டை
மாம்பட்டை	அரசம்பட்டை

இவை சமன்கொண்டிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டிலொன்றாய்க் கியாழம் வடித்து இருவேளையும் அஞ்சுநாள் கொடுக்கவும் அதிசாரதாபசுரம் சொஸ்தமாகும்.

குழந்தைகள் மாந்தத்திற்கு கியாழம்

நுணாயிலை	உத்தாமணியிலை
நொச்சியிலை	கெச்சக்காய்வேர்

இவைகள் வகைக்கு ஒருபிடி யெடுத்து நன்றாய் நறுக்கி நாழிநீர்விட்டு அடுப்பேற்றி யெரிக்கும்போது,

ஓமம்	திப்பிலி
சுக்கு	வசம்பு
மிளகு	பொடுதலைக்காய்

இவைகள் வகைக்கு விராகனிடை ஒன்று யெடுத்து துளி நல்லெண்ணெவிட்டு சிவக்கவறுத்து யிடித்துப்பொடித்து மெல்லிய துணியில் கட்டி முடிந்து மேல்படி கியாழத்தில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒருசங்கு வார்க்கவும் இப்படி (3-4) வேளை வார்க்க மாந்தம் தீரும்.

மாந்தத்திற்கு வேறுகியாழம்

ஓமம்	மிளகு
உள்ளி	திப்பிலி
வாய்விளங்கம்	பெருங்கிழங்கு

இவைகள் சமன்கொண்டு யிடித்து மெல்லிய துணியில் மூட்டைகட்டி நாழிநீரில்போட்டு மூன்றுபொங்கு வரும்படிக்காய்ச்சி யிருத்து (2-3) வேளை கொடுக்கவும்.

மாந்தத்திற்கு வேறுகியாழம்

சுக்குமிளகு திப்பிலியும் துய்ய ஓமம் உள்ளியுடன்
ஒக்கநறுக்கிச் சீலையினில் உகந்து முடிந்து நீர்வுழக்காய்
செக்கச்சிவக்கக்காச்சியபின் சீராய்சங்கு புகட்டிடவே
மிக்கமாந்தபிணி தோஷம் விட்டேயோடுங்கண்டாயே.

முறைவாதசுரம் கியாழம்

சண்பகப்பூ	தானிவேர்
ஆமணக்குவேர்	செருப்படைவேர்
கொத்தமல்லி	கண்டங்கத்திரி
சுக்கு	மிளகு

இவை சமன்கொண்டு பஞ்சுபோல்யிடித்து ஒருபடி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க்கியாழம் வடித்து உட்கொள்ளவும்.

தனிவாத சுரக்கியாழம்

நல்லசந்தனம்	கோரைக்கிழங்கு
சுக்கு	பற்பாடகம்

இவை பஞ்சுபோல் யிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டொன்றாய்க் கியாழம் வடித்து உட்கொள்ள வாதசுரம் தீரும் இப்படி (3) நாள் ஆறுவேளையாம்.

முறைபித்தசுரக் கியாழம்

கோரைக்கிழங்கு	சீந்திற்கிழங்கு
நன்னாரிவேர்	கோஷ்டம்

சந்தனம்	சுக்கு
தண்ணிவிட்டான்கிழங்கு	அதிமதுரம்.

இவை சமன்கொண்டு பஞ்சுபோல் யிடித்து எட்டொன்றாய்க் கியாழம் வடித்து இருவேளையுமாக மூன்றுநாள் கொடுக்க நிவர்த்தியாகும் கொஞ்சம் கூட்டிக்கொடுக்கவும்.

முறைபித்தவாதசுரக் கியாழம்

தேள்கொடுக்குவேர்	ஆரைவேர்
இலந்தைவேர்	கடுக்காய்தோல்
சித்தாமுட்டிவேர்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து படிஜெலம்விட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ள முறைபித்தவாதசுரம் சவுக்கியமாகும்.

விடாசுரக் கியாழம்

சிறுதேக்கு	ஆரைவேர்
சீந்திற்கொடி	கோஷ்டம்
நிலவேம்பு	திப்பிலி
பற்பாடகம்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து கொஞ்சம் தேன்விட்டுக் கொடுக்கவும் (5-6) வேளை கொடுக்கவும் அல்லது (10) வேளை கொடுக்க சவுக்கியமாகும்.

மாந்தவீக்கம் விஷவீக்கம் சுரம் நீர்கட்டுக்குக் கியாழம்

பூவரசன்பழுப்பு	வரமுள்ளி
சங்கன்வேர்பட்டை	முருங்கையீர்க்கு
சீந்திற்கொடி	சார்வேளைவேர்
துளசி	மருள்கிழங்கு
பிரமியிலை	சிறுகுரிஞ்சான்வேர்
தூதுவேளை	கருஞ்சீரகம்

சத்திசாரணை	நீர்முள்ளிவேர்
சுக்கு	பெருங்கிழங்கு

இவைகளை வகைக்குக் கால் பலம் எடுத்து கல்லுரலிலிட்டு பஞ்சுபோல் யிடித்து ஒருபடி ஜெலம்வைத்து எட்டொன்றாய் கியாழம் வைத்திருத்து வடித்து வேளைக்கு ஒரு பங்குவீதம் காலைமாலையாக மூன்றுநாள் கொடுக்கவும் சகலவீக்கம் சுரம் வயருப்பிசம் யாவும்தீரும்.

கெணமாந்தம் வாந்தி வயருப்பிஷத்திற்கு கியாழம்

வசம்பு	மிளகு
கருப்புப்பட்டு	மயிலிறகு
வட்டத்திருப்பி	நிலவேம்பு

இவைகள் வகைக்கு ஒருவிராகனிடை யெடுத்து சட்டியிலிட்டு சாம்பலாக வறுத்துக்கொண்டு மாதுளம்யிலை நிலவிளாயிலை செம்பருத்தியிலை இவைகள் வகைக்கு ஒருபிடி யெடுத்து மேற்படி சட்டியில்போட்டு சிவக்கவறுத்துக்கொண்டு அத்துடன்,

கண்டுபாரங்கி	அக்கிராகாரம்
சுக்கு	அதிமதுரம்
சன்னராஷ்டகம்	ஏலக்காயரிசி

இவைகள் வகைக்கு ஒருவிராகனிடை யெடுத்து நறுக்கிப் போட்டு அரைப்படி ஜெலம்வார்த்து அரையாழக்கு கியாழமாவடித்து (அனுபோகவயித்திய முதற்காண்டம்) 74-வது பக்கத்தில் கூறியிருக்கும் மாந்தக்குளிகையில் ஒரு மாத்திரை யிழைத்து ஒருசங்கு கியாழத்தில் கலந்து வார்க்கவும் இப்படி இரண்டு மூன்றுவேளை வார்க்க மேற்கண்ட வியாதி சவுக்கியமாகும்.

முக்குமாந்தம் அள்ளுமாந்தத்திற்கு கியாழம்

ஒருபிடி நுணாயிலையை சிறுகயறிந்து அடுப்பிலேற்றி அத்துடன் மிளகு ஒருவிராகனிடை கடுகு ஒருவிராகனிடைபோட்டு கருகவறுத்து கருஞ்சீரகம் ஓமம் வகைக்கு ஒரு விராகனிடை போட்டு வெடிக்கவிட்டு

சன்னராஷ்டம் சுக்கு நறுக்கிப்போட்டு (½) படி ஜலம்விட்டு ஆழாக்குகியாழமாக சுண்டக்காய்ச்சி வடித்துக்கொண்டு ஒருசங்கு கியாழத்தில் (அனுபோகவயித்திய முதற்காண்டத்தில்) கூறிய பாலசஞ்சீவிமாத்திரை ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (2-3) வேளைவார்க்க தீரும்.

மாந்தத்திற்கு பொது கியாழம்

வெற்றிலைக்காம்புபதினொன்று மேவும் வசம்பு அவ்வளவு
பற்றிஉள்ளிதான் யிரண்டு பண்பாந்திப்பிலிதான் ஒன்று
சுற்றிவெதுப்பித்தானரைத்து சுகமாய்பருவந்தக்கபடி
வற்றியவென்னீர் தனிலிடவே மாந்தம் போமென்றருளினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்

விடுமே ஓமம் உள்ளியுடன் மீறும்மிளகுதிப்பிலியும்
நடுமேசீலைதனில்முடிந்து நன்றாய்நாழிநீர்தன்னில்
இடுமே அடுப்பில் எட்டொன்றாய் இதமாய்க்காச்சிகுடிநீரை
கொடுமேமாந்தம் உள்ளமெலாம் குடிபோமென்று கூறினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்
வெண்பா

வேளைவேர்சுக்குடனே வெந்தியம்வெள்ளுள்ளி
பாளை சேர்ஓமம் பருவசம்பு-வாள்விழியாய்
ஒன்றாகக்காச்சி உடன்குழவிக்கீய
கண்டாலும் மாந்தம்போங் காண்.

சர்வமாந்தக்கியாழம்

உத்தாமணியிலை	பொடுதலை
வேளைவேர்	முருங்கப்பட்டை
நொச்சி	நுணாயீர்க்கு

இவைகள் சமன்கொண்டு சட்டியிலிட்டு வறுத்து அரைப்படிநீர்விட்டு ஓமம், சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, இவைகள் சமன்கொண்டு பொடித்து சீலையில் முடிந்து மேற்படி ஜெலத்தில்போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிவடித்து முதற்பாகத்திற்

கூறிய மாந்தக்குளிகையில் ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (4-5) வேளை வார்க்கவும்.

மாந்த உப்பிஷத்திற்கு கியாழம்

ஒப்பும்ஓமம்காசெடையை உகந்துசட்டிதனில் வறுத்து
குப்பைமேனிவேர்ப்பட்டை கூரும்யிரண்டு பலந்தானே
அப்பான் தண்ணீரரைப்படியை அளவாயெட்டுக்கொன்றாக்கி
வைப்பாய் கொடுக்கவே உப்பில் மாந்தம் போகும்கண்டாயே.

ஐந்துவித மாந்தத்திற்கும்

வேப்பம்யீர்க்கு	பொடுதலை
நொச்சிலியீர்க்கு	ஓமம்
நுரையீர்க்கு	உள்ளி
மாவிலையீர்க்கு	திப்பிலி
கொடிவேலியீர்க்கு	வாய்விளங்கம்
புளியம்யீர்க்கு	கற்பூரவள்ளி

இவைகள் சமன்கொண்டு பஞ்சுபோல் நறுக்கி நாழிநீர்விட்டு எட்டுக்கொன்றாய் கியாழம்வைத்து வேளைக்கொருசங்காப் (5-6) வேளைவார்க்கவும் ஊதுமாந்தம், போர்மாந்தம், கத்திமாந்தம், கட்டுமாந்தம், செரியாமாந்தம் இவைதீரும்

பித்தத்திற்குக் கியாழம்

நெல்லிமுள்ளி	சித்தாமுட்டி
வில்வப்பழம்	நெற்பொரி
சீரகம்	கொத்தமல்லி

இவைகளை சமன்கொண்டு யிடித்து அரைப்படி ஜெலம் வைத்து எட்டொன்றாய்க் கியாழம்வைத்து (4-5) வேளைகொடுக்க நிவர்த்தியாகும்.

அஜீரணகிராணிக்குக் கியாழம்

ஓதியம்யீர்க்கு	சுக்கு
கருவேப்பிலையீர்க்கு	சீரகம்
முக்காவேளை	அசமதாகம்

இவைகளை சமன்கொண்டு யிடித்து கால்படி ஜெலம்வைத்து அரிக்கால்படியாக யிறக்கி இருவேளை சாப்பிடவும் இப்படி (4-5) வேளை சாப்பிடத்தீரும்.

குன்மவயற்றுவலிக்குக் கியாழம்

பிரண்டை, வேப்பம்யீர்க்கு, புரசவித்து, அசமதாகம், இவை சமன்கொண்டு பிடித்து கால்படி தண்ணிவைத்து அரிக்கால்படியாக யிறக்கி இருவேளைசாப்பிடவும், இப்படி (4-5) வேளை கொள்ளவும்.

அண்டநோய்க்குக் கியாழம்

புனல்முருங்கை வேரின்பட்டை
ஆண்கெச்சக்காயின் பருப்பு
கண்டங்கத்திரியிலை

இவைகள் சமன்கொண்டு அரைபடி தண்ணிவைத்து அரிக்கால்படியாகக் கியாழமிட்டிறக்கி இருவேளையும் கொள்ளவும் இப்படி ஆறுவேளைகொள்ள விரைநோய் நரம்புதடிப்பு இவை தீரும்.

ஜெலக்கட்டுக்குக் கியாழம்

ஜெலத்திலிருக்கும் கொடிப்பாச்சி
கண்டங்கத்திரியிலை
வாழைமரத்தின் அடிக்கிழங்கு

இவைகள் வகைக்குப்பலம் பலம் 2, எடுத்து அரைப்படி ஜெலத்திலிட்டு அரிக்கால்படியாகக்காச்சி யிறக்கி வடித்து கொஞ்சம் பொட்டிலுப்புப்போட்டு குடிக்கவும் இப்படி (4-5) வேளை கொடுக்க நீர்க்கட்டு உடையும்.

ஜன்னிதோஷத்திற்கு கியாழம்

கடுக்காய்தோல்	சுக்கு
தான்றிக்காய்	வெதுப்படக்கி
கொத்தமல்லி	சித்திரமூலம்
நெல்லிப்பருப்பு	கடுகுரோகணி
ஏலம்	கஞ்சாங்கோரை

இவைகள் வகைக்குப்பலம் (I) எடுத்து பஞ்சுபோல்யிடித்து படி ஜெலம்வைத்து கால்படியாக யிறக்கி (5-6) வேளை கொடுக்க ஜன்னிதோஷம் தாகம் இவைதீரும்.

சேத்தும சுரக்கியாழம்

வேம்பு	பற்பாடகம்
கண்டங்கத்திரி	நன்னாரிவேர்
ஆலங்கனி	காவட்டம்புல்
வில்வம்	துளசி
ஆடாதோடை	கஞ்சாங்கோரை

இவைகள் மேற்படி யிடைகொண்டு யிடித்து ஒருபடி ஜெலம்வைத்து நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து (5-6) வேளை கொடுக்க சவுக்கியமாகும்.

இதுவுமது
சேத்தும சுரக்கியாழம்

சுக்கு	அதிவிடையம்
கடுக்காய்	தேவதாரம்
வசம்பு	இலவம்பட்டை
முத்தக்காசு	மிளகு

இவைகள் வகைக்கு ஒருபலம்கொண்டு ஒருபிடி ஜெலத்தில்போட்டு நாலுக்கொன்றாய் கியாழம் வடித்து (5-6) வேளை கொடுக்க சேத்துமசுரம் தீரும்.

சேத்துமசுரத்தின் கியாழம்
விருத்தம்

வெய்யவுளக்கமிருமலுடன் விதனமுருக்கிமேல் வெளுத்து
செய்யமலமும் அடைபட்டு தினவுந்தினமும் சுரமுண்டாய்
பையவாயுமிரத்திற்கும் பசியுமில்லைபார்க்குங்கால்
ஐயசுரத்தின்குணமென்றா ரெல்லாந்தெரிந்தபெரியோரே.

இதற்குக் கியாழம்

மலைதாங்கி	நீர்பூலாவேர்
முத்தக்காசு	நாவற்பட்டை
அத்திப்பட்டை	மாதளங்கொழுந்து
இருவேலியிலை	அதிவிடையம்
மாம்பட்டை	கோஷ்டம்
காசிக்கட்டி	அதிமதுரம்
சீரகம்	வகைக்குப்பலம்½

இவைகளை யிடித்து ஒருபடி ஜெலத்திலிட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து இருவேளையுமாக (3-4) நாள் கொள்ள சேத்துமத்தாலெடுத்த சகலவியாதிகள் தீரும்.

மேற்படி சுரத்திற்கு வேறுகியாழம்

நிலவேம்பு அதிவிடையம் கோரைக்கிழங்கு சீந்திற்றண்டு கொடிசைபாலை இவை சமன் கூட்டி இருநாழிநீர்விட்டு நாலுக்கொன்றாய்க்காய்ச்சி (3) நாள் கொள்ளத்தீரும்.

மேற்படி சுரத்திற்கு வேறு கியாழம்

கோரைக்கிழங்கு, பெருமரப்பட்டை, வேப்பம் யீர்க்கு, நிலவேம்பு, வில்வப்பத்திரி, சுக்கு, இவை சமன்கூட்டி முன்மாதிரி காச்சிகுடிக்க நிவர்த்தியாகும்.

குளிர்சுரம் முதலிய பலவித சுரத்திற்கும் கியாழம்

கோரைக்கிழங்கு	கடுக்காய்தோல்
சீந்தில்தண்டு	குராசாணிஓமம்
வில்வம்	சிற்றாமுட்டி
கொத்தமல்லி	திப்பிலி
பேய்ப்புடல்	வகைக்கு சமனிடை

இவைகளை யிடித்து இருநாழிநீர்விட்டு அரைத்திட்டமாய்க்காச்சி காலை மாலையாக (4-5) நாள் கொள்ள சகலசுரமும் விட்டோடும் மலக்கட்டுவிடும் வாதபித்த சேட்டுமமாகிய மூவித சுரமும் தீரும்.

இதுவுமது
பலசுரக்கியாழம்
விருத்தம்

குருவிக்கரும்பு கண்டங்காலி குருந்தமுட்டிவேரினொடு
மருவிக்கொண்டங்கிருநாழி நீர்விட்டெரித்து உழக்காக்கி
வெருவிக்கொண்டு சக்கரையை விட்டுகலக்கிக்குடிப்பீராய்
உருவிக்கொண்டு வாதபித்த உள்ளதெல்லாங் குடிபோமே.

இதுவுமது
பலசுரக்கியாழம்

கொத்தமல்லி சுக்குபலை யத்துநிலவேம்புடனே
முத்த மொடு பருங்குமிழு முத்துசிறுதேக்குதாரம்
வித்தகபற்பாகமும் வெத்திருநாழிச்சலத்தில்
பெத்திடமேவாதமொடு பித்தமருமென்றன்றே.

இதுவுமது
பலசுரக்கியாழம்

நிலவேம்பு, சித்திரமூலம், தாமரை வளையம், முக்காவேளை வேர், சீந்திற்றண்டு, விஷ்ணுகரந்தி, பற்பாடகம், இவை சரியிடைகூட்டி இருநாழிநீர்விட்டு பாதியாகக்காச்சிக் குடித்துவர சருவசுரமும் தீரும்.

இதுவுமது
பலசுரக்கியாழம்

கொன்றைப்பிசின், சுக்கு, சிறுகாஞ்சொரிவேர், ஆடாதோடையீர்க்கு, பேய்ப்புடல், கொத்தமல்லிவிரை, கோரைக்கிழங்கு இவைகளை இருநாழிநீர்விட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து இருவேளையாகக்குடிக்கவும் இப்படி (4-5) நாள் குடிக்க சர்வசுரமும் தீரும்.

வாதசுரக்கியாழம்

நல்லசந்தனம்	கோரைக்கிழங்கு
சுக்கு	சிறுகாஞ்சொரி

இதுகள் சமன்கொண்டு கியாழம்வைத்து (5-6) வேளையருந்த வாதசுரம் வாதத்தாலெடுத்த நோக்காடு தீரும்.

இதுவுமது
வாத சுரக்கியாழம்

ஆமணக்கம்வேர் செருப்படை
கூத்தன்குதம்பைவேர் சுக்கு
தழுதாழைவேர்

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (6-7-8) வேளையருந்த வாதசுரம் தீரும்.

இதுவுமது
வாதசுரக்கியாழம்

அத்திவேர் கடுக்காய்தோல்
இலந்தைவேர் சுக்கு
கண்டங்கத்திரிவேர்

இவை சமன்கூட்டி அஸ்டபாகமாகக் கியாழம் வைத்து (6-7-8) வேளை கொடுக்க வாதசுரம் தீரும்.

இதுவுமது
வாதசுரக்கியாழம்

தழுதாழைவேர், மஞ்சள், சுக்கு தாணிக்காய், இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம்வைத்து (6-8) வேளை கொடுக்க வாதசுரம் நிதானப்படும்.

பயித்தியசுரக்கியாழம்

நரிபயற்றம்வேர் சித்தாமல்லிவேர்
கோரைக்கிழங்கு பேராமல்லிவேர்
வெட்டிவேர் சீரகம்

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து மாறுகிறவரையில் (7-8) நாள் இருவேளையும் கொடுக்கவும்.

இதுவுமது
பயித்தியசுரக்கியாழம்

சீந்திற்கொடி கோஷ்டம்
விலாமிச்சம்வேர் நல்லசந்தனம்
கோரைக்கிழங்கு சிறுகுறிஞ்சிவேர்

இவை சமன் கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம் வடித்து பத்துநாள் யிருவேளையும் கொடுக்கவும்.

இதுவுமது
பயித்தியசுரக்கியாழம்

சிறுதும்மட்டிவேர்	ஜடாமாஞ்சி
நரிபயற்றம்வேர்	கோரைக்கிழங்கு
சீந்திற்கொடி	பேராமல்லிவேர்
சுக்கு	அதிமதுரம்

இவை சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம்வடித்து (5-6) வேளை கொடுக்கவும் தீரும்.

சிலேத்துமசுரக்கியாழம்

கண்டங்கத்திரிவேர்	செம்முள்ளிவேர்
முக்காவேளைவேர்	சுக்கு
ஆடாதோடையீர்க்கு	மிளகு

இதுகள் சமன்கொண்டிடித்து அஷ்டபாகமாகக் கியாழம்வடித்து இருவேளை (3-4) நாள்கொள்ள சவுக்கியமாகும்.

இதுவுமது
சிலேத்துமசுரக்கியாழம்

ஆடாதோடையீர்க்கு	வசம்பு
செம்முள்ளிவேர்	கண்டங்கத்திரி
பிரண்டை	கடுகுரோகணி

இதுகள் சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழமாக்கி (4-5) நாள் யிருவேளையும் கொடுக்கவும்.

கியாழவகைபரணி
முற்றிற்று.

உ

தேவிசகாயம்

ஒன்பதாவது

கண்டாவிழ்த வகை பரணி

பஞ்சபாக்கியச் சூரணம்

மாங்கொட்டைப்பருப்பு, கருவேப்பிலை, சுண்டக்காய்வற்றல், வெந்தயம், ஓமம், இவ்வைந்தும் சமநிடையெடுத்து வறுத்து சூரணம்செய்து மூவிரல் பிரமாணம் தயிரில் கொள்ளவும் தீரும் வியாதிகள் சகலகிராணி, அதிசாரம் வயிற்றிரைச்சல், கழிச்சல், சீதம், இரத்தம்விழுதல், மூலக்கடுப்பு, வயிற்றுக்கடுப்பு முதலியவை நீங்கும்.

மூலவாய்வுக்கு

வெள்ளுள்ளி பலம் (5) ½-படி ஆவின்பாலில் அரைத்து கலக்கிக்காச்சி புறைகுத்திகடைந்து தயிரெடுத்து அந்தத்தயிரை அந்திசந்தி மூன்றுநாள் அன்னத்திலிட்டு சாப்பிடவும்.

சகல கிராணிகளுக்கு

திப்பிலி, சுக்கு, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், ப்வலன் பிசின், மாம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியம்விரை தோல், மாதுளந்தோல், அபின், வகைக்கு விராகனிடை ஒன்று வீதம்யெடுத்து பொடித்து இதற்குசமனிடை சுத்திசெய்த கஞ்சா தூள் கலந்து வேளை ஒன்றுக்கு ஒருவிராகனிடை வீதம் தேனிற்கலந்து கொள்ளவும்.

மூலமுளை மூலக்கடுப்புக்கு

மருதம்பட்டை கால்பலம் யெடுத்து கால்படி ஆவின்பாலில் அரைத்து கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும்.

மூலமுளைக்கு

வேப்பமுத்தின்பருப்பு ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்து சற்றே வெதுப்பி பில்லைதட்டி மூன்றுநாள் கட்ட புழுவிழும் முளைகரையும்.

சீழ்மூலத்துக்கு

காரெள்ளு, கடுகு, திப்பிலி, சுக்கு வகைக்குப்பலம் ஒன்று இவைகளை வெதுப்பி சூரணித்து திருகடிபிரமாணம் வென்னீரில் காலைமாலை (5) நாள் கொள்ளவும்.

கண்ணில் சதைவளர்த்திக்கு

ஈருள்ளியும் குறிஞ்சாவும் ஓர்நிறையாயிடித்து (3) நாள் கண்ணில் பிழியவும்.

வசூரியில் தாகமெடுத்தால்

கலைமான் கொம்பை ஊறவைத்து கழுவிப்போட்டு அதை ராவியதூள் ப்லம்-2, யெடுத்து சுடுதண்ணீரில் போட்டு ஊறவைத்துக் கொடுக்கவும்.

வசூரினால் நேத்திரத்தில் வலி கண்டால்

சீரகத்தைத் துணியில் பொட்டலங்கட்டி முலைப்பாலில் ஊறவைத்து கண்ணில் ஒத்தடமிடவும், 2, சுடுசோற்றில் வெண்ணெய்சேர்த்து மத்தித்து துணியில் பொட்டலங் கட்டி நீராகாரத்தண்ணீரில் தோய்த்து ஒத்தடமிடவும்.

கண்ணில் வசூரிவராதிருக்க

வசூரி காய்ச்சலடிக்கும்போது ஈருள்ளியைவாயிற்போட்டுமென்று காச்சலடித்தவன் கண்ணில் ஊத்தவும்.

வசூரியினால் நேரிடும் சூலைகட்கு

ஒருபழங்கூரை வைக்கோலும், ஒருபிடி வேப்பிலையும் சேர்த்துவித்து (6) நாள்வரை வேதுவிட்டு ஒத்தடம் போட்டுக் கட்டவும்

(2) வட்டத்துத்தியை சமூலம் வேகவைத்து (13) நாள்வேதுவிட்டு ஒத்தடம்போட்டுக் கட்டவும்.

ஆறாத வசூரி புண்ணுக்கு

முற்றினதேங்காயைத்திருகி அதில் புளியம்விரையின் மேற்றோலைப் பொடித்துப்போட்டு பிசைந்து பிழிய தயிலம் வரும் அதை புண்ணிற்போடவும்.

வயற்று கிருமிவிழ

எலிச்செவியும் முருங்கைவேரும் திரிபலையும் நறுக்கிக் கியாழம்செய்து சங்களவு கொடுக்கவும்.

குழந்தைகளின் ஊதுமாந்தம் பொருமல் வாதத்துக்கு

இரசம், சுக்கு, வெண்காரம், கெந்தகம் வகைக்கு விராகனிடை ஒன்று, நேர்வாளம் விராகனிடை-4, இவைகளை சுத்திசெய்து குளிர்ந்தநீர் விட்டரைத்து பாசிபயற்றளவு உண்டை செய்து ஒரு உண்டை தண்ணீரில்கரைத்துக் கொடுக்கவும்.

குழந்தைகள் சாம்பல் மண் தின்றதற்கு

கீழ்க்காய்நெல்லிவேர் விராகனிடை ஒன்று கடுக்காதோல் விராகனிடை இரண்டு மிளகு விராகனிடை மூன்று புளித்த மோரிலரைத்து கலக்கி சங்களவு மூன்றுநாள் கொடுக்கவும்.

வெட்டுகாயத்திற்கு

வெட்டுப்பட்ட புண்ணில் சுயஎள்ளெண்ணெய் விட்டு துணிசுற்றி ஒரேகட்டு கட்டிவிடவும் ஜெலம்படாமல் பார்த்து வரவும்.

வங்குகருஞ் சிட்டைக்கு

இலந்தைக்கொட்டை திப்பிலி வகைக்கு விராகனிடை-2, மஞ்சள் விராகனிடை-4, வேண்டியமட்டும் தேன்விட்டரைத்து வங்கு வந்தவிடத்தில் தடவிவரவும்.

மார்புச்சளிகோழைகட்டு

பிரண்டையை வெதுப்பிச் சாறுபிழிந்து ஐந்துநாள் சங்களவு இருபொழுதும் கொடுக்கவும்.

கண்ணோய்க்கு

கற்கண்டைப்பொடித்து துணியில்முடிந்து புளிப்பு மாதளஞ் சாற்றில் ஊறவைத்து கண்ணிற்பிழியவும்.

குழந்தைகளுக்கு உரம்விழுதல்

வெள்ளைப்பூண்டு, கடுகு, வகைக்குப்பலம்-2, அரைப்படி நல்லெண்ணெயிற்போட்டுக். காய்ச்சிவடித்து குழந்தை மேற்பூசி நொச்சியிலை, வேப்பிலை, மாவிலை, மூக்கிரட்டை இவைகளைப் போட்டுக்காச்சி வென்னீரில் ஸ்நானம்செய்விக்கவும்.

பாம்புகடித்தால்

கடிவாய்வுக்கு (22) அங்குலத்துக்குமேல் பலமான மெல்லிய கயற்றைப்போட்டு இருக்கிக்கட்டவும், அதற்குமே லிரண்டுகட்டு தனித் தனிகட்டவும், கடிவாயில் கத்தியால் ஆழமாய்க்கீரி இரத்தம் வடியச் செய்யவும், அப்பால் அந்த காயத்தில் (கார்பாலிக்ஆசிட்) 4-5-துளி விடவும்.

தேள், நட்டுவக்காலி, தேனீ, குளவி, முதலியவை கொட்டியதற்கு

பொறுக்கக்கூடிய சூடுள்ள வென்னீரைவார்த்து அதில் சோங்கை உப்புபோட்டு அந்த வென்னீரை அகல பாத்திரத்தில் வைத்து அதற்குள் மேற்படி விஷஜெந்துக்கள் கொட்டிய பக்கத்தை சற்றுநேரம் வைத்திருக்கவும் அப்பால் சுயம்பு எள்ளெண்ணெய் தடவவும்.

குழந்தைகள் கக்கிருமலுக்கு

குழந்தையின் வயதெத்தனையோ அத்தனை கிரேயினஸ் துயினாவை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து ஒருமணிநேரத்துக் கொருதரம் ஒருதேக்கரண்டிவீதம் கொடுக்கவும்.

வேக்குருக்கு

1, ஒருசீசா சுத்தஜலத்தில் 4-ரூபாயெடை வெண்காரத்தைக் கரைத்து உடம்பில் பூசிவரவும். 2. சந்தனத்தை பன்னீரில் அரைத்து

கலக்கி சற்றுநேரம் வைத்திருந்து சல்லாவில் வடித்து அதில் ஒரு அவுன்சுக்கு 10-கிரேயின் வீதம மயில் துத்தத்தை கரைத்து வேக்குரு யிருக்குமிடத்தில் சொற்பஞ் சொற்பமாய்ப் பூசிவரவும்.

அரணை விரியன் பாம்புகடிக்கு

குத்தாயிலையை அரைத்து பசுவின்பாலில் கலக்கிச் சாப்பிடவும்.

சுருட்டைகடிக்கு

கண்டவேரை அரைத்து இளவென்னீரில் சாப்பிடவும்.

தந்தரோகத்திற்கு

செங்கொட்டை பலம்-10, கரியுப்பு பலம்-5, இவை யிரண்டையும் செப்புப்பாத்திரத்தில் வைத்து புடமிட்டு பல்விளக்கவும்.

காதில்சீழ்வடிதற்கு

சத்திசாரணை கிழங்க, கிளாவேர், நெல்லிவேர், கையாந்தகரை, சிகப்புநெருஞ்சில் சமன்தட்டி வேப்ப யெண்ணெயில் போட்டுக்காச்சி காதில்விடவும்.

பாஷாணம் தின்றவர்களுக்கு

மிளகையரைத்து எருமைவெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுத்து எருமைத்தயிரில் சந்தனம் அரைத்து உடம்பிற்பூசவும்.

அரையாப்புக்கு

முடக்கற்றானிலை, சுண்ணாம்பு, வெல்லம், எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்துப் பூசவும்.

எச்சிற் றழும்புக்கு

எருக்கம்வேர்ப்பட்டை தகரவிரை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பூசவும்.

இனி அனேக அற்புதமான
அவிழ்த முறைகள்
ஐந்தாம் பாகத்தில் வெளியிடப்படும்

நான்காங்காண்டம் முற்றிற்று.

67 * இந்த அனபோகவயித்தியம் முதற்காண்டம் (39) வது பக்கத்தில் சொல்லியிரக்கும் (கனமண்டூர செந்தூரம் சேர்த்துக்கொள்ளவும்.

III 72 * கபரி என்றால்-துத்தம் என்று அறிக

IV 29 * இடிமருந்தென்பது - வெடியுப்பு
* வடிமருந்தென்பது-சாராயம்
* குடிமருந்தென்பது-கெஞ்சா
* அடிமருந்தென்பது - சவுக்காரம்

தாமரை
நூலகம்